யூகி வைத்திய சிந்தாமணி

அருளியவர்:

யூகிமாமுனிவர்

வெளியீடு :
இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை
சென்னை - 600 106.

யூகி வைத்திய சிந்தாமணி

அருளியவர்:

யூகிமாமுனிவர்

வெளியீடு :

இந்திய மருத்துவம் - ஓமியோபதித் துறை

சென்னை - 600 106.

நூலடைவு

நூலின் பெயர்	:	யூகி வைத்திய சிந்தாமணி
அருளியவர்	:	யூகிமாமுனிவர்
பொருள்	:	நோய்க் கணிப்பு
வெளியிட்டோர்	:	இந்திய மருத்துவம் - ஓமியோபதித்துறை, சென்னை - 600 106.
பதிப்பு ஆண்டு	:	இந்திய மருத்துவத்துறையின் முதல் பதிப்பு: பிப்ரவரி 1998
பதிப்புரிமை	:	© தமிழ்நாடு அரசு
நூல் வடிவம்	:	RA $^1/_8$
அச்சுத்தாள்	:	19.7 கி.கி. (75 GSM) கிரீம் ஒவ்
அட்டை கட்டுமானம்	:	17.4 கி.கி. வெள்ளை அட்டை
எழுத்துகள்	:	10 புள்ளி
மொத்த பக்கங்கள்	:	X + 270
பிரதிகள்	:	1000
நூலின் விலை	:	ரூ.
அச்சிட்டோர்	:	தி ரிலையன்ஸ் பிரிண்டர்ஸ் 35ஏ, கீழ்த்தளம், பார்ஸன் மேனர், சென்னை - 600 006. ✆ : 8226864, 2348126

9200

பி.ஏ. இராமையா், இ.ஆ.ப.,
ஆணையா்.

இந்தியமருத்துவம் மற்றும் ஓமியோபதி
ஆணையா் அலுவலகம், சென்னை-*106*.

நாள் : *10.2.1998*

பதிப்புரை

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன்தோன்றி மூத்த குடி'

எனச் சிறப்பிக்கப்படும் தமிழ்க்குடிமக்களின் பரம்பரை மருத்துவமாம் சித்த மருத்துவம் பன்னெடுங்காலமாக ஏட்டில் எழுதாக்கலையாகவே நிலவி வந்துள்ளது.

''பாட்டில் இசைத்து பனை
ஏட்டில் வடித்த மொழி
காட்டும் உயர்கலைகள்
நாட்டோர் புரிந்துகொள'' (நியாயம் கேட்கிறேன்)

அச்சுக்கலை தோன்றிய பின்னர்தான் முடிந்தது. அச்சுக்கலை தோன்றிய பின்னரும் கூட, அரிய மருத்துவ ஓலைச்சுவடிகள் கைக்குக் கிடைப்பதென்பது அரிதிலும் அரிதாகிப் போனது.

கைக்குக் கிடைத்தவற்றுள், மிகச் சிறந்தனவற்றைத் தெரிவு செய்து, பதிப்பித்து வெளியிடும் பணியைச் செவ்வனே செய்துவரும் இந்திய மருத்துவத் துறையின் வெளியீட்டுப் பிரிவு தற்போது யூகி முனிவரின் **''வைத்திய சிந்தாமணி''** எனும் அரிய மருத்துவ நூலைச் செம்மையாகப் பதிப்பித்து வெளியிடுகிறது.

நோய்க்கணிப்பு பற்றி திருவள்ளுவர்,

'நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்

வாய்நாடி வாய்ப்பச் செயல்'

என்று கூறியுள்ளதற்கேற்ப அமைந்துள்ள இந்நூல் தமிழ் மருத்துவ உலகிற்கு ஓர் அரிய வழிகாட்டி என்பதில் ஐயமில்லை. சித்த மருத்துவ மாணவர்களும் மருத்துவர்களும் இந்நூலை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வரிய நூலை அச்சிட்டு வெளியிடும் பணியில் பெரும்பங்காற்றிய மொழிபெயர்ப்புப் பிரிவின் தனிஅலுவலர் மரு. **ஆனைவாரி ஆனந்தன்** அவர்கட்கும், நூல் வெளியீடுகள் தொடர்பான பணிகளைச் செவ்வனே மேற்பார்வை செய்துவரும் இணை இயக்குநர் **மரு.வீ. சுப்பிரமணியன்**, எம்.டி. (சித்தா) அவர்கட்கும் எனது பாராட்டுகளை உரித்தாக்குகிறேன்.

இந்நூலுக்கு ஓர் அழகிய முன்னுரையை வடிவமைத்துத் தந்த பேராசிரியர் **மரு.புது. ஜெயப்பிரகாஷ் நாராயணன்** அவர்கட்கும், இந்நூலின் அச்சுப்படிகளைச் சரிபார்ப்பதில் ஈடுபட்ட **மரு.வே. தமிழழகன்**, தமிழ்ப் புலவர்கள் **திரு.த.அழகப்பராசு, திருமதி.செ.இரா. பிரசன்னா**, நகலெடுப் பவர்கள் **திரு.க. மகேஸ்வரன், திரு.வெ. சாரங்கபாணி, திருமதி.க. லலிதா, திருமதி.நா. பாக்கியசுந்தரி** ஆகியோருக்கும், தட்டச்சுப் பணி செய்த **திருமதி. தா. வே. இலக்குமி**, சுருக்கெழுத்து தட்டச்சர், **திருமதி.கு. பானு**, தட்டச்சர் ஆகியோருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலை உரிய காலத்தில் அழகுற அச்சிட்டுத் தந்த ரிலையன்ஸ் பிரிண்டர்ஸ், சென்னை-6 அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பி.ஏ. இராமையா

ஆணையர்

முன்னுரை

தொன்மைத் தமிழகத்தின் அறிவியலாளர்களான சித்தர்களில் அவர்களுடைய படைப்புகளினால் நம்மைக் கவர்ந்து நிற்பவர்கள் சிலர். அவர்களில் யூகி முனிவர் குறிப்பிடத்தக்கவர். அவரால் இயற்றப்பட்ட நூல் **வைத்திய சிந்தாமணி.**

சித்த மருத்துவ உலகத்தில் நோய்க் கணிப்புக்கு உரிய அதிகாரபூர்வமான மருத்துவ அறிவியல் நூலாகத் திகழ்வது **யூகி முனி வைத்திய சிந்தாமணி.**

திராவிடப் பண்பாட்டின் அடிப்படைக் கோட்பாடுகளை விளக்குபவை ஆகமங்கள் என்பது அனைவரும் அறிந்ததே. அந்த ஆகமத்தின் வழி நின்று பயின்று அதன்படி அவரது சிந்தனைகளை வெளிப்படுத்துவதாக யூகி முனிவர் உரைக்கின்றார்.

''வானான ஆகமத்தை மேதினிக்குள்
மருவியே உரைத்திடவே வன்மையாக
வேனான வயித்தியசிந்தா மணியிலுள்ள
விபரமெல்லாம் வெளியாகச் சொல்லுவேனே.''

யூகி வைத்திய சிந்தாமணி முழுக்க முழுக்க முதல் நூல் அல்லவென்றும், முன்னோர்களுடைய சிந்தனையைத் தாங்கிய வழி நூல்தான் என்றும் யூகி வைத்திய சிந்தாமணியின் 2வது, 3வது பாடல் வாயிலாக அறியலாம்.

தன்னை உருவாக்கி வளர்த்த சடையப்ப வள்ளலை இராமாயணத்தின் பல்வேறு இடங்களில் கம்ப நாட்டாழ்வார் புகழ்ந்ததைப் போல், தனது அறிவுக் கண்ணைத் திறந்த தன்னுடைய ஆசான் தேரன் என்பதை யூகி முனிவர் பல இடங்களில் உணர்த்துகிறார்.

''அகத்தியமுனி தேரையற்குச் சொல்ல
நிடவான ரிஷிதேவர் சொன்ன நூலின்
நேர்ப்பெல்லாம் விபரமாய் நிகழ்த்தி னேனே''.

அவரது ஆசிரியர் தேரையர் இயற்றிய நூல்கள் பெரும்பாலும் சித்த மருத்துவ மருந்துசெய் முறைகளுக்கு பெரிய ஆதாரமாகத் திகழ்பவை. அதேபோல் சித்த மருத்துவ நோய்க் கணிப்புக்கு யூகி வைத்திய சிந்தாமணி

சித்த மருத்துவ உலகத்திற்குக் கிடைத்த ஒரு பெரும் களஞ்சியம் என்றே சொல்லலாம்.

தேரையர் வாழ்ந்த காலத்தை ஆய்வு செய்தவர்கள் அவர் தெலுங்கு அறிஞர் வேமன்னருடைய காலத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும் என்று மதிப்பிடுகின்றனர். வேமன்னர் கி.பி. *1386* ஆம் ஆண்டுக்கும் *1505*ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் இருந்தவர் என அறிஞர்கள் எழுதியுள்ளனர். தேரனுடைய மாணவராகிய யூகி முனிவரும் அதே காலத்தைச் சேர்ந்தவர் என்று கருதுவதே பொருத்தமுடையதாகும்.

நூற் பொருள்:

யூகி முனி வைத்திய சிந்தாமணி, அடிப்படைத் தத்துவங்களிலிருந்து சொல்ல ஆரம்பித்து நோய்களின் தன்மைகளை எல்லாம் சொல்லி அதன்பிறகு அவற்றிற்குரிய இரசாயனங்கள், உலோகங்கள் இவற்றுடன் செய்முறைகளையெல்லாம் விளக்கி இருப்பதாக நான்கு முதல் ஆறு பாடல்களில் விளக்குகிறார். ஆனால் நமக்குக் கிடைத்துள்ள பாடல்கள் *800*-ல் அடிப்படைத் தத்துவங்கள், நோய்க்கணிப்பு பற்றிய விளக்கங்கள் அடங்கிய பாடல்களே உள்ளன. மருத்துவம் பற்றிய பாடல்கள் நமக்குக் கிடைத்தில. அவையும் நமக்குக் கிடைத்தால் பயனுடையதாக இருக்கும்.

8-ஆம் பாடலில் பஞ்சபூதத்தின் அடிப்படைக் **கோட்பாடுகளைச்** சொல்லி முடித்து பின் உடலின் *96* தத்துவங்களையும் விரிவாக விளக்கி, அதைத் தொடர்ந்து *99*-ஆம் பாடல் வரை உடல், கண்கள், நாக்கு, சலப்பை இவற்றின் எடைகளைக் குறிப்பிடுகிறார்.

உடற்கூறு பற்றிய அவரின் விளக்கம் அவருடைய காலகட்டத்தில் உடற்கூறு, பிணக்கூறு ஆய்வுகள் நிகழ்ந்திருக்க வேண்டும் என்கிற யூகத்தை நமக்கு அளிக்கின்றன. *99*-ஆம் பாடலோடு தத்துவ விளக்கங்களை முடித்துக் கொள்கிறார். *101*-ஆம் பாடலில் இருந்து *136*-ஆம் பாடல் வரை எண்வகைத் தேர்வுகளை விளக்குகிறார். *137*-ஆம் பாடல் தொடங்கி சுர நோய், குறிகுணம் கணிப்பு, தீரும் தீரா நிலை ஆகியவற்றைச் சொல்லப் புகுந்து *800*-ஆம் பாடல் வரை நோய்க் கணிப்புகளையே விளக்குகிறார்.

யூகி வைத்திய சிந்தாமணியின் தனிச் சிறப்பு:

யூகி முனிவருக்கு முன்பாக நூல் எழுதியவர்கள் எல்லாம் பெரும்பாலும் முக்குற்ற அடிப்படையில் நோய்களை விவரித்திருக்கிறார்கள். ஆனால்

நோய்க் கணிப்பில் புதிய யுக்தி முறைகளைப் புகுத்தி நோய்க் கணிப்பை எழுதிய சிறப்புக்குரியவர் **யூகி முனிவரே.** அவருக்கு முந்தைய ஆசிரியர்கள் யாரும் நோய் வருவதற்கான காரணம், குறி குணங்கள், தீரும் தீரா நிலை, மருத்துவம் என்கிற அடிப்படையில் நோய்களைப் பற்றிய விவரங்களை வகுத்துத் தந்தது இல்லை.

முக்குற்ற அடிப்படையில் நோய்களைக் கணிப்பது என்பது சிறந்த அறிஞர்களால் மட்டுமே இயலும். ஆனால் அவ்வளவு அனுபவம் இல்லாதவர்கள் கூட சுலபமாக நோய்களைக் கணிக்கும் வகையில் நோய்க் கணிப்பை எளிமைப்படுத்தி நோய்களைக் குறிகுணங்கள் அடிப்படையில் விவரத்தையெல்லாம் அறிய இயலும் எனக் கருதி குறிகுணங்கள் அடிப்படையில் நோய்களைப் பகுத்திருக்கிறார். அதே நேரத்தில் முக்குற்ற அடிப்படையில் பாகுபடுத்தியும் நோய்களைக் கணிக்கத் தவறவில்லை. இவ்வாறான பலவித அணுகுமுறையின் மூலம் பழம் பெருமைக்குப் புதுப்பொலிவு சேர்த்திருக்கிறார்.

நோய்களை விளைக்கும் முக்குற்றப் பாதிப்பு *(Humoral Pathology)* உடற்கூறு பாதிப்பு *(Regional Pathology)* இவற்றையெல்லாம் நுட்பமாக யூகி முனிவர் அணுகியிருக்கிறார். எ.கா: உக்கார சூலை நோய் பற்றிய விளக்கத்தில் அடிவயிற்றில் துர்மாமிச வளர்ச்சி தோன்றுவது மற்றும் அதைத் தொடர்ந்து சிறுநீர் பாதையில் மணல் போன்ற வளர்ச்சிகள் ஏற்படுவது ஆகியவற்றையும் குறிப்பிடுகிறார்.

புற்று நோயைக் குறிப்பிடுவதற்கு துன்மாங்கிசம் *(Malignant growth)* என்ற சொல்லாட்சியை அறிவுபூர்வமாகப் பயன்படுத்தி முதல் பெருமைக்குரிய சித்தர் யூகி முனிவரே.

அதுமட்டுமல்லாமல் புற்றுநோய், அதன் விளைவாக வரும் அசாதாரணமான உடல் இளைப்பையும், வெப்பு நோய்களையும், இரண்டாம்நிலை வளர்ச்சியையும் *(Metastasis)* பல்வேறு இடங்களில் விளக்குகின்ற பாங்கு அவர்தம் முயற்சியை எண்ணிப் பெருமிதம் அடையச் செய்கிறது.

புரஸ்த கோளத்தைப் பற்றிய புற்று நோயில் நீள் எலும்புகளிலும், தகட்டு எலும்புகளிலும் இரண்டாம்நிலை வளர்ச்சி நிகழ்வது இயல்பு என நவீன நோய்நாடலில் விளக்கப்படுகின்றது. யூகி முனிவர் உக்கார சூலையை

விளக்குகின்றபோது, இடுப்பு எலும்பிலும், தோள் எலும்பிலும், முதுகு எலும்பிலும் இருந்தே சீராக இரண்டாம் நிலை வளர்ச்சி *(Osteophytic secondaries)* ஏற்படும் என்பதைக் கணித்துப் பதிவு செய்திருக்கிறார்.

மூலம் என்று சொன்னால் அது ஆசன முளை *(Hemorrhoid)* என்பதையே குறிக்கும் எனப் பலரும் எண்ணிக் கொண்டிருந்த காலம் உண்டு. ஆனால் யூகி விளக்கியிருக்கிற 21 வகையான மூலநோய்களை ஆழ்ந்து நோக்கினால் 21 மூலம் என்பது குதத்தையும் ஆசனவாயையும் ஒட்டி வருகின்ற 21 விதமான நோய் நிலை கூறாகும் என்பதை உணர்கிறோம். எரிவாயில் கோழி கொண்டை போலவும், சேவல் கொண்டை போலவும் விளக்குகின்ற தீங்கற்ற மற்றும் கொடிய *(Benign and malignant)* வளர்ச்சிகளைக் குறிப்பிடுகிறார். உதர வாதத்தின் விளக்கத்தைத் தனது மருத்துவ இயலில் குறிப்பிடுகிறார். அதனுடைய விளக்கம் நவீன அறுவை மருத்துவத்தில் விளக்கப்படுகின்ற *Intestinal Obstruction* என்கிற நோயை ஒட்டி வருவதை உணர முடியும்.

அவர் வயிற்று வீக்கங்களை 32 விதங்களாக பாகுபடுத்தித் தருகின்ற விளக்கம், அவர் மருத்துவ நோய்க் கணிப்பில் மட்டும் அல்ல அறுவை மருத்துவ நோய்க் கணிப்பிலும் வல்லுநர் என்பதை விளக்கும்.

கல்பெரு வயிறு என்ற தலைப்பில் கடுமையான ஒரு வளர்ச்சியை மேல் வயிற்றில் குறிப்பிடுகிறார். இத்தகைய நிலையில் விரைவில் *(Testis)* ஏற்படும் புற்று நோய் வளர்ச்சியில் மேல் வயிற்றில் இரண்டாம்நிலை வளர்ச்சிகள் ஏற்படுவது இயல்பு. அதன் விளைவாக ஏற்படுகின்ற வில்பெரு வயிறை யூகி முனிவர் விளக்குகிறார்.

சித்த மருத்துவ நோய்க் கணிப்பில் ஒப்பியல் ஆய்வுகளை நடத்த விரும்புவோர்க்கு யூகி முனி வைத்திய சிந்தாமணி ஒரு நல்ல நூலாகக் கருதலாம். யூகி முனிவர் விளக்குகின்ற தண்டுவட நோய்கள் பற்றிய விவரங்கள் இன்றைய மருத்துவ முறைகளுக்கு ஒத்துவரக்கூடியன. நோய்கள் பற்றி இவ்வளவு விவரங்கள் தந்த யூகி முனிவர் மருத்துவ முறைகளையும் தந்து இருப்பதாக பாயிரத்தில் சொல்லியிருக்கிறார். அவைகளையும் கண்டு அறிந்து உலகத்திற்குப் பயன்படச் செய்யவேண்டும் என்பதே நம்முடைய ஆசை.

யூகி முனிவர் பரிபூரணம் 200

யூகி முனிவர் பாலகாண்டம்

யூகி முனிவர் பிடிவாதம் 1000

யூகி கரிசல் 150

போன்றவை யூகியின் பிற நூல்கள்.

சித்த மருத்துவத்தைக் கற்போரும் அறியப் புகுவோரும் கற்று அறிந்த நல்ல முறையில் யூகியின் சிந்தனைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கு நம்முடைய நூற்கள் துணை செய்யும்.

வாழ்க தமிழ்! வளர்க சித்த மருத்துவம்!!

பொருளடக்கம்

எண்	தலைப்பு	பக்கம் எண்
1.	தத்துவநிதி	3
2.	நாடிநிதானம்	30
3.	சுரரோக நிதானம்	42
4.	சன்னிரோக நிதானம்	49
5.	குன்மரோக நிதானம்	65
6.	சூலைரோக நிதானம்	69
7.	வாதரோக நிதானம்	76
8.	பித்தரோக நிதானம்	109
9.	சேட்பரோக நிதானம்	126
10.	பிரமிய ரோக நிதானம்	135
11.	மேகரோக நிதானம்	145
12.	குட்டரோக நிதானம்	158
13.	பாண்டுரோக நிதானம்	167
14.	சோபைரோக நிதானம்	176
15.	மகோதரரோக நிதானம்	179
16.	விடபாகரோக நிதானம்	193
17.	கிராணிரோக நிதானம்	197
18.	மூலரோக நிதானம்	208
19.	சயரோக நிதானம்	218
20.	காசரோக நிதானம்	224
21.	உளைமாந்தைரோக நிதானம்	230
22.	பெரும்பாடுரோக நிதானம்	233
23.	கல்லடைப்புரோக நிதானம்	236
24.	விப்புருதிரோக நிதானம்	245
25.	கரப்பான்ரோக நிதானம்	249
26.	பவுத்திரரோக நிதானம்	257
28.	பாடல் முதற்குறிப்பு அகராதி	262

முருகக்கடவுள் துணை

யூகிமாமுனிவராற் செய்யப்பட்ட

வைத்தியசிந்தாமணி

காப்பு

விருத்தம்

ஆனைமுகன் றன்பாத முருகன் பாதம்
அத்திரியுத் திடைதரித்த வையர் பாதம்
வானையுமை யாள்பாத மாலின் பாதம்
வயிரவன்றன் பாதமஹா லக்ஷ்மி பாதம்
காணனைய நாதாக்கள் ரிஷிகள் பாதம்
கமலத்தில் வீற்றிருந்த வாணி பாதம்
கோனனைய குருமுனிதன் பாதம் போற்றிக்
கூறுவேனா யுருவே தத்தைத் தானே

நூல்

தானான நால்வேதத் தொப்பாய் நின்ற
தாக்கானவாயுருவே தத்தோடைந்தாம்
தேனான சிருஷ்டிகுலத் துற்ப வித்த
தேவனாந் தன்வந்திரி சொன்னநீதி

வானான வாகமத்தை மேதி னிக்குள்
        மருவியே யுரைத்திடவே வண்மை யாக
வேனான வயித்தியசிந்தா மணியி லுள்ள
விபரமெல்லாம் வெளியாகச் சொல்லு வேனே
1

சொல்லிடவே தேவிக்குச் சதாசி வன்றான்
        சொல்லவே தேவியுநந் திக்குச் சொல்ல
நல்லிடவே நந்திதன்வந் திரிக்குச் சொல்ல
        நயமுடன்றன் வந்திரியசு வினிக்குச் சொல்ல
அல்லிடவே யசுவனியாந் தேவர் தாமும்
        அகத்தியருக் குரைத்திடவே யம்மு னீந்திரன்
புல்லிடவே புலத்தியருக் குபதே சிக்கப்
        புலத்தியருந் தேரையற்குப் புகன்றிட் டாரே!
2

புகன்றிட்டார் தேரையனா முனிவன் றானும்
        பூதலத்தில் யூகியாமெ னக்குச் சொல்ல
உகன்றிட்ட யூகியென்ற முனியாம் நானே
        உலகத்தோர் பிழைத்திடவென் றுரைக்க லானேன்
பகன்றிட்ட மருத்துவத்தைப் பிரித்துப் பார்த்து
        மகத்தான பெரியோரை வணங்கிக் கேட்டுத்
துகன்றிட்ட சூத்திரத்தின் சூட்சம் பார்த்துத்
        துறையெல்லாஞ் சோதித்துச் சொல்லு வேனே
3

1. தத்துவநிதி

சொல்லியதோர் விபரமெல்லாந் தூய்மை கேளாய்
சூட்சுமமதாம் பஞ்சபூ தத்தின் கூறும்
தெல்லியதோர் தசநாடி சத்த தாது
திரிநாடித் தசவாயு சுரபே தங்கள்,
தல்லியதோர் சன்னியொடுகு ன்மஞ் சூலை
தாக்கான வாதமொடு பித்தஞ் சிலேஷ்மம்
மெல்லியதோர் மேகம்நீ ரிழிவு குட் ட்ம்
மிக்கான பாண்டொடுகா மாலை கேளே. 4

கேளுமகோ தரங்கிராணி பவுத்தி ரமூலம்
கெடியான வஜீரணங்கள் விசூழி விக்கல்
வேளுமே பலபல வாதி நாமம்
விளங்குகின்ற சாத்தியமும் சாத்தி யந்தான்
நாளுமே கடைச்சரக்கின் குணமுந் தானும்
கசாயமொடு சூரணங்கள் கர்க்கந் தானே: 5

கர்க்கமொடு வடகங்கள் ரசாய னங்கள்
கடினமாம் லேகியங்கள் கிருதந் தானும்
வர்க்கமொடு தைலங்க ளெண்ணெய் நெய்தான்
மாத்திரையும் பற்பங்கள் செந்தூ ரந்தான்
பற்பமாம் புடத்தைலந் திராவ கங்கள்
புகையோடு பொட்டணமும் பூச்சு நசியம்
அற்பமாம் அஞ்சனங்கள் கெண்டூ ஷங்கள்
ஆகமாம் விரோசனத்தி னடவு மாமே 6

அடவான வாயுருவே தந்தன் னைத்தான்
ஐயருமேயம் மைதனக் கருளிச் செய்ய
நடவான வம்மையுநந் திக்குச் சொல்ல
நந்தியுமே சீடர்களுக் கருளிச் செய்யத்
தடவான தன்வந்திரி யசுவினிக்குச் சொல்ல
சமரசமாம் மகத்தியமுனி தேரையற்குச் சொல்ல
நிடவான ரிஷிதேவர் சொன்ன நூலின்
நேர்ப்பெல்லாம் விபாதமாய் நிகழ்த்தி னேனே. 7

பஞ்சபூதம்

நிகழ்ந்தசீர்ப் பிரிதீவு மப்பு தானும்
நேரான தேயுவொடு வாய்வு மாகும்,
அகழ்ந்தவா காயத்தோ டைந்து பூதம்
அரிதான பிரிதீவு மண்ணு மாகும்
தகழ்ந்தவப்பு சலமாகும் நெருப்பும் தேய்வு
தாக்கான வாயுமது காற்று மாகும்
இகழ்ந்தவா காயமது சத்த மாகும்
ஏற்றபிரி தீவுபொன் னிறம தரமே. 8

பஞ்சபூதத்தின் வர்ணம்

ஆமேதா னப்புனிதம் படிக மாகும்
அக்கினியி னிறந்தானே சிவப்ப தாகும்
காமேதான் வாய்வுநிறங் கறுப்ப தாகும்
கார்மேகப் புகைநிறமாம் மாகா யந்தான்
தேமேதான வர்ணமுமிப் படியே யாகும்
சேர்ந்துநின்ற தெய்வத்தின் றலமே கேளாய்
மோமேதான் பிரிதிவுக்குத் தேவன் பிர்மா
பெரியசுவா திஷ்டான மிருப்ப தாமே 9

பஞ்சபூதத்திற்குத் தெய்வத்தைலம்

இருப்பான வீடதுமூல தார மாகும்
இகழாறு பிரிதீவின் பீஜம் நவ்வாம்
மருப்பான மயிர்நரம்பு தசைதோ லென்பு
மாசற்ற வப்புவிற்கு விஷ்ணு தெய்வம்
செருப்பான மணிபூர வீடு மாகும்
சிறுபிறைரூ பம்போற்பத் திதழ்தான் சுற்றி
அருப்பான வப்பினுக்குப் பீசம் மவ்வாம்
அதின்கூறைத் தான்கேளு முதிரஞ் சீயே. 10

சீயான நீரோடு மூளை மச்சைத்
தேய்வுக்கு ருத்திரன்றான் றெய்வ மாகும்
மூயான முக்கோண மகத்தாம் வீடு
முயற்சியா யீராறா மிதழ்தான் சுற்றில்
தேயான சிவ்வதுவுந் தேய்வு பீசம்
சிதையாம லிதழுக்குட் சேர்ந்து நிற்கும்
ஆயான வாகாரந் துஞ்சல் போகம்
அவருடைய கூறதுதான் பயமுஞ் சோம்பே. 11

சோம்பான வாயுவுக்கு மஹேசன் றெய்வம்
சோடசமா மிதழோடே விசுத்தி வீடு
ஆம்பான வாயுவுக்கு வவ்வு பீசம்
அவருடைய தன்கூறு நடத்த னிற்றல்
வாம்பான வாடலோ டிருத்த லோடல்
வசயான வறுகோணங் குடியி ருப்புத்
தேம்பான வாகாய மாகனைக் குள்ளே
சிதையாம லிரண்டிதழோ டிருக்கும் பாரே. 12

இருக்கின்ற வர்க்கினையின் கூறு கேளாய்
ஏற்றகா மக்குரோத லோப மோகம்
மருக்கின்ற மதமுமாற் சரியத் தோடு
வானுக்குச் சதாசிவமே தெய்வ மாகும்

பிருக்கின்ற வாகாய பிசம் யவ்வாம்
பேராபனவைம்பூதப் பிரிவு மாகும்
தெருக்கின்ற தசநாடிச் செயலை யெல்லாம்
செப்புகிறேன் தெளிவாகச் சிறந்து கேளே. 13

தசநாடிகளின் குணம்

சிறந்தஇடை பிங்கலைஞ் சுழிமுனையி னோடு
சிறப்பான காந்தாரி யத்தீச்சிங் குவையாம்
பிறந்தஅலம் புருடனொடு குகுதன் றானும்
பேரான சங்குனியும் வயிர வன்றான்
திறந்தவிவை பத்துந்தான் றசநாடி யாகும்
திரிமூன்று காலையினி லொடுங்கும் பாரு
மறந்தஇடை பிங்கலையுஞ் சுழியினையொடு மூன்றும்
வாதத்தி லொடுக்கமென வகுக்க லாமே.

14

வகுக்கவிதின் குணங்கண்மந்த மொடுகு ளுத்தி
மலக்கட்டு வாதத்தின் கூறு மாகும்
அகுக்கவே காந்தாரி யத்திசிங் குவையாம்
அலம்புருட னிதுநாலும் பித்தத்தின் கூறு
இருக்கவே யிதின்குணங்க ளுஷ்ணந் தாகம்
உயர்மோக முழலைவாய் வும்மே னோக்கும்
நகுக்கவே நாடிபட படத்து டிக்கும்
நாசமாம் பயமோடு கோப மாமே

15

ஆமேதான் குகுதசங்கு னியும்வயி ரவனும்
அரிதான சிலேட்டுமத்தி லடங்கும் பாரு
மாமேதா னிதின்கூறு வாயழற்றான் பரியும்
மலர்விழியுங் குழிந்திருக்கு முகமு வேர்க்கும்
தேமேதா னென்சடைக்குந் திசைகலங்கி யிருக்கும்
சிறுகாலுந் தண்ணீர்தா னுழற்றி விக்கும்
பாமேதான் பத்தினிடப் பண்பு மாகும்
பரிகாரஞ் செயுமவர்க்குப் பரிசி தாமே

16

பரிசான யிடையினொடு பிங்கலையு மொக்கப்
பயின்றதோர் குதத்தினடி மூலம் பற்றிச்
சுரிசான பாகங்கண் மாறி மாறிச்
சுழிமுனையின் றன்னோடு நெட்டிட் டேறும்
திரிசான திருவணைக்கால் போலே மாறிச்
சிரசளவு தான்மூட்டித் திரும்ப மீண்டு
வரிசான முக்குநடுப் புருவநெற்றி
மீண்டுமே திரும்பியந்த மூலம் புக்கும். 17

புக்குகின்ற காந்தசரி நாபி பற்றிப்
பொருநரம்போ ரேழினுக்கும் ரூபமாகிச்
சிக்குகின்ற தெசதாய மேலே யோடிச்
சிரசளவு நீங்கியே கண்டம் புக்கி
நக்குகின்ற நாவடியிற் சிறந்தி ருக்கும்
நலமான வத்திசிங்கு வையி ரண்டும்
விக்குகின்ற மூலத்தின் மேலே பற்றி
மேலேறி யிரண்டுசெவி தனைத்தொட் டாமே. 18

தொட்டேறி நரம்பெல்லாங் கலந்து வீசித்
துறையான நயனமிரண் டினிலே நிற்கும்
மட்டேறி யுலம்புருடன் வயிர வன்றான்
மாசற்ற வடிமூலந் தன்னைப் பற்றிக்
கட்டேறி யிரண்டுகன்னந் தனிலே நிற்கும்
கனிவான சங்குனியுங் குகுதன் றானும்
நட்டேறி நாபித்தா னத்திற் றோன்றி
நலமான குதமளவு நடிப்பர் பாரே. 19

பார்க்கவே சடந்தான்சென் மிக்கு மாறு
பகர்சுக்லச் சுரோணிதத்தி னோடுத லைகூடி
மூாககபவ ளப்பையின் முத்துதிர்ந்தாற் போல
முனையறுகு நுனிபனிப்போற் சுரோணிதத்திற் சேர்ந்து

தார்க்கச் சுரோணிதந்திரண்டுதன் ரூப மாகித்
தமர்வாசற் றனைமூடும் வாயு தானும்
வேர்க்கவே வேலியைப்போல் வளைந்து காக்கும்
விந்துவுடன் பிராணவாயு விளக்கு மாமே.

20

விளக்குகின்ற வபானவாயு வெளியி னிற்கும்
விந்துவுடன் பிராணவாயு விடல்க லக்கும்
களக்குகின்ற வுதானனது கருவ ணர்க்கும்
கருவுக்குள்வி மாதியுமூன் றுங்க லக்கும்
இளக்குகின்ற வைந்தாநாள் கருப்போ லாகும்
ஈரைந்தா நாள்தனிலே திரளும் பாரு
முளைக்குமூ வைந்தாநாள் முட்டை போலாம்
முதற்றிங்கள் கம்பமாய் முனைபோ லாமே.

21

ஆமேரெண் டாந்திங்க டலைமுகுது தோன்றும்
அடுத்தமூன் றாந்திங்கள ரைவிரல்கை காலாம்
நாமேநா லாந்திங்கள் பதமூக்குண் டாகும்
நவுத்தவைந் தாந்திங்கள் செவிநாவு கண்ணாம்
வாமேயா றாந்திங்க ணகங்க ளாகும்
மருவியவே ழாந்திங்கண் மயிரெலும்பு நரம்பாம்
தாமேதான் சடமோடு சலம லங்கள்
தயங்கியவோ தாதுவொடு மூச்சுண் டாமே

22

மூச்சுண்டா மெட்டினிற்றா யுண்ட சார
முனையான கதிர்போல வருவி பாய்ந்து
தோச்சுண்ட கபாலத்தின் வழியே சென்று
சுத்தஜலம் பிள்ளைக்குத் துடர்ச்சி யாகும்
பேச்சுண்டா மொன்பதிலே யறிவு தோன்றிப்
பிறப்பித்தோன் றனைநினைத்து தவமே செய்து
கூச்சுண்டாங் கும்பிட்டே யருள்வா யென்றுங்
கொடியபத் தாந்திங்கள் கும்பார்வை யாமே.

23

பார்வையாம பானன்கீழ் நோக்கி வைக்கும்
பாலகனும் பார்தனிலே பயின்ற பின்பு
ஆர்வையாய் முன்னறிவு மசதி யாகி
அழுதுகொண்டு வரத்மதத்திற் கருவி பாசம்

மார்வையா மாயாசக்தி கிரியா சத்தி
மயக்கத்தி லறிவழிந்து நல்வினை தீதும்
கோர்வையாய் விதியும்வந் துற்ப வித்துக்
கொடிபடர்ந்த சுரைபோலச் சென்ம மாச்சே. 24

சென்மமாஞ்ச ரீரந்தொண்ணூற் றாங் குலமாம்
செய்கின்ற வவரவர்கள் கையா லேதான்
தன்னமாம்ச மிரத்தமாங் கிசமூ மேதை
தசைமச்சை யோடுகலந் தாதே ழாகி
உன்னமா முருனென்னுஞ் சரீர மாகி
உயர்சட்டை ரசஞ்சேர்ந்து ரோக மாகி
வன்னமாம் வாதபித்த சேட்ப மாகி
வருகின்ற சடத்தினிட வண்மை கேளே. 25

வண்மையாம் வாதமது முப்பத் திரண்டு
_ _ மட்டுமே வளருகின்ற கால மாகும்
பெண்மையாம் பித்தமது முப்பத்து மூன்று
பேணியே வளருகின்ற கால மாகும்
திண்மையாஞ் சேட்பமது முப்பத் தேழு
செயலோடு வளருகின்ற கால மாகும்
உண்மையாய்ச் சடமதனுக் கொருநூ றாண்டு
உகர்ந்தமாங் கருவிகளி னுறுதி கேளே. 26

உறுதியாம் பூதாதி யோரைந் தாகும்
உயர்கின்ற பொறிவைந்து புலனைந் தாகும்
கறுதியாங் கன்மவிந் திரிய மைந்தும்
கடிதான ஞானவிந் திரிய மைந்தும்
திறுதியாந் தீதாய கரணம் நான்கும்
திறமான வறிவொன்று தசநாடி பத்தும்
மறுதியாம் வாயுவது பத்து மாகும்
மகத்தான விஷயமஞ்சு கோச மஞ்சே. 27

அஞ்சவே யாதாரமாறு மாகும்
அரியமண் டலமூன்று மலமூன் றாகும்
தோஞ்சவே தோஷமுமூன் றீஷ்னைதான் மூன்று
தோதகமாங் குணமூன்று வினையி ரண்டாய்
தஞ்சவே ராகமெட்டு வவத் தையந்து
தயங்கியதோர் கருவிகடான் றொண்ணூற் றாறு
ஒஞ்சவே யொவ்வொன்றாய் விரித்துச் சொல்வேன் 28

உரைக்கவே பிரிதீவு மப்பு தேய்வும்
உரிமையாம் வாய்வோடா காச மாகும்
புரைக்கவே பூதந்தா னஞ்ச தாச்சு
பொறியைந்தின் விபரமதைப் புகலக் கேளாய்
திரைக்கவே சுரோத்திரமுந் தொட்கு சட்சு
சிங்குவை யாக்ராண மிவையாக வைந்தும்
துரைக்கவே சுரோத்திரந்தான் செவி யுமாகும்
தொக்காவ துடம்பென்றே சொல்ல லாமே 26

சொல்லவே சதுரதுதான் கண்ணு மாகும்
தூய்தான் சிங்குவைநாக் காக்ராண மூக்காம்
புல்லவே புலனைந்தும் புகலக் கேளு
புகழான சத்தமொடு பரிசம் ரூபம்
நல்லவே ரசகெந்த மாக வைந்தாம்
நலமான சத்தமது கேள்வி யாகும்
செல்லவே செவியினிடக் கூற தாகும்
செப்பரிசஞ் சுகதுக்க மறிதல் காணே. 30

காணவே தேகத்தின் கூற தாகும்
கண்ரூப மாவதுதான் காண்ப தாகும்
நாணவே கண்ணினிடக் கூற தாகும்
புகல்கெந்தந் துர்க்கந்தி நற்கந்த மறில்
பூணவே கண்ணினிடக் கூற தாகும்
புகல்கெந்த துர்க்கந்த நற்கந்த மறிதல்
தோணவே மூக்கினிடக் கூற தாகும்
சுகமான பொறியைந்தின் சூக்ஷந் தானே 31

தானான கன்மவிந் திரிய மைந்தின்
சார்பதனைச் சாற்றிடவே வாக்கு பாதம்
பானான பரவியபா யுருமு பஸ்தம்
பகரைந்தின் பிரிவதுதான் வாக்கு வாயாம்
கானான் பாதமது காலே யாகும்
கனமான பாணியது கையு மாகும்
ஊனான பாயுருதான் பான மாகும்
உபஸ்தமது லிங்கமென வுரைக்க லாமே. 32

ஆமென்ற கன்மவிந் திரிய மைந்தின்
அடைவெல்லாஞ் சொன்னதன்பின் பப்பாற கேளாய்
நாமென்ற கன்மேந்திரிய விஷய மைந்தை
நவின்றிடவே வசனமொடு கமன மாகுந்
தாமென்ற தானமொடு விசர்க்கமா னந்தம்
தாக்காக வீரைந்து சாற்றி னேனான்
பாமென்ற விதனுடைய விபர மெல்லாம்
பரிவாக வொவ்வொன்றா யுரைக்கின் றேனே. 32

உரைக்காது வேவாக்கதுதான் வசனிப் பாகும்
உறுதியாம் பாதமது நடத்தி வைக்கும்
பரைக்கவே பாணிகையால் வழங்கு விக்கும்
பாயுருதான் மலந்தனையே பிரித்து வைக்கும்
துரைக்கவேயு பஸ்தமது சுக்ல மூத்திரம்
துரிசாக விடுவிக்குஞ் சுப்ர மாகும்
நரைக்கவே கன்மேந்திரிய விஷய மைந்தின்
நலமதனை நவின்றிடவே நண்பா மென்னே. 34

என்னவே கரணமது நால தாகும்
ஏற்றமனம் புதியாங் காரஞ் சித்தம்
நன்னவே நாலினட விரிவைக் கேளாய்
நலத்தமன மாவதொன்றைத் தானி னைக்கும்
பொன்னவே புத்திதா னதனை விசாரிக்கும்
போரான வாங்காரங்கொண் டெழுப்பி வைக்கும்
தென்னவே சித்தமதைச் செய்துமு டிக்கும்
சிறந்த வந்தக் கரணந்தா னான்கு மாச்சே. 35

ஆச்சுதறி வொன்றின்விசா ரணையைக் கேளாய்
அனைத்தையுமே பார்த்திருந்தங் கண்டந் தானாய்க்
கோச்சுதே குருவாய்த்தத் துவங்க ளாகிக்
கொடியதீ வினையாய்நல் வினையு மாகிப்
போச்சுதே பெண்ணாய்ப்பிர பஞ்ச மாகிப்
புகலரிய நிர்க்குணநின் மலமு மாகித்
தீச்சுதே சிவசிவ மாகிச்
செழுஞ்சுடரின் கதிரொளியாய்ச் சிறந்த வாறே.
36

வாறான தத்துவமோர் முப்பதுந் தான்
மன்னியதோ ராத்மதத் துவமே யாகும்
நாறான நாடிபத்தின் விபரங் கேளாய்
நயந்தவிடை பிங்கலையுஞ் சுழிமுனைகாந் தாரி
ஆறான வந்திசிங் குவையுமலம் புருடன்
அருங்குகுதன் சிங்கினியும் வைரவனீ ரைந்து
மூறான விதன்பிரிவை முன்னே சொன்னேன்
மூர்க்கமாம் வாயுபத்தின் முறைமை பாரே
37

முறையாம் பிராணனோ டபானன் வியானன்
மூர்க்கமா முதானனொடு சமான னாகம்
திறமையாங் கூர்மனொடு கிரித ரன்றான்
தேவதத்த னோடுதனஞ் சயனு மாகும்
பிறமையாமி தின்பிரிவு பிராண வாய்வு
பெருமூலா தாரத்தின் கட்டோன் றித்தான்
உறமையா மசவையெனு மந்திரத் தால்
ஒங்கார முதலெழுத்தை யுன்னித் தானே.
38

உன்னியேமே லெழுந்துபனி ரண்டங் குலந்தான்
உயர்ந்தவெட் டங்குலந்தான் மீள வாங்கி
நன்னிநா லங்குலந்தான் பாழிற் பாயும்
நலமான குணமெல்லாம் பிராண வாயு
பன்னவேநீ லவர்ணந்தே வதைதான் சந்திரன்
பலவலவாம் பொசிப்பெல்லாஞ்சீ ரணம் காக்கும்
முன்னநாழி கைக்குமுந்நூற் றறுபது சுவாசம்
முயர்ந்தநா ளொன்றுக்கு மூச்சைக் கேளே.
39

நாலொன்றுக் கிருபத்தோ ராயிரத் தறுநூறு
நலமான சுவாசந்தா னெழுந்தி ருக்கும்
கோளொன்றிப் பதினாலா யிரத்தறு நூறு
குவித்துமூ லாதாரத் துள்ளொ டுங்கும்
பாளொன்றியே மூாயிரத்திரு நூறு சுவாசம்
பாழிலேபாய்ந் திடுமென் றறிகப் பின்னை
ஏளொன்றி யிதனையே யுட்சா தித்தால்
எப்போதும் பாலரா யிருக்க லாமே. 40

இருக்கவே அபானத்தி னியக்கங்க கேளாய்
ஏற்றசுவா திஷ்டானத் துற்பத்தி யாகும்
மருக்கவே கீழ்நோக்கிமல சலத்தைத் தள்ளும்
வாகான நிறந்தானும் பச்சை யாகும்,
அருக்கவே யாசனத்தைச் சுருக்கி வைக்கும்
அன்னாச ரத்தையெல்லாஞ் சேர வைக்கும்,
திருக்கவே தேவதையும் வாத ராசன்
திறமான வியானனிடச் சிறப்பைக் கேளே. 41

சிறப்பான வியானனது தோளிலே நின்று
திகழெழுபத் தீராயர நாடியிலுஞ் சென்று,
தறுப்பான சரவசரந் தனிலே நின்று
தானீட்டால் முடக்கல்பண்ணிப் பரிசங்க ளறியும்
அறப்பான வன்னசா ரந்தன் னைத்தான்
அங்கங்கே நிறைப்பித்தாக் கையை ரட்சிக்கும்
பறப்பான ததுபாவ வண்ண மாகும்
பாரினிற்றெய் வந்தா னேம னாமே 42

எமனாமு தானனிடவேற்றங் கேளாய்
எழிலானவுதரவக் கினியெ ழுப்பிய
பூமனா மன்ன சாரந் தனைத்தான்
பொருந்தவே சமிபித்து நிறுத்தி வைக்கும்
காமனாயெ டுப்பித்துங் கலக்கி வைத்தும்
கலக்கியே வருந்திவைக்கும் வளர்ப்ப மாகும்
வீமனாமின் னினிட வர்ண மாகும்
விளங்கியதோ ரக்கினிதான் றெய்வ மாமே. 43

ஆமென்ற சமானனிட வாண்மை கேளாம்
அடிநாபி பாதாங்களுஞ் சமன்கொண் டேகி
வாமென்ற வாய்வுகளை மிஞ்சொட் டாமல்
மடக்கியே சமன்செய்து மருவப் பண்ணும்
தாமென்ற வறுசுவையைத் தண்ணீ ரன்னம்
சமன்செய்து சரீரமெலாஞ் சாரப் பண்ணும்
வாமென்ற வர்ணமது புட்பா ரகம்
மகத்தான தெய்வமா தித்த னாமே. 44

தெய்வமா நாகனிடச் சிறப்பைக் கேளாய்
செயலான சகலகலை யாக்கி வைத்து
பைவமாய்ப் பாடிவைக்கும் கண்ணை விழிப்பிக்கும்
பாங்காகச் சிமிளிக்கும் ரோமம சைவிக்கும்
பெய்வமாம் பொன்னிட வர்ண மாகும்
பெரிதான தெய்வந்தா னனந்தா னாகும்
கொய்வமாங் கூர்மனிடக் குணத்தைக் கேளாய்
கொடியமனந் தனினின்று நிமை க்கொட் டாமே. 45

நிமைக்கொட்டுங் கொட்டாவி தானுங் கொள்ளும்
நேராக வாய்மூடும் பெலனுண் டாக்கும்
கமைக்கொட்டுங் கண்விழிக்கு மூடப் பண்ணும்
காட்சியெல்லாம் காண்பிக்கும் விழிநீ ரோடும்
விமைக் கொட்டும் வர்ணமது வெளுப்ப தாகும்
மேலான தெய்வந்தான் விஷ்ணு வாகும்
கமைக்கொட்டுங் கிருதரா தியின்கு ணந்தான்
கடுநாவு நாசிதனிற் கசிவுண் டாமே. 46

கசிவுண்டாங் கடும்பசியின் கன்மஞ் செல்லும்
கண்ணியேயி ருத்தலொடு போத லாகும்
துசிவுண்டாய் தும்மலோ டிரும லுண்டாம்
சுயமான வர்ணமது கறுப்ப தாகும்
தெசிவுண்டாந் தெய்வமது சிவன்றா னாகும்
திரோத பையிற்கூறான திறமு மாகும்
குசிவுண்டாம் தேவதத்தன் குணத்தைக் கேளாய்
குடிலமாய்ச் சோம்புமுறித் திடுத லாமே. 47

முறித்திடுதல் மொழிக்கும்போ முயற்சி யாகி
முகுளிதமாய்க் கண்ணினையே யோடியு லாவித்துத்
தரித்திடுதல் சண்டைகொளற் றாக்கல் பேசல்
சண்டாளக் கோபத்தை யுண்டு பண்ணல்
குறித்திடுதல் குதங்குய்யத் தானத் தன்றிக்
கூர்ந்ததெய்வந் தேவேந்திரன் படிக வர்ணம்
தறித்திடுதற் றனஞ்சயனைச் சாற்றக் கேளாய்
சாங்கமாய் மூக்கினின்று தடிக்குந் தானே 48

தடித்துமே உடம்பெல்லாம் வீங்கப் பண்ணும்
தந்திரமாய்க் கன்னத்திற் சமுத்திரம் போலத்
திடித்துமே சுந்தரமாய்க் கோஷ மாகித்
திரண்டுமே துஞ்சியகா லந்த னிற்றான்
வடித்துமே வாயுவெல்லாம் போன பின்பு
வளமான தலைவெடிக்கு மூன்றா நாளில்
அடித்துமே தலைவெடித்தா லப்பாற் போகும்
அதின்வர்ண நீலவர்ண மறிந்து கொள்ளே. 49

அறிந்ததோர் தெய்வமது தன்வந் திரியாகும்
ஆகவிந்த வீரைந்து மாதியாம் வாய்வு
வெறிந்ததோர் விஷயமைந்தின் விபரங் கேளாய்
மிறியதோ ரமாவசையம் பருவசைய மாகும்
தறிந்ததோர் சலவசைய மலவசையத் தோடு
தாக்கான சுக்கிலமாய வசையா மைந்தும்
எறிந்ததோ ரமாவசைய மன்னம் தண்ணீர்
இருக்குமிட மென்றுதா னியம்பி டீரே. 50

இயம்பிடவே பருவசைமா வதுதான் விளம்பில்
இயன்றவன்னந் தண்ணீர்தா னேகமா ராய்ந்து
புயம்பிடவே பிறியுமிடமமா வசையம் புகலில்
புசித்ததெல்லா மலமாகிப் போக்குவைக்கு மிடமாம்

தயம்பிடவே சலவசையஞ் சாப்பிட்ட நீர்தான்
தாங்கியே யிருக்குமிடஞ் சலப்பை யாகும்
சுயம்பிடவே சுக்கிலமா மசயஞ் சொல்லில்
சுகமான சுக்கிலப்பை யன்று சொல்லே

சொல்லான விஷயமைந்தின் றொகுப்புச் சொன்னேன்
சூட்சமாங் கொஞ்சமைந்தின் சுளுக்கு கேளாய்
அல்லான வன்னமயங் கோசமயத் தோடும்
அரிதான பிராணமய கோச மாகும்
மல்லான மனோமயம்மாம் விக்யான மயமாம்
மகத்தான வானந்த மயமு மைந்து
மெல்லான விதின்விரிவு விளங்கக் கேளாய்
மெய்வாய்கண் மூக்கோடு செவியு மாமே. 52

ஆமென்ற வைம்பொறியின் பிரிதீவின் கூறால்
அன்னமய கோசத்தில ப்புவந் தணைந்தால்
ஊமென்ற வூனுண்டாம் பிராணமய கோசம
உந்தியிதிற் றேயுவந்தால் புத்தி யுண்டாம்
மாமென்ற மனோமயமாங் கோச மாகும்
வாயுவிதில் வந்தடைந்தால் விகார முண்டாம்
நாமென்ற ஞானமய கோசமெனப் பேராம்
நலத்தவா தம்வந்தால் சுகமுண் டாமே 53

வந்தாலா னந்தமய கோச மென்போம்
மகத்தான கோசமைந்தி லெடுத்தவுட லதுதான்
குந்தான கோசமைந்தின் குணத்தைச் சொன்னேன்
குறிப்பான வாதார மாறுங் கேளாய்
முந்தான மூலாதாரஞ் சுவாதிஷ் டானம்
முதிர்ந்தமணி பூரகமும னாகதமும் விசுத்தி
அந்தாலாக் கினையுமா தார மாகும்
அடுக்கான வாதாரத் தாண்மை கேளே. 54

கேளேழு லாதாரங் குதங்குய்யத் துக்கும்
    கெடியாக நடுவிருக்கும் பானத் தின்மேல்
கேளேவீ ணாதண்டின் கீழி ருக்கும்
    மிக்கநடு வேயோரங் குலப்பிர மாணம்
மூளேமுக் கோணநா லிதழ்க்கமல மாகி
    முனிந்தநா விதழ்தனினா லக்ஷரத்தை யுடைத்தாய்
வாளேமுக் கோணநடு மந்திரம் ரீங்காரம்
    வல்லபையாஞ் சத்திவலப் பக்க மாமே. 55

பக்கமாமந் திரமும்ஸ்ரீங் கார மாகும்
    பகரான தெய்வம்விக் கினேசு ரன்றான்
வக்கமா மூலத்தில் வங்கென்று நிறுத்தி
    வாசியைநீ மறவாமல் மாட்டி யூகி
ஒக்கமா மூலத்தின் கீழடியிற் றானும்
    ஓங்காரக் கம்மதில டியிற் கட்டி
இக்கமாமி ருவரையுந் தெரிசித் தக்கால்
    இகபரமும் வெளியாகி யேற லாமே 56

ஏறவே பளிச்சென்று மூலத் தீதான்
    இதற்குமேலி ரண்டாமங் குலத்தின் மேலே
கூறவே நால்வட்ட மாறி தழ்த்தான்
    குறித்தசு வாதிஷ்டான மின்னொ ளித்தான்
ஆறவே யாறாமட் சரமு டைத்தாய்
    அதற்குள்ளே பிரிதீவுதான் குடியி ருப்பாம்
வேறவே வேதந்தா னிருக்கோ டெல்லாம்
    விளங்கிய தோரக்ஷமு நகார மாமே 57

நகாரமா மெழுத்ததுவும் பிரம னாகும்
    நவ்வா னீசமது பிரிதீவுக் காகும்
உகாரமா மந்திரத்தை யுன்னிக் கொண்டு
    உயர்வாய்வைக் கும்பிக்கி லறிவு தோன்றும்

சிகாரமா முப்புரிநூற் சிரச நாலு
சிறந்தசரஸ் வதியுமங்கே தெளிவாய்க் காணும்
பகாரமாய்த் தெரிசித்துப் பழக்கம் பண்ணப்
பாருலக மயக்கமெல்லாம் பண்ப தாமே.

58

பன்மையா மாறாமங் குலத்தின் மேலே
பதிந்தபிறை போலமணி பூரக நதான்
தொன்மையாஞ் சுற்றிலும்பத் திதிழ தாகிச்
சுயம்பான வட்சரமும் பத்துந் தானாய்
அன்மையா மப்புதனக் கிடம தாகி
அதற்குள்ளே தெய்வந்தான் விஷ்ணு வாகித்
தன்மையாம்பக் கத்திற்சத்தி லட்சு மியாம்
தயங்காத வட்சரந்தான் மகார மாமே.

59

மகாராமா மட்சரந்தான் விஷ்ணு வாகும்
மகத்தான மவ்வதுவுமப்பு பீசம்
விகாரமாம் வேதமது வெசுரு வாகும்
மெய்நிறைந்த கவுத்துவமணி பஞ்சா யுதம்
நிகராமாம் லட்சுமிதான் பாக மாகி
நேர்மையாய் வாசியைத்தான் மங்கென்ன நிறுத்தி
எகாரமா யூதினானு லுலக வாழ்க்கை
ஒருநொடியில் வேனியாகு மூணிப் பாரே.

60

ஊணியிதன் மேலிருநா லங்கு லந்தான்
உத்தமமா மானாகதத்தின் வீடு மாகும்
தோணியேதிரி கோணம்பனி ரண்டா மிதழ்தான்
சுற்றிலுமே பனிரண்ட ட்சர முடைத்தாய்
சேணியே தேயுவுக்கங் கிருப்பு மாகிச்
சிகாரமா மெழுத்தாகிச் சிறப்புமாகிப்
பூணியே பூதமீசம் ரவ்வு மாகிப்
புகழான ருத்திரனும் புரிந்தார் பாரே.

61

புரிந்திருந்தார் சிகாரத்தில் ருத்ரன்ருத் திரியும்
புகழாக லாசிவைத்துச் சிங்கென் றூறு
கரிந்திருந்த காயமுமோ வாலை யாகும்
கனிசாம வேதத்தின் கருத்துந் தோன்றும்

பரிந்திருந்த விதற்குமற் பனிரண்டங் குலந்தான்
பார்வையாய் மேலேறி விசுத்தி வீடு
அறிந்திருந்த வறுகோண சோடசமா மிதழ்தான்
அதிலேதா னீரெட்ட க்ஷரமு மாமே.
62

ஆமெனவே வகாரந்தா னறுகோண நடுவே
அமர்ந்திருந்தார் மகேசுரன்மகேஸ் பரியு மாக
வேமெனவே யதர்வணவே தத்தோ டொக்க
மிக்கான வாயுவது மிதழுக் குள்ளே
போமெனவே பீசந்தான் யவ்வு மாகும்
புகழாகக் கும்கஞ்செய் தூதி யூதி
வாமெனவே வங்கெனவு மிறுத்திப் பார்க்க
வயசெல்லா மொருநாளாய் மனதிற் காணே.
63

காணவேதன் மேலிரெட் டங்கு லந்தான்
கண்டமா ருதம்புருவ மளவா யாகி
ஊணமே யிரண்டிதழா யோங்கி நிற்கும்
உற்றுநின்ற வட்சரமு மிரண்டு மாகும்
ஆணவே நடுவுக்குள் யகார நிற்கும்
ஆக்கினையின் வீடாகு மாகாச மிருப்பு
பூணவே பூதபீசம் யவ்வு மாகும்
புகழான மாணிக்கப் பிரவை யவ்வே.
64

யவ்வுக்குட் சதாசிவமுஞ் சத்தி நிற்கும்
யங்கென்று கும்பித்தால் நேகசித்தி யாகும்
மவ்வுபர மானந்த மருவி நின்று
மகிழ்ச்சியாங் கருவிகளி னிடம தாகி
அவ்வுடமைம் புலன்றனையு மறியப் பண்ணி
அறிவோடு நினைவுதனின் மயகத் தாட்டி
உவ்வுமுள்ள படிநடத்திக் காண்பன கேட்பவனாய்
உகந்துகுரு வெழுந்தருளி வியார்த்திப் பாரே
65

பார்க்கவே யாதார மாறு மாச்சு
பரிந்திட்ட தத்துவங்கண் முப்பத் தாறும்
சேர்க்கவே சுவதத்வ மாகுங் கண்டீர்
சிறந்திருந்த மண்டலங்கண் மூன்றுங் கேளாய்
ஆர்க்கவே யக்கினிமண் டலத்தி னோடு
ஆதித்த மண்டலமுஞ் சந்திரமண் டலந்தான்
தோர்க்கவே யிதன்சூக்ஷி சொல்லக் கேளாய்
சுருதியா மூலமென்ற தொடர்ச்சி தானே

66

தொடர்ச்சியாஞ் சுவாதிஷ்டா னத்தின் கீழே
சுகமாக நடுமைய மணிமண் டலந்தான்
முடர்ச்சியாம் முச்சுடராய் மூலமட்டும் பரவி
முனைந்தசுவா திஷ்டான மட்டு நிற்கும்
மடர்ச்சியா மணிபூர மனாகதத்தி னடுவே
வளையம்போற் சூரியமண் டலந்தா னிற்கும்
படர்ச்சியா மணிபூர மனாக தத்திற்
படர்ந்தேறுஞ் சூரியமண் டலந்தான் பாரே.

67

பாரென்றாற் சும்மாதான் பார்க்கப் போமோ
பரந்தோடும் வாசியைநீ மாட்டி பாரு
வேரென்றால் விசுத்திமேலாக் கிணையின் கீழே
விளங்கியெழுஞ் சந்திரமண் டலந்தான் பாரு
தூரென்றாற் றுவாதசாந் தத்தின் மட்டும்
சுடரொளியாய்ப் பிரகாச மாகி நிற்கும்
மூரென்றான் மண்டலங்கண் மூன்று மாச்சு
மூர்க்கமா மலமூன்றின் முடிவு கேளே.

68

முடியான வாணமு மாயை காம்யம்
முயற்சியா யிதின்பிரிவான் முடியு மாறு
திடியான செம்புனிற்றான் களிம்பு போலும்
சிறுநெல்லினுமிபோலு மாத்து மாவை

முடிவான மேலெழவொட் டாமற் காத்து
முடிவித்துத் தன்னதென்றே காத்தி ருக்கும்
மடிவான மாய்கையதா ணவத்தைக் கொண்டோ
வருகிறது தெரியாமன் மடிக்குந் தானே. 69

மடிக்கின்ற காமியங் கண்டத்துக் கெல்லாம்
மகிழ்ந்திடுதல் மாயைமுற்று விந்து நிற்றல்
துடிக்கின்ற மலமூன்றின் செயலு மாச்சு
தோஷமூன் றாவனாவாஞ் சுளுவு கேளாய்
நடிக்கின்ற வாதபித்த சேட்ப மூன்று
நலமா விதின்பிரின புட்டக் கேளாய்
வடிக்கின்ற வாதமது வாயுநிலை கலங்கி
மத்தியமா மக்கினியு மார்க்க மாமே. 70

மார்க்கமாம் பித்தந்தா னக்கி னியை
மசக்கிவைத்து மாய்கையுடன் வருத்தி வைக்கும்
தூக்கந்தான் சேட்பமது சலமிகுதி யாக்கித்
துவாரங்க டோறுமிடை விடாம னிற்கும்
மூர்க்கந்தான் றோஷமிது மூன்று மாச்சு
மூண்டதோ ரீஷணைகள் மூன்றைக் கேளு
நோக்கந் தானர்த்த வீஷணையி னோடு
லோகவீ ஷணைகாம வீஷணைமூன் றாச்சே. 71

ஆச்சென்ற மூன்றையுந்தா னறியக் கேளாய்
அதிகமா அர்த்தவீ ஷணைகு ணந்தான்
வேச்சென்ற வர்த்தமதின் மேலாசைப் படுதல்
விளங்கியதோர் லோகவீ ஷணையதனைக் கேளாய்
காச்சென்ற காணியுட னுறவுந் தேடிக்
காரியங்க ளதின்மே லாசை யாகும்
ஆச்சென்ற காமவீஷனை காமியத்தைத் தேடி
ஆசையது படுதலீ ஷணைமூன் றாமே. 72

மூன்றான பின்புதான் குணந்தான் மூன்று
மொழியவே ராசததா மதசாத் வீகம்
வேன்றான விதின்விரிவு விளம்பக் கேளாய்
வெகுளிபல பேசாதிருத்தல் வேண்டுவது கொடுத்தல்
தான்றான தன்னைச்சார்ந் தாரைக் காத்தல்
தகமையுட னுயிர்களைத்தம் முயிர்போ லெண்ணல்
பான்றான பகைவரைவென் றிடுத னீங்கல்
பலகலைக ளறிதல்பயில் பண்புண் டாமே.

73

உண்டுலகினுக் கங்கோருறுதி யென்ன வாழ்தல்
உண்மையாய் நலந்தெரிதல் புகழே பூண்டல்
தண்டுதா டாண்மையொடு மேன்பா டான
சாற்றியதோர் குணமெல்லாம் ராசயத்துக் காகும்
மிண்டுதா மதகுணமு மேதோ வெண்ணில்
மிகுதியாம் வஞ்சனையே செய்த லாகும்
வண்டுவழி பாடொழிதல் வாதுபோ ராடல்
வணக்கமில்லா வெகுளியே விளம்ப லாவே.

74

விளம்பவே செய்தநன்றி மறுத்தல் விந்தை
மிகப்பேசல் சிதைந்து முரைமிடுக்குப் பேசல்
முளம்பலே முன்னுரைத்தல் பழியைக் கூறல்
முகத்துடனே பேசல்பகை யுடனே வாழ்தல்
புலம்பலே பொய்கொலைகள் களவு காமம்
பொல்லாங்கி யாவையுமே புகன்று பேசல்
களம்பலே காமத்தின் குரோத மிக்கக்
கடிந்திடுந்தா மதகுணத்தின் காட்சி யாமே

75

காட்சியாஞ்சாத் திகந்தா னேதோ வென்னில்
கமழ்கடிவு சாந்தகமும் வாய்மைதயை யொடுகரம்
தாட்சியாந் தண்ணளிவுக் குந்திடுநற் சீலந்
தயவான குணமன்பு பெருமைபுகழ் பூண்டல்,

மாட்சியா மறையினிறை மண்மயக்கல் பூண்டல்
வறிஞோரை வாழ்வித்த நல்லோர்க் கீதல்,
நாட்சியா யிறைவனடி யினைப்ப ணித்தல்
நல்லோர்க்குப் பொருளீத லறந்தேடல் தானே. 76

அறந்தேடல் உறவின்முறை சுற்றத் தாரை
அகதிபர தேசியருக் கன்ன மீதல்
திறந்தேடல் தெய்வமறை யோரைக் காணல்
தேவதைகட் குபாரச் சிந்தை செய்தல்
புறந்தேடல் புண்ணியங்கள் தேட வின்பப்
பூசுரரு க்காகுதிகள் பலிகொ டுத்தல்
தறந்தேடல் சாத்திகத்தின் குணமீ தென்று
சாற்றினோங் குணமூன்றின் றன்மை தானே 77

தன்மையாய் வினையதனைச் சாற்றக் கேளாய்
சார்ந்ததோர் நல்வினைதீ வினையி ரண்டாம்,
பன்மையாம் வினையிரண்டின் பயனே தென்னில்
பரவியநல் வினையதுதான் புண்ய மாகும்.
திண்மையாந் தீவினைதான் பாவ மாகும்
சேர்ந்தவினை யிரண்டாலே நரக சுவர்க்கம்,
புண்ணியஞ்சசெய் தவர்க்குநல்ல சுவர்க்க மாகும்
பொல்லாத பாவிகட்கு நரக மாமே. 78

ஆமேதா னிராகமெட்டை யறையக் கேளாய்
அதிகாமக் குரோதமொடு லோப மோகம்
வாமேதான் மதமாற்சரிய மிடும்பை வேகம்
வகையாகவிதன்குணத்தை வழுத்தக் கேளாய்
காமேதான் காமமென லாசை யாகும்
கடிதான குரோதமெனப் பிணக்க தாகும்
போமேதான் லோபமெனல் பிடிப்ப தாகும்
பேர்பெரிய மோகமெனல் பிரிய மாமே. 79

பிரியமாம தமதுதான் கெருவ மாகும்
பெரிதான மாற்சரிய மிடும்பாங் காரம்.
உரியமா மிடும்பையு தாசனைக ளாகும்
உறவேக மாவதுக டூர மாகும்
நரியமா மிராகத்தி னன்மை சொன்னேன்
நரசமா மவத்தையந்தி னாட்டங் கேளாய்
அரியமாஞ்சிற் றவத்தையா மிதனின் போக்கு
ஆக்கிரசாக் கிரமுஞ்சொற் பனமு மாமே.
80

சொற்பனஞ் சுழித்திதுரியந் துரியா தீதம்
சொல்லுமிவைதா னவத்தையைந் தாகச் சொல்வார்
நிற்பனமாஞ் சாக்கிரந்தா னெற்றி நேரே
நிறைந்திருக் கருவியிட நியம மாகக்
கற்பனமாஞ் சொர்பனமுங் கண்டத் தானங்
கடந்திருக்குங் கருவியுடன் காயத் தோடே
இற்பனமாங் சுழுத்திதா தானியத் துள்ளே
இயங்கிநிற்குங் கருவியுட னியம்பி டாயே.
81

இயம்பிடவே துரியநாபிக் கமலந் தன்னில்
ஏற்றமாங் கருவியுட னிணங்கி நிற்கும்
முயங்குதுரி யாதீத மூலா தார
மூர்க்கமாங் கருவியுடன மர்ந்தி ருக்குங்
கயம்பிடவே கருவிகடான் றொண்ணூற் றாறும்
சாரியமாய் தேகத்தைக் காத்து நிற்கும்
வியங்கியிந்த முப்பதுதத் துவமாந் தானே
வேதமா வித்யாதத் துவமா மென்னே.
82

தத்துவமாங் கருவிகடான் றொண்ணூற் றாறும்
சடத்திலெங்கு மூடாடித் தகமை யாகும்
உத்துவமா யுடறதனி னுண்மை கேளாய்
உதிரவங்க னெனும்புவி யிலுற்ப வித்து
அத்துவுமா கப்போதுள் ளிதழாய் மலர்ந்து
அத்திமுகத்துக் கருவிட்டாக வுருத் தரித்து
சத்துவமா மவ்வுருவாயவ் வயைத் தின்கண்
தாக்கான அவ்வென்னுமட் சரந்தா னாமே.
83

அவ்வென்னும் மட்சரத்தி னாடிதோன்றும்
அந்நாடி தனின்று தத்துவந்தான் தோன்றும்
எவ்வென்னு மெலும்புதசை யின்புடையு நரம்பும்
ஈரெட்டு பழுவோடிரண்டும் கொங்கை யுமா
முவ்வென்னு முட்டுக்கா லெட்டெட்டு வளையா
மூட்டியமைத் தங்ஙனேயோ ருருவ மாக்கி
சுவ்வென்னு மிடையோடு பிங்கலையுஞ் சேர்த்துச்
சுழிமுனையென் றொருதுளையும் வழிய தாமே. 84

வழியதுவாய் வாசல்வள மெனக்கொண் டாங்கே
வளமாக வுடனுண்ட வன்மை யெல்லாம்.
கழியதுவாய்க் காளவாய்க்கிடு காந்த லாகிக்
ககனம்போ லெரிந்துமே மடியப் பாய்ந்து.
சுழியதுவாய்த் தூராத குழிய தாகத்
துர்ப்பாவை நிணமுமாய்ப்பற்றி யீரலும் மாயப்
பொழியதுவாய்க் கனிதநாறிய பித்துமாகிப்
பொருமலுமாய்ச் செறுமலுமாய்க் கிருமியா குமே. 85

கிருமியாய் வகைதோறும் வாயுவைத்தா னிறுத்திக்
கிரணமுந்நூற் றறுபதுமோங் குடனிரங்க லாகி
அருமியார் தவிருத்தி யமர்ந்தகுடல துதான்
அமர்ந்தமுப் பத்திரண்டு முழங்குடலு மாகும்
ஒருமியா யொப்பமுட னொன்பதுவாய் மடித்து
உற்றசுக்ல மலசலந்தான் மூன்று மாகி
வருமியாய்வச் சிரத்தோல் மேலே போர்த்து
வழிபலவாய் மொழிமொழியாய்ச் சந்து மாச்சே 86

சந்துமூன்ற ரைகோடி யுரோமத் துவாரம்
தாக்கான நாலெட்டு வுறுப்பு மாகி.
இந்தவிருவது விரலுமைய நான்கு முகிரு
எட்டுச்சா ணீளமுமா யேக மாகி

நந்துநாற்சாண் பெருமைமெய் வாய்கண் மூக்கு
நலத்தசெவி யுடல்பிரிதீ வின்கூ றாகிப்
பந்துரெண்டு காலுமாயி ரண்டு கையாய்ப்
பதினாறு கவருடைய வீணா தண்டே.
87

தண்டோடே யாறுதெரு வேழுகட லாகும்
தாக்கான வெட்டுத்தூண் முப்பதுவாஞ் சந்து
எண்டோடே யெழுபதுபே ரெலும்பு தானாம்
ஏற்றமா மொழிமுச்சா ணெலும்பு மாகும்
முண்டோடே யெலும்புமுச் சாண்சதையு மாகும்
முக்கியமா மெண்பலமீ ரலுமா மென்ப
நண்டோடே நானாழி யுதிர மாகும்
நற்பத்து வாசலையு முடைய தாமே
88

உடைத்திரட்சி யுதிரமாங்கிச மேதை யத்தி
உயர்ந்த சுக்கிலமச்சைச் சத்தாது
படைத்தபல முப்பத்தி ரண்டு மாகும்
பண்பான பழுவெலும்பு பதினா றெங்க
முடைத்தமுது குத்தண்டு பன்னிரண்டு கோர்வை
முதற்குழ்த்தா ளசைவ தைந்து மாகும்
நடைத்தநரம் பெலும்பொன்றியே ழரையுங் கூட்டி
நலம்படவே சதைமேவி நாடிற் றன்றே.
89

நாட்டியே பிடரியினிற் கோர்த்த நாடி
நரம்புபின்ன லோரேழா யிரமா மெங்க
ஆட்டியே சைவுடலந் தான்று வக்கில்
ஆருயிர்தா னாற்பத் தாற தாகும்
தூட்டியே தொழுத்தையிரண் டாயி ரத்துத்
துடர்ந்துவிண் வளருமெய் யாயிரமா மெங்க
பாட்டியே கோணங்கள் பதினா றாகும்
பகர்சேட்டு மத்தின்னக் குண்டலத் தின்னலே.
90

அன்லெழும்பி வாயுபத்து நாபியினிற் சுருக்கி
அல்லலுறும் வாசலொன்ப திற்கதவொன் றிட்டு
இனலெழும்பி யீசர்வா சலைத்தி றந்து
இடையினொட பிங்கலை நாதனையே நோக்கி
நிணலெழுப்பி யன்பனெனு நெய்சொ ரிந்து
நேராக வமிர்தமென்னுந் திரியை யிட்டு
வனலெழுப்பி மணிவிளக்கை நிறைய வேற்றி
வாசையைநீ வரவழைத்துக் கொள்ளே. 91

கொள்ளவே யைம்புலனை நாச மாக்கிக்
கோசமா மட்சரத்தை யளவ றிந்து
அள்ளவே யன்பத்தோ ரட்சர த்தின்
ஆதாரநி ராதரஞ் சோதித் தேறி
உள்ளவேமண்ட லத்தின் வலமாய் வந்து
உதிரமண் டலமொக்கப் பால்சொ ரிந்து
கள்ளவேகா மம்வெகுளி மயக்க றுத்து
கடும்புரவி குசைதாங்கிக் கருதிப் பாரே. 92

தாங்கியே யிருமூன்று தெருவுஞ் சுற்றித்
தயங்காத வசுவங்க டெருவும் ரெண்டு
ஏங்கியே யூாயிரத் திருநூறு வாய்வு
இரவுபக லளமாக விமைப்பில் லாமல்
ஓங்கிவோங் காரமெனு மூல நாடி
உறுதிகொண் டெழுபத்தீரா யிரமா நாடி
நாங்கியே நரம்போடு நாடியிவைக் கெல்லா
நலத்தவுரப் படுநாடி யொன்றுண் டாமே. 93

ஒன்றென்னு மிகிலாதித் தன்போ னாடி
ஒருபத்தும் பரித்துத்தான் பறந்த வாறும்
நன்றென்னுங் காலோடுகை நடுத்தா மரையில்
நாடிநுழைந் துயிராகி மெய்யி லோடிப்
பிண்டுநரம் பாலெழும்பைப் பிணைப்பிசை வித்து
பெருநாடி புகுமத்தை யறிந்ததடங்கி நிற்கும்
அண்டெனவே நாடிபத்துஞ் செறித்தடங்கி நிற்கும்
அதிமூல முந்திமுத லாகியுறு மாமே. 94

உறுமுடிக்குக் கீழ்மேலும் பதித்து நிற்கும்
உகமையாந் தலையினிலே யீசு ரன்றான்
செறிவினைசெய் வினைப்பயன் முன்னு மறிந்து
திகழிந்தர மான்றலைபோ லிமைபா னுள்ளே
தறுவினைசத் தப்பரிச ரூபாச கந்தம்
தானம்வகை தொறுமுத்தி கொடுத்து நல்கி
துறுவினைசெய் தகமையறுத் துள்ளே நோக்கித்
தொண்ணூற் றாறாங்கருவி தத்வ மாமே. 95

ஆமெனுநாடி நரம்பெழுபத் தீரா யிரமாம்
அதிவீறும் நாடிவிஷ்ணு நாடி யாகும்
ஏமருத்தர ணாடியிடை யோடுபிங் கலையும்
எழின்முது கெலும்புபதி னாறுபழுவு வாகும்
மூமெனுமுப் பத்தொருவார்க் குழியு மாகி
முதிர்ந்துநின்ற வையுழக்கா முதிர மாகும்
நாமெனுநா ழிவாதமுந் நாழி பித்தம்
நானாழி சேட்டுமு நலத்த தாமே. 96

நலத்தமூன் றரைகோடி ரோமத் வாரம்
நல்லிருபத் தெண்கோடி மலத்து வாரம்
மூலகமுப்பத் தெண்கோடி சலத்து வார
முயன்றிரத் தமைம்பலமாங் கிசநூறு பலமாம்
கொலத்தகெந்த மெண்பலமாம் ரோம நூற்றெட்
கோயாம்மேதை யிருநூறு பல மாகும்
மெலத்ததோல் தொண்ணூறு பல மாகும்
பேரான நிணந்தானு மாறுபல மாமே. 97

ஆமென்ற குடல்முந்நூற் றேழுபல மாகும்
அதிகமாம் வழுக்கையது நாற்பலம தாகும்
தேமென்ற சீயுரித்தான் கண்கள் ரெண்டும்
சிறக்கவே நாலுகழஞ் சாகுங் கண்டாய்

நாமென்ற நாக்குநாற் கழஞ்ச தாகும்
நற்கந்த மூக்கிதானது முக்க ழஞ்சு
காமென்ற கன்னஞ்சேர்நாற் கழஞ்ச தாகும்
கடிந்தெலும்பெலா நூற்றோர்பத் தெண்பல மென்னே. 98

என்னவே யிறைச்சிபல நூற்றுபத் தைந்தாம்
ஏற்றமுப் பலந்தானு மூளை யாகும்
பன்னுதா மரைமெட்ட மைங்கழஞ்ச தாகும்
பார்க்கவே சலப்பையுமோர் முழுழந்தா ணீளம்
கன்னவேகரு விகடானது தொண்ணூற் றாறாம்
கணக்காக வுடற்குறிப்பு காயந்தா னாகும்
தன்னவே தத்துவங்கடா னெல்லாஞ் சொன்னேன்
சார்ந்தநா டியின்றன்மை சாற்றி னேனே. 99

சாற்றுகிறே னாயிடப் பூர்வ மெல்லாம்
தாக்கான நாக்குமல மூத்ர மாகும்
காற்றுகிறேன் கண்ணோடு பேச்சு தானும்
காரியமா மெட்டுவகைப் பரிட்சை தன்னில்
ஆற்றுகிறேன் வற்றிலுள்ள குணங்க ளெல்லாம்
அசாத்திய சாத்தியமறிந் தவையும் பார்த்து
நாற்றுகிறே னாடியிட நண்மை யெல்லாம்
நற்குணமுந் துர்க்குணமு கயந்து பாரே

100

நயந்துநீ நாடிதான் பார்க்கும் வாறு
நலமான புருவமுச்சி கண்ட நெஞ்சு
கயந்துகையிற் காலடியின் முழக்கை தன்னிற்
கணுக்காலின் முழங்கால்கை குழியி லாகும்
தயந்துகா ணங்கடா பரிக்கு நாடி
சகலநரம் பெழுபத்தீரா யிரமுஞ் சார்ந்து
தியந்துநிற்கு மிவ்விடங்க ணாடி பார்க்கில்
திரேகத்தின் பரிட்சையெல்லா மியம்பி டாயே

101

நாடி பார்க்கும் விதம்

இயம்பிடவே அங்குஷ்ட விரலுக் கப்பால்
ஏற்றமாய் நெற்கிம்பிடை விட்டில்பால் பார்க்கில்
முயம்பிடவே மூவிரலா னாடி தொட்டு
மும்மூர்த்தி நாடியினின் முழக்கம் பாரு
யியம்பிடவே பிரமமது வாத நாடி
பேரான பித்தந்தான் விஷ்ணு நாடி
தியம்பிடவே சேட்பமது ருத்ர நாடி
செயலெல்லாஞ் செப்பிநீ தெளிந்தி டாயே.

102

நாடிபார்க்கும் காலம்

தெளிந்திட்ட காலைநாழி கைதான் பத்தும்
திறமையாய் வாதத்தின் சுரப் பதாகும்
பிழிந்திட்ட வுருமத்திற் பத்து நாழி
பித்தததி னாடியின்பிர தாபந் தானாம்
தெளிந்திட்ட வந்திதனிற் பத்து நாழி
சிலேட்டுமத்தின் செயலாகுங் கங்குற் போது
வழுந்திட்ட வாதத்தி னாடி யாகும்
வலிந்தநசி பத்தின்மேற் பித்த மாமே. 103

ஆமென்ற வைகரையிற் சேட்ப மாகும்
அம்மூன்று நாடிகளு மடங்கியெழுங் காலம்
நாமென்ற வாதத்துக் கிருப்பிடவே கேளாய்
நாபிக்குக் கீழென்று நவில வாகும்
பேமென்ற பித்தத்துக் கிருப்பிடமே கேளாய்
பேரான கண்டத்தின் கீழ தாகும்
தேமென்ற சேட்பமது சிறந்திருக் குந்தான்
செயலான வுச்சிக்குக் கீழ தாமே. 104

கீழான பெருவிரற்கீழ் தளர்ச்சிநியாம் விரலிற்
கிளந்தெழுப்பும் வாகத்தி னாடி தானும்
மாழன மத்தியமத்தின் விரல்தான் பித்தம்
மகத்தான வனாமிவிரல் சேட்ப மாகும்
வாழான மன்னனுக்கு வலதுகை னாடி
மங்கையருக் கிடதுபக்கம் வகுக்க லாகும்
காழான கைகாலி னாடி பார்க்கக்
கருவிகடான் கணக்கறிந்து கருதிப் பாரே. 105

கருதியே நாடிகடான் காணுநேரம்
கதிருதயஞ் சித்திரைவை காசிக் குத்தான்
அருதியே யானியோடா டிபைப் பசியும்
அமிர்தமாங் கார்த்திகைக்கு மத்தி யாம்

மருதியே மார்கழியுந் தையு மாகி
மாலைநே ரந்தனிலே பார்க்க லாகும்
விருதியே புரட்டாசி யாவனிபங் குனியும்
பேரான கங்குலர்த்த ராத்திதா னாமே.

106

நாடிதோன்றாத காலம்

அத்தமா நாடிதெரி யாத பேர்கள்
அப்பியங்கஞ் செய்தோர்க ளன்னந் தண்ணீர்
குற்றமா மிகுதியுமே யுண்ட பேர்கள்
குதிரைகரி வெய்யில்விடாய் சிற்றின் பத்தோர்
மத்திபமா மதுகஞ்சா வபினி மாம்சம்
மச்சங்கண் மிகவுமுண்டோர் வாயு கும்பித்
தித்தமாய் நிறுத்தினோ ரிவர்கட் கெல்லாம்
திசைகலங்கி நாடியது தெளிந்தி டாதே

107

வாதநாடி

தெளிந்திட்ட வரநாடிக் குணந் தான்
சிறுபிள்ளை தூக்குதொட்டி லாட்டம் போலும்
வளிந்திட்ட வளைந்துவளைந் தேந டக்கும்
மண்டுகந் தத்துதல்போ லோணான் போலும்
தளிந்திட்ட சர்ப்பம்போ லட்டை போலும்
தவழ்த்துமே மலியினிற் குருவி போலும்
அளிந்திட்ட வாமையின் றனடையைப் போலும்
ஆதியா வாதமது நடக்குந் தானே

108

பித்தநாடி

நடக்கின்ற பித்தத்தி னாடி கேட்கின்
நாகரிக மாகுமன்ன நடையைப் போலும்
மடக்கின்ற மயில்போலுந் தாரா போலும்
மாடப்புறா வுழுர்க் குருவி போலும்

விடக்கின்ற மெத்தனவாம் மீண்டு மீண்டு
மேன்மையாய் முடுக்காக விளக்க் மாகிக்
கிடக்கின்ற கெருடன்போற் பெலத்தே யோங்கிக்
கேசரம்போ லசையுமது பித்தந் தானே 109

சிலேட்பநாடி

தானென்ற சிலேட்பத்தின் றாது கேளாய்
தயங்கியே தோற்றுமது தோற்ற தாகிக்,
கோனென்ற கோழியின்ற னடையே போலும்
கொக்கிலுறக் கம்போலூக் குருவி போலும்
மானென்ற மங்கைநல்லார் மயக்கிற் கிக்கி
மருவினவன் றாதுபோன் மசக மாகித்
தேனென்ற சிலந்தியின் பூச்சுப் போலும்
சேட்பமா நாடியது தெளிவாய்ப் பாரே. 110

வாதபித்தநாடி

தெளிவான வாதபித்த நாடி செய்தி
செப்பவே சிறுகுருவி போனட ந்து
வளிவான மயில்போல நடப்புங் காணும்
மருவியபின் னோந்தியின்றன் மார்க்க மாகும்
களிவான வாகசேட் பத்தி னாடி
கானகத்தின் கோழியது போன டந்து
அளிவான அட்டையின்றன் மார்க்கங் கண்டால்
அதிகமாய் முன்சொன்ன நாடி யாமே. 111

பித்தசேட்பநாடி

நாடியே பித்தசேட்ப மத்தின் றாது
நண்ணியே நடக்கும்வகை நட்பைக் கேளீர்,
பாடியே பாம்புபோ லசைந்து பின்னை
பதிந்தத வளைக்குதித்தல் பதரும் போலாம்
ஆடியேசீ ரணபா நாடி தானே
அசைந்துமத யானைபோ னடைந டக்கும்
தேடியே தீபநத்தி னாடி தானே
சிறுகாக்கை தூங்குதல்போற் றுடிக்கு மன்றே. 112

சன்னி நாடி

துடித்திட்டங் கசைந்தசைந்து நாடி நின்று
சொல்லும்விற குத்தலையோ நடையே யானல்
கெடித்திட்டு கிறுகிறென்றே சுற்றி நாடிக்
கீழோடி வளைந்துமே பதறிச் சுற்றி
அடித்திட்டு அன்னம்போ லட்டை போல
அசமந்த மாகவே மெலிந்த தானால்
தடித்திட்டுக் குடிலமாய்ச் சிக்கென் றானால்
சன்னியென்றே நாடியேறே சாற்ற லாமே.

113

சுகசன்னி

சாற்றியே மந்தமாய் நாடி தானும்
தனித்ததொரு குக்குடம்போற் பாம்பு போல
மோற்றியே மூஞ்சூறு போல வாகி
முனையுரகிச் சுடராகிக் கொழுந்தே யோடி
ஆற்றியே டடங்கிநின்றங் கெழுப்பிற் றானால்
அப்பியநஞ் செய்தரிவை யனுகி னோர்க்கும்
தோற்றியே சுகசன்னி யென்னும் நாடி
சூட்சாதி சூட்சமாய்த் துஞ்சும் பாரே

114

வாத சுரம்

துஞ்சியே வாளைமீன் போலப் பாய்ந்து
துடித்துமே தடித்துதான் சிக்க லாகி
அஞ்சியே சர்ப்பம்போ லடங்கி நின்று
ஆனைமும் மதம்போல வார்ப்ப ரித்து
நெஞ்சியே நெறுநெறென்று நிமிஷந் தானும்
நிலைவிட்டு நீங்கிற்றே மீண்டும் புக்கில்
வஞ்சியர்மேல் விகாரமாய் மனதைப் பூண்ட
வாதசுர நாடியென்றே வகுக்க லாமே.

115

மரண நாடி

வகுக்கவே வாதத்தி னாடி தானும்
வளைந்துமே முன்னோடிப் பிரண்ட தாகில்
வகுக்கவே மந்தமது மெத்த வாகில்
மயிற்றாரா வன்னநடை போன்று நின்றால்
நிகுக்கவே நின்றுநின்று நேரோ டாமல்
நிலைதப்பி முன்பாய்ச்ச பின்பாய்ச்ச லாகிச்
செகுக்கவே சடந்தானு மெட்டு நாளிற்
சிவபுரத்துக் கெய்விடுந் திண்ணந் தானே 116

திண்ணமாய்ப் பித்தத்தி னாடி தானும்
தேள்கொடுக்கு தெறிப்பதுபோற் றெறிக்கு மாகில்
வண்ணமா மாதத்தின் மரண மென்க
வல்லூறு சர்ப்பமது வளைந்து காண்கில்
பன்னியே பட்சத்தின் மரண மென்க
பருவரணைத் துடிசெய்யி லெட்டு நாளாம்
மின்னியே யிந்தமது மீண்டு மீண்டு
மிரட்சியே மீண்டுவந்தால் மீள தாமே. 117

மீளவே உந்தியினிற் சுழியைப் பற்றி
விளங்கியதோர் வாதபித்த சேட்டு மந்தான்
ஆளவே யையமென்ற நாடி தன்னில்
ஆதித்கன் சுடரொளிபோற் றோன்று மாகில்
காளவே காந்தத்தின் கனலாய்க் காணில்
கலங்கியே தானம்விட்டுக் கடைசி யாகில்
பாளவே பம்பரம்போற் சுழலு மாகில்
பரமபத மடையுமென் றேபகர லாமே. 118

பகரவே வாதத்தி னாடி தானும்
பருகியதோர் பித்தத்தின் வீட்டைச் சேர்ந்து
பிகரவே பித்தத்தி னாடி தானும்
பேரான சேட்டுமத்தின் வீட்டைச் சேர்ந்து

அகரவே வையமென்ற நாடி தானும்
அதன்வீட்டை விட்டுமே யப்பா லேகித்
திகரவே கண்டத்தைச் சேரு மாகில்
செடமலைந்து சிவலோகஞ் சேர்வர் தாமே. 119

சேரவே வீணைபோற் றெறிக்கு மாகில்
சித்தமாய்த் தினமூன்று நாளிற் றீர்வர்
ஆரவே யையமா நாடி தன்னில்
அதிர்ந்துமே தவளைபோற்கு திக்கு மாகில்
போரவே பாம்புபோற் பிரவுற் றூர்ந்து
பொறியரவந் தன்னுனடைய நடைகண் டாலும்
மாரவே ழாந்தன்னிற் கொடிபின்னி னாற்போல்
வந்திடினு மரணமென வகுக்க லாமே, 120

மகுக்கவே மானிடர்தம் வலக்கை பற்று
வளைவன்றி முடக்கன்றி நெட்டி வாங்கி
முருக்கவே மூவிரலாற் றொட்டுப் பரர்க்கில்
முன்னாடி வாதம்பின் னாடி பித்தம்
சிகுக்கவே யனாமிவிரல் சேட்ப மாகும்
செயலெல்லாம் அறிந்துணர்ந்து சேதிகேட்டு
நகுக்கவே நோயதனி னுண்மை கண்டு
நாடியிடச் செயலறிந்து நாடி டாயே. 121

பூத்தமங்கைநாடி

நாடியே யெறும்புதா னூர்தல் போலும்
நல்லாமை யசைவதுபோல் வாத நாடி
கூடியே குளிர்ச்சியாய் மெதுவு போன்று
குடிலங்க ளுல்லாமற் றோன்று மாகில்
வாடியே மங்கையர்க்குக் கெர்ப்ப மாகும்
மகத்தான பஞ்சுபோன் மெதுவா யுற்றுப்
பூடியே கின்னரத்தின் பொலிவே யானால்
பூத்தமங்கை நாடியென்றே புகல லாமே. 122

விகற்ப நாடி

புகலவே புழுப்போல நிமிரு மாகில்
பொருகால வண்டினிட வொலியும் போல்
நிகலவே காஷ்டத்தி னெய்தான் வீழ்ந்து
நேர்ந்தெழும்ப மக்கினியி னருமை போலும்
திகலவே கிளியெழும்புஞ் செய்கை போலத்
திரையெழும்பி யொடுங்குபோற் பித்த நாடி
விகலவே படபடத்துத் தோன்று மாகில்
விகாரத்தி னாடியென்றே விளம்ப லாமே.
113

பூத நாடி

விளம்பவே மீதினியிற் கல்லெறிதல் போலும்
மிகப்புரவி யாட்டுக்கிடாய்ப் பாய்ச்சல் போலும்
திளம்பவே செக்கினிடத் திருகல் போலும்
சீறுகின்ற மூஞ்சூறு சசியே போலும்
இளம்பவே பந்தடித்து யெழும்பல் போலும்
ஏற்றம்போ லேறியிழித் திடுதல் போலும்
புளம்பவே பித்தத்தி னாடி தோன்றில்
பூதத்தி னாடியெனப் பேச லாமே.
124

மரண நாடி

பேசவே பிங்கலையின் நாடி தானும்
பேணிநாண் முழுதுதேடிற் பிரளா மற்றான்
வாசவே மூவிரண்டின் மரணஞ் சொல்லும்
வாதமா நாடியது வலிமை யாகி
ஏசவே யிரண்டுநாள் முழுது மோடில்
ஈராண்டின் ரணமென வியம்ப லாகும்
நாசவே நாண்மூன்று வழுவா தோடில்
நமனுக்கங் கிறையாவா னாண்டிற் றானே.
125

தானென்ற பித்தத்தி னாடி தானும்
தரியாம னாளொன்று தயங்கு மாகில்
ஆனென்ற வாறுதிங்கள் மரணஞ் சொல்லும்
அசைவிலா திரண்டுநா ளோடு மாகில்,
மோனென்ற மூன்றுதிங்கட் குணம றிப்பன்
மூர்க்கமாய் மூன்றுநா ளோடு மாகில்,
நானென்ற நாற்பதோ டைந்தா நாளில்
நசிக்குமே நமனிடத்தி னல்கு வானே.
126

நல்கவே சேட்பத்தி னாடி தானும்
நாள்மூன்று கடிதோடி லைந்து நாளாம்,
மல்கவே யிரண்டுநா ளோடு மாகில்
மரித்திடு வனீரைந்து நாளிற் றானும்
ஒல்கவே யொருநாளே யோடு மாகில்
உறுசீவன் பதினைந்து மட்டுநிற் கும்
பல்கவே பத்துநாழி கையே நின்றால்
பயமில்லை பார்தனிலே பாலிப் பாரே.
127

பாலித்த பித்தத்தி னாடி தானும்
பகட்டியே மூன்றுநாள் புரளு மாகில்
ஆவித்த வரவினாக் கசைதல் போலும்
ஆடியே யமர்ந்துதானி ருக்கு மாகில்
மாவித்த மணியசைத லோசை போலும்
மகத்தான வுடுக்கையின்றன் தொனியைப் போலும்,
கோலித்த நாடியினிற் குறிகள் கண்டால்
கொடுமறவி நகர்தனையே குடிகொள் வீரே.
128

சரீர லட்ணம்

கொள்ளவே வாதத்தின் ரேகந் தானும்
குளிர்ந்துமே சிறுதிடத்தே யுஷ்ண மாகித்
தெள்ளவே துடிதுடித்தே யிருக்கும் பித்தம்
தேகந்தா னதிகவுஷ்ண மாயி ருக்கும்

தெள்ளவே சேட்டுமத்தின் றேகந் தானும்
சிக்கென்று குளிர்ந்திருக்குந் தொந்த தேகம்
பள்ளவே பலவிதந்தான் பெற்றி ருக்கும்
பரிந்துதொட்டு தேகத்தைப் பார்த்துச் சொல்லே. 129

தேகத்தி னிறந்தானுஞ் செப்பக் கேளீர்
சிறுமையாய் வாதந்தான் கறுத்தி ருக்கும்
போகத்தின் பித்தநிற மஞ்ச ளாகும்
பொருஞ்சேட்ப ரோகிகு வெளுப்பு மாகும்
பாகத்தின் தோந்தரோ கிக்கு தானும்
பலபலவண் ணமுமாகிப் பறந்து நிற்கும்
ஆகத்தி னிறம்பார்த்து நாடி பார்த்து
அஷ்டவிதப் பரிகைஷயெல்லாம டவாய்ப் பாரே. 130

வசனபரிட்சை

பார்வாதா ரோகிக்கு வார்த்தை தானும்
பக்குவமாயச் சட்டதமா யிருக் கும்
பேர்பித்த ரோகிக்கு வார்த்தை தானும்
பேசிடிலோ பெலத்துமே புரத்தி ருக்கும்
சேர்சேட் ரோகிக்குவார்த்தை தானும்
சிறுத்துமே யீனசுர மாயி ருக்கும்,
வேர்தொங்க ரோகிக்கு வார்த்தை தானும்
வெகுவிதமா யிருக்குமென்றே விரித்தி டாயே. 131

நேத்திர பரிட்சை

விரித்திட்ட வாதமென்ற ரோகிக் குத்தான்
மீறியே கண்கறுத்துத்த ண்ணீர் பாயும்
பரித்திட்ட பயித்தியரோ கிக்குக் கான்
பச்சென்று சிவந்திருக்குஞ் சேட்ப ரோகி
பிரித்திட்ட பீளைசாரும் வெளுத்தி ருக்கும்
பெருஞ்சன்னி வாதரோ கிக்குக் கண்தான்
கரித்திட்டுச் சிவந்துபச் சென்றி ருக்கும்
காமாலை ரோகிக்கு பசுமஞ்ச ளாமே. 132

மலப்பரிட்சை

மஞ்சளென்ற வாதரோகிக்கு மலந் தானும்
மலபந்த மாகியே கறுத்தி ருக்கும்
பிஞ்சலென்ற பித்தரோ கிக்குத் தானும்
பெருகியே வெச்சென்று சிவந்தி ருக்கும்
திஞ்சலென்ற சட்டுமரோ கிக்குத் தானும்
சிதறிமலம் வெளுத்துமே சீத மாகும்
பஞ்சலென்ற தொந்தரோ கிக்குத் தானும்
பலவர்ண மாயிருக்கும் பண்பு தானே. 133

ஜலப்பரிட்சை

பண்பான வாதரோ கிக்கு மூத்ரம்
பாரித்துத் தெளிந்திருக்கும் வெண்மை யாகும்
மண்பான பித்தரோ கிக்கு மூத்ரம்
மார்க்கமாய் மஞ்சளித்துப் பசத்தி ருக்கும்
திண்பான சேட்டுமரோ கிக்கு மூத்ரம்
சேறுபோற் பொருமியே நுரைத்தி ருக்கும்
கண்பான தொந்தரோ கிக்கு மூத்ரம்
கண்டபல நிறமாகுங் கருதி டாயே 134

நாவின் பரிட்சை

கருதியே வாதரோ கிக்கு நாக்கு
கறுத்திருக்கு முள்ளுபோல் வெடித்தி ருக்கும்
பருதியே பித்தரோ கிக்கு நாக்கு
பச்சென்று தானிருக்குஞ் சிவந்தி ருக்கும்
வெருதியே சேட்டுமரோ கிக்கு நாக்கு
வெளுத்துமே தண்ணீரு ண்டாயி ருக்கும்
துரிதியே தொந்தரோ கிக்கு நாக்கு
சூட்சாதி பலவர்ண மாகுந் தானே. 135

நாடி நிதானம்

வர்ணமா மெட்டுவகை பரிட்சை பார்த்து
வகையா னாடியிட குணமுங் கண்டு
தின்னமாந் தேகத்தின் செயலும் பார்த்துத்
தேசசீத சாபேதச் செயல றிந்து
கன்னமாங் காலகா லங்கள் பார்த்துக்
கனமான வக்கினியின் கணக்க றிந்து
பன்னவாம் பலபலவா நூலைத் தேர்ந்து
பரிகாரப் பயனறிந்து பார்த்துச் சொல்லே 136

நாடிநிதானம் முற்றிற்று

3. சுரரோகநிதானம்

சொல்லவே சுரத்தினிட திறமை கேளாய்
செடத்திலுள்ள பிணிக்கெல்லாம் ராசா வாகும்
எல்லவே நமனுக்கு மொக்கு மொக்கும்
எழிலோடு பிரதாப கோப மாகும்
கல்லவே தக்கனிட வேள்வி யைத்தான்
சாம்பசிவன் கோபத்தா லழித்த போது
நெல்லவே நெற்றிக்கண் சுவாலை தன்னில்
நேராகப் புறப்பட்டு நேர்ந்த தாமே. 137

நேர்ந்ததோர் சுரமேழு விதமு மாகும்
நிலையான நாமத்தி னேர்மை கேளாய்
வார்ந்ததோர் வாதசுரம் பித்தசுரஞ் சேட்பம்
வாகான பூதசுர சீரணசுர மாகும்
ஆர்ந்தவபி காதசுரந் தொந்தசுரத் தோடு
ஆர்க்கமா மேழுவித மறிந்து கொள்ளு
தீர்ந்ததோர் சுரபேத வன்மை யெல்லாம்
செயலறிந்து குணத்தோடு செப்பு வேனே. 138

வாத சுரம்

செப்புகிறேன் வாதசுரத் தின்கு ணத்தைத்
திருமுகமு முதடுமே கறுத்துக் காணல்
தப்புகிறேன் சரீரமெல்லாந் தடித்து நோதல்
தாகந்தான் மிகக்காணன் மெய்ந டுக்கல்
திப்புகிறே னுடம்புதிமி ரெடுக்க முஷ்ணம்
தேகம்பா ரித்திருக்கன் மலபே தத்தால்
குப்புகிறேன் குளிர்ந்துயிர்க்குச் செறித லிந்தக்
குணமெல்லாம் வாதசுரக் கூறு மாமே. 139

பித்த சுரம்

கூறான பித்தசுரத் தின்கு ணத்தைக்
கூறிடவே நித்திரைதான் மெத்தக் காணல்
தேறான மலமூத்ரஞ் சிவந்தி ருந்தால்
சிதறியே வயிறுகழிந் திடுதல் சத்தி
வாறான வாய்ப்பிதற்றல் வாய்தான் கைத்தல்
மகத்தான மூர்ச்சை யொடு தாகங் காணல்
தாறான வெழுந்திருந்து மோடல் விக்கல்
தவித்திடுதல் சந்தாபப் படுதல் காணே

140

சிலேட்ப சுரம்

சந்தாப மானசேட் டுமசு ரத்தைச்
சாற்றிடவே நாக்குமுகம் வெளுத்துக் காணல்
மந்தாப மார்நோத லிரும லிளைப்பு
வருகுதல்வாய் துவர்த்துமே உரிசை யில்லை
முந்தாப மூச்சுவிடப் போகா மற்றான்
முயங்கியே விக்கலொடு தாகங் காணல்
சிந்தாப மிடறுநொந்து மேன்மூச் சாதல்
தினவெடுத்தல் தீபங்கிடுதல் சேட்ப மாமே.

141

வாதபித்த சுரம்

ஆகுமே வாதபித்த சுரத்தின் செய்தி
அறிந்திடவே யங்கமெல்லா மசைதல் நோதல்
நாகுமே நாக்குத்தான் கறுத்துக் காணல்
நயந்துபிர லாபித்த னித்தரை யாதல்
வாகுமே மலபேத மாயி ருத்தல்
மலம்வெளுத்தல் வாய்கைத்தல் வடிவங் குண்ணல்
தேகுமே யறிவோடு நினைவு மாதல்
தியங்கிடுதன் மயங்கிடுத றிண்ணந் தானே.

142

வாதசிலேட்ப சுரம்

திண்ணமாம் வாதசிலேட் டுமசு ரந்தான்
செடமெல்லா நொந்திடுதல் சுவாசங் காணல்
எண்ணமா மிருமலுநா வெழுந்தி ருத்தல்
இசைந்துமயிர்க் குச்செறிதன் மிடறு நோதல்
தண்ணமாந் தாபமே மிகவுண் டாதல்
தயங்கியே சஞ்சலித்தல் வாய்தான் பேத்தல்
விண்ணமா மிரளியொடு வியர்வை காணல்
மிக்கவழுத் திடலிதன்றன் விபர மாமே.

143

பித்தசிலேட்ப சுரம்

விபரமாம் பித்தசிலேட் டுமசு ரந்தான்
வியர்வையே மிகவருதல் வாய்தான் பேத்தல்
நிபரமாய் நித்திரையு மிகவே மிஞ்சல்
நெடித்துமயிர்க் குச்செறித லிரும லாதல்
தபரமா மார்நோய்தல் தாபங் காணல்
தலைவலியும் பிடரிவலி தகைந்து காணல்
நபரமா நாக்கதுவும் வழவ ழத்தல்
நாக்கோடு மூக்குநல மழிதல் காணே.

144

பூத சுரம்

அருதலாம் பூதசுரத் தாண்மை கேளீர்
ஆதியந்த குமாகண்டன் போல்வ லிக்கும்
கழிதலாங் கண்ணுருட்டி யேவி ழிக்கும்
காய்ந்தவுடன் கருதியே பிரலா பிக்கும்
விழிதலாம் போசனங்கண் மிகவி ரும்பும்
வேண்டின தெல்லாமிக வுமாசை யாதல்
பழிதலாய்ப் பாடலொடு சிரத்தி லாடல்
பாரமயிர்க் குச்செறிதல் நித்திரையு மாமே.

145

அசீரண சுரம்

நித்திரையா மாசீர்ணசுர நேர்மை கேளீர்
நேர்மையாய்ச் சுரமோடே யிளைப்புக் காணல்
மாத்திரையாய் விக்கலொடு வயிறு மந்த
மாயிருத்தல் மார்புதுடை குறங்கு நோதல்
பித்திரையாய்ப் பிளித்தேப்ப மிடுதல் வாந்தி
பேர்பெரிய தாகமொடு மூச்சுக்காணல்
சித்திரையாய் வயிறுநொந்து பொருமிக் கொள்ளல்
சீதளமா யுடம்பெங்குந் திமிரு மாமே 146

அபிகாத சுரம்

திமிரான வதிகநடை குதிரை யானை
சுமையெடுத்த லதிகமாய் வேலை செய்தல்
தமிரான தாகமோ டிளைப்பு கைகால்
தளர்ந்திட்டுப் பனிதனிலே சஞ்ச ரித்தல்
அமிரான வபிகாத சுரதா னுண்டாம்
அதின்குணங்க டாகமுட னுடம்பெல் லாம்நோம்
வெமிரான வியர்வையொ டாலோபம் ப்ரம்மை
மிகக்குளுந்த போசனத்தி லாசை யாமே 147

ஆகீககசுரம்

ஆசையா மாகிதத்தின் சுரத்தைக் கேளீர்
அதிககுளி ருண்டாதல் தேகம் வாடல்
தேசையாய்த் தேகம்புள கித்தி ருத்தல்
சீறியே யிருமலுடம் பெரிவு காணல்
தாசையாய்ச் சந்தாபந் தலைகண் ணோவு
தருவிலா வுடம்பெல்லா முதுகு நோவு
ஆசையாய்ப் பத்தியத்தின் மனதுண் டாதல்
அதிகநித் திரைவருதன் மயக்கந்தா னாமே. 148

மயக்கமாய் மார்புமுக மெல்லாம் வாடி
வரவுவெளுத் திடுதல்கண்தான் பசுமை யாதல்
திபக்கமாய்க் கண்ணுகிரி லிரத்த மில்லை
சிதறியே வயிறுகழிந் திடுதல் சத்தி
கயக்கா யுள்ளங்கா லுள்ளங் கையும்
கண்ணியே யெரிந்திடுதற் றாகங் காணல்
இயக்கமாய்த் திரேகமெங்கு மழற்றல் காணல்
இசைந்தபடி பேசலெண்ணம் வேறு மாமே. 149

மாறல் சுரம்

வேறாகி யொருநாடான் மாறிக் காணல்
விளங்கிரண்டு நாள்மாறிச் சுரமுண் டாதல்
நாறாகி மூன்றுநா ணாளே மாறல்
நலத்தலைந்து நாண்மாற லர்த்த ராத்ரி
பாறாகி வருதல்பதினைந்துநாண் மாறல்
பகர்பந்த வொருமாதந் தான்மாறிக் காணல்
வாறாகி வாதபித்த சேட்பங் கூடி
மருவிநின்ற சுரந்தானு மாகிக மாமே. 150

ஆகீகசீதசுரம்

ஆகிகத்திற் சுதசுரத் தாண்மை கேளீர்
ஆகமெல்லா மிகக்கடுப்புற் றனல்போ லாகித்
தேகிகத்திற் சிரமிடறு கண்களோடு புருவஞ்
சிறுவலியாயா வலித்துமல பேத மாகி
நாகிதத்தில் நாக்குதடு வழவ ழத்து
நல்லநித் திரையில்லா துடல்திமிர்த்து உருமம
மேகிகத்திற் சுரகுளிருந் தாக மூர்ச்சை
மிகத்தாப மயக்கமொடு தியக்க மாமே. 151

ஆமசுரம்

தியக்கமா மாமசுரத் தாண்மை கேளீர்
சிறுவலியாய் வலித்துமா சனங்க டுத்து
மயக்கமா மிரதீதமொடு சீதம் பேதி
மருவுதண் ணீர்தாகஞ் சுரமு முண்டாம்

கயக்கமா யுடம்பூதி வெளுறிக் காணுங்
காலகையு மசந்திருக்குங் கைக்கும் வாய்தான்
தயக்கமாய் கால்கையுஞ் சயித்ய மாகும்
சளியோடு மிருமலுமாய்த் தவிக்குந் தானே 152

சர்மத்தைப்பற்றினசுரம்

தவித்திடா சர்மசுரனாலின் றன்மை தன்னைச்
சாற்றியதே சடத்தினிற்குந் தோலைப் பற்றித்
துவித்திட்ட சுரமோடு மெலும்பை பற்றிச்
சூட்சமாய்க் காய்ந்தசுர மாத்தந் தன்னை
மவித்திடா தெரித்தசுர மாம்சந் தன்னை
மருவிநின்ற சுரநூலின் வண்மை தன்னைக்
குவித்திடாக் குணங்களெல்லாங் கொடுத்துச் சொல்லக்
குறுந்தோலைப்பற்றியதோர்குணத்தைக்கேளே. 153

குணமாகச் சற்றுடலைக் காய்வ தாகும்
குடிலமாய் நாடிமந்த மேயி ருத்தல்
தணமாகச் சற்றேதான் றலையே நோதல்
தண்ணீர்தான் வேண்டியே தாகங் காணல்
பிணமாக உடம்பெல்லாம் வெளுத்துக் கானல்
பிரமையாய் வாய்பேசல் வாய்நீ ரூறல்
நிணமாக வுடம்பெரிதன் மயக்கங் காணல்
நேர்தோலைப் பற்றுசுர நேர்மை யாமே. 154

அஸ்தியைப்பற்றினசுரம்

நேர்மையா யெலும்பைப்பற் றியசு ரத்தின்
நிலவரங்கேண் மிக்கதா கந்தான் காணல்
மேர்மையாய் மேலெல்லாங் குளிர்ச்சி காணல்
மிகக்கபடச் சுரந்தானும் மேலி ருத்தல்
தீர்மையாய் தேகம்வெளுத் திளைத்தி ருத்தல்
தேகமெல்லாம் பஞ்சுபோற் சீர ணித்தல்
ஆர்மையா யடிவயிறு தனிலே நோதல்
அதிகதீ விரமான பலம்போக் காமே. 155

இரத்தத்தைப் பற்றின சுரம்

போக்கான ரத்தகதசுர குணத்தைக் கேறு
புகன்றிடவே பிரமையாய்ச் சுரதான் காணல்
தாக்கான வியர்வையொடு தாக முண்டாய்த்
தன்னுடம் பெல்லாநோதன் மூர்ச்சை காணல்
வாக்கான வுடம்பதுவுங் கன்ன லுண்டாய்
வழவழத்து நாக்கெல்லாம் மஞ்சள் போலாம்
நீக்கான நெஞ்சுதனிற் கோழை யுண்டாம்
நித்திரையாய் மலப்பந்த நீக்குந் தானே

156

மாமிசத்தைப்பற்றின சுரம்

மலபந்த மாம்சகத சுரகு ணத்தை
வழுத்திடவே யதிதசுர மாகக் காணல்
சிலபந்த சுவாசமொடு வியர்வு தோன்றல்
சிக்கியே தேகமெல்லா நொந்து காணல்
உலபந்த வுதடுலர்த லாபித் தல்தான்
உடம்புபுள சீதமாதன் மயிர்க்குச் சாதல்
அலபந்த மனதுவியா கூல மாதல்
அருவியெனக் கண்ணிநீர் ததும்புந் தானே.

157

ஜன்னிவாசசுரம்

ததும்பலென்ற சன்னிவா தச்சு ரத்தின்
தன்குணந்தான் கழுத்துநெற்றிமார்ப யர்க்கும்
வெதும்பலொடு தந்திரமாஞ் சித்தப் பிரமை
மிக்கான சரீரமெல்லா மெரித னோதல்
அதும்பலொடு கண்சிவந்து பச்சை பாய்தல்
அதிகமாய் வாய்பித்தன் மூர்ச்சை காணல்
வதும்பெலாடு மார்வலித்தல் தியக்க மாதல்
மயிர்செறித்தல் இருமல்விக்கல் சுவாசம் தானே.

158

சுரரோகநிதானம் முற்றிற்று

4. சன்னிரோகநிதானம்

தானென்ற சன்னியிட நிதானம் தன்னைச்
சாற்றவே பதின்மூன்றாம்தந் திரிக சன்னி
ஆனென்ற அந்தகமாம் சன்னி தானும்
அதிகருத் திரசன்னி சித்தவிப் பிரமம்
தேனென்ற சீதாங்க சன்னி யோடு
சிறியதாந் தீரீகசன்னி கர்னீகு புச்சம்
கானென்ற கரணிகமாம் சன்னி யோடு
கடுபத்தி நேத்ரசன்னியும்தா னாமே.
159

தானான ரத்தேழு சன்னி யோடு
தக்கபிர லாபசன்னிசிங்கு வாகும்
ஆனான அபின்னியாசச் சன்னி யோடு
அடங்கலாய்ப் பதின்மூன்று சன்னி தன்னில்
கானான ஆறுசன்னி சாத்ய மாகும்
கடிந்தேழு சன்னியுமே அசாத்ய மாகும்
பானான சன்னிபதின் மூன்றுக் குள்ள
பரிவான குணமெல்லாம் பண்பாய்க் கேளே.
160

தாந்திரிகசன்னியின் குணம்

பண்பான தாந்திரிகச் சன்னியதின் குணந்தான்
பகரவேதேகமுமெப் போதும் போலாம்
உண்பான வுடம்பிலே குத்தல் காணல்
உயர்சோப மாயிருத்தல் கால்வ லித்தல்
திண்பான சிலேட்டுமமே மிகுந்து காணல்
தியக்கமாய்க் கண்திறவா மற்றான் மூடல்
தென்பான திரேகமெல்லா மெரிச்சல் காணல்
திரேகமெல்லாங் குளுமையா யிருக்கும் பாரே.
161

அந்தகசன்னியின் குணம்

இருக்குமே நாவறளுந் தண்ணீர் தாகம்
எரிவுண்டாய் திரேகமெல்லாம் பிரமை யாகும்
தருக்குமே தலைசுற்றல் மிகவுங் காணும்
தன்னிலே வாய்பிதற்றும் வாந்தி யாகும்
விருக்குமே விக்கலொடு சுரந்தா னுண்டாம்
மேன்மையாங் கைகாலு மசதி யாகும்
பருக்குமே தலைதனிலே பாரங் காணும்
பார்அந்தகச் சன்னி பாத மாமே.
162

உருத்திரகசன்னியின் குணம்

சன்னியென்ற ருத்திரகந் தன்குணம் கேள்
தவித்துமே பிரதாப மெரித லுண்டாம்
தின்னிசித்தப் பிரமையொடு கழுத்து நோதல்
தேகமெல்லாங் குத்தலுண்டாய்த் தியக்க மாதல்
பின்னிகிடை கொள்ளாமற் பிரளல் பேத்தல்
பின்கண்ட பேருடனே முறையா டாதல்
உன்னவுத டுலருதலாய்க் கழுத்து நெற்றி
உருத்திரகச் சன்னியென வுரைக்க லாமே.
163

சித்தப்பிரமை சன்னி

உரைக்கவே சித்தப்ரமை சன்னி தனை
உடம்பெல்லா மிக்கறுத்து நோத லுண்டாம்
வரைக்கவே வாதமொடு பித்த மிஞ்சல்
மருவியசித் தப்பிமை நினைவ ழித்தல்
நரைக்கநா னாவிதமுங் குணமாய்க் காணல்
நலியாகப் பாடியே வாய்பி தற்றல்
இரைக்கவே சுவாசமொடு பேதி யாதல்
இருந்தவிடம் விட்டுமே யேகும் பாரே
164

சீதாங்கசன்னியின் குணம்

ஏகவே சீதாங்க சன்னி தன்னை
இயம்பிடவே சரீரமெல்லாம் குளிர்ந்தி ருத்தல்
ஆகவே யிருமலொடு இளைப்புண் டாதல்
அசதியொடு விக்கலுடம் பெல்லா நோதல்
மோகவே வாந்தியோ டழற்றல் மூர்ச்சை
முரண்டுமே தேகமெல்லா மசைதல் காணல்
பேகவே பேதியடிக் கடியுண் டாதல்
பிதற்றியே புலம்பிமிகப் பேசுந் தானே.
165

தாந்திரகசன்னியின் குணம்

பேசுமே தாந்திரிக சன்னி தானும்
பிதற்றலாய் வாய்ப்பிரா வுதவு மாகும்
கூசுமே நாக்கது மிகக்க றுத்துக்
கூர்முள்ளு போல்நாக்கிற் றண்ணீ ரில்லை
தாசுமே யுதடுலர்ந்து தாபங் காணும்
தவிப்பெய்தி வயர்கழியுஞ் சுவாச முண்டாம்
வீசுமே தினவெடுத்துக் கண்ப ருத்து
மிகத் தண்ணீர் பாய்ந்துசுர மிகுதி யாமே
166

கண்டபுச்சனை

மிகுதியாய்க் கண்டபுச்சம் விளம்பக் கேளாய்
மிகப்பிரமை தான்வருதல் தாப மாதல்
தகுதியாத் தலைசுற்றல் சந்தோ ஷித்தல்
தனுப்போலக் கழுத்துநரம் பிழுத்துக் கோளல்
பகுதியாய்ப் புலம்பல் பயப்படுதல் மூர்ச்சை
பாரமாய்ச் சரீரமெல்லாம் நோதல் காணல்
வகுதியாய் வாந்தியோ டிருமல் விக்கல்
மார்புதலை நோதலாய் மருவு மாமே
167

கர்ணிகாசன்னியின் குணம்

மருவுகர்ணி காசன்னி பாதந் தன்னை
வகுத்திடவே வாய்ப்பிதற்றி வெடித்தல் காணும்
நருவுநாக் குகறுத்துப் பிரலா பித்தல்
நடுக்கியே விக்கலோ டிறைப்புக் காணல்
உருவுமுடம் பெங்குமே யசைத லாதல்
உற்றசெவி கேளாது காதி ரைச்சல்
தருவுதலை பாரமாய் நடுக்கல் காணல்
தண்ணீரமே லடிக்ககுக்கித் தவித்த லாமே. 168

பட்சிநேத்திரசன்னியின் குணம்

தவித்தபட்சி நேத்ரசன்னி பாதந் தன்னைச்
சாற்றிடவே சரீரமெல்லாஞ் சயித்ய மாதல்
துவித்தகண் தான்றிறவாக் கினிலி ருத்தல்
தூயகண்ணீர் பாய்ந்துமே தியங்கிக் காணல்
கவித்தகண் ணில்பார்வை காணா திருத்தல்
கடுஞ்சித்தப் பிரமையாய்ப் பிரலா பித்தல்
பவித்துடம்பெல் லாம்வாரம் பதைத்துக் காணல்
பரந்தெழும்பு மக்கினிபோற் சுரமுண் டாமே. 169

இரத்தேழுசன்னி

சுரமான ரத்தேழு சன்னி தன்னைச்
சொல்லிடவே நாக்குதடு வெடித்துக் காணல்
நிறமான ரத்தமாய் பேதி யாதல்
நெருப்பாகச் சுரமடித்த லுஷ்ண மாதல்
திறமான வாய்வனல் சித்தப் பிரம்மை
கியங்கியே நினைவழிதல் விக்கல் காணல்
தரமான தலைசுற்றல் கறுப்பு நாக்குத்
தறுகாது கேளாம லிருந்தல் தானே 170

பிரலாபசன்னி

இருத்தல்பிர லாபமாஞ் சன்னி தன்னை
இயம்பிடவே சரீரமெல்லாம் அசைவு காணல்
புருத்தல்புலம் புகலுஷ்ண மாயி ருத்தல்
புண்ணாகச் சரீரமுநொந் திருமல் காணல்
அருத்தல்தா பச்சுரமாய் தான டித்தல்
அடிக்கடிக்கு விக்கலொடு மூர்ச்சை காணல்
வருத்தல்மயிர்க் கூச்செரிதல் முகமும் வாடல்
வாயலறி மோடியிடும் வண்மை தானே
171

சிங்குவா சன்னியின் குணம்

வணமையாஞ் சிங்குவாற் சன்னி தன்னை
வழுத்திடவே சுவாசமோ டுஷ்ண மாதல்
தண்மையாய்த் தாகங்கை காலெ ரிச்சல்
தருநாக்குக் கறுத்துமுட் போல்வெ டித்தல்
கண்மையாக் காதுகே ளாதி ருத்தல்
கடினமாய் வாய்திறவா மற்றாள் மூடல்
உண்மையா யுடம்பெங்குஞ் சுரந்தான் வீசல்
உடம்புபா ரித்திருத்தல் விக்க லாமே.
172

அபினியாசன்னி

இருத்தவே வாதபித்த சேட்பங் கூடி
இருசுலோடு சுவாசமாய்ச் சிரயு டித்தல்
நருத்தவே நாக்குபல வர்ண மாகி
நாவதுதான் வரண்டுநித் திரையு மாதல்
தெருத்தவே தேகமெங்கு நோதல் காணல்
செடமெல்லாம் வியர்வையாய்ப் பலயீன மாதல்
அருத்தவே யாகமெங்கு மழன்று பொங்கும்
அபன்னியா சன்னியிட வாண்மை தானே.
173

சன்னிகளில் சாத்தியம்

ஆண்மையா யாறுசன்னி சாத்ய மாகும்
அதன்விபர மொவ்வொன்றா யறையக் கோளாய்
தாண்மையாய்த் தந்திரிக சன்னி தானும்
தாக்கான பிரலாபச் சன்னி யோடு
தீண்மையாய்ச் சித்தவிப்ரம சன்னி யோடு
சிங்குவாகச் சன்னிகாணீரச் சன்னி பாரு
வெண்மையாய் விட்சகத்தில் விடுபட் டேகும்
மேன்மையாஞ் சன்னியிட குணமி தாமே. 174

சன்னிகளில் அசாத்தியம்

குணமில்லா சாத்யசன்னி கூறக் கேளாய்
கொடிதான ருத்திரிக சன்னி யோடு
அணமில்லா வந்தகமும் பக்கி நேத்திரம்
அரிதான கண்டகுபுச் சமர்த்தே ழோடு
திணமில்லாச் சீதாங்க மபின்னி யாசஞ்
சீரான வவிழ்தமிட்டு மிதுதீ ராது
பணமில்லாச் சன்னிபதின் மூன்றுஞ் சொன்னேன்
பக்குவமாய்ப் பார்த்திதனைப் பாலிப் பாயே. 175

சன்னிகட்குக்காலவளவு

பாலித்த சன்னிகட்குக் காலங் கேளாய்
பகர்தாந் திரிகசன்னிக்கு நாளே ழாகும்
ஆலித்த வந்ததற்குப் பத்து நாளாம்
அதிகருத் திரக்குப் பனிரெண் டேநாள்
சேலித்த சித்தப்ரமற் கிருபத் தோர்நாள்
சீதாங்கச் சன்னிக்குப் பதினைந் தாகும்
காலுத்த தாந்திரிகற் கிருபத் தைந்து
காணுகின்ற நாளேழிற் றீருந் தானே. 176

தீருமே கண்டபுச்சம் பதின்மூன் றேநாள்
தீர்க்கரு ணீகசன்னி தொண்ணூ றேநாள்
பாருமே பட்சிநேத்ர சன்னிநா ளெட்டு
பத்துநாள் ரத்தேழு சன்னிக் காகும்
பேருமே பிலம மீரே ழாகும்
பெரியசிங்கு வாகத்துக் கீரெட்டா கும்
ஆருமே அவின்பாசம் பதினைந் தாகும்
அவதிநாட் சன்னிதனக் கறிந்தி டாயே. 177

தோஷசுர உற்பத்தி

அறிந்திடவே தருணசுரத் தவபத்யம் வந்தால்
ஆக்கிரமா மேழுவிதத் தோஷ மாகும்.
தெறிந்திடவே யேதென்றால் சொல்லக்கே ளாய்
தித்திப்புப் புளிம்பழம் கசப்பு மாகும்
பறிந்திடவே பாக்குவெற் றிலையும் பாலும்
பரிமளமாந் திரவியமும் பச்சைத் தண்ணீர்
தறிந்திடவே சயித்பண்டம் ஸ்திரீசை யோகம்
தரித்தேடு லாசித்தலமு தல்வழி நடையே 178

வழிநடைதான் சுகந்தமாஞ் சந்த னம்பூ
மணமான கற்பூரஞ் சிவந்தொரு வஸ்திரம்
நெழிந்திடைதான் நெய்வெல்ல மெண்ணெயுடன் மோர்தான்
நெகிழ்ச்சியாந் தயிர் மெத்தை புதுப்புடவை காற்று
சுழிநடைதான் பெண்பார்வை மெய்தீண்டி யாளல்
சுரம்வந்த வொன்பதுக்கு ளொன்ப தின்மேற்
பழிநடையிப் படிக்கொத்த வத்தியம்வந் தக்கால்
பரிந்துமகா தோஷம்வந்து பிறக்குந் தானே. 179

தானென்ற சுரத்திலவ பத்தியந் தன்னால்
சயித்தியத் தாலுபசா ரத்தால் மந்தத்தால்
சூனென்ற சுரம்பிறந்து தோஷ மாகும்
சுருக்கான மூர்ச்சையாய் மிகுந்து காணும்

கானென்ற பிரமையொடு கடிய தாகும்
கருத்தழிந்து புலம்பியே மார்தா னோதல்
ஆனென்ற அவபத்தியத் தில்வந்த தோஷம்
அதன்குணத்தை யறிந்தானலவிழ்தஞ் செய்யே. 180

செய்யவே தருணசுர மாயி ருக்கி
ஸ்திரீசஞ்சா ரஞ்செய்தாற் றிரிதோஷ மாகும்
உய்யவே இதன்குணந்தான் உடம்பெல்லா நோகும்
உயர்கின்ற மாருக்கு ளெரித லுண்டாம்
தையலே சரீரமெங்கு மாட்டங் காணும்
வித்துமே புலம்புமடிக் கடியெ ழுந்து
நையவே கால்கைதான் குளிர்ந்தி ருக்கும்
கடினமாஞ் சித்தப்பிரமை காணுங் காணே. 181

பிரமையாங் காய்ச்சலொடு பிதற்றல் காணல்
பெருகவுஷ் ணமாதல் தாக மாதல்,
வறுமையாய் வயிறெறிதல் மூர்ச்சை காணல்
வாதமாம் நாடியது குடில மாதல்
வினுமையாய் வியர்வையொடு சஞ்ச லித்தல்
மிக்கான வுழலையுப் பிசமு மாதல்
அறுமையாயங்க மெல்லா மழற்சி யாதல்
அதிகவிஷந் தோஷசுர மறிந்து பாரே. 182

தோஷமா மகாசுரந்தான் சொல்லக் கேளாய்
தூய்தான மயக்கமாய்ச் சுரந்தா னுண்டாம்
கூச்சமாம் நாளொன்றுக் கிரண்டு மூன்று
குளிருடனே தாகமுண்டாய்க் காய்ச்ச லுண்டாம்
நாசமாந் தலைநோவு நாக்கி லேதான்
நற்கடின மாய்முள்ளைப் போலி ருத்தல்
போஷமாம் பிரலாபஞ் சித்தப் பிரமை
புலம்பலோ டங்கமெல்லாம் புரளும் பாரே. 183

புரளவே சிங்குவாக தோஷந் தானும்
பொன்னிறமாய் நாக்கிலே தானி ருக்கும்
மிரளவே நாவெடித்து நீரில் லாமல்
மிகநாக்கு முள்ளுபோற் றானி ருத்தல்
திரளவே காய்ச்சலொடு மூர்ச்சை யாகித்
தியக்கமொடு மயக்கமாய் வியர்வை காணல்
வரளவே யுருட்சியொடு மிரட்சி யாதல்
உதறிடுமே சரீரமெல்லா முண்மை தானே.

184

உண்மையாங் கரணசிங்கு வாத தோஷம்
உண்ணாக்குக் கருத்து லர்ந்து முள்ளு போலாம்
திண்மையா யெழுந்திருக்குஞ் சித்தப் பிரமை
திரேகமெல்லாந் தினவெடுக்கும் வியர்வை காணும்
துண்மையாய் சுவாசமோ டழலை யாகும்
சோரமாய்ச் சுரமுண்டாய்த் துடிப்பு மாகும்
கண்மையாய்க் கால்கையு மசதி யுண்டாம்
காந்தியாந் தேகமது கறுக்குந் தானே.

185

கறுப்பான தோஷமதோ ரேழு தானும்
காரியமாம் பத்யவ பத்திய மாகில்
திறுப்பான திரிதோஷ மொன்றோ டொன்று
சேர்த்துபின்னி நாடியது குடில மாகி
நறுப்பான நாயினிற் றோஷம் பற்றி
நாக்குமுக மூக்கோடு கண்சு ருக்கி
வெறிப்பாகும் நாளேழு பதினைந் தாகி
வியாதிசம னாகியே மேன்மை யாமே.

186

அதிசாரசுர உற்பத்தி

மேன்மையா மதிசாரம் விளம்பக் கேளாய்
மிகக்குளுமை யானதுகள் புசித் தாலும்
பான்மையாம் பாரித்தபசு மையாங் கறிகள்
பருக்கவே யழன்றதுள்க காரத் தானும்

ஆண்மையா யழுதாலும் வழிந டந்தால்
அதிபேதி யானதுகள் பச்சை பண்டம்
பேண்மையாய்ப் புசித்தாலு மிவைக ளாலே
பேதியாய் அதிசாரம் பிறக்குந் தானே. 187

வாதாதிசாரத்தின் குணம்

பிறக்குமே வாதாதி சாரச் செய்தி
பிரமியே வயிர்தானும் பேதியா கும்
அறக்குமே யடிக்கடிக்கு வாயுத்தான் பரியும்
அனலாகி நுரையுடனே மலங்க றுக்கும்
திறக்குமே யடிவயிற்றிற் பிடுங்கல் நோதல்
தேகமெல்லா நொந்துமே மலமுண் டாதல்
மறக்குமல மறுகியே பேதி யாகும்
வாந்தியொடு மந்தமா மயக்க மாமே. 188

பித்தாதீசர்

மயக்குமே பித்தாதி சாரந் தானும்
மலஞ்சிவப்புற் றுஷ்ணித்து விடுத லாகும்
தயக்குமே தாகமொடு வயிர் வலிக்கும்
தயங்கியே யழலைதான் மிகவுண் டாகும்
வியக்குமே வியர்வையொடு மூர்ச்சை யாகும்
மிக்காக வுதடுலரு மார்வ லிக்கும்
மியக்குமே மேனியெல்லாமழற்றி மீறும்
மிடறுநொந்து புண்ணாக வெதும்ப லாமே. 189

சிலேட்பாதீசர்

வெதும்பலாஞ் சிலேட்பாதி சாரந் தானும்
வெளுத்துமே சீதந்தான் மிகவு மாகும்
வதும்பலாய் வயிறுநொந்து மலநு ரைக்கும்
மார்க்கமா யிருமலோடு சுவாசங் காணும்

அதும்பலா யடிவயிறு தனின்வ லிக்கும்
அருசியாயி ரந்துமே கோழை கட்டுந்
திதும்பலாய்த் தேக மெங்கும் தண்மை யாகுஞ்
சிக்குமே சலந்தானுந் தியக்க மாமே. 190

தோஷாதிசாரம்

தியக்கான தோஷாதி சாரந் தானும்
தேகமுள் ளெரிச்சல்பிறங் குளுத்தி காணல்,
தயக்கான காலசையுங் குளிர்ந்தி ருத்தல்
கண்டமேருட ன்புலம்பல் வாந்தி பண்ணல்
இயக்கான விருமல்விக்கல் சுவாச மாதல்
விழுந்திருந்து ஆடுதலோ டுதல்போ ராடல்
வியக்கான சீதரத்தம் வியர்வை யுப்பல்
மிக்கநித் திரையில்லா திருத்த லாமே 191

அசாத்தியவதிசாரம்

இருத்தலே யசாத்தியமா மதிசா ரந்தன்
ஏரண்டத் தெண்ணையைப்போ லிளகும் பேதி
மறுத்தலே மாமிசம்போல் வயிறு பேதி
மருவுகுரற் கிழக்குரற்றான் பட்டி ருக்கும்
திருத்தலே தேன்போலும் பேதி யாகும்
சிறியே சுவாசமொடு கோழை காணும்
விருத்தலே விக்கலொடு வியர்வை யாகும்
மீளாது சாத்தியந்தான் விளம்புங் காலே.. 192

விளம்பவே மலமிளகல் கட்டி யாதல்
மிகக்கதுத்து விடுதல்பல வர்ண மாதல்
இளம்பவே யிரத்தம்போல் கழிதல் வீக்கம்
இறைத்தபொல்லா நாற்றமாய் பேதியாதல்
திளம்பவே தேன்போலக் கழித லுப்பல்
தேங்காயின் றிருகற்போற் செரியா திருத்தல்
அளம்பவே யடிக்கடிதான் பேதி யாதல்
அசாத்தியமா மதிசார மறிந்தி டீரே. 193

சாத்யகுணம்

அறிந்தசாத் திரகுணந்தான் ரோகி கட்கு
அலர்ந்தகண்தான் கருநெய்தற் பூப்போ லாகும்
தறிந்தமுகம் பூரணச்சந் திரன்போ லாகும்
சமதாது வாய்நாடி தான டக்கும்
மறிந்ததொனிக் குயிலோசை போல வாகும்
மனதுதான் கறிசோற்றி லாசை யாகும்
தெறிந்ததுமல் தினம்பல்லுமுல்லை யரும் பதுவாய்ச்
சிவந்துமே நாக்குதனிற் றண்ணீருண் டாமே. 194

உண்டபின்பு வியர்வைதான் கண்டு மாறல்
உறுவிசேஷங் காதிரண்டுஞ் சரியாய்க் கேட்டல்
மிண்டபின்பு மூக்குமண மறிதல் கைகால்
மிகச்சிவந்து நிக்கண்ணும் ரத்த மாதல்
பண்டபின்பு நித்திரையுந் தூரப் பார்வை
பார்க்கின்மெய் தான்சிவந்துமே பாங்குண் டாதல்
நண்டபின்பு நாடியுமே இறுகிக் காணல்
நற்குணசாத் தியமென்றே நவின்றி டாயே. 195

நவின்றிட்ட வசாத்திய மாஞ்சுர மதிகமாதல்
நலங்கியே யதிகமாய்க் குளிர்ந்து காணல்
அவின்றிட்ட அதமசுர மாய டித்தல்
அதிககண்கை காணிகக்கண் ணிரத்த மில்லை
கவின்றிட்ட கண்காந்தி யிலாதி ருத்தல்
காதுகே ளாதிருத்தல் வினமேனி தன்னில்
முவின்றிட்ட மெத்தவுமே வியர்வை யாதல்
முகங்காந்தி யிலாதிருத்தல் முகம்பாழாமே. 196

பாழாகக் கண்விழித்த வாக்கி ருத்தல்
பாத்தகண்டான் மிகச்சிறுத்த லாயி ருத்தல்
தூழாகத் தொப்புண்மார் மூக்குக் கால்கை
சோர்ந்துமே குளிர்ந்திட்டு சுவாசங் காணல்

மேழாக விக்கலொடு தனுர்வா தம்போல்
    மெய்வலித்தல் சரீரமெங்கு மிகவு மாடல்
தாழாகத் தலைகோர்தல் பித்து பெத்தல்
    தடித்துமே தொண்டையினிற் சேட்பந் தானே. 197

தான்மூக்கு மணமறியா தேயி ருத்தல்
    தருநாக்கு முரிசைநெரி யாதி ருத்தல்
வான்மலங்கள் கபிலநிற மா யிருத்தல்
    மாசற்ற நாடியதி சூட்ச மாதல்
தூனாடி சக்கரம்போற் சுற்றி போடல்
    சுகதுக்க மொன்றுமறி யாதி ருத்தல்
வேனிந்த விபரமெலாங் காணு மாகில்
    மீறுமசாத் தியமென்றே விளம்பி டாயே 198

விளம்பியதோர் வழக்கினிட வகைய றுத்தல்
    மிக்கானசோதிடந்தான் காலஞ் சொல்லல்
வளம்பியதோர் தர்க்கமது வாது கூறல்
    வயித்தியந்தான் பிணிமூன்றின் வண்மை சொல்லல்
தளம்பியதோர் சாத்திரத்தின் படியே பார்க்கில்
    தாக்கான விகபர மிரண்டுக்குண் டாண்மை
உளம்பியதோர் சாஸ்திரமி லாமற் செய்தால்
    உற்பவிக்கு மியமகதி யுடன்கண் டாயே. 199

நாடிதெரியாத பேர்கள்

உற்பவித்த நாடிதெரி யாத பேர்கள்
    உண்டவர்க்கும் அபயங்கம் பண்ணி னோர்க்கும்
கற்பவிதப் பட்டினியா யிருந்த பேர்க்கும்
    கனக்கவழி நடந்தவர்க்கு மிளைத்த வர்க்கும்
குற்பவித்த பேய்பிடித்ததோர் கோபத் தோர்க்கும்
    கூட்டுறவாய் ஸ்திரீபோகம் பண்ணி னோர்க்கும்
பற்பவித்தபத் தியந்தான் பிடித்த பேர்க்கும்
    பர்கஞ்சா கள்ளபினி பாலிப் போர்க்கே. 200

சன்னிரோகநிதானம்

பாலித்த லாய்வுசா தனையுள் ளோர்க்கும்
பகர்கின்ற கோழிமுதலி றைச்சி மீன்கள்
சேலித்துத் தின்னவர்க்குங் குமர கண்டன்
சிறுகாக்கை வலியுளற்கும் பாஷா ணங்கள்
கோலித்த கெந்தகமும் விஷங்க ளான
கொடூரமாம ருந்துகளைத் தின்ன பேர்க்கும்
நாலித்த விவர்களுக்கு நாடி தானும்
நடக்கைதான் செவ்வையிலே நடவாதென்னே. 201

என்னவே சுரந்துவக்கி லியற்கை கேளாய்
இசைந்தவன்று பட்டினியே தானி ருந்து
கன்னமே யிரண்டாநாள் கால மேதான்
கைகழுவிப் பல்விளக்கி நாவ ழித்து
முன்னமே முகங்கழுவி வெந்நீ ராலே
முடியாது மறையவே வேட்டி கட்டி
பன்னமே யிடக்கைக்கீ ழாய்ப் படுத்துப்
பட்டினியே தானிருக்கப் பண்பு தானே. 202

பண்பான மூன்றாநாள் காலமே தான்
பல்விளக்கி முகங்கழுவி விபூதி சாற்றி
துன்பான சூரியநமஸ் காரம் பண்ணிச்
சுருதியைத்தா னயந்தோர்க்குத் தான மீந்து
வண்பான வியித்தியர்க்கு வரிசை நல்கி
மகாசெபங்கள் பண்ணியபின் மத்தி யானம்
நண்பாக நாலொன்றாய்க் காய்ந்த வெந்நீர்
நலக்கருந்தித் தேத்தொருவிற் றருந்தி டாயே. 203

அருந்தியே நாலாநாள் கழித்து மற்ற
ஐந்தாநாள் கற்கமன்ன சார மீந்து
நருந்தியே நவசுரந்தான் கழிக்கு மட்டும்
நண்பான கற்கமொடு கஷாய நல்கத்

தருந்தியே சுரமதுதான் தணியாவிட்டால்
சாந்தகமாங் குணமான வைத்தியர் கையில்
வருந்தியே தாம்பூலதட்ச ணையு மீந்து
மாத்திரைதான் செந்தூர மருவி யுண்ணே. 204

உண்ணவே பத்தியமாச் சுரம்விட் டேகும்
ஓங்கியதோர் சுரந்தணிந்த பின்பு தானும்
விண்ணவே விரோசனங்கள் வாங்கிக் கொள்ள
மேன்மையாஞ் சடமதுதான் மெலிய தாகும்
வண்ணவே தாசுரந் தனக்கேழ் நாளும்
மாசற்ற லங்கணந்தான் மார்க்க மாகும்
பிண்ணவே பித்தசுரந் தனக்கோ ராறு
பேரான லங்கணந்தான் புகல லாமே. 205

புகலான சேட்பசுரந் தனக்குத் தானும்
புகலுமோ ரொன்பதுப வாச மாகும்
வகலான வாதசுரந் தனக்குத் தானும்
மகத்தான வுபவாச மூன்று நாள்தான்
திகலான பித்தசுரந் தனக்குத் தானும்
சிறிதாகப் போசனந்தா னிடவு மாகும்
நகலான சிலேட்பமாஞ் சுரந்த னக்கு
நற்சூடு கஞ்சிகொடுத் திடநன் றாமே. 206

நனறான வாதசுரந் தனக்குக் கஞ்சி
நவநாழிக் குள்ளாக நாட்ட லாகும்
பன்றான பித்தசுரந் தனக்குக் கஞ்சி
பத்துநாழிகை தன்னிற் கொடுக்க லாகும்
மன்றான சிலேட்பசுரந் தனக்குக் கஞ்சி
மத்தியானந் தன்னில் வார்க்க லாகும்
மின்றான விக்கிரமதி யேசெய் தால்
மேன்மையா மருந்தென்றே விளம்ப லாமே. 207

இலங்கணமில்லாதபேர்

விளம்பவே யதிசாரமான பேர்க்கும்
மிகுந்தகெர்ப் பிணிஸ்திரீக்குக் கிழவ னார்க்கும்
இளம்பவே யிளைத்தவர்க்குங் குழந்தை கட்கும்
இடுகண்ணோய்க் காரருக்குஞ் சயரோ கிக்கும்
உளம்பவே யுபவாச மான பேர்க்கும்
உறுபித்த ரோகிக்குங் கிராணி யோர்க்கும்
துளம்வே தொந்தமாம் ரோகி யர்க்கும்
சூடுமுட் காய்ச்சலாங் சுகதே கர்க்கே. 208

தேகர்க்குங் கெசதுரக மேற்கொண் மோர்க்கும்
சுமைபார மெந்நேர மெடுக்கின் றோர்க்கும்
தாகர்க்குஞ் சலரோக மான பேர்க்கும்
சஞ்சலத்தோர் பலபந்த மான பேர்க்கும்
மாகர்க்கு மகத்தான யோகத் தோர்க்கும்
மங்கையொடு வெகுபோக மருவி னோர்க்கும்
வேகர்க்கும் பிரமியமாம வேட்கை யோர்க்கும்
மிகவாகும் லங்கணமாம் விதியா காதோ. 209

விதியாக வயித்தியந்தான் செய்யும் பேர்கள்
வேதமாஞ் சாஸ்திரத்தின் விரிவைப் பார்த்து
திதியாக தேகத்தின் செயலைப் பார்த்து
திசைநாடி திசைவாய்வு திட்டம் பார்த்து
அதிபாக வக்கினியின் நிலையைப் பார்த்து
அசாத்திய சாத்தியமிரண்டு மறிந்து ணர்ந்து
மதியாக மருந்தினிட வன்மை பார்த்து
மார்க்கமாய் வயித்தியத்தை வளமாய்ச் செய்யே. 210

லங்கணவர்ச்சிதம் சன்னிரோக நிதானம் முற்றும்.

☆ ☆ ☆

5. குன்மரோகநிதானம்.

செய்யான குன்மத்தி னுற்பத்தி தன்னைச்
செப்பிடவே துவர்ப்பான பொசிப்பி னாலும்
மையான மங்கையுடன் மார்க்கத் தாலும்
வகையாகுங் கிழங்குவகை யருந்த லாலும்
உய்யான மிளகுகா யுரைப்பி னாலும்
உறுபசியை யடக்கிடினு மந்தந் தாலும்
தையான சண்டாள கோபத் தாலும்
சலிப்பாலுங் குன்மம்வந்து தாக்கும் பாரே. 211

பார்க்கவே குருநிந்தை பண்ணி னோர்க்கும்
பாலகரைச் சிசுவைபடினிவைத் தோர்க்கும்
மார்க்கும்மா தாவைப்பி தாவை நிந்தை
வஞ்சனைதான் செய்தோர்க்கு மடந்தை தன்னைக்
கார்க்கவே கற்பழித்த காமு கர்க்கும்
கருதியே சிவநிந்தை பண்ணி னோர்க்கும்
ஆர்க்கவே யஷ்ட குன்ம மணுகு மென்ற
அரன்சொல்லத் தேவிசொன்னாள றிந்து பாரே. 212

செய்யவே யஷ்டகுன்மச் செயலைக் கேளாய்
செயலான வாயுகுன்மம் வாத குன்மம்
எய்யவே பித்தகுன்ம மெரிகுன்ம மாகும்
ஏலான வலிகுன்மஞ் சத்தி குன்மம்
தையவே சன்னிகுன்மஞ் சேட்ப குன்மம்
சாகாச மாங்குன்ம மெட்டு மாகும்
கொய்யவே யிதனுடைய குணங்களெல் லாம்
குறிப்பறிந் தொவ்வொன்றாய்க் கூர்ந்து பாரே. 213

வாயுகுன்மம்

பார்க்கவே வாயுகுன்மம் பகரக் கேளாய்
பருகியதோர் பதார்த் தங்கள் செரித்தி டாது
தோர்க்கவே யசனந்தான் செல்லா தாகும்
துருத்திகொண் காற்றதுபோல் வயிறு முப்பும்

ஊர்க்கவே உளறுபெல றான்கெ டுக்கும்ட
உடலுணரு நடைகுறையு மோச்ச லாகும்
வேர்க்கவே யடிவயிறு தனிலே வந்து
மிகப்பிரண்டு பில்லுப்போல் விகுத்த மாமே
214

வாதகுன்மம்

விகுத்தமாம் வாதகுன்மம் விளம்பக் கேளாய்
மிகத்தானு நடைகுறையும் மலம் விடாது
உகுத்தமா முடல்தானு மிகக்க டுக்கும்
உறக்கமொடு தியக்கமா யுழலை யாகும்
தகுத்தமாஞ் சரீரமது கனத்துத் தோன்றும்
சங்கையா யசனமிகத் தானுஞ் செல்லா
பிகுத்தமாம் பெலாக்கேடாங் கைகா லோயும்
பேசொணாநா வறளுந் தலையு நோமே.
215

பித்தகுன்மம்

நோம்பித்த குன்மத்தி னுட்பங் கேளாய்
நுனிமஞ்ச ணிறம்போல முகமு மாகும்
வாஞ்சத்தீ வாந்தியுண்டாய் மனமறுக்கும்
மயக்கமாய் நெஞ்சதனிற் கோழை கடும்
காமநெருப்பாய்த் தானிருக்குங் கைகா லோயும்
கடுவெய்யிற் கண்டவுடன் றலைசு ழற்றும்
மூமூத்ரஞ் சிவந்திருக்குந் தாகங் காணும்
முக்கியே மலம்வீழும் மூச்சுண் டாமே.
216

சிலேட்டுமகுன்மம்

உண்டாகும் வாய்நீர்தானி ளைப்புண் டாகும்
உடல்வற்றி கருத்தழியு முரத்தி ரைக்கும்
வெண்டாகும் பெலன்கெடுக்கு மசனந் தள்ளும்
மிக்கான தலையரிக்கும் வெளிரு மேனி

தெண்டாகு நெஞ்சதனிற் புகைச்ச லுண்டாம்
திடுக்கிட்டு நடுக்கலுமாந் தேகந் தானும்
திண்டாகுந் தலையெங்கும் பார மாகும்
சிலேட்டுமமாங் குன்மமென்றே செப்ப லாமே. 217

சன்னிகுன்மம்

செப்பலாஞ் சன்னிகுன்மச் செயலைக் கேளாய்
தியக்கமொடு மயக்கமாய்க் குளிருண் டாகும்
அப்பமா மசனமிகத் தானுஞ் செல்லா
அடிவயிற்றி லிரைச்சலுமாம் வாய்நீ ரூறும்
உப்பமாய் வயிற்கழியு முஷ்ண மாகும்
உவர்க்கும்வாய் நெஞ்சதனிற் புகைச்ச லுண்டாம்
தெப்பமாய் மூச்சதுவுஞ் சிதைத்தெ ழும்புந்
தேகமெங்குங் குளிர்ச்சியுமாய்த் திடுக்கு மாமே. 218

எரிகுன்மம்

திடுக்குமா மெரிகுன்மச் செயலைக் கேளாய்
சிறுவயிற்றி லெரிந்துமே குடல்கு மட்டும்
வடுக்கும்வாய் நீர்சழற்றுந் தலைவ லிக்கும்
வயிறுப்பிக் கிறுகிறுக்கும் பிளிந்தேக் காகும்
வெடுக்குமயிர் கால்தோறும் வியர்வை யாகும்
மிகப்பொருமி வயிறுகழிந் திரைச்ச லாகும்
எடுக்குமே யுடலிளைக்கு மிறங்கா தன்னம்
எரியுமே யுகுடலெங்கு மிரும லாமே. 219

சத்திகுன்மம்

இருமலாஞ் சத்திகுன்ம மியல்பைக் கேளாய்
ஈரலுக்குள் ளெரிவாகு மேக்க மாகும்
திருமலாந் தியக்கமொடு மயக்க முண்டாம்
சிறுவலியு முண்டாகி வாந்தி யாகும்

பொருமலாம் பெலன்கெடுக்கும் மலம்வி டாது
பேரான அக்கினிதான் மிகவு முண்டாம்
செருமலம் நடைகுறையும் அருசி யாகும்
சிறுநரம்பெல் லாம்புடைத்துத் திமிரு மாமே 220

வலிகுன்மம்

திமிராக வயிறூறுந் திரையு மேனி
செடமுலைந்து கருத்தழியுஞ் சிதறுந் தூக்கம்
வமிராக தயிறிறைத்து முன்போ லாகும்
வருத்தமா யசனமிகத் தானுஞ் செல்லா
முமிராக விலாவதனிற் சொருக லாகு
முதுகுதண்டு வலிகாணு மிடுப்பு நோவாம்
கமிராகக் காயமது கடுப்புக் காணும்
கனசுரமரய்ப் பொய்ப்பசியுங் காணுங் காணே. 221

காணவே பஞ்சபூதி யத்தைச் சொன்னேன்
கருத்துரைத்துத் தத்துவத்தைக் கருதிச் சொன்னேன்
நாணவே நாடியிட நிதானந் தன்னில்
நற்குறிப்புந் துர்க்குறியும் நாடிச் சொன்னேன்
ஆணவே யஷ்டவிதப் பரிட்சை சொன்னேன்
ஆர்க்கமாஞ் சுரமெல்லாம டங்கச் சொன்னேன்
சாணவே சன்னிகுணஞ் சாத்யவ சாத்யம்
சாற்றினேன் குன்மத்தின் சார்வைத் தானே. 222

குன்மரோகநிதானம் முற்றிற்று.

6. சூலைரோகநிதானம்

சார்வான சூலையிடத் தன்மை கேளாய்
தக்கசிறைப் பட்டிருக்குந் தீமை யாலும்
ஆர்வான அரச்சுடுசோற ருந்த லாலும்
அறவுமே சலிப்பாலு மோட லாலும்
தார்வான சபைமிகுத்த சண்டை யாலும்
தகையான துவர்ப்பொசிப்பு புகைத்த லாலும்
மீவான மோகத்தின் புணர்ச்சி யாலும்
மிகுந்தபலி யுறுதலினாற் சூலை யாமே.
223

ஆமென்ற வன்னத்துக் கிடையூறு பண்ணி
யகதிப ரதேசிகளை யடித்த போக்கும்
காமென்ற கற்புடைய மங்கை மாரைக்
கரிதியே மனதினிலிச் சித்த பேர்க்கு
வாமென்ற வாழ்மரத்தை வெட்டி னோர்க்கும்
வழிமறித்துப் பொருள்பறித்த மதிகே டர்க்கும்
ஏனென்ற எச்சில்தனைக் கலந்த பேர்க்கும்
இகத்திலே நோவெய்திச் சூலை யாமே.
224

சூலைதான் பதினைந்தின் சூட்சங் கேளாய்
துளைக்கின்ற மேகத்தின் சூலை யோடு
வாலையா முதிரியென்ற சூலை தானும்
வாதத்தின் சூலையோடு பித்த சூலை
ஆலைதான் சிலேட்டமாஞ் சூலை யாகும்
ஆமென்ற சூலையிற்கார் சூலை யாகும்
கோலகுன்மச் சூலையொ டுலத்தி சூலை
கொடிநிதம்பச் சூலையொடு சுரச்சூலை யாமே.
225

ஆமென்ற சுரசூலை கெர்ப்பச் சூலை
அதிபக்கச் சூலையொடு தூரச் சூலை
பாமென்ற பதினைந்து சூலை யாகும்
பசியாலும் பழகியதோர் காடி யாலும்

தாமென்ற சிலைநுதலாள் புணர்ச்சி யாலும்
சருகிலையின் நீராலுஞ் சண்டை யாலும்
வேமென்ற ரசமருந்தின் வெட்டை யாலும்
மிடுக்கான சூலைவந்து விளையுந் தானே.
226

மேகசூலை

விளைமேக சூலையின்றன் விபரங் கேளாய்
மிகக்கைகால் நடுப்போடு குடைச்ச லாகும்
களைநீரு மலங்கட்டுங் கைகால் வேர்வை
கசிவோடு நளிருண்டா மேனி யெங்கும்
இளமையவ ரிதழதுதான் சிவப்பு மாகும்
எரிச்சலுண்டாம் தேகமெல்லா மிளைத்துக் காணும்
உளைவோடு சுரமாகுந் தாகங் காணும்
உறுகின்ற பிரமையா மயக்க மாமே
227

முதிர் சூலை

மயக்குகின்ற சூலையின்றன் குணத்தைக் கேளாய்
மறைப்பான வாண்குறியி னடியே யுற்று
அயக்குகின்ற வழன்றுகீழ் முதுகைப் பற்றி
அபானன்மே லடிக்குடலை யதிரச் சுற்றி
பயக்குகின்ற பரவியே வலிக்கும் போது
படர்நாவி தனைநடுவிற் குழித்து வாங்கும்
தயங்குகின்ற தலைவலியுஞ் சுரமுங் காணும்
தக்கண்ணுஞ் சிவந்துநீர் ததும்புந் தானே
228

வாதசூலை

கதுப்புமே கால்கைதா னுளைவு காணும்
தடிப்பாகத் திமிருண்டாய்த் தூக்க மிஞ்சும்
வெதும்பியே யங்கமெல்லாங் குளிருஞ் சற்றே
மெய்தானும் பளபளக்கும் முகமுங் காணும்

ததும்புமே வில்நாணிக் கடுசு மாகும்
கடுத்துமே சிறுநீறுஞ் சிவந்து வீழும்
அதிர்ந்துமே மெய்யெல்லாங் குடைந்து நோகும்
அதிகரிக்கும் வாதசூலை யாண்மை தானே
229

பித்தசூலை

ஆண்மையாஞ் சரீரம்வற் றிக்கடுப்பு முண்டாகு
அறவேகை காலுளைந்து கனத்தி ரண்டு
நோன்மையாய் நோய்மிகுந்து நோக்கங் கெட்டு
நணுக்கமாந் தாதுமெல்ல நொய்ய தாகி
சேண்மையாட் சடத்தினிடச் செழுமை மாறித்
திரங்கியே மிகமின்னித் தெளிவில் லாமல்
பேண்மையா மயக்கமொடு பெலக்கே டாகும்
பித்தமாஞ் சூலையென்றே பேச லாமே
230

சேட்டுமசூலை

சூலையாஞ் சேட்டுமத்தைச் சொல்லக் கேளாய்
தொண்டையெல்லாம் வலித்துமே கோழை கட்டும்
ஆலையா மடிவயிறு தன்னில் நோவாம்
அங்கமெல்லாம் புண்போல அழற்றல் காணும்
வேலையா மெய்யெங்கும் வியர்வை தோன்றும்
மெய்வெளுத்து நகக்கண்ணு மிரத்த மில்லை
பலையாயி ருந்தவுடல் பஞ்சு போலாம்
பல்காலும் வாயூறிப் பாவு மாமே.
231

ஆமைசூலை

பாவுமோ யாமைசூலை யின்கு ணந்தான்
பாவான வசீரணத்தின் பண்பி னாலும்
தாவுமே தண்ணீர்தான் குகுத்தா லாலும்
தகுந்தபுளிப் புக்கசப்பு த்தித்திப் பாலும்

-வுமே புபவாசம் பண்ண லாலும்
உறவளர்ந்தா மமொடு சீதந் தானும்
வாவுமே வயிறோடு விலாப்பக் கங்கள்
வலித்துமே கடுப்புமிகக் குத்துண் டாமே. 232

உத்காரசூலை

குத்துமுத் காரசூலை யின்கு ணந்தான்
கோர்வையாய் விலாவுதனில் முதுகில் நெஞ்சில்
அத்தியினில் நாபியில பானமாங் குதத்தில்
அதிகதுன்மா ங்கிசந்தான் வளர்ந்து மேவிப்
பத்துமணற் படுக்கைபோற் சலத்து வாரப்
பதிநெருக்கி மூந்திரமாங் கிரிச்சியு ண்டாய்த்
தத்துசடங் கடுப்பெடுத்து மதிக லங்கித்
தளர்ச்சியொடு மயக்கமாயத் தள்ளுந் தானே 233

குன்மசூலை

தள்ளுகுன்மச் சூலைதனைச் சொல்லக் கேளாய்
தளருமல மூத்திரந்தான் சிக்க லாகி
வள்ளுவயிற் பொருமிசத்தி யிரைச்சல் மூர்ச்சை
வலித்தெரித்துச் சூலைபோல் வயிற்றிற் றோன்றி
தெள்ளுவாய் நீருதத் தெப்ப முண்டாய்
சிறுத்துமே யூனுமெத்த வெதும்ப லாகி
அள்ளுமே யங்கமெல்லா மழற்சி யாகும்
அதிகமா யுடலுலர்ந் தருசி யாமே. 234

உலத்திசூலை

உடலான வுலத்தியென்ற சூலை தன்னை
உரைக்கவே யூஷ்ணமாம் பித்தந் தன்னால்
படலான வங்கினியால் வறட்சி தன்னால்
வலித்துத்தான் மெத்தவே வீங்கித் தோன்றும்
குடலான வாதத்தால் குன்மத் தாலும்
குடிலமாய்க் கனத்துமே யுடம்பெல்லா நோம்
கடலான வுள்வலியும் பிறவீக்க மாகித்
தடித்துலர்ந்து சடமெல்லாந் தயங்கும் பாரே 235

நிதம்பச்சூலை

தயங்குகின்ற நிதம்பமாம் சூலை தன்னைச்
சாற்றிடவே பிள்ளையது தனைப்பெற் றக்கால்
உயங்குகின்ற யோனிவாய் வருத்த மாகி
உள்ளடங்கிச் சலமிரத்த முளைத்தேங் காய்போல்
அயங்குகின்ற யோனிவாய டைத்துக் கொண்டு
அசைக்கிலங்கு நீர்பெருகிச் சகனத்து ள்ளே
மயங்குகின்ற சரீரமெல்லாம் வாடி வூதி
மாசற்ற சடந்தானும் வெலுப்பி போமே. 236

கரசூலை

மாற்றகர சூலை வண்மை கேளாய்
மருவுதிரந் தான்திரண்டு தோலைப் பற்றித்
தேசற்ற வளையம்பேரற் றிரண்டு நொந்து
சிறந்திருந்த நெம்பின்பழத் தங்கித் தங்கிக்
கேசற்ற நோவாகிக் கீழ்முதுகைப் பற்றிக்
கெட்டியாய் வலித்துமே நோவு முண்டாம்
மாசற்ற கைகாலும் வலிய தாகும்
கருத்தழிந்து மேனியுமே கருகும் பாரே 237

கரசூலை

கருகின்ற சுரசூலை கருத்தைக் கேளாய்
கடிந்திரண்டு பக்கமாஞ் சூலை தோன்றி
வருகின்ற வாய்தனிலே ரத்த முண்டாய்
வடிவெல்லாஞ் சுரந்தோன்றி யுளைச்ச லுண்டாய்ச்
சொருகின்ற தேகமெல்லாஞ் சூலை யுண்டாய்ச்
சுருக்கியே வயிறதுதான் வலித்து நோகும்
தெருகின்ற நெஞ்செரிந்து வாய்நீ ரூறிச்
செரியாமல் வாந்தியாய்த் தியக்க போமே. 238

பக்கசூலை

தியக்கான பக்கமாஞ் சூலை கேளாய்
திருகியே யண்டத்திற் பொருமி நொந்து
உயக்கான சுரந்தோன்றி வலிந்து நொந்து
உடம்புப்புண்போ லுளைந்துத் தலைவலியு மாகிப்
பயக்கான பக்கத்திற் குத்த லுண்டாய்ப்
பாரித்துக் கனத்துமிகத் திமிரு முண்டாய்க்
கயக்கான கைகாலு மோச்ச லாகிக்
கண்புகைந்து கருமாறிப் பாச்ச லாமே.
239

கெர்ப்பசூலை

பாசல்கெர்ப்ப சூலையினைப் பகரக் கேளாய்
பண்பான மருந்தீட்டின் குணத்தி னாலும்
வாச்சவஞ் சனையாலும் சூனியத் தாலும்
மாசற்ற காயமது வேட்கை யாலும்
பீச்சவே மகப்பேறி லுதிரத் தாலும்
பிரண்டுசிக்கி வயிற்றி லிரத்தம் வீழ்ந்து
கேச்சலாய்க் கெர்ப்பம்போற் பிரழ்வுற் றூறிக்
கீழ்வயிற்றில் வலிதோன்றி மயக்க மாமே.
240

தூரசூலை

கீழ்வயிற்றுற் றூரமாஞ் சூலை கேளாய்
கெடியுண்டி மறித்துமே வாய்நீ நீறிப்
பாழ்வயிற்றில் செரித்தீரல் பற்றிப்
பக்கமன்றிச் சிரத்தோடு வயிறு மூதி
ஆழ்வயிற்றிற் ரண்டுமே பிரழ்வுற் றேதான்
அடிக்கடி வந்தொதுங்கி றெழும்பி மீளுங்
கீழ்வயிற்றில் வெளிப்பட் டுதிரஞ் சிக்கும்
தமர்கிளத்து மலசலந்தானுஞ் சிக்கிப் போமே
241

சிக்கான பதினைந்து சூலை தன்னில்
சிறப்பாகக் குணாகுணத்தின் செயலைச் சொன்னேன்
அக்கானவ சாத்தியமாஞ் சூலை யாறு
ஆகாத குணங்கண்டாய் முதிரிச் சூலை
உக்கான வுக்கார சூலை சேட்பம்
உறுதிகுன்மச் சூலையோ டாமை சூலை
நிக்கான நிதம்பமாஞ் சூலைய கத்யம்
நீங்கியசாத் தியநவமாஞ் சூலை யென்னே 242

சூலைரோக நிதானம் முற்றிற்று

7. வாத இயல்பு

என்னவே வாதம்தா னெண்ப தாகும்
இகத்திதே மனிதர்களுக் கெய்யு மாறு
பின்னவே பொன்தனைய சோரஞ் செய்து
பெரியோர்கள் பிராமணரை தூஷ ணித்தும்
வன்னதே வற்சொத்திச் சோரஞ் செய்து
மாதாபிதா குருவை மறந்த பேர்க்கும்
கன்னவே வேதத்தை நிந்தை செய்தால்
காயத்திற் கலந்திடுமே வாதந் தானே.

243

தானென்ற கசப்போடு துவர்ப்பு றைப்பு
சாதகமாய் நெஞ்சுகினுஞ் சமைத்த வன்னம்
ஆனென்ற வாறினது பொசித்த லாலும்
ஆகாயத் தேறலது குடித்த தாலும்
பானென்ற பகலூக்க மிராவி ழிப்பு
பட்டினியே மிகட்வறுதல் பார மெய்தல்
தேனென்ற மொழியார்மேற் சிந்தை யாதல்
சீக்கிரமாய் வாதமது செனிக்குந் தானே

244

வாதம்வர்த்திக்குங் காலம்

வாதவர்த் தனைகால மேதோ வெண்ணில்
மருவுகின்ற வானிகர் கடக மாகும்
ஆதலைப் பசியோடு கார்த்தி தன்னில்
அடருமே மற்றமா தங்கள் தன்னில்
போதவே சமிக்குகின்ற கால மாகும்
பொருந்தியே யிவர்தொழில் நான்கண் திறத்தல்
காதவே கண்மூடல் கைகா லசைத்தல்
கடிந்தோட்ட முடக்கலொடு நீட்ட லென்மன.

245

என்னவே வாதமது எண்ப தாகும்
ஏற்றமாம் பேருடைய வெழிலைக் கேளாய்
வன்னவே தஸ்தம்பம் வாத கர்ஷணம்
வகையான காஸ்தம்பந் தலஸ்தம் பந்தான்

பென்னவே பூசிரவா தத்தி னோடு
பெரியகா ளாஞ்சக மூறாஸ் தம்பம்
குன்னவே லாகர்ன்னங் கிரிஷகு ரிஷ்கம்
கூறான நரித்தலையின் வாத மாமே.
246

தலைக்கும்ப வாதமொடு மலைத்த கம்பம்
தருக்கான பாணிகம்பங் கூனி வாதம்
அலையஆ குனிவாதம் அஷேவ கந்தான்
அதிவாதம் உபகதம்பம் நெற்றிசூலை
கலைகன்னாச் சூலைசேவி படுவா யாகும்
கடுபக்க வாதமொடு பட்ச வாதம்
திலையபெய் வாதமொடு பிராணா லையம்தான்
செலஸ்தம்ப மொடுசந்து வாத மாமே.
247

சந்துவாதத் தோடு சகன வாதந்
தரித்தஅத் புதவாத முரகன் வாதம்
உந்துமுர காரியொடு வஸ்வ தம்பம்
உறுதிபசத் தம்பம்சேத் திரப வுத்ரம்
அந்துதெண்ட வாயுவொடு வஷ்ட தந்திரம்
அதிசவணா வாயுவொடு மகாவா தந்தான்
முந்துமிருத்து வாதமோ டுதர வாதம்
முகிழ்மூத்ர வுதரவா தமுமா மெனவே
248

என்றசுக் கிலவாதஞ் சவரங்க வாதம்
எழில்ஊர்த்த வாதமொடுமஞ் ஞான ஸ்தம்பந்
தென்றசிரக் கம்பவாத மும்சத் தம்பம்
செயவச்சிர ரூபமொடு கண்டக் கிராம்
நன்றதாம் நகாரியொடு பதித வாதம்
நலியோனி சூலையொடு கெர்ப்ப சூலை
குன்றவஷ்ட சூலையொடு குடல்வா தந்தான்
குறியசுவ வாதமெச்சு வாதந் தானே.
249

ான்மூடு வாதமாம் வசுவா தந்தான்
தனுபீசத் தம்பமொடு தந்திர வெட்டு
வான்வாத சுரோணிதஞ்சி தவாதசு ரோணிதம்
மகத்தான வயகிதவா தச்சு ரோணிதம்
ஊனுதிர வாதசுரோ ணிதந்தன் னோடு
உறுபயித்ய வாதச்சுரோ ணிதமு மாகும்
தேன்சேட்ப வாதசுரோ ணிதந்தான் மிக்க
சினத்துதாத வாதசுரோ ணிதமுங் காணே.

250

காணவே குணவவதா னகமாம் வாதம்
கண்டகவ தானகமாம் வாத மாகும்
தோணவே சிரக்கம்ப வதான கந்தன்
சீறியதோர் வாதத்தின் றலைநோக் காடு
பூணவே பித்தத்தின் றலைநோக் காடு
புகழான சேட்டுமத்தின் றலைநோக் காடு
சாணசன்னி வாதத்தின் றலைநோக் காடு
தருரத்த பித்தத்தின் றலைநோக் காடே

251

நோக்கான கிருமிகுந் தலைநோக் காடு
நுதற்குரிய வாதமொடு தந்திர வாதம்
ஊக்கான கர்ணாவா தந்தன் னோடு
ஒருதலையி னவகாத வாதமுமே யாகும்
வாக்கான வாதகன்ன சூலை யோடு
மருவியதோர் பித்தகன்ன சூலை யாகுந்
தேக்கான சேட்பகன்ம சூலை யோடு
செயமாத்த ருமிககன்ன சூலை தானே.

252

தானான தந்தவாயு வின்றன் னோடு
தாக்கான வாதந்தா னெண்ப தாகும்
ஆனான வரன்றனையே மதியா மாந்தர்
அகதிபர தேசியர்கட் கன்ன மீயார்

கோனானகுரு மொழியை மறந்த பேர்கள்
கொலைகளவு பொய்காமங் குறித்த பேர்க்கு
ஊனான சடந்தன்னில் வாதம் வந்து
உற்பவிக்கும் வேதத்தி னுண்மை தானே. 253

வாதஸ்தம்பம்

உற்பவிக்கும் வாதமது எழுந்து பொங்கி
உயர்காலின் புறவடியைக் குடைந்து பற்றித்
கெற்பவிக்கும் வீக்கமாய்ச் செழும்ப லுண்டாய்த்
தேகமெங்கும் நோவாகித் திமிரு மாகி
விற்புவிக்கும் வில்லுபோல் விதன மாகி
மிடுக்கான மாந்தனைப் போல்விதன மாகிப்
பற்பவிக்கும் பரன்றனையே நினையா மூடர்
படுகின்ற வாதஸ்தம் பமுமாம் பாரே. 254

வாதகர்ஷ்ணன்

பார்க்கின்ற பாதவுள் ளடியிற் சாணி
பதித்துவைத் ததுபோலப் பார மெங்கும்
கோர்க்கின்ற குதிரைநரம்புங் கால்க ளெங்கும்
கொடிதான பாரமாய்த் திமிர்ப்புண் டாகி
வார்க்கின்ற வார்த்தைகள்தான் மிகவே செய்த
வாறுகினு நிமிருகினும் தசங்கொ டாமல்
ஏர்க்கின்ற காலுளைக்கும் வாத கர்ஷ்ணம்
ஈதலற மில்லாதார்க் கெய்துங் காணே 255

கரஸ்தம்பவாதம்

எய்தியே விரிவுதனி லிரண்டு காலும்
இசைந்தவுள் ளடிதனினு மெரிந்து நோவாம்
ஐதியே யக்கினியில் வைத்தாற் போல
அங்கமெல்லா மிகவெளுத் துலத்தி யாகும்

பொய்தியே புரைதனிலே புழுக்க ளூர்தல்
போலவே மிகவூர்ந்து நடைகொ டாது
கைதியே வாயுலர்வுற் றுடல்க னக்கும்
கணக்கான கரஸ்தம்பங் கருதிப் பாரே
256

தலஸ்தம்பம்

கருதியே மிகக்கனத்து முள்ளங் காலைக்
கனக்கவே குடைந்து நொந்து கருகிக்காணும்
வருதியே வணக்கஞ்சற் றிலாம லேற
வலித்துமே மேனோக்கி வருத்தங் காணும்
கருதியே சடமுலர்ந்து மேல்மூச் சுண்டாய்த்
தாகமாயு டம்புலர்ந்து தளர்ந்து காணும்
கருதியே கடுகுவுப்பு புளிப்பு தன்னாற்
கணவாதங் கோபித்தே தலஸ்தம்பங் காணே
257

பூசுவாதம்

தம்பமாமலத்துவா ரந்த னைத்தான்
தைத்ததோ ரம்புபோற் குடைந்து நொந்து
உம்பமா முள்ளடியி னளவாய்ப் பற்றி
உறுதியாய் மிகநொந்து குடைச்சல் காணும்
நம்பனார் பதம்போற்றா நரர்கள் தன்னை
நணுகியே யுருக்குலைந்து கலிக்கப் பண்ணும்
கம்பமாங் கணத்துதிரம் வலியுண் டாக்கும்
கனத்ததோர் பூசுவா வாத மாமே.
258

காளாஞ்சகம்

மாதமாங் கால்கையில் குரங்கி ரண்டும்
வகுத்துசந்து முறுக்கியே குடைந்து நொந்து
நாதமா நடைதானுந் தான்கொ டாம
நலிந்துமே முடமாகிக் கரடு கட்டிச்

சேதமாஞ் சடந்தானு மிகவெளுத்துத்
தினவோடு சிரங்குமாய்ச் சேட்ப மாகிக்
காதமா யருசியொடு மயக்க மாகும்
கருதிய காளாஞ்சகமாம் வாத மாமே.
259

ஊருஸ்தம்பம்

ஆமென்ற வாதமது உள்ள டக்கி
அடித்தொடைத்தான் குரங்கிரண்டு மணவாய்ப் பற்றிக்
காமென்ற ரைகாலில் விரலுஞ் சுற்றி
கனத்துமே சாணியது பொதிந்தாற் போலத்
தேமென்ற சிரந்தனிலே பார முண்டாய்த்
தேகமெங்கு மூதியே திமிருண் டாகும்
நாமென்ற நடக்கொணா வொடுக்க மாகி
கலிமூருஸ் தம்பமது நணுகுங் காணே.
260

வாதகண்ணகம்

தம்பமா நடக்கும் போதுந் தரித்து
தாவியே யுயரமா யெட்டும் போதும்
வம்பமாய் பள்ளத்தி லிறங்கும் போதும்
மயக்கமாய்த் தள்ளாடி இடைந்து வீழ்ந்தும்
வெம்புமாம் பாம்புவிஷ மேதும் போல
மிக்கான சரீரமெல்லாந் தளர்ச்சி யாகும்
சிம்பமாம் புள்ளுப்போல் பரப்பு காணும்
செறிவாத கண்ணகச் சிறப்பு மாமே.
261

குரிஷிகிரிஷம்

சிறப்பான பாம்புவிஷம் போலே யேறிச்
செறிவாக இறங்கியதோர் செய்கை போலும்
துறப்பான குரையா யரையிற் றட்டைச்
சுழலவே சருக்கித்தான் பற்றி யங்கம்

பிறப்பான பீறியதோர் குடலைப் போல
பிதிர்கின்ற வன்போலும் பிரமி யென்ன
முறப்பான தோலில்முள்ளு பொதிந்தாற் போல
முயன்றிடுங்காண் குரிஷிகிரிஷ மூர்க்கந் தானே.

262

நரித்தலைவாதம்

மூர்க்கமா முயன்றுமுழங் கால்தான் வீங்கி
முதிர்ந்துரத்த முந்திரண்டு முயற்சி யாகி
நீக்கமாய் நின்றிடவொ ணாமற் றானும்
நிமிர்ந்திடுகில் சந்துந்தான் முடக்கொ ணாமல்
தீர்க்கமாய் துண்டித்து மிகச்சிக் கென்று
செழுமைநரித் தலைபோல மிகவே வீங்கி
நார்க்கமாய் நாடியுமே படப டக்கு
நரித்தலையின் வாதமென்றே நவில லாமே.

263

கும்பவாதம்

நவிலவே தோள்மீதுங் கரத்தின் மீதும்
நலிந்துமெத்த வாகியே நோவுண் டாகும்
கவிலவே கன்னமொடு நயனந் தானும்
கடுத்துமே விறுவிறுப்பு மெரிவுங் காணும்
துவிலவே துடிப்பாகுஞ் சிரசு தன்னிற்
சுழற்றியே நாபிக்கீழ் வலியு முண்டாய்
அவிலவே யடிநாக்கி லழன்று காணும்
அலருமே வருகும்ப வாதந் தானே.

264

மலைத்தகம்பம்

கும்பமாங் கையின்மணிக் கட்டு தன்னிற்
குவிந்தரையிற் பொசதைபோ லூரத்துக் காணும்
தும்பமா மங்கங்கள் துடிப்ப தாகுந்
துண்டுமே கால்கையு நடுக்க மாகும்

அம்பமா மரைக்குங்கீழ் திமிருண் டாகும்
அதரமே மிகக்கறுத்து வெடிப்புண் டாகும்
வம்பமாம் வாயுத்தான் பரியு நாற்றம்
வருமலைத் தகம்பதின் மார்க்க மாமே.
265

பாணிக்கம்பவாதம்

மார்க்கமாய் வாயுவுமாய் மெய்நி றைந்து
வயிறுதனிற் பசியிலா தூணு மற்று
நார்க்கமாய் ஞாலத்து நடக்கை யற்று
நடுக்கமாங் கையிரண்டுந் திமிரு முண்டாம்
ஊர்க்கமா யுறக்கமில்லா துணர்ச்சி யற்று
உதறியே சரீரமெங்கு முலர்ந்து காணும்
பார்க்கமாய் வாய்விட்டு அலத்த லாகும்
பாணிக்கம்ப வாதத்தின் பாங்கு தானே
266

கூனிவாதம்

பாங்கான மலைபாண்டப் பையிற் றானும்
பண்பாகத் துடங்கியே மலத்து வாரம்
நீங்காம லடக்கியே நோவு மாகி
நினைவில்லாச் சத்தியொடு மயக்க மாகித்
தேங்கான தேகமெங்கும் வலியு மாகிச்
சீதளமாய்க் குளிர்ந்துமே காணுங் கண்டாய்
கோங்கான கோழிப்பே னூர்தல் போலும்
குறிகானுங் கூனியாம் வாதந் தானே.
267

ஆகுனிவாதம்

கூனியே தேகமெங்கு குத்த லுண்டாய்க்
குளிர்குளிர்ந்தே யிருமியே வாய்நீ ரூறி
ஆனியே யங்கமெல்லா மசைத லாகி
அடிக்கடிக்கு வியர்வைதா னதிக மாகி

மேனியெல்லாங் குறுகியே ஊத லுண்டாய்
வெளுக்குமே சரீரந்தான் வீக்க மாகும்
பானியே அடிக்கடிக்கு வருந்திக் கேட்கும்
பண்பான ஆகுனியின் வாதந் தானே.
268

அஷேவகம்

வாதமே கோபித்துச் சரீரந் தன்னில்
வயிறுவிலாப் பக்கங்கள் வாடி யோடி
நாதமே யுட்புகுந்து இருபத் தஞ்சு
நலமறிய ஈரலைத்தான் பற்றி நொந்து
காதமே கைகாலு மோய்ந்து போகும்
கனக்கவே நோவாகிச் சுருள நொந்து
ஆதமே யங்கமெல்லா மசைத லாகும்
அஷேவகமாம் வாதத்தி னாண்மை தானே.
269

வாதஉபகதம்

ஆண்மையாங் காலோடு கையுஞ் சந்தும்
அங்கமெல்லா மிகத்திமிர்த்துச் சாணி தானும்
பூண்மையாய்ப் பூசினது போலே காணும்
புரண்டுதான் விறுவிறுத்துப் புளக மாகிப்
பாண்மையாங் காலசையு முஷ்ண மாகிப்
பசித்துமே மிகநாணி நடைகொ டாது
வாண்மையாம் வாட்டமுறு மயக்க மாகும்
வாதவுப தந்தன்னை வகுத்த வாறே.
270

நெற்றிச்சூலை

வாறான நயனந்தன் புருவ மற்றை
மத்தியத்திற் குடைந்துமே மூக்குத் தண்டு
கூறான குரலினைத்தான் பற்றி நொந்து
குடைந்துமே கையோடு கால்கள் ரெண்டும்

ஆறான அங்கமெல்லாங் கடுப்புண் டாகும்
அழுகுரலாய் நித்திரையு மயக்க மாகும்
தேறான சிரசுதனில் குத்த லுண்டாய்ச்
சிறுநெற்றிச் சூலையின்றன் செய்கை தானே.
271

கர்னசூலை

செய்கையாஞ் செவித்துவாரந் தன்னி னின்று
சிக்கெனவே குசிகொண்டு குடைந்தாற் போலச்
சைகையாய் நோவுண்டாய்ச் சலிக்குஞ் சிந்தை
சலத்தின்மேல் மனத்துவாய்த் தாக முண்டாம்
வைகையாய் வயிறுதனில் மந்த முண்டாய்
மயக்கமாய் மனதுதனிற் பயமு முண்டாய்
கைகைப்பாய் வாய்க்கசந்து புளிப்புண் டாகும்
கர்னசூலை யின்குணத்தைக் காணுங் காலே.
272

செவிபடுவாய்

காணுமே செவிதனிலே சத்தம் போலக்
கடலிரைச்சல் போலவே முழக்கங் காணும்
நாணவே செவியுறுதல் நரம்பைப் பற்றி
நனைவுகளி கண்கொண்டு அடைத்தாற் போலத்
தோணவே தொண்டைதனிற் கபந்தி ரண்டு
சுப்பிரமாய்க் கட்டியாயி றுகிவீழும்
ஊணவே பிறர்சத்தஞ் செவியிற் கேளா
உண்மையாஞ் செவிபடுவா யுண்மை தானே.
273

பக்கவாதம்

உண்மையா யுடம்பெல்லாம் வாயு வாகி
உயர்கின்ற நாடியது அசைவு மன்றி
கண்மையாய்க் காயமீ தினிலே யேறிக்
கசகியே யிழந்துமே வலித்து காணும்

பண்மையாய்ப் பக்கத்தி லிசுவு முண்டாய்ப்
பாரித்துப் பணைக்கையுங் காலுங் கோணும்
வெண்மையா யுடம்பெங்கும் வியர்வை காணும்
மெலிவுபக்க வாதத்தின் விபரந் தானே. 274

பக்ஷவாதம்

தானான கால்கோணிச் செற்றாற் போலத்
தாக்கான தரைதனிலே நடக்கொ ணாது
கானான கைகளொன்றும் பிடிகொ டாது
கனமான உணர்ச்சியன்றி கைகள் சோரும்
மானான மயிர்க்கூச்சுந் திமிர்ப்புண் டாகும்
வாய்தானுங் கோணியே தண்ணீர் வீழும்
போனான பித்தம்போ லழன்று காணும்
பிரிவுபட்ச வாதத்தின் பெற்றி யாமே. 275

பேய்வாதம்

பெற்றியாம் பெருமையாங் காலுங் கையும்
பெருவயிறு நெஞ்சோடு விரலு மூக்கு
எற்றியா மெறிகழுத்து மெங்கும் பற்றி
ஏக்கமாய் நொந்துவுடம் பெங்கும் வீங்கி
உற்றியா மூணவே நிமிர்த்தெ டுத்து
உறுதியாய்ப் பிடிக்கவு மொணாம லாகும்
சத்தியாய் வாய்கசந்து மயக்க மாகும்
தரித்திடவொண் ணாதுபேய் வாதந் தானே. 276

பிராணாலயவாதம்

வாதமாய் வலித்துமே கண்கள் தானும்
வரிசையாங் கருவிழியிற் சோதி தன்னில்
ஊதமாய் முழுவெளுப் பாய்த்தான் மறைத்து
உக்கிரமாய்ப் பருகுதே கிடக்க லாகும்

நாதமாய்க் கையிரண்டுங் காலும் வற்றி
நடுக்கமே யுண்டாகி நலியுந் தேகம்
வேதமாய்ச் சொன்னதுதான் தீரா தென்று
விளக்குபிரா ணாலயாம் வாதந் தானே
277

சிலேட்டுமத்தம்பம்

தானென்ற மலத்துவா ரத்தி னோடு
தாக்கியே செலத்துவா ரந்தொ டங்கி
வேனென்ற நீரிறங்கும் போது தானும்
வெடிவுண்ணில் நோவுபோற் கிலேசம் பண்ணும்
வானென்ற மலங்கடுத்துச் சிறுகி வீழும்
மயிர்க்கூச் சுன்டாகியே வருத்தம் பண்ணும்
தேனென்ற தித்திப்புப் போல்நீ ராகும்
சிறுகிவிழுஞ் சிலத்தம்பச் செய்கை யாலே.
278

சந்துவாதம்

செய்கைதான் சந்துகளு மிகத்தி மிர்ந்து
செடமெங்கு நொந்துமே மிகஅ ழற்றி
நைகையாய் நளுத்துமே மயிர்க்கூச் சிட்டு
நாணியே முன்போல நகைகொ டாது
மைகைதான் மயக்கமொடு வாய்நீ ரூறும்
வறண்டிடுமே நாவுதா னடிக்க டிக்கு
கைதைதான் றரணிதனிற் றரிக்கொ ணாது
சஞ்சலிக்குஞ் சந்துவாம் வாதங் கேளே.
279

செகனவாதம்

கேளுமே கழுத்தின்கீ ழரைக்கு மேலு
கெடியான கரமிரண்டு மிகவே நொந்து
வாளுமே சரீரமெல்லாங் கனத்தி ருக்கும்
வாலிபர்க்கு மனங்கண்ணு மயக்க மாகும்

ஏளுமே யிரண்டுகண்ணு மெரிச்ச லுண்டாம்
ஏற்றமாய் மலந்தானு மிறுகிக் காணும்
தேளுமே கொட்டினது போற்க டுக்கும்
செகனவா தத்தினிட தீர்க்கந் தானே. 280

அற்புதவாதம்

தீர்க்கமாய் ஸ்திரீசங்கம் பண்ணும் போதும்
திடுக்கெனவா வேர்த்தைகோ பித்த போதும்
ஊக்கமா யுறத்துதான் பாடும் போதும்
உண்ணுமவல் கச்சாயம் பாக்குத் தானும்
ஆர்க்கமாய்த் தட்டியே கடித்த போதும்
அழகான முகந்தன்னில் வாயுகோ பித்துத்
தார்க்கமாய் மிகச்சிதறி வாயுங் கோணும்
சாங்கமாய ற்புதவா தந்தா னாமே. 281

உரகன்வாதம்

அற்புதமாய் நோவாகிப் புருவங் காது
அங்கத்திற் பாதிதான் வலித்துப் போதும்
தற்புகமாய்க் கோணிலே தலையும் வாயும்
சாவவே மிகநடுங்கிக் குளிர்ந்து கூசும்
விற்புதமாய் விழிகளுந்தான் மிமைப்பு றாது
மெலிவாகிச் சரீரமெல்லாம் வியர்வை யாகும்
புற்பதமாய் வாய்நீரு மிகவே யூறும்
புல்லுமோ ருரகவா தத்தின் பேரே. 282

உரகாரிவாதம்

பேரான நெஞ்சுடனே குரலு நொந்து
பெருமீரல் தன்னிலே நோக்கி வாயு
ஆரான வன்னத்தை இறங்கொட் டாமல்
ஆர்வசனங் கொள்ளாம லுதரம் விம்மப்

பாரனே வாயுநான் மிகவு மூறிப்
பாரமாய் நெஞ்சடைத்துப் பசத் தி ருக்கும்
கூரான மேனியுமே கூச்ச லுண்டாம்
கொடிதான வுரகாரி வாத மாமே.
283

அசுவதம்பவாதம்

வாதமா யுடல்வெளுத்து வடிவெல் லாநோம்
மயக்கமோ டிருமலா மீளை யுண்டாம்
நேதமாய் நெஞ்சடைத்துப் பொறிக லங்கும்
நெருப்பாக உடல்காணு நெடுமூச் சுண்டாம்
கோதுதான் மயக்கத்தில் மருத்தி னீட்டால்
குளிர்ச்சியாய்க் கோபிக்குங் கூச்ச ண்டாம்
பாதந்தான் நிமிருண்டாய் முட்போ லாகும்
பருத்தஆ சுவதம்பம் பகர லாமே.
284

பகரவே வாதமது கோபித் தப்போ
பண்பாக ஸ்திரீகோஷ்டி யதுதான் செய்யில்
நகரவே வெகுதூர வழிந டக்கில்
களிகான காற்றுமே பனிமேற் பட்டால்
மிகரவே காய்கள்கனி கிழங்கு தன்னை
மிகவருந்தி மீறியே தயிர்தான் கொண்டால்
முகரவே முதுகெலும்பை முறுக்கி நொந்து
முழங்காலுங் கணைக்காலுங் கடுப்புண் டாமே.
285

பாசத்தம்பலம்

கடுத்துமே சரீரமெங்குச் சோம்ப லாகிக்
கண்மயங்கிப் புகைந்துமே கூசிக் காணும்
வடுத்துமே சரீரமெல்லா மிகவும் பற்றி
வாய்வாண்டு புளித்தேங்காய் மந்த மாகி
நடித்துமே நாடியெங்கும் படப டத்து
நரம்போடு சதைகளெல்லா பிகுத்த மாகும்
அடுத்துமே இவ்வாத மசாத்திய மாகும்
அடுபாசத் தம்பமென் றறைய லாமே.
286

நேத்ரபவுத்ரம்

அறையவே நெற்றியொடு புருவங் காது
அதட்டியே நோவாகிக் குடைச்ச லாகும்
நிறையவே வுடம்பெங்கு மூத லாகும்
நிற்கவுந்தா னொட்டாமல் தள்ளிப் போடும்
குறையவே தேகமெங்குங் குடைச்ச லாகும்
குருவியர்வை மயக்கமொடு கூச்ச லுண்டாம்
மறையவே நேத்ரபவுத் திரமு மாகும்
மறைசொன்ன படியானும் வழுத்தி னேனே.

287

தெண்டவாதம்

வழுத்தவே மூலாதா ரத்தைப் பற்றி
மருவியே மேலேறி முதுகுண் டாதல்
விழுத்தவே சிரசில்வந்து வியர்வு மாகி
விகுவாக நோவாகி மேனி கண்ணிப்
பழுத்தவே உடம்பெங்கும் பஞ்சு போலாம்
பாங்கான மலசலமு மஞ்ச ளாகும்
குழுத்தலவ தெண்டமாம் வாதந் தன்னைக்
கூறினோங் குணமெல்லாங் கூர்ந்து பாரே.

288

கூர்ந்திட்ட மலசலங்கள் துரித மானால்
கொண்டடக்கிப் பின்புதான் கொடிதாய்த் தள்ளிப்
ஊர்ந்திட்ட சரீரத்தி லுதர மீறி
உலத்தேயத்துத் தலைபதனி லெண்ணெய் வார்க்கில்
வார்த்திட்ட வழிநடக்கில் மெத்த வும்தான்
வாதந்தா னுற்பவித்து நடைகொ டாமல்
நார்த்திட்ட நரம்போடு எலும்பிற் சூழ்ந்து
நணுகியே ஓடிநெஞ்சி லேறுந் தானே.

289

அஷ்டதந்திரவாதம்

ஏறியே உணர்ச்சியற்று உள்ளுக் குள்ளே
இருந்தான்தா னழைத்தாற்போல் சத்த முண்டாம்
காறியே கண்ணீரு முண்ட வாய்நீர்
கசந்துமே முன்போல விழித்தி டாமல்
பற்றியே பற்கிட்டி மூச்சு மற்றுப்
பல்காலும் பிதற்றியே பிணத்தைப் போலச்
சீறியே அடிக்கடிக்குச் சேட்ப முண்டாம்
செருக்குமஷ்ட தந்திரத்தின் சேதி தானே 290

வசனாவாதம்

தானானதி ரேகமெங்குந் தான் வலித்துச்
சங்கற்ப விகற்பமாய்க் கிலேச மாகி
பானான பலகுணங்கள் மிகவே யாகும்
பரமசிவ னடியார்கட் கணுகி டாது
தூனான துஷ்டரையே பற்றி நிற்கும்
துடிப்புண்டாய்ச் சோரவே சொருகி வீழும்
கானான காயமது கதித்துக் காணும்
கனவசனா வாயுவின்றன் கணக்குத் தானே. 291

மகவாதம்

கணக்காகக் கதித்துமேல் வயிற்றைப் பற்றிக்
கருகியே பொருமித்தான் வலித்து வீங்கி
கிணக்காகக் கீழ்முதுகில் விதன மாகிச்
கிஞ்சுகமாய் விதனவூ ணற்ப மாக்கும்
வணக்காக மலசலந்தான் பலகா லுண்டாம்
வருத்தமாய்ச் சடந்தானும் அழன்று போகும்
மணக்காக மேனியுமோ மஞ்ச ளாகும்
மகவாத குணமென்றே மருவ லாமே. 292

மிருத்துவாதம்

மருவலாம் முடியாவாய் தனிலொ துங்கி
மண்டிய மேனோக்கிய பான வாய்வில்
எருவலா யேறிவ யால்நுரைப் பட்டி
டிறுகியே தேகமெல்லாம் வலிக்குங் கண்டாய்
துருவலாய் மலந்தள்ளுஞ் சோபை யாகும்
சுருக்கென்று கால்கையுஞ் சோர்ந்து போகும்
பருவலாய் மனதுதான் பயமு முண்டாய்ப்
பாரமிருத்து வாதத்தின் பண்பு காணே 293

உதரவாதம்

பண்பான குக்ஷியைத்தான் பொருமி நொந்து
பருத்துமே மிணறுதான் கனத்து மெத்த
என்பான விக்கலுமே இளைப்புண் டாகி
இணைவிழிநீர் பாய்ந்தங்க மிளைப்பு மாகி
மண்பான வாதமது நிரம்பி யேறி
வாயினான் மலந்தானும் புறப்பட் டாற்போல்
விண்பான நீரதுவும் விடுத்து நிற்கும்
மிகுமுதர வாதமென்றே விளம்ப லாமே. 294

மூத்திரஉதிரவாதம்

விளம்பவே விடுமூத்ரம் வாயிற் றோன்றும்
மீறியே நெஞ்சுதனி லழன்று கோரும்
நிளம்பவே நெஞ்சதனில் வீக்க முண்டாம்
நித்திரையில் லாமலே வெதும்ப லாகும்
வளம்பவே வயிறுதனில் நோவு மாகும்
மகத்தான விக்கலுட னிரும லுண்டாம்
அளம்பவே அடிவயிறு கனத்து நோகும்
அசைமூத்ர வுதிரமென்ற வாதந் தானே 295

சுக்கிலவாதம்

வாதமா முடலிறுகி மிகவும் வற்றி
மலமுற்றுஞ் சிக்கியே கீழ்வீ ழாமல்
நாதமாம் நாக்கோடு மூக்க தனில்
நணுக்கமா யுதிரந்தா னருவி பாயும்
சேதமாய்ச் சேட்பமுங் கோழை யுண்டாம்
செயலோக வாசமா யருசி யுண்டாம்
சூதமாய்ச் சுக்கிலந்தான் றுன்னி யாகும்
துரியசுக்ல வாதத்தின் சூக்ஷந் தானே. 296

சவ்விரங்கவாதம்

சூட்சமமாய் தெய்வவுடல் திகைத்தங் கூர்ந்து
தேகமோ வெளுத்துப்பின் கறுப்பு மாகும்
ஆட்சமா யருசியொடு வாந்தி யுண்டாம்
அடிக்கடிக்குத் தண்ணீர்தான் தட்டிக் கேட்கும்
ஊட்சமா அன்னத்தை முன்னே காணில்
ஒக்காளந் தன்னோடுப் பிசமு மாகும்
தாட்சமாய்ச் சலிப்போடு உறக்க மாகும்
சவ்விரங்க வாதமென்றே சாற்று நூலே 297

ஊர்த்துவவாதம்

நூலான சுவாசந்தான் மேலே நோக்கி
நுணுக்கமா மிடையுடனே வயிறு விம்மி
வாலான வாய்தனிலே நுரையு முண்டாய்
வாய்கழுத்து மார்புமே மிகவு நொந்து
ஆலான வங்கமெல்லா மழன்று காணும்
அடித்தொடையு மடிக்கையு மிகவே வற்றும்
பாலான மேனியுமே பசுமை காணும்
பருவூர்த்வ வாதமென்றே பகர லாமே. 298

மைஞ்ஞானத்தம்பம்

பகர்கின்ற குரலதனைப் பற்றி நொந்து
பாரமாய் வலித்துமே கீழ்நோக் கெய்தி
நிகர்கின்ற கண்ணதனை மூடிக் கொண்டு
நெருநெர மூக்காலே சுவாசம் போகும்,
திகர்கின்ற விரண்டுசெவி தன்னில் நொந்து
செழுமையாங் கொட்டாவி வாய்மூ டாமல்
மகர்கின்ற வாய்வாண்டு நெஞ்சு காயும்
மைஞ்ஞானத் தம்பமாம் வாத மாமே. 299

சிரகம்பவாதம்.

தம்பமாய் முதிர்கண்ட நரம்பிற் புக்கித்
தலையோடு சரீரமெல்லாந் தாக்கிப் புக்கும்
கம்பமாங் காதிரண்டு மிகவுங் கேளா
கையோடு காலிரண்டும் வசக்கே டாகும்
நிம்பமாய் நினைவேதான் கலங்கிக் காணும்
நெடுமூச்சுங் கொட்டவிநித் திரையு மாகும்
சிம்பமாய்த் தலைநடுக்கிக் கனப்பு முண்டாம்
சிரக்கம்ப வாதமென்றே செப்ப லாமே. 300

சதஸ்தம்பம்

செப்பவே நடுநாக்கு நுனிநாக் குந்தான்
தெறித்துமே தேள்விஷம்போற் கனாவு மாகும்
அப்பவே யடிநாக்குத் தாண்து டிக்கும்
அழகான வாய்தானும் அதிர்தல் போன்றும்
உப்பவே வுண்ணாக்கிற் கட்டு தூக்கும்
உரிசைதா னில்லாம லூறும் நாக்கு
வெப்பவே விஷந்தானு மமுதம் போல
வெளியான சதஸ்தம்பம் விதியிதாமே 301

வச்சிரரூபம்

விதியான பிடரியைத்தான் மிகவி ழுத்து
மிகக்கண்க ளசைவில் லாமலே நோக்கித்
ததியான குறோக்கைபோற் சத்தம் பெற்றுத்
தலைநோவு மிகுதியாய் நடுக்க லுற்று
குதியான நரம்பிழுத்துத் திமிருண் டாகிக்
கொட்டாவி சோம்பலாய்க் கூச்ச லுண்டாய்
வதியான மலசலமுஞ் சுறுக்கி வீழும்
வச்சிரரூ பந்தன்னின் வகையி தாமே.

302

கண்டகிரகம்

வகையான குரலதனைப் பற்றி நொந்து
மாரோடு பிடரியினில் வலியுண் டாகி
நுகரான சரீரமெல்லாம் நொந்த ழுற்றி
நுணுக்கமாய்ச் சுவாசமது புறப்ப டாமல்
முகையான நாவாதே மூச்சு மாறி
முகத்திலே வியர்வாகி விலாநோ வுண்டாம்
பகையான வன்னத்தைப் பருகொட் டாது
பரியகண்ட கிரகத்தின் பண்பு தானே

303

நகாரிவாதம்

பண்பான உடலதனை விலாப்பக் கங்கள்
பலகியே பருநரம்பைப் பற்றி நோகும்
வண்பான கீழ்வாய்தான் மேல்வாய் தன்னில்
வாயுவங்கே பூரித்து வசனங் கொச்சை
நண்பான நடுநாக்கு மரம்போ லாதல்
நசையான தேகமெங்குஞ் சொரிச்ச லாகும்
விண்பான மேலுதடு தடிப்பு மாகும்
மீறியதோர் காரியாம் வாத மாமே

304

பதிதவாதம்

காரியாய் மிகவார்த்தை பேசும் போது
கழுத்திலுள்ள நரம்புமிக விசைத்து நோவாம்
வாரியாய் வார்த்தைகள்தான் விக்கிப் பேசி
வார்த்தைகள்தான் பேசுவதிற் றெரிந்தி டாது
நாரியார் போகமது விரும்பி டாது
நலுக்கமாய்த் தாதுவெல்லா மிளைத்துக் காணும்
பாரியா யடிக்கடிக்குப் பசியே யுண்டாம்
பதிதமாம் வாதமென்றே பகர லாமே
305

யோனி சூலை

பகரவே மலத்துவாரந் தன்னிற் றோன்றிப்
பக்கமா யிறங்கியே யோனி பற்றித்
திகரவே குறிங்கடி மறையு முள்ளுஞ்
சிக்கெனவே கோல்கொண்டு குடைந்தாற் போல
அகரவே யடிக்கடிக்கு நோவு மாகும்
ஆசனமுங் கடுத்துமே நீரிறங்கும்
நகரவே நடக்கும்போ துறக்க மாகும்
நவில்யோனி சூலையென்றே நாட்ட லாமே.
306

கெர்ப்பசூலை

நாட்டமாய்க் கன்னியர்கள் துடக்குங் காலை
நலமான கெர்ப்பத்தின் ரேகை தன்னில்
பாட்டமாய்ப் பற்றியே வாய்வு தோன்றி
பழகியே புருஷசங்கை பண்ணும் போது
தாட்டமாய்த் தடைப்பட்டு மலத்தை சிக்கித்
தத்தளித்துக் கடுப்பாகி விலாப்பக் கம்போம்
கேட்டமாய் மனதுதனிற் கிலேச முண்டாம்
கெர்ப்பமாஞ் சூலையென்றே கீர்த்திப் பாயே.
307

அஷ்டசூலை

கீர்த்தியாய் மலங்கடுக்குங் கெடியாஞ் சோபக்
கீழான வருரேகை தனிலே நின்று
ஆர்த்தியா யலந்திடக்கோ பித்து நின்று
அதட்டியா யிருகுறங்கும் யோனி தாழும்
கார்த்தியா யுமித்தணலின் காற்ற லாகிக்
கடினமாய் நீர்தானுந் துளியாய் வீழும்
வேர்த்தியாய் மொறுமொறெனக் கடிக்கும் பல்லை
மீறுபட்ட சூலையிட வினையந் தானே. 308

குடல்வாதம்

வினையாகப் பலவிதமாய்க் குடலைப் பற்றி
மிடுக்காக வலித்துமே நாபி தன்னில்
அனையாக வடிவயிற்றில் நொந்து
அழகான விரைதன்னில் வலித்து வீங்கி
மினையாக மிக்கவலி யிழிந்து நோவாம்
மிடுக்கான நளிரோடு காச்ச லுண்டாம்
தினையாகத் திடுக்கிட்டுத் தலையு நோவாம்
செப்பினோங் குடல்வாதச் சேதி தானே. 309

அசுவவாதம்

சேதியாய்ச் சிறுகுதிரைப் பாச்ச லாகிச்
செடமெல்லா மிகக்குலுக்கிக் கோட்டி பண்ணி
மேதியாய் மேலேற்றிக் கீழே நோக்கி
வெறிகொண்டாற் போல்மிரண்டு அண்டம் வீங்கி
ஏதியா யிரண்டுவிரை யுள்ளே புக்கி
இணையிலிங்க முட்கருக்கி ழிந்து நோவாம்
ஆதியா மடிவயிறு இசிவு காணு
அணியசுவ வாதமென்றே யறிய லாமே. 310

மெச்சுவாதம்

அறியவே யாண்மையா மிலிங்கந் தன்னை
அடவாகச் சுருக்கியே குழிந்து நோவாம்
நெறியவேநீர்க் கடுத்துச்சி வந்துக் காணும்
நேர்மையாய்க் குளிரோடு சுரமு முண்டாம்
வறியவே தியக்கமொடு மயக்க முண்டாம்
வாடியே தேகமெங்கும் அசதி யாகும்
குறியவே கொட்டாவி சோம்ப லாகும்
குறிப்பான மெச்சுவாத முமா மன்றே 311

மூடுவாதம்

மெச்சான பிடரிநரம் பதனைப் பற்றி
மிடுக்காக விரங்கியே மலத்து வாரம்
பிச்சான துகலங்கி மேலே யேறிப்
பிறவடியுங் குறங்கடியுஞ் சுற்றி நொந்து
குச்சான கோவணந்தான் வளைத்தாற் போலக்
குறுக்காகி லிங்கத்தில் வலித்து நொந்து
கச்சான காற்றுக்கு மிகுதி யாகும்
கடுமூடு வாதத்தின் கருமந் தானே. 312

வசுவாதம்

கருமமாய்க் குடல்முடங்கி வயிறு ளைந்து
கனமாக நொந்துமே மயிர்கூச் சிட்டுப்
பருமமா யுடம்பெங்குந் தடிப்புண் டாகிப்
பாரமா யுடல்கனத்துப் பங்க மாகும்
வருமமாய்த் தோலெல்லா மிறுகிக் கொண்டு
மாசற்ற வுடம்பெல்லாம் வாட்ட மாகும்
உருவமாய் அசனந்தான் வேண்டா தாகும்
உயர்வசு வாதத்தினிட வுண்மை தானே. 313

பீசஸ்வதம்பம்

உண்மையா யிரண்டுவிரல் தானும் வீங்கி
உயர்கின்ற புண்போல வலித்து நொந்து
தண்மையாய்ச் சலாகையது ஏற்றி னாற்போற்
தாக்கான பீசமெங்கும் வலித்து நொந்து
வெண்மையாய் நீரருவித் துளியாய் வீழும்
விம்முமே யடிக்கடிக்குத் தண்டு தானும்
பெண்மையாய் மனமதுதான் பித்தல் காணும்
பீசமாந் தம்பமென்றே பேச லாமே. 314

அந்திரவெட்டி

பேசவே விரையிரண்டும் பெருத்து வீங்கிப்
பெருக்கவே நோயோடே இசுவு மாகிக்
காசவே களவென் றிரைச்ச லாகிக்
கனமான குடல்தனிலே சத்தித் தேதான்
வாசவே வயிற்றினைத்தான் முறுக்கி மெத்த
வலியோடு குளிர்தானுஞ் சுரமு முண்டாம்
ஆசவே யடிவயிற்றிற் குத்த லுண்டாம்
அத்திரமா வெற்றியென்றே யறிந்தி டாயே. 315

வாதசுரோணிதம்

அறிந்திட்ட அங்கமெல்லா மெலிவ மாகி
அசைவான தவ்விடங்கள் வீக்க மாகி
நறிந்திட்ட நடைகொடா தானி ருத்தல்
வலியாகி மொழிமொழிய வீக்க மாகச்
சொறிந்திட்ட தேகமெங்கு மசைவு காணல்
சோற்றின்மே னினையின்றித் தூக்க மாதல்
வறிந்திட்ட வாயதனி னீர்தா நூறல்
வாதசுரோ ணிதந்தானும் வகுத்த வாறே. 316

சித்துவாதசுரோணிதம்

வாறான சரீரமெல்லா நுழைந்து ஊதல
மாசற்ற தோல்தானுந் திரைந்து போகும்
நாறான நாறுபோல் நரம்பு சுக்கும்
நாக்குத்தான் வழவழத்துக் கோழை யாகும்
தூறான நெருப்புத்தான் பட்டார் போல
நொந்துமே சடமெல்லாங் கொப்ப ளாகும்
வீறான வுரிந்துபின்னை மிவதும் பீங்கும்
மிக்கசித்து வாதசுரோ ணிதமா மாமே. 317

வைகிதவாதம்

ஆமென்ற வீங்கினதோர் விடத்தில் ரத்தம்
அழுத்தமாய்த் திரண்டுமே எங்கும் பாய்ந்து
ஓமென்று ஓட்டியே திரண்டி ருக்கும்
உறுதியாய்த் தொட்டுடனே மெத்தென் றாகும்
தேமென்ற தேகமமெங் கணுமு சுக்கும்
சீறியதோ ரிருமலொடு காச்சலுண் டாகும்
பாமென்ற படந்தனிலே திமிருண் டாகும்
பாரமாய் வைகிதமாம் வாதந் தானே. 319

உதிரவாதசுரோணிதம்

வைகிதமாய்க் கணைக்காலு முழங்கால் தானும்
மற்கடாஞ் சந்துபுற வடியும் வீங்கிச்
செய்கிதமாஞ் சிறுவிரல்கள் மிகவும் நொந்து
சிந்தைதடு மாறியே சலிப்புண் டாகும்
பைகிதமாம் பயித்தியத் தில்லாத மிஞ்சிப்
பாரமாய் உற்பவித்து அழலுண் டாகும்
உய்கிதமாம் அசனது தானும் வேண்டா
உதிரவாதச் சுரோணிதத்தி னுணர்ச்சி ய 319

பயித்தியவாதசுரோணிதம்

உணர்ச்சியாய்ச் சுரோணிதந்தான் மிகவெ தும்பி
ஊக்கமாய்த் தேகமெங்கு மிகவே நொந்து
முணர்ச்சியாய் முழங்கால்கள் முழங்கை யொக்க
முனையான சிறுவிரல்கள் கன்னம் நெற்றி
தணர்ச்சியாய்ச் சந்துசரு வாங்க மெங்கும்
தாட்டிக மாய்க்குடைந்து சுரமு முண்டாம்
பணர்ச்சியாய்ப் பாண்டதுபோன் மேனி யாகும்
பயித்தியவா தசுரோணிதத்தின் பண்பு தானே.
320

சேட்டுமவாதசுரோணிதம்

பண்பாக வுடல்குளிர்ந்து ஏறு வீங்கிப்
பதைப்பான விடந்தொட்டாற் பார நோவாம்
திண்பான சிரசுநெற்றி நோக்கா டுண்டாம்
சிலேட்டுமமாய்க் கோழையொடு சுவாச மாகும்
மண்பாக மயக்கமொடு கனவு முண்டாம்
வாய்வரண்டு ருசியில்லா வருத்த மாகும்
நண்பாக நாடியுமே படப டக்கும்
நற்சேட்ப சுரோணிதமாம் நாடுங் காலே.
321

உதரவாதசுரோணிதம்

நாடுமே சுரம்வந்து நடுக்க லுண்டாம்
நாவரண்டு தலைநொந்து உடம் பழுத்தி
வாடுமே தேகமெல்லா மனிச்சம் பூப்போல்
மகாவருத்த முண்டாகி மயக்க மாகும்
சாடுமே யடிக்கடிதான் பேதி தானும்
தவிக்குமே தண்ணீர்தா னாட்ட மாகித்
தேடுமே சோற்றின்மேல் நினைவு தானும்
செய்வுதர வாதசுரோ ணிதந்தா னென்னே.
322

குண அவதானகம்

என்னவே குமரிதான் கெர்ப்ப முண்டாய்
ஏறியே நாள்மூன்று திங்கட் குள்ளே
வன்னவே வயிறிழிந் திரத்தம் வீழ்ந்து
வாடியே வயிறெல்லாஞ் சுருக்கிக் கொண்டு
கன்னவே கால்கையு முடக்க மாகிக்
கருதியே தேகமெங்குங் காந்த ளாகும்
குன்னவே கோபமது மிகுதி யாகும்
குணவவதா னகமென்றே கூறி டாயே.

323

கண்டகஅவதானம்

கூறியே கெர்ப்பமுண்டாய்ப் பயின்ற போது
குணகியே பச்சுடம்பில் வலிப்பு தோன்றி
மூறியே மூக்கோடு புருவந் தன்னில்
முட்கரமாய் மிகநொந்து வலிப்பு ண்டாகி
நாறியே நாக்கோடுஉண் ணாக்குத் தான்
நலித்துமே பல்லெல்லாங் கடுப்பு ண்டாகும்
ஆறியே முன்சொன்ன ததுவ சாத்யம்
அரியகண் டகவதா னகந்தா னாமே.

324

சிரக்கம்ப அவதானகம்

அவதான வடிசிரசு தன்னைப் பற்றி
அதட்டியே பின்னெல்லாம் பற்றி நொந்து
வவதான வடிம்புகுறங் கடியிற் சென்று
வளைத்துடம் பெல்லாநொந்து வாட்ட மாகிச்
சிவதான தேகமெங்குந் திமிருண் டாகும்
செடம்போகுங் காலத்தில் மூன்றுங் காணும்
பவதான சிரக்கம் பவவதா னகந்தான்
பாடியேதா ரிம்மூன்றும் சாத்ய மாமே.

325

வாதத்தலைநோக்காடு

சாத்தியமாம் வாதத்தின் றலைநோக் காடு
தன்மையாம் பிடரிபற்றித் தலைநோ வுண்டாம்
காத்திரமாய்க் காதிரண்டுந் தான்வ லித்துக்
கதுப்படியுங் குறட்டோடு மூக்கு உச்சி
நேத்தியுமாய் நெற்றியொடு நேர்வு மாகி
நெருக்கான வாப்படித்தாற் போலே குற்றும்
மாத்தியமாய் மனக்கிலே சப்ப டுத்தும்
வாதத்தின் றலைநோவு வண்மை தானே.

326

பித்தத்தலைநோக்காடு

வண்மையாய் நிற்கின்ற மூக்குத் தானும்
வடிந்துமே நீர்ப்பாய்ந்துத் தலைக னத்து
வெண்மையாய் வாய்நீர்தான் மிகவு மூறி
மீறியே உண்ணாக்கைப் பற்றி நொந்து
திண்மையாய்ச் செவிதனிலே குற்ற லுண்டாய்ச்
சிரசுதான் பாரமாய் மிகக்க னக்கும்
கண்மையாய்க் கண்ணோடு புருவங் குற்றும்
கனமான பித்தத்தின் றலைநோக் காடே.

327

சேட்டுமத்தலைநோக்காடு

நோக்காட்டில் மிகத்தண்ணீர் குடிக்கை யாலு
நுகர்ந்தபின்பு லாவாமற் படுக்கை யாலும்
தீக்காட்டில் மிகத்திரண்டு சேட்பந் துன்னிச்
சிரசெங்கும் நோவாகிப் பிடரி யோடு
வேக்காட்டில் தேகமெல்லா மிகவெ ளுத்து
மேனியுமோ மிகவுலர்ந்து சுரமு முண்டாம்
சாக்காட்டிற் பசியற்று ருசியில் லாதால்
சண்டாளச் சேட்டுமத்தின் றலைநோக் காடே.

328

சன்னிவாதத்தலைநோக்காடு

தலைநோக்கா டாகியே மிகவ ருந்தி
சஞ்சலத்தால் மனக்கிலேசந் தானு முண்டாய்
மலைநோக்காய் நெஞ்சடைத்துப் பெருமூச் சாகி
மறுகாதி ரண்டினிலாப் படித்தாற் போலும்
புலைநோக்காய் வாய்தானும் பேச வொட்டாப்
புழுக்கள்தா னூர்தல்போற் றேக மாகும்
கதநோக்கா யுணர்ச்சி யறிவில்லா தாகும்
கனசன்னி வாதத்தின் றலைநோக் காடே.

329

இரத்தபித்தத்தலைநோக்காடு

சன்னியாய்க் குளிர்ந்துமே வெச்சென் றாகும்
தாகமே மிகவுண்டாய் மயிர்க்கூச் சாகும்
தின்னியாந்திமிர் திமிர்த்தி ரத்த மீறிச்
செவிமூக்கு வாயாலே ரத்தம் வீழும்
உன்னியா யுடலதுதான் றுடிப்புண் டாகும்
ஊக்கமாஞ் சுவாசமது மெத்த வாகும்
கன்னியாஞ் சரீரமது கருக லாகும்
கதித்தெழுந்த ரத்தபித்தத் தலைநோக் காடே.

330

கிருமிகந்ததலைநோக்காடு

கதித்துமே மௌலிபற்றித் தலைநோ வுண்டாம்
கடிமூக்குத் தண்டுபுரு வம்வ லிக்கும்
வதித்துமே வாய்நீர்தான் மிகவு மூறும்
வடிவமெல்லாம் நோவாகி மனம றுக்கும்
குதித்துமே கைகாலு மிடறும் பற்றிக்
குற்றியே விறுவிறென்றே தானி ருக்கும்
நதித்துநா ணற்பூப்போற் கிருமி விழும்
நாறுமே கிருமிகந்த தலைநோக் காடே.

331

சூரியவற்கம்

கந்தமாம் பலபக்கமிடப் பக்க மாதல்
கண்ணடியு மூக்கடியும் புருவம் பற்றி
புந்தமாம் புருவத்தி லூசி குற்றல்
போல்வலுக்குங் கண்தானுஞ் சுருங்கிக் காணும்
பந்தமா முடம்பெங்கும் பார மாகும்
பகற்போது தாழ்ந்தவுட னேவு மட்டாம்
துந்தமாந் துந்துமிபோல் வலியுண் டாகும்
சூரியவற்கந்த ன்னின் சுருப மாமே.

332

சந்திரவர்த்தம்

சுருபமா யுடம்பெங்கும் வலியு மாகித்
தும்மியே மூக்கடைத்துச் சுகந்த மற்று
புருவமே மிகவலித்து நெற்றி யோடு
புண்போலக் குடைந்திட்டுப் புளக மாகி
அருபமா யந்தியின் போது தோன்றிக்
அர்த்தராத் திரிமட்டு மலைச் சலாகி
சருபமாய் விடிகிறநே ரத்திற் றானும்
சாய்க்குமே மாசந்திர வர்த்த மாமே.

333

கர்னாவர்த்தம்

வர்த்தமாய் மார்போடு பிடரி காது
வலித்துமே யாப்புகொண் டடித்தாற் போலக்
குற்றமாய்க் காதிரண்டுங் குடைச்ச லாகும்
கோணியே கழுத்துங்கா துங்க னக்கும்
அற்றமா யுச்சியிலு நெற்றி தன்னில்
அடிக்கடிக்கு நோயாகி யசதி யாகும்
பற்றமாய்ப் பசியின்றி உரக்க மிண்றேல்
பாரகர்னா வர்த்தமென்றே பகர லாமே.

334

ஒருதலைவகாதபேதம்

பகரான வொருதலையைப் பாதி நொந்து
பகழிகொண்டு மௌலிதனைப் பிளந்தாற் போல
நிகரான கண்ணுநீர் பாய்ந்து காந்தி
நெடுமூச்சு விட்டுமே நினைந்து துன்பம்
திகரான சடந்தானுந் திடுக்குண் டாகிச்
சினுக்கிரு லோகியே பசிகா ணாது
வகரான வாதமாய் மயிர்க்கூச்ச மாகும்
காகாத பேதத்தோர் தலைவலியு மாமே.

335

வாதகர்ணச்சூலை

வலியாகிச் சீவிழுந்து காதி ரண்டும்
மகத்தான சமுத்திரம்போ லிரைச்ச லாகிக்
கலியாகிச் செவிதனிலே சத்த முண்டாய்க்
கேள்விகள்தான் வசனமது கேட்டி டாது
பெலியாகிப் பிறர்வசனத் திசைகே டாகும்
பேய்கொண்ட மனமது பேச்சு தானாம்
அலியாகி யாணவ காமியங்கு றைக்கும்
அடங்காத வாதகர்ன சூலை தானே.

336

பித்தகர்னச்சூலை

தானென்ற இரண்டுசெவி தன்னிலே தான்
தாக்கான கிரந்தியே எழுந்து நொந்து
ஊனென்ற உதிரமொடு சீயும் பாய்ந்து
ஊற்றை யாங்கும்பி போல்நாற்ற மாகும்
காளென்ற சிரசெங்கு மளிபோ லுறுப்
காதிரண்டும் பருத்துமே வீக்க முண்டாம்
பேனென்ற புளகிதமாய்த் தலையெங் கும்நேரம்
பித்தகர்ன சூலையென்றே புகலு வீரே

337

சேட்டுமகர்னச்சூலை

புகலவே காதுக்குட் குரும்பி சேர்ந்து
பொருங்கோலை கொண்டுதான் குடைந்தாற் போல
நுவலவே நோவாகிப் புண்தா னுண்டாம்
நோக்கான சடந்தானும் நுணுக்க மாகும்
இகலவே இரைச்சலது கொஞ்சங் காணும்
ஏற்றமாய்த் தினவுமே மிகவுண் டாகும்
அகலவே யாக்கையெல்லாம் வெளுத்துக் காணும்
அரிதான சேட்டுமகர்ன சூலை யாமே.

338

கிருமிகர்னச்சூலை

ஆமென்ற கம்புமுறை யரிசி போல
அடைத்துமே காதிரண்டுந் துன்னிப் போகும்
போமென்ற புழுக்களது மெத்த வூர்ந்து
புரண்டுமே புண்ணாகி உதிரம் பாயும்
தூமென்ற சீயோடு சில்லுங் காணும்
துடிக்குமே படபடத்துக் காதி ரண்டும்
கேமென்ற சத்தமது கேட்டி டாது
கிருமிகர்னச் சூலையென்றே கீர்த்திப் பாயே.

339

தந்தவாய்வு

கீர்த்திப்பாய் கெட்டியாய்க் கடித்த லாலும்
கெடியான சீதளங்கள் மிகவே யூறிப்
பார்த்திப்பாய்ப் பல்லதனி லடக்கி னாலும்
பலபலவா முதிரந்தான் பற்ற லாலும்
மூர்த்திப்பாய் முகமெல்லா மிகக்கு டைந்து
முகுளிதமாந் ததந்தங்கள் சதைக ரைந்து
நார்த்திப்பாய் நாவடியு நரம்பு நோவாம்
நாறுதந்த வாயுவின்றன் நலம தாமே.

340

நலமான வாயுவது கோபித் தக்கால்
நற்சந்து குடைந்துமே பல்லு நோவாம்
தலமான தலையோடு பிடரி குற்றும்
தாக்கான மலமிறுகி நீருங் கட்டும்
குலமான பெருநரம்பு தான்மு டங்கும்
குடைச்சலாய் வாய்தானும் வரண்டு காணும்
பெலமான குளிரோடு சுரமு முண்டாம்
பேர்பெரிய வாதமென்றே பேச லாமே.

341
ஆமப்பா வாதமதெண் பத்து நாலும்
அதினுடைய குணாகுணங்க ளடங்க லாக
ஓமப்பா மருத்துவத்தைப் பிரித்துப் பார்த்து
உலகத்தோர் பிழைக்கவென்றே உறுதி சொன்னேன்
தாமப்பா தன்வந்திரிசதா சிவனைக் கேட்கச்
சதாசிவன்றான் சொன்னபடி நானுங் கேட்டு
நாமப்பா இந்நூலை வெளியாய்ச் சொன்னேன்
நாதாக்கள் சொன்னபடி நாட்டி னேனே.

வாதரோகநிதானம் முற்றிற்று

8. பித்தரோகநிதானம்

நாட்டினேன் பித்தத்தின் பெயரைத் தானும்
நாற்பத்தி ரண்டான குணாகு ணங்கள்
ஆட்டினே னாவுருபித் தம்தன் னோடு
அமலகபித் தம்உன் மாத பித்தம்
தாட்டினேன் தமந்தபித்தம் வாத பித்தம்
நனித்ததோர் வன்னிபித்தஞ் சேட்ப பித்தம்
தூட்டினேன் சுரோணிதபித்தம் விகார பித்தம்
துடியான பிரணபித்தந் தொகையைக் கேளே. 343

துகையான வுரத்தபித்த மிரத்த பித்தஞ்
சுழிகாசப் பித்தமோடு சுவாசப் பித்தம்
வகையான சேட்பபித்தங் கரும்பித் தந்தான்
மாகரப்பான் பித்தட சீரண பித்தம்
அகையான வரூசி பித்தந் தான்
அழல்மெரிவித்தன் பித்தந்மோடி பித்தவிஷம் பித்தந்தான்
முகையான அதிசாரப் பித்தந் தானும்
மூலபித்த முதரபித்த முறைமை யாமே. 344

முறைமையாங் கண்டபித்த மோடு பித்தம்
மூடுபித்த நடுக்குபித்தங் கபால பித்தம்
தறமையாஞ் சத்திபித்தந் தாக பித்தம்
தருக்கான விக்கல்பித்தம் க்ஷயபித் தந்தான்
திறமையாந் திமிர்பித்தம் வலிபித்த மோடு
சீதபித்தங் கிருமித்த மசாத்ய பித்தம்
மறமையாம் மார்க்கபித்த மருத்தீடு பித்தம்
வகையது நாற்பத்திரண்டு மகிழ்ந்து பாரே. 345

மகிழ்ந்துமே பித்தந்தன் வருகும் வாறு
மசதேவர் தமைப்பணிய மாட்டா தார்க்கும்
மகிழ்ந்துமே குருவடியை வணங்கா தார்க்கும்
மாதாவின் மனமகிழா மார்க்கத் தார்க்கும்

மகிழ்ந்துமே தந்தையைவஞ் சித்த பேர்க்கும்
மதாலயங்கள் தொழுதிடா மார்க்கத் தார்க்கும்
மகிழ்ந்துசிவ திரவியத்தை யபகரித் தோர்க்கும்
மாபா தகர்க்குவந்து மருவும் பாரே.

346

மருவுமே புளிப்புஉரைப் புலப்பு மிஞ்சல்
மனதிலே துக்கங்கள டைத லாலு
நெருவுமே நெருப்புவெய்யில் கோபந் தன்னில்
நித்திரைதா னில்லானல் விருத்தி ருக்கில்
அருவுமே அக்கினியிற் பொசிக்கா விட்டால்
அதிகமாய்ப் பெண்போக மனுப வித்த
நருவுமே நாபிக்கு மேலே நின்று
நாடியே கண்டமட்டாயி ருக்கும் பாரே.

347

பித்தம்வர்திக்குங்கால்

இருக்குமே பித்தம்வர்த் திக்குங் காலம்
ஏதென்றா லாவணியுங் கன்னி தானும்
அருக்குமே யைப்பசிகார்த் திகைக்கு மெத்த
ஆட்சியா யெழுந்துமே பொங்கிக் காணும்
அருக்குமே சமிக்கின்ற காலந் தானே
தனியான மார்கழியிற் றையிற் றானும்
பருக்குமே பங்குனியுமேஷந் தானும்
பருகுமே சரீரமெங்கும் பயித்யந் தானே.

348

ஆவுறுபித்தகுணம்

தானான சரீரந்தான் வெதும்புந் தாகம்
சளியிளைப்புக் கடுப்புமா யழற்சி யாகும்
பூனான வாய்தனிலே புளிப்பு ரைப்பப்
புகழான மலசலந்தான் மஞ்ச ளிக்கும்

கேனான குருமாழிகொண் டெங்கும் பார்க்கும்
கூற்றாடுங் கொக்கரிக்குங் கூவ லாகும்
ஆனான் வடிக்கடி எழுந்தி ருக்கும்
ஆவுறுபித் தக்குணத்தி னாண்மை தானே.

349

ஆம்பல்பித்தம்

ஆண்மையா யங்கமெல்லாங் கருக லாகும்
அதிசயமாய்த் தலைதிரும்பு மாவே சம்போல்
தாண்மையாய்ச் சாப்பிட்ட அசனந் தானும்
தரித்தொருநாள் பின்புதான்வாந்தி பண்ணும்
பூண்மையாய்ப் புளிப்போடு கசப்பெ டுக்கும்
புகலரிய கால்கைதா னசதி யாகும்
வேண்மையாய் விக்கலொடு வயிறு உப்பும்
மிகவாம்பல் பித்தத்தின் விகற்பந் தானே.

350

உன்மத்தபித்தம்

விபரமாய் மேனியெல்லா மிடுக்குண் டாகும்
மிக்கான தீபந்தான் மெத்த வாகும்
தபரமாய்த் தலைதானுங் கனத்து காணும்
தரிக்குமோ ரிடந்தன்னில் மிகவி ருக்கும்
உபரமா யொருவருடன் பேசி டாமல்
ஊமையைப்போல் விழித்திருக்கு முறக்க மில்லை
திபரமாய் வாய்நீர்தான் வடித்து நிற்கும்
சித்தமது கலங்குமுன் மத்த மாமே

351

தமந்தபித்தம்

மாதமாய் மது தானு முண்ட வன்போல்
மறதியதா யிருக்குமேச ரீரந் தானும்
நாதமாய்ச் சரீரந்தான் மிகத்தூ ளித்து
நாவடியி னரம்பெல்லா மஞ்ச ளிக்கு

போதமா யழைக்கழைக்கப் பிரேதம் போலப்
பேசாமல டிக்கடிக்குத் தாக மாகும்
சாதந்தான் மிகவுண்டு மவுன மாகும்
தமந்தபித்தத் தினிடத ரிப்புத் தானே.

352

வாதபித்தம்

தரிப்பான கண்தனையே மிகம றைக்கும்
தரியாத மிகவிரைச்சல் புகைச்ச லுண்டாம்
மிரிப்பான கண்மின்னி யாய்ச்சு ழன்று
மிக்கநீர் த்ததும்பியேக லங்கி நிற்கும்
வரிப்பான வன்னுடம்பு வியர்வை யாகும்
மயக்க மொடு தியக்கமாய் வாந்தி யாகும்
குறிப்பான கொம்பேழும் அன்னம் வேண்டா
கூறினோம் வாதபித்த கொள்கை தானே.

353

வன்னிபித்தம்

கொள்கையாய்ப் பேதமாய் வயிறு ளைந்து
கொடிதான கனல்தானுங் கபால மேறி
வள்கையாய்ச் சீதமாய்ச் செந்நீர் பாய்ந்து
வாட்டமாய்க் கருகியே உடல் வெளுத்து
மங்கையா மயக்கமொடு தியக்க மாதல்
வாறான வசனமிக தானுஞ் செல்லா
நங்கையாம் நாவழன்று புளிப்பு காணும்
நளினமாம் வன்னிபித்த நாட்ட லாமே.

354

சிலேட்மபித்தம்

நாட்டவே மிகவுடம் பெல்லாம் வெளுத்து
நளிர்ந்துமே உடம்பெல்லா நோக்கா டாகி
மாட்டவே மனமதுதான் கோப மாகி
மயங்கிஅற வழிந்துஇரு மலுண் டாய்க்

காட்டவே கண்களெல்லா மிகப்பச் சென்று
கருதியே பசிகாணுங் கவக்க மாகித்
தோட்டமாய்த் தும்மலொடு சிரங்க ணக்கும்
சிலேட்டுமத்தின் பித்தமென்று செப்பி டீரே.

355

சுரோணிதபித்தம்

செப்பவேசு ரோணிதந்தான் மிகவெ தும்பித்
தேகமெங்குங் குடைந்தமே சந்து நோவாம்
செப்பவே மேனிமுட் பொதிந்தாற் போல
விடயாகித் தாகமாய்ப் பனிக ண்ணும்
தப்பவே தலைநோவு மிகுதி யாகும்
சஞ்சலிக்குஞ் சிந்தைதான் தயங்க லாகும்
துப்பவே வாந்தி யொடு கோழை யாகும்
சுரோணிதமாம் பித்தமென்றே சொல்லு வீரே

356

விகாரபித்தம்

சொல்லவே துயிலொழிந்து கசந்து வாயைத்
துப்பரவாய்ப் பலபேச்சும் விரும்பி டாது
கல்லவே கண்சிவந்து கலக்க முண்டாம்
கடுத்துடம் பெலாம்வெளுத்துக் கருகிப் போகும்
மல்லவே வாந்தியொடு மயக்க மாகும்
மனமருக லாகியே வாய்நீ ரூறும்
பல்லவே பட்டினிதான் மிகவி ருக்கும்
பாரமாம் விகாரபித்தப் பண்ப தாமே.

357

விரணபித்தம்

பண்பாக உடம்பெஞ்குந் திமிருண் டாகிப்
பாரமாய்த் தினவெடுத்து இரண மாகும்
நண்பான நாவெல்லாங் கசப்பு காணும்
நாடியெல்லாம் படபடத்துத் துடிப்புண் டாகும்

திண்பான லிங்கமெல்லாஞ் சிவந்து காணும்
திடுக்கிட்டு நித்திரையி லெழுந்தி ருக்கும்
வெண்பாக வாய்நீர்தான் மிகவு மூறும்
விரணமாம் பித்தத்தின் மூர்க்க மாமே.

358

உரத்தபித்தவாதம்

மூர்க்கமாங் கோபமது மிகவுண் டாகும்
முனையாக வடிக்கடிக்குச் சண்டை கொள்ளும்
ஆர்க்கமாய் கூவியே இரைச்ச லாகும்
ஆதான பாதாளம் பேதி யாகும்
நார்க்கமாய் நன்மைதின்மை தோற்ற மற்றான்
நலக்கமாக் கண்சிவக்குந் தூக்க மில்லை
ஊர்க்கமா யுடம்புதுாளிக்கு முப்பும்
உரத்தபித்த வாத்தினு ண்மை தானே.

359

இரத்தபித்தம்

உண்மையா யிருமற்றான் மிகவு முண்டாய்
உதட்டியாய்க் குற்றியே ரத்தம் வீழ்ந்து
அண்மையாம் சரீரமது மிகவும் வற்றி
அடிவயிறு சுருங்கியே வற்றிக் காணும்
வண்மையாய் வாய்நீரிற் கவுச்ச டிக்கும்
மறுகியே வல்லுடம்பு வாட்ட மாகும்
இண்மையா யிடுப்புதான் குடைச்ச லாகும்
எடும்இரத்த பித்தத்தினியற்கைதானே.

360

காசபித்தம்

இயற்கையா யிருமியே மிகப்பி ரட்டி
ஈண்டியே விக்கலொடு சத்தி யாகும்
உயற்கையா யுடம்புதான் மிகவ லிக்கும்
உஷ்ணமாய் வெதும்பியே குரலே கம்மும்

தியற்கையாய் வாய்நீரு மிகவே யூறும்
தித்திப்பு மிகவிருக்குந் துயரங் காணும்
கயற்கையாய் நெஞ்சுதனிற் கனமாய்க் காணும்
கரும்பிணுக்குங் காசபித்தங் கருத்து தானே.
361

சுவாசபித்தம்

கருத்தாகச் சுவாசமது மிகவுண் டாகும்
கனமாக வயிறுமே ஊதிக் காணும்
உருத்தாக உடலதுதான் மிகவ லிக்கும்
உளறுமே கேணுபோல் வாம்நீர் தானும்
மருத்தாக மயங்கியே கண்ம றைக்கும்
மார்பிலே வலியோடு இரும லுண்டாம்
துருத்தாக வயிறதனிற் பசியோ இல்லை
சுவாசமாம் பித்தத்தின் சூட்கசந் தானே.
362

சேட்பபித்தம்

சூட்சமாஞ் செம்புதனிற் களிம்பு போலும்
துரிதாக வாயெடுக்குஞ் செகப்பாய் வீழும்
மாட்சமா மலமிறுக்கிச் சிவப்பு போலாம்
மயக்கமொடு வியர்வைதான் செந்நீர் பாயும்
தாட்சமாந் தண்ணீர்தான் மிகத்த விக்கும்
தலைதானுந் திருப்பியே தவக்க முண்டாம்
தேட்சமாந் திடுக்கோடு பயமு மாகும்
சிறுகதிர்போல் மேனிச்செம் பித்த மாமே.
363

கரும்பித்தம்

செம்பித்த மாகியே தியக்க முண்டாய்ச்
சிரசோடு மெய்நடுக்குந் தலைவ லிக்கும்
கம்பித்த மாகியே கண்ணு றங்கும்
கடைக்கண்தான் சிவந்துமின் மினி யாகும்

நம்பித்தஞ் சடமெல்லாங் கனத்து வற்றும்
நாவுதனில் ருசியில்லைப் பசி யுமில்லை
வம்பித்தங் கருப்பாகி வாந்தி யுண்டாம்
மாசடையுங் கரும்பித்தம் வளப்பந் தானே.

364

கரப்பான்பித்தம்

வளப்பமாஞ் சரீரமெல்லாஞ் சொறியுண் டாகி
வருத்தமிக வாகியேகட்டி கட்டும்
குளப்பமாய் வயிறுதான் பேதி யாகும்
குமாலா யிருமியே யிழுத்துக் கொள்ளும்
இளப்பமாய்க் கால்தானும் பெலன்கே டாகும்
இடுப்பிலே வலியுண்டாய்த் திமிருண் டாகும்
களப்பமாய்க் கருதியே மேனி யெல்லாம்
கந்துகரப் பான்பித்தங் கண்டி டாயே.

365

அசீரணபித்தம்

கண்டிட்ட மந்தமாய்ப் பசியோ இல்லை
கடுத்துமே நளிராகி மலமி றுக்கும்
வெண்டிட்ட விழிகரித்து நீர்தான் பாயும்
மிக்கதலை வலிக்கும்வயி றிரைச்ச லாகும்
அண்டிட்ட வயிறு அழுத்த மாகும்
அசனமிகச் செல்லாது கைகா லோயும்
பண்டிட்ட பிளித்தேக்காய் வாய்நீ ரூறும்
பண்பான வசீரணபித்தம் பயின்றி டாயே

366

உருசிபித்தம்

பயின்றிட்ட மனமறுத்துக் குடல்பி ரட்டிப்
பாகங்கான வாந்தியொடு ரூயீசி யாகித்
தியன்றிட்ட தியக்கமாய்ச் சிரசி லேறித்
திருப்பியே தலைதன்னைப் பிறகே வீசும்

நவின்றிட்ட வடிநாக்கு மிகத்த டித்து
நாவிலே உணர்ச்சியில்லா துறக்க மற்று
அவின்றிட்ட வாகாய மெதல்போ லாம்
அதட்டுமே உரூசியென்ற பித்தந் தானே
367

எரிபித்தம்

அதட்டியே அடித்துடைதா னிரண்டு பாதம்
அழகான கண்ணோடு உள்ளங் கால்கள்
கதட்டியே உள்ளங்கை யெரிவு காணும்
காதிரண்டு மூக்கோடு வரண்டு போகும்
முதட்டியே முதுமுழங் கைகால் தன்னில்
முதிர்ந்தஅரு விப்பாக மெத்த வாகும்
பதட்டியேற் காறுதான் மிகவே வேண்டும்
பாரப்பா எரிபித்தம் பயின்ற வாறே.
368

அழல்பித்தம்

வாறான இளமைதனில் மிகந ரைக்கும்
வடிவமெல்லா மிகவெளுப்பாய்த் தானி ருக்கும்
காறான கடைக்கண் தான்மிகச்சி வக்கும்
கண்டபல ஞானங்கள் மிகவே பேசும்
தூறான வார்த்தைகள்தான் மிகச்சிக் கென்று
துடியிடையார் மேலின்பந் திறந்து கூறல்
பாறான பலகலைதான் மிகவு ரைத்தல்
பாடுமே யழற்பித்தம் பரிசு தானே.
369

துடிபித்தம்

பரிசுதான் உடம்பெல்லா மிகத் துடித்துப்
பாண்டுவாய் மேனியுந்தான் பச்செசன் றாகும்
உரிசைதா னில்லாமல் உண்ண மாட்டார்
ஓட்டமே மிகுதியா யுலையப் பண்ணும்

அரிசுமே யாயிழைமேல் மனப்புண் ணாகும்
அடிக்கடிக்கு ஆரோடுஞ் சண்டை கொள்ளும்
துரிசுதான் மிகப்பண்ணு மேது வண்டில்
துடிபித்தந் தன்னுடைய சொரூப மாமே

370

விஷபித்தம்

சொரூபமாய்ச் சேர்ந்துமே விழுந்தி ருக்கும்
தூற்றுமே கொடுமை தன்னை யாரோடுந் தான்
உருபமா யுள்ளங்கால் தனிலி ருந்து
உயரமா யேறுமுச்சந் தலைதன் னிற்றான்
திருபமா விஷமிறங்கும் போலே ஏறும்
திரேகமெல்லாம் வலியுண்டாய்க் கண்டிப் பாகும்
அருபமா யசனமிகத் தானுஞ் செல்லா
அரிதான விஷப்பித்த மசாத்ய மாமே.

371

அதிசாரபித்தம்

அரிதான வயிறதனி லிரைச்ச லாகும்
அடிவயிறு பிடுங்கியே பேதி யாகும்
உரிதான உன்பசந்தான் மெத்த வாகும்
ஒளிவிலாப் பக்கத்தில் வலியு மாகும்
எரிவான ஈரலெல்லாங் குமறல் காணும்
ஏற்றமாய்த் தாகமொடு மயக்க மாகும்
சரிதான வரோசிகமா சத்தி யாகும்
சலிக்குமே யதிசாரப் பித்த மாமே.

372

மூலபித்தம்

சாரமாய் வயிறிரைந்து பேதி யாகும்
சலிப்பான கோபமாய்த் தடுமா றாடும்
கோரமா மூலத்தில் முளையுங் காணும்
குறங்கினோ டடித்தொடையுங் கடுப்பு முண்டாம்

சோரமா வுடல்வெளுத்து சோபையா யாகும்
தூக்கமே மிகமிஞ்சிச் சோம்ப லாகும்
காரமாய்க் கண்ணுந்தான் கரிச்ச லுண்டாம்
கனமூல பித்தத்தின் காட்சி யாமே.
373

உதிர்பித்தம்

ஆமென்ற அங்கமெல்லா மம்மை வார்த்து
ஆட்டினாற் போலவே தினவு மாகும்
போமென்ற சரீரமெல்லாம் புண்க ளாகும்
புழுதியள்ளிப் பூசினாற்போற் சரீர மாகும்
வாமென்ற வடிவதுமஞ் சளாகும்
மலசலமுஞ் சுருங்கியே வாட்ட மாகும்
நாமென்ற நாடியதுது வண்டு காணும்
நாட்டமுண்டா முதிர்பித்த நாடு வோர்க்கே.
374

கண்டபித்தம்

நாடினாற் குரலினைத்தான் கனத்து கொண்டு
நற்கசப்பாய் சத்தியது தானெ டுக்கும்
வாடியே கண்டத்திற் புண்போ லாகும்
வழவழத்து நாவெல்லாம் வரண்டி ருக்கும்
தாடியே தாளடியில் கனப்புண் டாகும்
சமுத்திரத்தி னோசைபோற் காதி லுண்டாம்
பேடியாம யிருஞ்செம்பட்டை யாகும்
பிறவிசுவாங் கண்டபித்தம் பிரதாபந் தானே.
375

ஓடுபித்தம்

பிரதாப மாகியே ஓடி யெங்கும்
ற்றலாலு தாசினங்கள் மெத்தப் போகம்
நிரதாப மாகவே பலக டிக்கும்
நெருப்பாகக் கண்சிவக்கும் நிமைத்து மூடும்

குராதாப மாகவேகூவற் போடும்
கொக்கரிக்குங் கூத்தாடுங் குறிச்சே பார்க்கும்
அரதாப மாகவே பாண்மை யுண்டாம்
அசாத்தியமா மோடுபித்த மணுகி னோர்க்கே.

376

மூடுபித்தம்

அணுகியே யாபரணப் பொன்ற னைத்தான்
அகப்பட்ட விடந்தனிலே புதைத்து போடும்
மணுகியே மனிதரைத்தான் கண்ட போதே
வார்த்தைகள்தான் உதாசினங்கள் வசனிப் பாகும்
நணுகியே நாக்குக்குள் தானே பேசும்
நலத்தண்டி பண்ணியே யிருக்குங் கைகள்
மிணுகியே எந்நேர மன்னம் வேண்டா
மிக்கான மூடுபித்த மீறி னோர்க்கே.

377

நடுக்குபித்தம்

மீறியே தலையோடு சிரசு நெற்றி
மிக்கான பிடரியொடு முதுகுத் தண்டு
காறியே கண்டங்கள் கதுப்போ டொக்கக்
கனமாக நடுக்கியே காந்தி யாகும்
சீறியேக சப்பாக வாந்தி யாகும்
கிணுக்கிரு மலாயிருமுந் தூக்க மில்லை
ஊறியேவாய் நீர்தான் மார்பில் வீழும்
ஊறுமே நாத்தானும் நடுக்கும் பித்தம்.

378

கபாலபித்தம்

நடுக்குமே கபாலந்தான் சிரசோ டொக்க
நளிராகி உடம்பெங்கும் கடுப்பு மாகும்
விடுக்குமே அம்புபோற் சிரசெல் லாந்தான்
மேனியுமே மஞ்சணிற மாகுங் கண்டாய்

முடுக்குமே மூக்குதண் டெல்லா நோகும்
முகமெல்லாம் வீங்கியே மூர்ச்சை காணும்
படுக்குமே அடிக்கடிதான் எழுந்தி ருக்கும்
பாரமாங் கபாலபித்தப் பண்பு தானே. 379

சத்திபித்தம்

பாரமா யுடம்பெங்குந் திமிருண் டாகும்
பதைத்துமே ஈரலுக்குள் வலியுண் டாகும்
வாரமாய் வாயகையற்று வாந்தி யுண்டாம்
மகத்தான தலையொடுக்க மயக்க மாகும்
ஆரமாய் அக்கினிதான் மிகவுண் டாகும்
அரோசிகமா யெந்நேர மாண்மை குண்ணும்
தாரமாய்த் தண்.ணீர்தான் மிகவேண் டாது
சமிக்காது சத்திபித்தத் தாண்மை தானே. 380

தாகபித்தம்

ஆண்மையா யடிவயிற்றிற் பதைப்புண் டாகும்
அங்கமெல்லாம் வெவ்வழல்போல ழகன்று காணும்
தாண்மையாய்த் தண்ணீர்தான் மிகக்கு டிக்கும்
சயித்தியமாம் பண்டத்தி லிச்சை யாகும்
காண்மயாய கண்டத்தில் வியர்வை காணுங்
கழித்தடியு நாவடியு மிசித்துக் கொள்ளும்
பூண்மையாய்ப் பிளிப்புமே லிச்சை யாகும்
புகலரிய தாகபித்தம் பேச லாமே. 381

விக்கல்பித்தம்

தாகமுடன் சத்தியதாய் விக்க லாகும்
தவிப்பெய்தி சரீரமெல்லாஞ் சயித்ய மாகும்
பாகமுடன் தலைபிரட்டுக் கிடைகொ டாது
பால்போலே வாயினிலே நுரையுந் தள்ளும்

சாகமுடன் சயித்தியத்தில் மிகக்கி டக்கும்
தணலாக உடல்வெதும்புந் தளர்ச்சி யாகும்
சோகமுடன் கைகால்தான் ஓச்ச லாகும்
சுருக்கிடுமே விக்கல்பித்தஞ் சுருதி தானே. 382

சயபித்தம்

சுருதியா யிருமலது மிகவு முண்டாய்ச்
சூட்சமாய் வெதும்மலொடு தண்ணீர் தாகம்
பருதியா யுடல்வெளுத்துப் பாண்டு வாகும்
பஞ்சுபோ ற்கண்களெல்லாம் வெளுப்பாய்ப் போகும்
குருதியாய் நெஞ்சுதனிற் கோழை கட்டும்
குணுக்காகக் கட்டிபோற் சளியே வீழும்
நிருதியாய் நெஞ்சுதனில் எரிவுண் டாகும்
நித்திரையே மிஞ்சுசய பித்தந் தானே. 383

திமிர்பித்தம்

பித்தமா யுடம்பதுதான் மிகம யக்கும்
பேதமாய் வயிறெங்கு முள்ளு போலாம்
நித்தமாய்க் காலமே வாந்தி யாகும்
நினைவோடு நித்திரையு மசதி யாகும்
பத்தமா யொன்றையே பிடித்து நிற்கும்
பாராமாயு டம்பெங்குந் திமிருண் டாகும்
சுத்தமாய்ச் சரீரமெல்லாந் தூசுண் டாகும்
துருசுநடை கொடாதுதிமிர் பித்தந் தானே. 384

வலிபித்தம்

நடைகொ டாதடிவயிற்றிலி முத்து நொந்து
நாவறண்டு தலையெல்லா மிக்க னத்து
இடைகொடாச் சந்தெல்லா நோவுண் டாகி
ஈரல்தனிற் குலைதனிலே வலித்து நோவாம்

படைகொடா மலந்தானும் பச்சென் றாகும்
பட படத்து உடம்பெங்கும் பங்கங் கொள்ளும்
மடைகொடா வயிறெரிச்சல் மெத்த வாகும்
மார்படைக்கும் வலிபித்த வண்மை தானே

385

சீதபித்தம்

வண்மையாயு டம்பெங்கும் வடியுங் தண்ணீர்
மயக்கமா யுடல்கனத்துப் பார மாகும்
புண்மையாய்ப் பிடரிதனி லிசுவுண் டாகும்
பொருமியே வயிறுப்ப சந்தா னாகும்
திண்மையாயு டல்கனத்துச் சொக்கு போலாம்
சீறியே மிகவிருமிச் சிந்தை கேடாம்
செண்மையாய் வாய்நீர்தான் உப்பு ரைக்கும்
சிறுநீருஞ் செகப்பாகுஞ் சீத பித்தம்

386

கிருமிபித்தம்

சீதமா யடிவயிற்றிற் றிமிருண் டாகிச்
செழுமையா யுடம்பெங்குந் தினவு மாகி
வாதமா யுடம்பெங்குங் கடுப்புண் டாகி
வற்றியே மலசலமும் வறண்டு போகும்
காதமாய்க் கால்கைகள் கதலித் தண்டு
கனத்ததுபோல் வெச்சென்று கடுப்பு வாகும்
நாதவாய் மலந்தன்னிற் கிருமி வீழும்
நாறுமே யுடல்கிருமிப் பித்த மாமே.

387

அசாத்தியபித்தம்

உடம்பதுதான் லாகிரிகள் தின்றவன் போல்
உணர்ச்சிதா னில்லாமற் பிடவை கட்டா
தடம்புதா னழலனுகுந் தன்மை போலத்
தவிச்சுமே தாகந்தான் மிகவுண் டாகும்

டம்புதான் வாடு வனித ரோடே
வார்த்தைகள்தான் பலபேச்சும் வசனிப் பாகும்
வடம்புதா னுக்கிரமாய்க் கண்சி வக்கும்
வாய்வரளு வசாத்திய பித்தந்தா னென்றே.
388

மார்க்கபித்தம்

தானேன்ற சகலநூல் தான்றான் பேசும்
தடுதியினி லுட்காரு போட்டம் பாயும்
போனென்ற பிடவையைத் தானகிழித்துப் போடும்
புலம்புமே வாயில்வந்த தெல்லாம் பாடும்
தேனென்ற சிரசோடு பிடரி யெல்லாம்
சிக்கெனவே இசுவாகுந் தேகம் வாடும்
பானென்ற பலபலவாங் கருமஞ் செய்யும்
பழிக்குமே பிறரைத்தான் மார்க்க பித்தம்.
389

மருந்தீடுபித்தம்

மார்க்கமா மனமதுதான் மௌன மாகும்
வடிவெங்கு மூதியே நெஞ்சு வற்று
ஊர்க்கமா யுடம்பதுதான சதியா கும்
ஊனுறக்க மில்லாம லுழலு மெங்கும்
தேர்க்கமாந் திடுக்கிட்டு சிதைவாம் புத்தி
சேயிழையார் ருந்திலைற் றிரட்சி யாகி
ஆர்க்கமா யடிக்குடலில் மிகுந்து பாஷி
அடங்காமது மருந்தீடு பித்த மாமே.
390

ஆமப்பா பித்தமது நாற்பத்தி ரண்டின்
அடவான குணமெல்லா மாய்ந்து பார்த்து
தாமப்பா சிதாசவன்றான் தன்வந் திரிக்கு
தயவுடனே அனுக்கிரகம் பண்ணிச் சொல்ல

வாமப்பா தன்வந்திரி அசுவினிதே வர்க்கு
மகிழ்ந்துரைக்க அசுவினித் தேவர் தாமும்
தேமப்பா அகஸ்தியமா முனிக்குச் சொல்ல
சித்தமகிழ்ந்தே யுரைத்தார் புலத்தி யர்க்கே. 391

புலத்தியருந் தேரையமா முனிவ னுக்குப்
போதிக்கத் தேரையரா முநிவன் றானும்
தலத்தியராம் யூகியாம் எனக்குச் சொல்ல
சாங்கமா யூகிஎன்ற முனியாம் யானே
வலத்தியராய் மருத்துவத்தின் விரிவாய்த் தானே
மானிடர்கள் தமக்குரைத்தேன் மறைப்பில் லாமல்
குலத்தியராங் குருவினிட வுபதே சத்தாற்
குத்தபித்த நாற்பத்தி ரண்டு முற்றே

பித்தரோக நிதானம் முற்றிற்று

9. சேட்பரோகநிதானம்

முற்றான சேட்பந்தானி ருபத் தொன்றும்
முனியுரைத்த சொற்படியே மொழியக் கேளாய்
சிற்றான விருமலாஞ்சி லேட்பத் தோடு
செறிகாசச் சிலேட்டுமமாஞ் சுவாசச் சிலேட்பம்
மற்றான தீபனசி லேட்பத் தோடே
மந்தசிலேட் டுமம்வாத சிலேட்ப மாகும்
துற்றான பித்தகசிலேட்பந் தொந்த சிலேட்பம்
சுகசன்னி வாதசி லேட்பந் தானாமே.

393

ஆகுமேசுர சிலேட்பமதி சாரசி லேட்பம்
அதிகசல சிலேட்டுமமா வக்னி சிலேட்பம்
போகுமே பூதசிலேட்பமு யலகன் றான்
பொறிவெறிச்ச சிலேட்டுமமாம் விகார சிலேட்பம்
சோகுசுரோ ணிதசேட்பம் விரண சேட்பம்
துர்க்கந்த சிலேட்டுமமா நித்ய சிலேட்பம்
நாகுமே இருபத்தொன் றாஞ்சி லேட்பம்
நாட்டினேன் வரலாறு நயந்து கேளே

394

நயமாக ஒருவருடன் பேசும் போது
நாவிலொன்று மனதிலொன்று நாடும் பேர்க்கு
பயமாக வந்தவர்கட் கிடங்கொ டாத
பாதகர்க்கும் வேதத்தைப் பழிக்கின் றோர்க்கும்
துயமாகச் சூரியருக் கெதிரே நின்று
துரிசாக மலசலங்கள் விட்ட பேர்க்கும்
செயமாக விஷ்ணுசமயஞ்சிவ சமயந் தான்
திடாகரித்தது ரோகிக்கும் சேட்ப மீறும்.

395

மீறியே தித்திப் புபுளிப்புத் தானும்
மிகத்தின்னுங் கிழங்குவகை யருந்தி னாலும்
சாறியே சபித்தியமாங் குளிர்ந்த பண்டந்
தண்ணீர்தான் பழையதுகள ருத்த லாலும்

சீறியே தன்வயது தனக்கு மூத்த
ஸ்திரீகளுடனது போகம் செய்த லாலும்
மாறியே மயானபுகை படுத லாலும்
வருகுமே சேட்பத்தின் மகிமை தானே.

396

சிலேட்டுமம்வர்த்திக்குங்காலம்

மகிமையாய் மாசியொடு பங்குனித் தான்
மருவியே வர்த்திக்கு மையந் தானும்
நகிமையாய் வைகாசி தனிற்கோ பிக்கும்
நன்மையாய்ச் சமிக்கின்ற காலங் கேளாய்
அகிமையா யாடிதனில் மிகச்ச மிக்கும்
ஆவணியும் புரட்டாசி தன்னிற் கேளாய்
தகிமையாய்த் தாட்சியாங் கால மாகும்
சதாசிவன்றான் சொன்னபடி சாற்றி னேனே.

397

இருமல்சிலேட்பம்

சாற்றியே யினிப்புநெய்ப்பாய்ச் சளியே வீழும்
தளுக்காகு முகந்தானுங் குளிருண் டாகும்
மாற்றியே மூக்கதனில் நீரோ பாயும்
மாசற்ற வுடம்பெல்லாம் வெள்ளை யாகும்
சீற்றியே மலந்தன்னிற் சீத மூண்டாய்ச்
சிறுநீரு மஞ்சளித்துச் சிறுக வீழும்
காற்றியே உடம்புக்குள் மெதுகூ டாகும்
கனவிரு மலாஞ்சேட்பங் கணக்குத் தானே.

398

காசசிலேட்பம்

கணக்காகச் சரீரந்தான் சீதளம தாகிக்
கனத்துமே தமத்திட்டுப் பார மாகி
மணக்காக நாடியெல்லா நுணுக்க மாகும்
மருவுசேட் பத்தடைந்து வாய் வரண்டு

அணக்காக அக்கினிதான் மிகவுண் டாகி
அடிமூக்குத் தண்டெல்லா மிகக் கனத்து
திணக்காக இருமலொடு தினவு முண்டாம்
செயலாகச் சிலேட்டுமத்தின் றிறமை தானே.
399

சுவாசசிலேட்பம்

திறமையாய் நெஞ்சுதனிற் கோழை கட்டும்
சிக்கென்று தானிருமி மூக்க டைக்கும்
குறமையாய்க் குறட்டென்று சுவாசங் காணும்
குளிமரோடு சுரமுண்டாய் மயக்க மாகும்
மறமையாய் மார்போடு நெஞ்ச டைக்கும்
வாய்வரண்டு மூக்கதனில் நீரோ பாயும்
வெறுமையாய் மிகத்தண்ணீர் தாப முண்டாய்
விடுசுவாச சிலேட்பத்தின் விபரந் தானே.
400

தீபனசிலேட்பம்

விபரமாய்த் தீபனந்தான் மிகவுண் டாகும்
மிக்கான வுடம்பெல்லா மெரிவுண் டாகும்
அபரமாம் நெஞ்சடைக்கு மழுகையு யாகும்
ஆக்கையெல்லாம் வலியுண்டா யழலு முண்டாம்
கபரமாய்க் கைகாலும்சயித்ய சயித்ய மாகும்
கனத்துமே சரீரந்தான் பருத்துக் காணும்
உபரமா யுண்ணாக்கிற்பசப சக்கும்
உறுதியாய்த் தீபனசிலேட் பந்தா னென்னே
401

மந்தசிலேட்பம்

தானென்ற வயிறதனில் மந்த மூண்டாய்ச்
சலங்கட்டு மலங்கட்டுஞ் சயித்ய மாகும்
ஊனென்ற வுடம்புதனில் வியர்வை யாகும்
ஒக்காள மிகவாகி உயர்மூச் சாகும்

காளென்ற அடிவயிறு கல்லுப் போலாம்
கனத்திரும லாகியே கார லுண்டாம்
வாளென்ற வாய்கைத்து துவர்ப்புக் காணும்
மந்தமாஞ் சிலேட்பமென்ற வழுத்த லாமே.
402

வாதசிலேட்பம்

வழுத்தவே வயிறுதான் பொருமிக் கொள்ளும்
வலித்துமே வலியிறங்கி நீர்க்க டுக்கும்
அழுத்தவே யங்கமெல்லாங் குழிகள் வீழும்
அதரங்கள் பல்லெல்லாங் கறுத்துக் காணும்
விழுத்தவே மேனியெல்லாம் வலியுண் டாகும்
மேகம்போல் நீரிறங்கும்வெள்ளை காணும்
பழுத்தவே பல்லுக்குட் குடைச்ச லாகும்
பாரமாய் வாதசிலேட் பத்தின் பண்பே.
403

பித்தசிலேட்பம்

பண்பாகக் கண்மயங்கிக் கிறு கிறுக்கும்
பத்தியந்தான் மிகுதியாய சதி யாகும்
உண்பாக வசனமிகத்தானுஞ் செல்ல
ஊறியே வாய்நீர்தான் மிகவுண் டாகும்
கண்பாகக் கண்டத்திற் கோழை கட்டும்
கனக்கவே யிருமலொடு மூச்சு மாகும்
மிண்பாக மேனியுமோ மஞ்ச ளிக்கும்
மிக்கபித்த சேட்பத்தின் விபரந் தானே.
404

தொந்தசிலேட்பம்

விபரமாய் மேனியெங்கு மழற்றி யாகும்
விக்கலோ டிருமலாய்ச் சுவாச முண்டாம்
அபரமாய்ச் சுரமுடனே யசதி யாகும்
அழன்றுமே வுடம்பெங்கு மெரிவுண் டாகும்

பரமாய் அன்னமும்தான் பொசிக்கொட் டாது
சளியோடு இருமலுமாய்ச் சண்ணா நிற்கும்
குபரமாய்க் குளிரோடு மயிர்க்கூச் சுண்டாம்
கொடிதான தொந்தசேட்டு மசாத்ய மாகும்
405

சன்னிசிலேட்பம்

கொடிதாக நாவரண்டு கறுப்பு மாகும்
குளிர்ந்துமே சுரமுண்டா மெரிவுண் டாகும்
கடிதான உடம்பெங்கு மிசுவு காணும்
கனமான வசதியொடு மறதி யாகும்
தடிதாகத் தாடையொடு கன்னங் காதும்
தாக்கான புருவமொடு நாசி யுச்சி
படிதாகத் துடித்துமே பட படக்கும்
பாகசன்னி சிலேட்பமென்றே பருகி டாயே
406

சுரசிலேட்பம்

பருகவே சுரந்தானும் பலகா லுண்டாம்
பாரமா யுடம்பெங்கும் வலியு ண்டாகும்
அருகவே யடிக்கடிக்கு வியர்வை யாகும்
அன்னந்தான் கொண்டுடனே வாந்தி யுண்டாம்
உருகவே வயிறெல்லா முளைச்ச லாகும்
உப்பிசமு மேல்மூச்சு மிரும லுண்டாம்
கருகவே நாவரண்டு நீர்தா கிக்கும்
கனமான சுரசிலேட்பங் காணச் சொல்லே.
407

அதிசாரசிலேட்பம்

சொல்லவே வயிறுதனிற் குற்ற லுண்டாம்
சூலையாய் வலித்துமே சுழன்று விம்மும்
அல்லவே விலாப்பக்க மிரைச்ச லாகி
அதிசாரம் போற்சிவந்து அசதி யாகும்

மல்லவே மார்போடு நெஞ்சு நொந்து
வாய்வரண்டு இருமலொடு மூச்சுண் டாகும்
தல்லவே தாகமுட னெரிவு முண்டாம்
தவிக்குமே யதிசார சிலேட்பந் தரனே.

408

சலசிலேட்பம்

தவிக்குமே தண்ணீர்தான் மிகவுங் கேட்கும்
சலந்தானுஞ் சிக்கென்று தடித்தி றங்கும்
அவிக்குமே யடிக்கடிக்கு நீரி றங்கும்
அனலாக தழன்றுமே ஆலோ சிக்கும்
கவிக்குமே குரல்தானுங்கம்மலாகும்
கனமாகக்கோழை யொடுசிலேட்பம்வீழும்
பவிக்குமேபல்லெல்லாமலைச்சலாகும்
பாகமென்றசலசிலேட்பம்பருகிடாயே.

409

அக்கினிசிலேட்பம்

என்றதோ ரிருமலொடு கோழை யுண்டாம்
எழிலுடம்பு அக்கினியா யெரிப றந்து
கன்றெனவே கால்கையுமழற்சி யாகிக்
கண்ணோடு முக்குமே யெரிவாய்க் காணும்
தன்றெனவே தாகமது மிகவுமுண் டாகும்
சயித்தியமாய்க் கால்கைகள் குளிர்ந்து காணும்
உன்றெனவே யுண்டபின்பு பசியே யாகும்
உறுதியக் கினிசிலேட்டுமத்தி னுண்மை தானே.

410

பூதசிலேட்பம்

உண்மையாங் கண்ணிருட்டி விழித்துப் பார்க்கும்
ஊமையைப்போ றானிருந்தே உரைத்துப் பேசும்
குண்மையாய்க் குரட்டோடு மூச்சு வாங்கும்
கொடிகொடியாய்ச் சளியோடி இரும லாகும்

தண்மையாய் மேனியெங்கு மிகவே வேர்க்கும்
நெருநெரெனப் பல்தனையே மிகக் கடிக்கும்
தண்மையாய்ச் சந்தோஷ வார்த்தை பேசி
சண்டைகொள்ளும் பூதசிலேட் பந்தா னாமே

411

முயலகசிலேட்பம்

தானான சடமெல்லாம் வலிப்பு காணும்
சரீரத்தி லுணர்ச்சியற்றுத் தளர்ச்சி கேடாம்
வேனான கண்தானுஞ் சிவந்து காணும்
மிகக்கண்ணீர் பாய்ந்துமே மேனி கண்ணும்
ஊனான உடம்பொங்கு கருகிக் காணும்
உறுதிமல சலம்விழுதல் தெரிந்திடாது
மூனான மூச்சோடு இருமலாகும்
மூர்க்கமா முயலகசேட்டு மம சாத்யம்.

412

வெறிசிலேட்பம்

முயல்போ லேவிழித்துமே முறுக்கு மீசை
முனையாக எழுந்திருந்து முறுக்கிப் பாயும்
பயல்போலப் பல்லையே மிகத்தி றக்கும்
பாடுமே சங்கீதம் பலகா லுந்தான்
கயல்போலக் கண்களெல்லாஞ் சிவந்து காணும்
காயிலைபோ லுடம்பெங்கு மிக்க றுக்கும்
உயல்போல உறுமியே வுதடு காயும்
உலைச்சலாம் வெறிசிலேட்ப உண்மை தானே.

413

விசாரசிலேட்பம்

வெறிச்சுமே மேனியெல்லா மோடி யெங்கும்
மிடுக்காகப் பாடுமே சங்கீதந் தான்
மறிச்சுமே மங்கையர்மேற் சிந்தை யாகும்
மனதொன்று மற்றொருகா ரியத்திற் செல்லா

வறிச்சுமே சஞ்சலங்கள் தனக்குட் பேசும்
சாப்பாட்டு மேல்நினைவு தறிகொ டாது
குறிச்சுமே மயக்கமாம் விகார மாகும்
கூறினோம் விகாரசேட் பத்தி னுண்மை. 414

சுரோணிதசிலேட்பம்

உண்மையாய் முழங்காலில் மிகக்கு டைந்து
உளைந்துமே முதுகோடு விலாப் பக்கங்கள்
கண்மையாய் முழங்கைகள் முழங்கைச் சந்து
கடினமாய் வீங்கியே குடைச்ச லுண்டாம்
தண்மையாய் சளிகட்டுந் தாக மாகும்
சாதகமாய் இருமியே மூச்சுண் டாகும்
திண்மையாய் நாவரண்டு தித்திப் பாகும்
செயமான சுரோணிதசி லேட்பந் தானே. 415

விரணசிலேட்பம்

தானென்ற தொண்டையினிற் புண்ணு மாகிச்
சளியோடு சீய்த்தானுங் கலந்து வீழும்
கானென்ற கழுத்தோடு பிடரி கன்னம்
கனமாக வீங்கியே காச்ச லுண்டாம்
கோனென்ற குளிரோடு எரிவுண் டாகும்
கொக்கென்றே இருமியே கூவ லுண்டாம்
வேனென்ற மிடறெல்லாம் நாவும் புண்போல்
மிகவிரண சிலேட்டுமத்தின் விபரந் தானே. 416

துர்க்கந்தசிலேட்பம்

விரணமாய்ச் சீயோடு ரத்த முண்டாம்
மிகவிருமி மீன்றண்ணீர் போல நாறும்
அரணமா யன்னத்தை இரங்கொட் டாது
அடிவயிறு வீங்கியே கால்கை வீங்கும்

தரணமாய்த் தாகமே மிகவுண் டாகும்
சரீரந்தான் மிகவற்றித் தழலாய் வேர்க்கும்
துரணமாயவிழ்தந்தான் பலித் திடாது
துர்க்கந்த சேட்டுமந் தான் சாத்ய மாமே. 417

நித்யசிலேட்பம்

கந்தமாங் காசமொடு இரும லாகிக்
கனக்கவே தம்பலாய்க் கருதி வற்றி
பந்தமா மேனியெங்கு மெரிவுண் டாகும்
பாண்டுவாய் மேனியெங்கு மிகவெ ளுத்து
உந்தமா யோக்காள மிகவுண் டாகும்
உயரமாய்க் கிறுகிறுத்துக் கீழே தள்ளும்
சத்தமாய்க் குரல்கம்மிப் பே சொட் டாது
தனிநித்ய சிலேட்டுமதாஷ் டீகந் தானே. 418

தாட்டியாய்ச் சிலேட்டும மதிருபத் தொன்று
தயாநிதியாஞ் சிவன்றானுந் தாய்க்குச் சொன்னார்
நாட்டியாய்த் தாயார்ந் திக்குச் சொல்ல
சக்தியுந்தான் றிருமூலர்க் குபதே சிக்க
தேட்டியாய்த் திருமூலர் சித்த ருக்குத்
திரமாக வுபதேசம் பண்ணச் சித்தர்
ஊட்டிபா யூகிமுநி யாம் எனக்கு
உபதேசம் செய்தபடி உரைத்திட் டேனே. 419

உரைத்திட்ட பஞ்சபூ தியத்தைச் சொன்னேன்
உண்னமயாய்த் தத்துவத்தி னுண்மை சொன்னேன்
நரைத்திட்ட நாடியிட நிதானஞ் சொன்னேன்
நலமான அஷ்டவிதப் பரிக்ஷை சொன்னேன்
துரைத்திட்ட சுரத்தோடு சன்னி சொன்னேன்
சுயமான குன்மமொடு சூலை சொன்னேன்
வரைத்திட்ட வாதமொடு பித்தஞ் சொன்னேன்
வகையான சேட்டுமத்தின் வளஞ் சொன்னேனே. 420

சேட்பரோகநிதானம் முற்றிற்று

10. பிரமியரோகநிதானம்

உரைத்திட்டேன் மேகமென்ற ரோகந் தானே
உத்தமனே இருபத் தொன் றாகுங் கண்டாய்
திரைத்திட்ட சிவனுந்தே விக்குச் சொன்னார்
தேவிதான் றன்வந்திரிக் குபதே சிக்க
தரைதிட்ட தன்வந்திரி அசுவனிதே வர்க்குச்
சாற்றிடவேய சுவினியாந் தேவர் தாமும்
பரைத்திட்ட அகஸ்தியருக் குப்போ திக்கப்
பாங்காகப் புலஸ்தியருக் கருள்செய் தாரே. 421

அருள்செய்தார் அகஸ்தியர்தான் புலஸ்தி யர்க்கு
அன்னவர்தாஞ் தேரையமா முனிக்கு ரைத்தார்
பொருள்செய்தார் பூலோகத் துள்ள பேர்க்கு
பேரான ஆயுருவே தத்தைத் தானே
தெருள்செய்து திரட்டியே தேரையர் தான்
தேசிகனாய் எனக்குரைக்கச் செகத்தோர்க் கெல்லாம்
மருள்செய்தி போகாமல் சாத்திரத்தின் படியே
மார்க்கமாம் பிரமேகம் வழுத்தக் கேளே. 422

வழுத்தவே பிரமியத்தின் பெயரைக் கேளாய்
வாதத்தின் பிரமியமாம் பித்தபி ரம்யம்
திழுத்தவே சேட்டுமத்தின் பிரமியந் தான்
சீரான வாதபித்த பிரம்ய மாகும்
நழுத்தவே பித்தசேட்பப் பிரமி யந்தான்
நலத்தொந்தப் பிரமிசமாங் கட்டிப் பிரம்யம்
தழுத்தவே சலப்பிரமியந் தந்திப் பிரம்யம்
தணித்ததோரி ரத்தப்பிர மியந்தா னென்றே. 423

தானென்ற சீப்பிரமிய மொழுக்குப் பிரம்யம்
தனிபரித்ரப் பிரமியமாங் கிருச்சப் பிரம்பம்
கானென்ற கரப்பனாம் பிரம்யத் தோடு
கல்விளையும் பிரிமியமாந் தாதுப் பிரம்யம்
நேனென்ற நீச்சபிரம்யம் வலிப்பிரம் யந்தான்
நேரான மதுப்பிரம்யம் விரணப்பி ரம்யம்
ஏனென்ற பிரமியந்தா னிருபத் தொண்ணு
இதினுடைய உற்பத்தி யியம்பக் கேளே 424

இயம்பவே எளியியோரை யிகழ்ச்சி சொல்லல்
ஏற்றமாம் பெரியோரை ஏவல் கொள்ளல்
புயம்பவே பொன்றனையே சோரஞ் செய்தல்
பொருளதனைய பகரித்தல் பெருமை சொல்லல்
நயம்பவே தம்பினர்க்கு நஷ்டஞ் செய்தல்
நாட்டமா யெந்நேரம் பெண்மோ கித்தல்
பயம்பத்வ பயந்துவந்த பேரைக் காட்டல்
பழித்தபேர பிரமியத்திற் படும்பா டாமே. 425

பாடாகப் பெண்போக மிகவி ரும்பிப்
பயின்றிட்டுப் பட்டினியே மிகவி ருத்தல்
தாடாகத் தான்பதத்திற் சூடு தாங்கல்
சரசமாய்க் காரத்தை மிகப்பொ சித்தல்
ஊடாக வுப்புரைப்புத் துவர்ப்பு மிஞ்சல்
உக்கிரமாம் பலபலவாம் விசேஷஞ் செய்யல்
காடான மனக்கிலே சங்கார மான
கைத்லொடு மிருக்கலிது காணுங் காணே. 426

காணவே முதுகெலும்பு கோர்வை சுற்றிக்
கனமான நாபியிலுங் கதித்துச் சுற்றி
ஆணவே அடிக்குய்ய மூலா தாரம்
அழன்றுமிக நோவாகிப் பற்றிக் கொள்ளும்

நாணவே நாடியோ டெலும்பிற் சூழ்ந்து
நலமான சுரோணிதத்தில் மிகக் கலந்து
ஆணவே யடிவயிறு இழுத்து நோவாம்
ஆகாத பிரமியத்தி னாண்மை தானே. 427

வாதப்பிரமியம்

ஆண்மையாய்க் கோசலம்போ னீரி றங்கும்
அருக்கியேய டித்தண்டில் மிகவ லிக்கும்
வேண்மையாய்க் கட்டியூாய் சீத்திர்ன் விழும்
விரையிலே கனத்துமே நோக்கா டுண்டாம்
பாண்மையா யடிவயிறு பக்கந் தன்னில்
பரபரத்து நோவாகிப் பார முண்டாம்
வாண்மையாய் வயிறதனி லிசுவுண் டாகும்
வற்றுமே சரீரந்தான் வாதப்பி ரம்யம். 428

பித்தபிரமியம்

சரீரந்தான் மிவற்றித் தியக்க முண்டாய்ச்
சந்தோடு கைகால்தரன் னோவு ண்டாகும்
சரீரந்தான் கறுத்துமே யெரியவுண் டாகும்
கனமான குதங்குய்யக் கடுப்புக் காணும்
வரீரந்தான் மஞ்சள்போற் சீயாய் வீழும்
மனந்தானும் ரூபியாய்க்கை காலோயும்
புரீரந்தான் லிங்கமது புளகி விம்மும்
போரான லிங்கமனோ பித்தப் பிரம்யம் 429

சேட்பபிரமியம்

லிங்கத்தில் நோயுண்டாய்க் கடுப்புக் காணும்
நீரிறங்கி வெள்ளையாய் சலமாய் வீழும்
பங்கத்தில் மேனியெல்லாம் பழுப்பாய்க் காணும்
பாண்டுவாய்க் கண்ணிகங் களிரத்த மில்லை

சுங்கத்திற் சுருக்கிட்டு நீரி றங்கும்
துரிசாக வடிக்கடிக் கருக்கல் காணும்
அங்கத்தில னல்மிகவே யழன்று மேனி
அசாத்தியசேட் டுமப்பிரமிய மறிந்து கொள்ளே

430

வாதபித்தபிரமியம்

அறியவே யாக்கையெல்லாம் வலியுண் டாகி
அடிலிங்கத் தடியிலே சலாகைவைத் தாற்போல்
மறியவே யடிக்கடிக்கு வருத்த மாகும்
மாப்போலச் சிறுநீரிற் கரைந்து வீழும்
வெரியவே பவுத்திரத்திற் கட்டி கட்டும்
மேன்மையாய் மலமதுதா னிறுகிக் கொள்ளும்
துரியவே சுருக்கென்று நீரி றங்கும்
துடிக்குமே வாதபித்தப் பிரம்யந் தானே.

431

பித்தசேட்மபிரமியம்

பித்தமாய் வாயெல்லா மிகவே கைத்துப்
பிரமியே யடிவயிறு இசிவு காணும்
சுத்தமாய் மஞ்சலித்து வெள்ளை வீழும்
சுருக்குத்தான் லிங்கத்தில் மிகுதி யாகும்
பத்தமாய்க் கணுக்கணுக்கு நோயுண் டாகும்
பகலுறக்க மிகுதியாம் பசியெ டாது
பித்தமாயு டம்பெல்லா மூதிக் காணும்
பித்தசேட்மப் பிரமியம்தான் பேசுங் காலே.

432

தொந்தப்பிரமியம்

பேசுமென்ற சரீரத்திற் றினவுண் டாகிப்
பேரான புழுக்கள்தா னூர்தல் போல
ஆசுமென்ற அடிவயிற்றிற் சுரப்பியுண் டாகும்
அடிக்கடிக்கு நீர்தானுங் கடுத்தி றங்கும்

கூசுமென்ற லிங்கத்திற் கசிபுண் டாகி
குறிகள்தான் பலவண்ண மாகக் காணும்
தூசுதா னடிதன்னிற் றோய்ந்தி ருக்கும்
தொந்தமாம் பிரமியத்தின் சூக்ஷந் தானே. 433

கட்டிப்பிரமியம்

தானாகச் சடமெங்குங் கட்டி யாகித்
தரிக்காமல் வலியுண்டாய்த் தளர்ச்சிக் கேடாய்த்
தோனாக லிங்கத்தில் தினவுண் டாகிச்
சொறியாகி விரையிரண்டிற் றீநீர் பாயு
ஊனாகக் கட்டியாய் லிங்கந் தன்னில்
உறுதியாய்ப் பருக்கைபோற் சீயாய் வீழும்
மானாக வுடம்பதுதான் வற்றிக் காணும்
மருவுகட்டிப் பிரமியத்தின் வண்மை தானெ. 434

சலப்பிரமியம்

வண்மையாய் வடிவமெல்லாம் வலியுண் டாதல்
வாய்கைத்து வாந்தி யொடு மயக்க மாதல்
தன்மையாய் லிங்கத்தில் சலங்க தித்தல்
தாக்கான வடிவயிற்றிற் பிடுங்க லுண்டாம்
வெண்மையாய் மலந்தனிலே சீதங் காணல்
வெளுப்பாகி நீரிறங்கிக் குற்ற லுண்டாம்
அண்மையா யறையாப்புக் கட்டி யுண்டாய்
அழுந்துமே சலப்பிரமிய வாண்மை தானே. 435

நாறுதந்தப்பிரிமியம்

ஆண்மையா யடிவயிறு புண்போ னொந்து
அடிதண்டு விருவிருத்து உச்சங் காணும்
தாண்மையாய் லிங்கத்தின் கின்ன ரத்தின்
தந்திபோல் நீருக்கு முன்னே வீழும்

மேண்மையாய் வெளுப்புத்தான் சீலை தன்னில்
விந்தையா யடிக்கடிக்கு நனைவு காணும்
நாண்மையாய் கால் கையு மெரிச்ச லாகும்
நாறுதந்தப் பிரமியத்தி னாட்டந் தானே.
436

இரத்தப்பிரமியம்

தந்திரமாய்த் தியங்கியே தலை சிருப்பும்
சரீரமெங்கும் பஞ்சுபோற் றளர்ச்சி கேடாம்
தந்திரமாய் வருந்தியே நீரி றங்கும்
பானற்ற முயலிரத்தம் போல வீழும்
சுந்தாம்போ லிருந்தமுகந்து தூசி யாகும்
சுருக்குத் தான்சிறுநீருஞ் சிகப்பாய் வீழும்
அந்தரமாய்ப் பசாசுபோ லலைச்ச லாகும்
அடிக்கடிக்கு நீரிறங்கு மிரத்தப் பிரம்யம்.
437

சீப்பிரமியம்

கடுத்துமே சீப்போல வெள்ளை காணும்
கட்டுமே அறையாப்பிற் பவுத்தி ரத்தில்
நடுத்துமே நாபியெல்லாம்
நற்சந்துக் கணுக்காலில் குடைச்ச லுண்டாம்
படுத்துமே யடிக்கடிக்கு நீரி றங்கும்
அதிகமாய் குளிரோடு சுரமு முண்டாம்
மடுத்துமே வருத்தமாய் மயக்க மாகும்
வடிவமெலா நொந்திடுஞ் சீப்பிரமிய மாமே.
438

ஒழுகுபிரமியம்

சீயாகித் தண்ணீராய் ரத்தம் போலச்
சிறுகியே ஒழுகுமெந்த நேர முந்தான்
காயாகிக் கட்டியாய் முளையுண் டாகிக்
கனமான விரணமாய்க் காய மெல்லாம்

ஆயாகி யங்கமெலாங் குடைச்ச லாகும்
அழன்றுமே யக்கினியா யண்டிக் கொள்ளும்
நோயாகிப் பாய்க்குள்ளே கிடையு மாகி
நுண்மையா யொழுகுமென்ற பிரமியந் தானே.
439

அரித்திரப்பிரமியம்

தானுமே மஞ்சள்போல் வெள்ளை காணும்
தழலாக வெதும்பியே நீரி றங்கும்
காணுமே கதிர்தனையே ஏற்றி னாற்போல்
கடுப்பாக விருவிருக்குங் கடுஷ்ண மாகும்
வானுமேவதியம்போற் றானிருந்து
மதிமுகங் கள் மஞ்சள்போற் றானி ருக்கும்
தேனுமே கசப்பாகி நாவு தானும்
திடுக்குண்டா மரித்திரமாம் பிரமியந் தானே.
440

கிரிச்சிரப்பிரமியம்

அரித்திரம்போ னீரிறங்கு மாண்மை குன்றும்
அருக்கியே மிகக்கடுத்து நீர்தான் வீழும்
நெரித்திரம்போ னீர்தனை யேநட்டிக் கொள்ளும்
நிரசியம்போற் சரீரத்தி லுறக்க மில்லை
தரித்திரம்போ லன்னத்தைப் பொசிக்கொ ட்டாது
சஞ்சலமாய் மனதுதான் றரிக்கொ ட்டாது
விரித்திரபோ லுடம்பெல்லா முளைச்ச லுண்டாம்
விகிமூத்ரக் கிரிச்சிர பிரம்யந் தானே.
441

கரப்பான்பிரமியம்

உளைஞ்சுமே வயிறுதான் சீதங் காணும்
ஊஷ்ணமாய்மூத் திரந்தா னுருக்கி வீழும்
அளைஞ்சுமே யங்கமெல்லாஞ் சொரியு ண்டாகும்
அழலாக வெதும்பலாய்க் கைகா லோயும்

புளைஞ்சுமே லிங்கத்திற் புண்போல் குற்றிப்
    பொடிப்பொடியாய் சுண்ணாம்புக் கற்போல் வீழும்
களைஞ்சுமே நீரோடு மலமுஞ் சிக்கும்
    கசியுமே கரப்பானாம் பிரம்யந் தானே.

442

கற்பிரமியம்

கசியுமே லிங்கத்திற் கள்ளைப் போலக்
    கற்றாழை நாற்றந்தான் உடம்பில் வீசும்
தசியுமே சாந்தரைத்துப் படுத்த கற்போல்
    தயங்கியே நீர்ச்சிக்கி வயிறு விம்மும்
விசியுமே விருவிருப்பாய் வயிறெல் லாந்தான்
    மீறான நாபிதொட்டுப் பீச மாகும்
பசியுமேயில்லாமற் பாரமாகும்
    பளிங்குநிற மாகுங்கற் பிரம்யந் தானே.

443

தூரதுபிரமியம்

கல்லான சிலந்தியதி னூலைப் போலக்
    கனமான லிங்கத்திற் கலந்து வீழும்
வல்லான வண்மையோ டுதிரங் காணும்
    வலியெடுக் குமடித்தண்டு விம்மும் போது
சல்லான கல்மிஷந்தா னடியிற் றங்கும்
    சமத்தான விலாப்பக்கந் தனிலே குற்றும்
துல்லான மூத்திரந்தான் றுளியாய் வீழுந்
    தூதுபிர மியத்தினிடச் சுருக்குத் தானே.

444

நீச்சப்பிரமியம்

சுருக்காகக் கள்ளுபோ னீரிரங் குஞ்
    சூக்ஷமாய் வெள்ளையொடு சீயுங் காணும்
மருக்காக லிங்கமுச்ச மாகும் போது
    வருத்தமாய டித்தண்டு குடத் தோடொக்க

விருக்காக விருவிருப்பாய் வலியுண்டாகும்
விசையான நாம்பெல்லாஞ் சுருக்க மாகும்
குருக்காக வடிவயிறு தனிலே குற்றும்
குளிருமே நீசபிரி யத்தின் கூறே.
445

வலிப்பிரமியம்

கூறாக வடிநரம்பு குதங்குய் யந்தான்
குற்றியே யடுக்கடிக்கு வலியுண் டாகும்
வாறாகவடிவெல்லாம் மிகவ ழற்றி
மயக்கமாய் நாவோடு கைத்த லாகும்
பாறாகப் புறங்காலிற் றிமிருண் டாகும்
பருத்துமே லிங்கத்தில் வெள்ளை வீழும்
தூறாகத் துன்மாங்சஞ் கருண்டு காணும்
தூசிமிகப் படியும்வலிப் பிரம்யந் தானே.
446

மதுப்பிரமியம்

வலியாகி லிங்கமெல்லாம் வருத்த மாகி
வண்டலாய்த் தேன்போல நீரி றங்கும்
எலியாகி யெறும்பரிக்குஞ் சிறுநீர் தன்னில்
இறைச்சிபோ லுள்ளுக்குள் விரண மாகும்
நலியாகி நாற்றமாமு டம்பெங்குந் தான்
நாவிலே உணர்ச்சியிலா துரிசை போகும்
மலியாகி நாவரண்டு மயக்க மாகும்
வருத்தமா மதுபிரம்ய மார்க்க மாமே.
447

விரணப்பிரமியம்

மார்க்கமா யுடம்பெங்கும் விரண மாகி
மகவருத்த மாகியே மயக்க மாகி
தேர்க்கமாய் லிங்கமது பொழுத்து வீங்கிச்
சீயோடி ரத்தந்தான் மிகவே காணும்

கார்க்கமாய் கறடோடு கணுக்க ளெல்லாங்
கட்டியே நோவாகிக் கடுப்பு முண்டாம்
வேர்க்கமாய் மேனியெல்லாம் வெதும்ப லாகும்
விருவிருக்கும் விரணபிரமி யந்தா னாமே.
448

தானான பிரமியந்தா னிருபத் தொன்றும்
சதாசிவன் றான்றாய்தனக்கு அருளிச் செய்ய
பானான தாய்தானு நந்திக்குச் சொல்லப்
பராபர மாநந்திதன் வந்திரிக்குச் சொல்ல
ஆனான தன்வந்திரி அசுவினிதே வர்க்கு
அருள்செய்ய அசுவனியும் அகஸ்தியர்க்குச் சொல்லக்
கோனா அகஸ்தியரும் புலஸ்தியர்க்குச் சொல்ல
குருவான புலஸ்தியருங் குறித்திட் டாரே.
449

குறித்திட்டார் தேரையமா முனிவ னுக்குக்
கூறான தேரையா மாமுனிவர் தானும்
உறைத்திட்ட யூகியென்ற எனக்குச் சொன்னார்
யூகியென்ற முனிநானே உளமு வந்து
மறைத்திட்ட மருத்துவத்தின் உண்மை கண்டு
மறைப்பான பொருளெல்லா மாய்ந்து பாத்து
தெறித்திட்டு திரட்டி யெல்லா மொன்றாய்ச் சேர்த்து
சிவன்சொன்ன படிசொன்னார் தெளிவாய்த் தானே 450

பிரமியரோகநிதானம் முற்றிற்று

11. மேகரோகநிதானம்

தெளிவாகத் தேவிதான் சிவனை நோக்கித்
தெண்டனிட்டு மருத்துவ தத்தை முன்னே
அளிவாக அனுக்கிரகம் பண்ண வல்லோ
ஆத்மகோடி களிடத்திற் கிருபை வைத்து
நளிவாகத் தேவருக்குந் தேவ ரான
நடேசரே சகலபேரிடத்திற் றானும்
எளிவாக இதயக மலத்திற் றானே
இருந்தவரேசலத்தைநீர் சொல்லு மென்றாள் 451

சொல்லுமென்று கேட்டவுடன் சிவனு மப்போ
தேவியைத்தான் முகம்பார்த்து வாராய் தேவி
அல்லுமென்ற மேகமது இரண்டு பத்து
அதிதுலப மாபமாயிருக்கும் லோகத் துள்ளே
உல்லுமென்ற உன்னுடைய சிநேகந் தன்னால்
உரைக்கரிது உரைக்கின்றே னுற்றுக் கேளாய்
மல்லுமென்ற மாதேவி பாக்கில் லாமல்
மகிழ்ந்துநீ கேளுமென்று வசனித் தாரே. 452

வசனித்த மேகமது இரண்டு பத்து
வாதத்திற் பிறந்தசலம் நாலே யாகும்
பிசனித்த பித்தத்தி லுற்ப வித்த
பேரான சலந்தானு மாறு மாகும்
தெசனித்த சேட்டுமத்தில் உற்ப வித்த
சீரான சலந்தானும் பத்தே யாகும்
இசனித்த இதினுடைய குணாகு ணங்கள்
சுழிவான உற்பத்தி யியம்பக் கேளே. 453

இயம்பவே ஆறுகுனம் பின்னஞ் செய்தல்
ஏற்றமாய்ப் பிராமணஸ்திரீ சங்கம் பண்ணல்
பயம்பவே பாலர்களுக் கொளித்துத் தின்னல்
பழமைசலம் போறவழி தனைத்த டுத்தல்

அயம்பவே ஆலயத்திற் சலம்விட் டோர்க்கும்
ஆதியாம் வேதத்தை த்தூஷிற் றோர்க்கும்
துயம்பவே சூரியனை வணங்கா தார்க்கும்
சுருக்கா மேகம்வந் துற்ப விக்குந் தானே. 454

உற்பவிக்கும் பால்நெய்யா லிறைச்சி கள்ளால்
உரிசையாய் மீன்றன்னால் வருவி ருத்த
மற்பவிக்கும் பதாரத்தத் தால்மதுர வஸ்தால்
மந்தங்கள் தனிற்பொசித்தல் வேகாப் பண்டம்
குற்பவிக்குங் குளிந்தவன்ன மங்கை கோஷ்டி
குறித்தநித் திரைதவிர்த லக்கினி மந்தம்
தற்பவிக்குஞ் சரீரந்தான் மிகப்ப ருக்கல்
சஞ்சலந்தான் பயன்படுதல் தரிக்கும் நோயே. 455

வாதசலம்

தரித்திட்ட வாதத்தின் சலந்தா னாலு
தனியான நாலுக்கும் பேரே தென்னில்
அரித்திட்ட ஆச்சியகெந்தி மேகத் தோடு
அதன்பிறகு சுற்றமா மேக மொன்று
பிரித்திட்ட பிரமிய மேக மொன்று
பேரான மாங்கரவி மேக மொன்று
குரித்திட்ட இதுவாத சலந்தா னாலு
குணாகுணத் தினுட்பமெல்லாங் குறிப்பாய்க் கேளே. 456

ஆச்சியமேகம்

குறிப்பாக ஆச்சியசல மிறங்கும் போது
குணமான நெய்போலத் தானி றங்கும்
நெறிப்பாகச் சீலைதோய் த்துக்கொ ளுத்தல்
நேரான விளக்குப்போ லெரியும் பாரு
தெறிப்பாகத் தின்மொன்றிற் குறுணி தானும்
சீக்கிரமா யிரங்கிவிடுந் தேகம் வாடும்
எறிப்பார்க்கும் மேகங்கண் டேழு நாட்குள்
எய்துவா ரெமபுரத்தி லெய்து வாரே. 457

சுத்தமேகம்

எய்துவார் சுத்தமா மேகந் தானும்
இறங்குமே கோசலம்போல் வண்ண மாக
கைதுவார் நாற்றமுமப் படியே யாகும்
நானாழி தானிறங்கு மொருவே ளைக்குக்
கைதுவார் காச்சினால் விளக்குத் தானும்
கடுந்துலக்க மாயெரியுங் களைமெத் தாகும்
பைதுவார் பதினைந்து நாளிற் கொல்லு
பாலன்போ லிருந்தமுகங் கிழமுக மாமே. 458

பிராமியமேகம்

கிழமாகப் பிரமியந்தா னிறங்கும் போது
கேலலமாம் கொழுப்பான மாம்ச நாற்றம்
பழமாக வேளைக்கு நானாழி தானும்
பருத்துதான் இறங்குமே யடிக் கடிக்கு
அழமாக அந்தநீர் காச்சி னக்கால்
அதின்வாடை தேன்போலத் தானி ருக்கும்
இழமாக இப்படித்தான் கண்ட மேகம்
எமபுரத்துக் கறுமாதத்தி னிற்றா னேகும். 459

மாங்சரவிமேகம்

ஏகுமே மாங்சரவி இறங்கும் போது
இளவாட்டின் கொழுப்புபோற் றானி றங்கும்
ஆகுமே காக்கினா லாட்டி னெய்போல்
அடவாக வேளைக்குக்கு றுணி காணும்
காகுமே கருப்பஞ்சார் போலா நாறும்
கனத்துத்தான் மூன்றுநா ளெட்டு நாளில்
சாகுமே யைந்தாமா தத்திற் றானும்
சதுர்விதமாம் வாதசலந் தானு மாச்சே. 460

வாதம் நாலுக்கும் சமுதாயகுணம்

ஆச்சென்ற நாலுக்குங் குணத்தைக் கேளாய்
அழகான கைகால்கண் ணுடல மூற்றும்
நாச்சென்ற நாவரளும் பல்லு நாக்கு
நடுத்தொண்டை கறுப்பேறு முதலெட் டாந்தான்

பேச்சென்ற பிலச்சியமாம் கண்மேல் நோக்கும்
பெருகவன்னந் தண்ணீரு மிகவே வாங்கும்
தாச்சென்ற சரீரந்தான் கத்தி வெட்டும்
தான்போலக் கடுத்துமே தழலுண் டாமே. 461

தழலாக வெதும்பியே மயக்க மாகும்
சஞ்சலமா யிடைகொடா தேபி ரட்டும்
அழலாக வடிக்கடிக்கு வாயு தானும்
ஆகாத நாற்றமாய்ப் பிறியு மெத்த
குழலாக நாடியே குடில மாகக்
குணபேத மாய்நடக்கும் வேக மெத்த
வழலாக வாதமே கந்த னக்கு
வகுத்தமுறை பாடுதா னாலு மாச்சே. 462

பித்தசலம் - சா

முறையான பித்தசல மாறு மாகும்
முதிர்ந்தஅப் பியமென்றும் பிரமிய மென்றும்
தறையான சாம்பீர்ணம தும்ப மென்றும்
சாத்திகமே யாறுவிதந் தன்னோ டாறு
மறையான விந்தாறு மேகந் தன்னை
மகதேவர் சொல்லிடவே தேவி கேட்கத்
துறையான குணாகுணத்தை விரித்துச் சொல்ல
சுற்றமாயப் பியத்தின் சுருபங் கேளே. 463

அப்பியமேகம்

சுருவமா யப்பியந்தா னிறங்கும் போது
துடியானை மதம்போலத் தானி றங்கும்
வெருவமாய் வேளைக்கு நானாழி தானும்
விரிசாகத் தானிறங்குங் காச்சி னக்கால்
உருவமாயு வர்மண்போற் படியும் பாரு
உக்ரமாக் கண்டவெட்டா மாதந் தனனில்
இருவமா யெமபுரத்துக் கெய்து வாரகள்
ஏற்றமா மப்பியத்தின் மேகந் தானே 464

அபிரம்மியமேகம்

தானென்ற கற்றாழஞ் சாறு போலும்
தன்னாற்றம் போலவே மிகவே நாறும்
கானென்ற காச்சினாற் கடித நாற்றம்
கடிகைக் குளிருநாழி தர றங்கும்
ஏனென்ற விக்குணமா மேகந் தானும்
இறங்கினதோர் மூன்றாகு மாண்டு தன்னில்
பானென்ற பரமபத மெய்து மென்று
பாமனுரை அபிரம்பியப் பண்பு தானே.
465

சாம்பீர்ணமேகம்

பண்பாகச் சுண்ணாம்பு அழலே நாறும்
படியுமே யடிதனிலே நீறு போல
நண்பாக வேளைக்கு நானாழி தானும்
நாறியே யிறங்குமிக வெரும் பரிக்கும்
கண்பார்க் கக்காச்சினாற் சுண்ண நீரும்
கனமாக படியுமே யடியிற்றா னும்
தண்பாகக் கண்டசல மிரண்டா மாண்டிற்
சாகுவரே சாம்பிர்ணத் தண்மை தானே.
466

மதுமியமேகம்

தன்மையாய்ச் சலந்தானும் பசுப்பு மஞ்சள்
தானிறங்கு பீசமுங்கோ சமுங்க டுக்கும்
அண்மையா யடிக்கடிக்கு நீரிறங்கும்
அடிக்கடிக்கு அரைநாழி தனிலே காணும்
வெண்மையா யடியதனில் தான் பிடிக்கும்
மிக்கான சடம்வெளுத்து மேனி கண்ணும்
பன்மைபாய்ப் பஞ்சவாண் டதனிற் கொல்லும்
பகர்கின்ற மதுமியத்தின் பாங்கு தானே.
467

சாத்தியமேகம்

பாங்கான பளிங்குநிறம் போலி றங்கும்
பரிபீச கோசமுமே கடுத்துக் கூசும்
தாங்கான் தாழையொடு விழுது சாறு
தனைப்போலத் தானி றங்கும் சாச்சி னக்கால்
தேங்கான சீப்போல மிகவே நாறும்
சீக்கிரமா வேளைக்கோர் படிதா னாகும்
ஏங்கான இப்படித்தான் கண்ட மேகம்
எய்திடுமே ஐந்தாண்டில் அசாத்தியந் தானே. 468

ஆவிருதமேகம்

சாத்தியமாய் முசல்ரத்தம் போல வீழும்
சாதகமா யிருநாழி தானி றங்கும்
காத்தியமாய்க் காசினாற் புலாலே நாறும்
கனமான பீசகோ சங்க டுக்கும்
ஊத்தியமா யிப்படிதான் கண்ட மேகம்
ஒன்பதா மாதத்தி லொடுகுஞ் சீவன்
ஆத்தியமா மாவிருத மேக மென்றே
அவனியுள்ளோர் தங்களுக் கறியச் சொல்ல 469

அறியவே பித்தசல மாறுக் குந்தான்
அங்கமதிற் செய்கின்ற குணத்தைக் கேளாய்
தறியவே சரீரம்வற்றி யெரிவுண் டாகும்
சடத்திலுந்தா னீரிலுந்தான் கவிச்சுண் டாகும்
தெரியவே சீப்போலுங்கற் றாழை போலும்
சேல்போலுந் தேன்போலு நாற்ற முண்டாம்
வெறியவே பீசத்திற்கோ சத்திற் குதத்தில்
மிகுமீரல் நாபியிலும் வேக்கா டாமே 470

வேக்காடாய் விரணமுண்டாய் வாய்தான் நாறும்
விக்கலொடு அருசியாய்ச் சுரமுண் டாகும்
தீக்காடாய்த் தேகந்தான் கிடைகொட் டாது
தியக்கமொடு மூர்ச்சையுண்டா மயக்க மாகும்

சாக்காடாய் நாவறளுங் தண்ணீர் தாகம்
சத்தியொடு சரீரமெல்லாந் தளர்ச்சி யாகும்
தாக்காடா மலசஞ்சலந்தான் மிகவுண் டாகும்
சமகுணந்தான் பித்தசல மாறு மாச்சே. 471

வசாமேகம்

ஆறான சிலேட்பசலம் பத்து தன்னை
அரன்சொல்ல ஆத்தாள்தான் கேட்கும் போது
வாறான வசாமேகம் உத்ச மேகம்
மச்சியாமே கத்தோடா கீத மேகம்
தூறான சுராரிசுக்ல முத்த மேகம்
சுற்றமாம்பி னானியொட லவண மேகம்
கேறான தெயித்தியமா மேக மென்று
செப்பினார் சிலேட்பத்தின் செலத்துத் தானே. 472

தாதென்ற வசாமேக மிறங்கும் போது
சலத்தின்வேல் நிணம்போடி மாடை யுண்டாம்
வேனென்ற வேளைக்குக்கு றுணி தானும்
விடுபட்டுத் தானிறங்கும் காச்சி னக்கால்
நேனென்ற நிணமுறுக்கு போல நாறும்
நிலையாக இப்படிதா னிறங்கு மேகம்
ஏனென்ற ஏழாண்டு தன்னிற் றானும்
எமபுரத்துக் கேகுமென்றே இயம்பி டாயே. 473

உத்தமமேகம்

இயம்பவே நல்லதண்ணீர் போலி றகும்
எடுத்ததனைக் காச்சினால் நல்ல தண்ணீர்
நயம்பவே நாற்றமது நல்ல தண்ணீர்
நல்வேளை தனக்குபொரு குறுணி யாகும்
அயம்பவே அப்படி தான்கண்ட மேகம்
ஐயிரண்டு வருஷத்தி லறியக் கேளாய்
மயம்பவே மறலியிட வூர்புக் காகும்
மகத்தான வுத்மமா மேகந் தானே. 474

மச்சமேகம்

உத்தமமா யெலும்புக்குட் சதையைப் போல
உருகியே தானிறங்குங் காய்ச்கி னக்கால்
நித்தமமாய் நிணநாற்ற மாயி ருக்கும்
நிசமாக வேளைமுந் நாழி யாகும்
பத்தமமா யப்படிதான் கண்ட மேகம்
பரமசிவ னடிகிணியாப் பரவி யாகும்
இத்தமமா யேமனிட ஊர்ப்புக் காகும்
இசைந்த வைந்து வருஷத்தில்மச்ச மேகம்

475

ஆகிகமேகம்

மேகந்தா னிளநீர்போற் றானி ருக்கும்
மிகக்காச்சி லிளநீர்போற் றானி ருக்கும்
வாகந்தான் வாடையது இளநீர் வீசும்
வகையான வேளைக்கு நாழி யாகும்
தாகந்தான் மிகவுண்டா யுடம்பி ளைக்கும்
சஞ்சலந்தான் மிகவுண்டாங் கண்ட ஏழு
பாகந்தான் வருஷத்திற் சாவு மாகும்
பாங்கான ஆகிகமே கத்தின் பண்பே.

476

சுராரிமேகம்

பண்பாக நுரையோடே வெளுப்பு போலப்
பனங்கள்ளு போலவே தானி றங்கும்
கண்பாக வேளைக்கு நாழி யாகும்
காச்சினாற் கள்ளுதான் மிகவே வீசும்
மண்பாக மாப்போல மணந்தானு ண்டாம்
மயக்கமா மிப்படித்தான் கண்ட மேகம்
எண்பாக ஏழுஆண் டுதனிற் கொல்லும்
ஏற்றமாஞ் சுராரியென்ற மேகந் தானே.

477

சுக்கிலமேகம்

என்றதோர் மேகந்தா னிறங்கும் போது
ஏற்றமாஞ் சுக்கிலத் தினிறமே போலும்
தன்றதோர் தாளியிடச் சாறு போலும்
தரித்துமே மெழுகூர்ந்து சிறுகி வீழும்
கன்றதோரி தைக்காச்சிற் கட்டி போலக்
கனமான ஈரல்போற் றோஞ்சிப் போகும்
முன்றதோர் கண்டசலம் மூன்றா மாண்டில
முயற்சியாய்க் கொளுஞ் சுக்லமே கந்தானே.
478

உதகமேகம்

மேகமாய்க் கழுநீர்போற் சிக்கிச் சிக்கி
மிகுதியாய்த் தானிறங்குங் காச்சி னக்கால்
சாகமாய்ச் சங்குசுண் ணாம்பு போலத்
தாழவே மண்டிமிகப் படியும் பாரு
பாகமா யிப்படித்தான் கண்ட மேகம்
பாங்குமா யோராண்டு தனிலே கொல்லும்
வேகமாய் மிகநாறுஞ் சரீரந் தானும்
மிகஉதக மேகமென்றே விளம்பு வாயே.
479

பித்தாதிமேகம்

விளம்பவே தேன்போல மிகவி றங்கும்
மிக்கான தேன்வர்த்த நாற்ற மாகும்
அளம்பவே மெழுகுபோ லடியி னிற்கும்
அதிகமா யீயெறும்பு மிகவே மொய்க்கும்
குளம்பவே வேளைக்குக் குறணி யாகும்
குறிகண்ட வைந்துமா தத்திற் கொல்லும்
தளம்பவே சரீரத்தில் மதுத்தா னாறும்
தனித்ததோர் பிநாநியென்ற மேகந் தானே.
480

லவணமேகம்

கனித்தோர்மே கந்தானி றங்கும் போது
தழலான சுண்ணாம்பு கார்நீர் போல
மினித்ததோர் மிகுதியாய்த் தானி றங்கும்
வேளைக்கு நானாழி தானு மாகும்
கனித்ததைக் காச்சினாற் படியு முப்புக்
கண்டசலம் பதினைந்து வருஷத் திறான்
வனித்ததோர் மறலியிட வூர்புக் காகும்
மகலவண மேகத்தின் வண்மை தானே, 481

தயித்தியமேகம்

வண்மையாய் மேகந்தா னிறங்கும் போது
மகாஇறைச்சி கழுவினதோர் தண்ணீர் போலாம்
கண்மையாய்க் காச்சினாற் கவிச்ச டிக்கும்
கனமான நீர்த்தாரை முறுக்கி வீழும்
வெண்மையாய் வேளைக்குமுந் நாழி யாகும்
மிக்கான குறிகண்ட மூன்றா மாண்டு
தண்மையா யேமனிடப்பு ரத்துக் கேகும்
சயித்தியமே கந்தானுந் தசமு மாமே. 482

சேட்பஜலத்தின்குணம்

தசமான பத்துக்குங் குணத்தைக் கேளாய்
சரீரந்தான் பருத்துமே வெளுப்புண் டாகும்
அசமான தினவுண்டா மடிக்க டிக்கு
அன்னமுமே தண்ணீரு மிகவே தேடும்
கசமான இருமலுடன் கோழை யுண்டாம்
கனஏரிவா யாயாச முழலை யாகும்
குசமான குணங்களெல்லாஞ் சேட்பந் தன்னில்
கொடியசலக் குணமென்றே கூறி னாரே. 483

மேகம்இருபதுக்கும் அவத்தை

கூறான மேகமது இருப துக்கும்
குணந்தன்னைச் சிவன்சொல்ல தேவி கேட்க
தாறான தாகமொடு சோக மேகந்
தரியாமல் நீரிழித விருமல் மூச்சு
ஆறான அருசிசத்தி சித்தப் ரம்மை
அடிகடிக்குத் தண்ணீர்தான் ஆங்கே கேட்கல்
ஈறான இடுப்புக்குள் கடுப்பு காணல்
எலும்புழற்ற லழற்றலோ டெரிவுண் டாமே 484

எரிவோடு சரீரமெல்லா மறைபட் டாற்போல்
எழிலும்பு நோதல்நித் திரையில் லாமை
வரிவோடு மாய்விமெத் தவும்ப றித்தல்
மனதுசஞ் சலப்படுதல் காற்று வேண்டல்
மெரிவோடு மேல்மூச்சு மிகவுண் டாதல்
விக்கலொடு மயக்கந்தான் மெத்தக் காணல்
தெரிவோடு தேகமெங்கும் வெளுருண் டாதல்
தேகமெத்த வாலோபப் படுதல்காணே. 485

காணவே முதலவத்தை சரீரந் தானும்
கனமாகப் பருத்திறுகு நீர்த்து வாரம்
வேணவே வெண்டாக்கி யகலம் பண்ணும்
மிக்கவிரண் டாமவத்தை விளம்பக் கேளாய்
மூணவே மூத்ரப்தீ டையுமாச் சுக்ல
முகமமுகித் தேஜசுதான் மிகவே குன்றும்
நாணவே மூன்றாகு மவத்தைக் குந்தான்
நாவரளும் வாயுவது மீறுந் தானே. 486

தானான நாலவத்தை யங்க தாகம்
சன்னியது பாதமுண்டா மைந்த வத்தை
தேனான நீர்பெருகுந் தாது நஷ்டம்
நிலையாறா மவத்தையுடற் கிடைகொள் ளாது

மூனான மூர்ச்சைவரு மேழ வத்தை
மிக்கவரோ சிகஞ்சுவாசந் தேக சாட்யம்
ஏனான எட்டாவ தவத்தை தானே
எழுகிரந்தி பிளவையுந்தான் மிகவுண் டாமே. 487

சாத்திய அசாத்தியம்

உண்டாகு மொன்பதா மவத்தை கேளாய்
ஒழுக்கான ஆசாரங் கிருமி யுண்டாம்
மண்டான பத்தாந்தா னவத்தை கேளாய்
பாரமாம் க்ஷயங்கண்டு பரத்துக் கேகும்
வெண்டாகு மேகந்தா னிருப துக்கும்
விளங்கியதோர் தசவவத்தை விபரஞ் சொன்னோம்
அண்டாகுஞ் சாத்யவ சாத்யமி ரண்டும்
அறிந்துகொண்டு அடவாக வவிழ்தஞ் செய்யே. 488

செய்யவே வச்சிரமாந் தண்ட மான
செயமான முதுகுதண்டைப் பற்றி நிற்கும்
பெய்யவே பெருநரம்பில் மேகந் தானும்
பிறக்குமென்றே தானறிந்து வாதந் தன்னால்
பிய்யவே பிறந்தசலம் நால சாத்யம்
பித்தத்திற் பிறந்தசல மாறும் யாப்யம்
பையவே சேட்டுமத்திற் பிறந்தசலம் பத்தும்
பரமனுரைத் தார்சாத்யம் பராப ரிக்கே. 489

மேகம் இருபதுக்கும்பத்தியம்

பசுமேக மிருபதுக்கு பத்தி யந்தான்
பாங்காக வுரைத்திடவே பசுவின் வெண்ணெய்
பொரிவாக எருமைமோர் பொன்னாங் காணி
பேர்பெற்ற சிறுகீரை முசுட்டை யாகும்
அரிவாக அவரையொடு புடல்மு ருங்கை
அதிசரமாங் கண்டுசருக் கரையு மாகும்
மரிவாக மாதளையாம் பேரீத் தாகும்
மகாவிளம் பழமுந்திரிப் பழமு மாமே. 490

ஆமேபே யன்வாழைப் பழமுங் கச்சல்
அத்தியிடப் பிஞ்சுசிறு பயறுபழஞ் சோறு
பாமேபழஞ் சோற்றுநீர் வெந்தயஞ்சீ ரகமாம்
பாகல்பீர்க் கங்காய்கரு வேப்பிலைகொத் தமலி
நேமேநெற் பொறிஎள்ளு முசுமுசுக்கை யாகும்
நேரான நல்லெண்ணெய் புண்ணாக் குளுந்து
தாமேக மிருபதுக்கும் பத்ய வர்க்கம்
சாற்றினார் சிவன்றானுந் தாய்க்குத் தானே. 491

தாயான பராபரிக்குச் சிவன்றான் சொல்லத்
தாய்கேட்டு நந்திதனக் கருளாற் சொல்ல
தூயான நந்திதன் வந்திரிக்குச் சொல்ல
சுற்றமாய்த்தன் வந்திரிஅசு வினிக்குச் சொல்ல
ஆயான வசுவினிஅகத் தியர்க்குச் சொல்ல
அகத்தியரும் புலத்தியருக் குபதே சிக்க
பூயான புலத்தியரும் தேரையமா முனிக்குப்
புகன்றிட்டார் எந்தனுக்குத் தேரையமுனி தானே. 492

தானான யான்தானே மனமு வந்து
சகலசனத் துபசாரச் சாங்க மாகக்
கோனான சிவன்சொன்ன ஆதி நூலின்
குறிப்பெல்லாம் பார்த்துணர்ந்து வடமொழியைத் திரட்டி
தேனான சாத்திரமாய்த் தமிழி னாலே
தெளிவாக எல்லோரு மறிய வென்று
ஆனான ஆயுருவே தத்தை யெல்லாம்
அடக்கியே சுருக்கினேன் மேக முற்றே. 493

மேகரோகநிதானம் முற்றிற்று

12. குட்டரோகநிதானம்

முத்தாகுங் குஷ்டந்தான் பதினெட் டுக்கும்
முனியான யூகிநான் சொல்லக் கேளாய்
புத்தாகும் புண்டரிகக் குஷ்டத் தோடு
பொருகின்ற விற்போடகக் குஷ்ட மாகும்
பத்தாகும் பாமகுஷ்டம் கேச்ர குஷ்டம்
பரிவான கரணகுஷ்டம் சிகும குஷ்டம்
கித்தாகுங் கிருஷ்ணகுஷ்டம் அதுவும்பர் குஷ்டம்
கெடியான மண்டலகுஷ் டமுமா மென்னே.

494

குஷ்டமாம் பர்ப்பரிச குஷ்ட மோடு
குடிலமாம் விகர்ச்சீகக் குஷ்ட மாகும்
வட்டமாம் வையாதி குஷ்ட மோடு
மருவலாங்கி டீபகுஷ்டஞ் சர்ம வேவம்
திட்டமாந் தேதிருக் குஷ்ட மோடு
சித்துமா குஷ்டஞ்சா காரு குஷ்டம்
துட்டமாஞ் சுவேதாஷ்டந் தன்னோ டொக்கச்
சுயம்பான பதினெட்டு குஷ்ட மாச்சே.

495

ஆச்சென்று பதினெட்டு குஷ்டந் தானும்
அவரவர்கள் செய்கின்ற வதர்மத் தாலாம்
தேச்சென்ற சிவாலயத்தி லுச்சிஷ் டங்கள்
செய்தவர்கள் சிவநிந்தை பண்ணி னோர்கள்
மூச்சென்ற பெரியோரைத் தூஷித் தோர்கள்
மூஸ்கரமா யடைக்கலத்தை யெடுக்கின் றோர்கள்
கூச்சென்ற தினையளவுங் குறைந்த கூலி
கொடுக்கின்றோர் குஷ்டத்திற் கூடு வாரே.

496

புண்டரீகக்குஷ்டம்

கூடுமே தாமரையின் பூவி தழ்ப்போல்
குவிந்துமே கறுப்போடு வெளுப்பு மாகும்
தேடுமே சிவப்புபல வர்ண மாகும்
தினவுமிக வாராது சொனையிற் பன்னீர்
வாடுமே அய்யினுற மத்தி யாகி
வருத்தமிக வுண்டாகி நோவு மாகும்
போடுமே சரீரங்கள் முகங்கள் காது
புண்டரிகக் குஷ்டத்தின் புதுமை தானே.

497

விற்போடகக்குஷ்டம்

புதுமையாய்ச் சரீரமெங்குந் தினவுண் டாகும்
பொருவெடியாய்த் திக்கெனத்தீக் கொழுந்து போல
மெதுமையாய் விட்டெரியும் நல்ல பாம்பின்
விடப்படம்போ லேதடித்து வெளுப்பு மாகும்
கதுமையாய் மிகச்சொரியுஞ் சிவப்பு மாகும்
தூக்கமொடு சஞ்சலமும் மிகவுண் டாகும்
கதுமையாய்த் தோலெல்லாந் தடிப்புண் டாகும்
கனத்தவிற்போ டகமான குஷ்டந் தானே.

498

பரமகுஷ்டம்

தானான தினவுண்டாய் வெளுத்தி ருக்கும்
தங்கியே சீப்பாயுந் தேகங் குன்றும்
கானான சரீரமெல்லா வெரிவுண் டாகும்
கனமான தாமரையின் குடைபோ லுண்டாம்
பானான சொறியோடு தினவுண் டாகும்
பாம்பினிடத் தோல்போல வுருஞ்சி வீங்கும்
கானான கால்கையுங் குறைந்து காணும்
கனமான பரமகுஷ்ட மாகுந் தானே.

499

கேச்சர்மகுஷ்டம்

தானாகச் சடந்தானு மிகக்க றுப்பாம்
சட மெங்குந் தோலுரியுஞ் சிவப்பு மாகும்
வேனான வெறவெறனத் தானி ழுக்கும்
வெடிக்குமே சொரிச்சலாய்தினவுண் டாகும்
கானாகச் சர்மகுஷ்ட மிதிலுண் டாகும்
கடினமாய்க் கால்விரல்கள் கனப்புண் டாகும்
கூனாகத் தேகமெங்கும் வலியெ டுக்கும்
குறியான கேச்சர்ம குஷ்டந் தானே. 500

கரணகுஷ்டம்

சர்மந்தான் மிகவெடிக்கும் போரிற் றானும்
சடமெல்லாம் வேதனைபச் சென்றி ருக்கும்
தெர்மந்தான் றிரிதோஷ குணமுண் டாகும்
தேகமெங்கும் பாரிக்குந் திமிருண் டாகும்
மர்மந்தான் காக்கணம்பூ நிறம தாகும்
கண்டிப்பு வீக்கமாய்த் தானி ருக்கும்
வர்மந்தான் மனக்கிலேச மிகவுண் டாகும்
மாகரண குஷ்டத்தின் மார்க்கந் தானே. 501

சிகுரகுஷ்டம்

மார்க்கந்தான் பசுமையாய் வெளுப்புண் டாகும்
மாசிவப்புக் கறுப்புமாய்த் தினவுண் டாகும்
தார்க்கமாய்த் தடிப்புச்சீப் பாச்ச லாகும்
தசைவயிறு கடினாகக்கீட் சொரியு மாகும்
தேர்க்கமாய்த் திமிரோடு தசையும் பாவும்
தேச்சுரன எரிச்சலாய் உஷ்ண மாகும்
சீர்த்தமாய் வயிறுதனிற் கண்டிப் பாகும்
சிகுரகுஷ்டந் தன்னுடைய சேதி கேளே. 502

கிருஷ்ணகுஷ்டம்

சேதியாய்த் தேகமெங்கு தான்க றுக்கும்
சிவப்புடனே சேட்டுமத்தி றுற்ப வித்து
காதியாய்த் தோல்திமிர்த்தே கதித்து நாறும்
கனமான தாதலிலு மூஷ்ணந் தாக்கும்
நூதியா யுடம்பெங்கும் நோவுண் டாகும்
நுட்பமாம் புறங்காலி லறையிற் காணும்
தாதியாய்த் தலைதன்னில் மிகுதி யாகும்
சஞ்சரிக்குங் கிருஷ்ணகுஷ்டத் தாண்மை தானே.
503

அவுதும்பர்குஷ்டம்

ஆண்மையா யத்திக்காய்ப் போல ரும்பி
அடுக்கடுக்காய் முளைத்துமே பெருத்து மெத்தக்
காண்மையாய்க் காய்ந்துமே உடம்பெங் குந்தான்
கருகியே உடம்புதோல் திரைந்து தொங்கும்
தோண்மையாய்த் தேகமெங்குந் திமிருண் டாகும்
சொறியுமே சரீரத்திற் செந்நீர் பாயும்
வாண்மையாய் மயக்கந்தான் மிகவுண் டாகும்
வகுத்ததோ ரவுதும்பர் குஷ்டந் தானே
504

மண்டலகுஷ்டம்

வகுத்ததோர் பச்சைவர்ண மிரத்த வர்ண
மாயிருக்க முடம்பெல்லாஞ் சிரசெல் லாந்தான்
விகுத்ததோர் தலையிலே வெளுப்பு மாகும்
மேனியெல்லா மிகத்தடித்துக் கறுப்புண் டாகும்
திகுத்ததோர் தினவாகுஞ் சொறியு மாகும்
சிகப்பான சலம்வீழுஞ் சடமெங் குந்தான்
வகுத்ததோர் மண்டல குஷ்டத்தின் செய்தி
மார்க்கமெல்லாம் பார்த்துணர்ந்து மருவு வீரே.
505

அபரபரிசகுஷ்டம்

மருவவே தேகமெல்லா மிகவு நொந்து
மாசற்ற ரத்தமெல்லா மிகக்க றுக்கும்
செருவவே சிந்தையெல்லா நோவுண் டாகும்
தேகமெங்குந் துடிபடா நோவுண் டாகும்
அருவவே வாய்வுமிஞ்சி யதிக நோவாம்
அதிர்ந்துவே தனையாகு மிகநீர் தொட்டால்
பருவவே வீங்கியே வெடிப்புண் டாகும்
பரந்தவபர பரிசகுஷ்டப் பண்பு மாமே.

506

விசர்ச்சீககுஷ்டம்

பரிசமாய் வாதபித்தத் துற்ப வித்துப்
பரிந்துதொட்டா லெண்ணெய்தனை வெளுப்பு மாகும்
விரிசமாய்த் தினவெரிப்பு வேதனையு மாகும்
மிகச்சிவப்புத் தண்டிப்புத் தோலு றப்பு
மரிசமாய் நாவெரிப் புஞ்ச லிப்பு
மகத்தான வெட்கிப்பு வயிறு சப்பு
துரிசமாய் கோபிப்புச் சரச ரப்பு
சுறுசுறுப்பு விசர்ச்சீகக் குஷ்ட மாமே.

507

வையாதிகுஷ்டம்

சுறுப்பாகச் சேட்டுமபித் தந்தன் னிற்றான்
துணித்துடம்பி லேவெடித்தங் காற்ற வெண்ணா
அறுப்பாக அண்டவொண்ணாத் தணல தாகி
அழன்றுகை கால்கண்காது கண்டந் தானும்
வெறுப்பாக வெடித்துமே வீங்கிப் புண்ணாம்
மேனியெல்லா நற்பாம்பு மின்ன லாகும்
கறுப்பாகச் சந்தெல்லாம் பரவி நிற்கும்
காரணமாம் வையாதி குஷ்ட மாமே.

508

கிடீபகுஷ்டம்

காரணமாஞ் சரீரமெங்கும் பச்சை யாகும்
கனத்துயா னைத்தோல் கதுப்பு மாகும்
மாரணமாய் மகாதினவு சொறியு மாகும்
மகத்தான மூத்திரந்தா னடிக்க டிக்கு
நார்ணமாய் நன்னீர தாகு மேனி
நரகமாய் நாற்றந்தான் மிகவுண் டாகும்
சீரணமாய்ச் சிவப்பட்சி வாத மாகும்
செடந்தானு முழுதுமே கிடீப குஷ்டம்.
509

சர்மதேவகுஷ்டம்

கிடீபமா யுடம்புவலி யதிக மாகும்
கீற்றாக வெடித்துவே தனையு மாகுந்
தடீபமாய்த் தடிப்பாசிச் செம்மை யாகுந்
தனைத்தொட்டால் நோக்காடாய்த் தினவெ ழுப்பும்
வடீபமாய் மயக்கோடு அசதி காணும்
மாறாத நோக்காடு மிகவே யுண்டாம்
திடீபமா யுதரத்தில் வலியு மாகும்
செப்புகின்ற சர்மதேவ குஷ்ட மாமே.
510

தேத்திருக்குஷ்டம்

சர்மந்தான் சிவப்பாக வட்ட ணித்துச்
சலவைபோல் வெளுக்குமே தினவுண் டாகும்
வர்மந்தான் ரோகமது மிகவுண் டாகும்
மயிரெல்லாஞ் சுருண்டுமே உண்டை யாகும்
கர்மந்தான் பித்தசேட் டுமமி குக்கும்
காயந்தான் கதித்துமே திமிருண் டாகும்
தர்மந்தான் சடமெல்லா மூத லாகும்
தாக்கான தேத்திருக் குஷ்டந் தானே.
511

சித்துமாகுஷ்டம்

தாக்கான வாதபித்தத் துற்ப வித்துத்
தளிரான சுரைப்பூவின் வண்ண மாகி
வாக்கான வடிவதெம்மாந் திமிருண் டாகி
வட்டணித்துப் பசுமஞ்சள் வர்ண மாகும்
தேக்கான திமிரோடு செந்நீ ருண்டாய்
தேகமெங்கு மசைக்கொணாச் செழுமை யாகும்
நீக்கான நினைவோடு மறதி யாகும்
நிலவரமாஞ் சித்துமா குஷ்டந் தானே.

512

சாதாருகுஷ்டம்

சித்தான தண்டிப்பாய் ரத்த வர்ணம்
செழும்பச்சை வெள்ளையாய்ச் சிவப்பு மாகும்
எத்தான வெரிப்போடு தினவு மாகும்
எளிதான சேட்டுமவா தத்துற் பத்தி
பத்தான காடுகட்டிப் புண்ணு மாகும்
பாம்புத்தோல் போற்றிரைந்து பருத்துக் காணும்
வித்தான மூக்கோடு காது கன்னம்
மிகத்துடிப்பாஞ் சாதாரு குஷ்டந் தானே.

513

சுவேதகுஷ்டம்

தடிப்பாகத் தவளநிறம் போல்வெ ளுத்துச்
சர்வாங்க மும்வெளுத்தாற் றான்றி ரும்பும்
மடிப்பாக மயிர்வெளுத்தால் சாத்ய மாகும்
வரிவாடு வுள்ளங்கைக் குதங்குய் யந்தான்
நெடிப்பாக நெருப்புப்பட் டதுபோற் புண்ணாய்
நிறமிருந்தா லசாத்தியமென்றே யுரைக்க லாகும்
வெடிப்பாக மேனிஎல்லாம் தெயத்து வீங்கில்
வெண்சுவேத குஷ்டமென்றே விளம்ப லாமே.

514

குஷ்டவரலாறு

விளம்பவே மிகுந்தஉஷ் ணந்தன் னாலும்
மிகுந்தசீ தளத்தாலு மழற்சி யாலும்
வளம்பவே மந்தத்தால் வாந்தி யாலும்
மகத்தான பெண்ணோடு மருவ லாலும்
கிளம்பவே கிலேசங்கள் மிகுத லாலும்
கெடியான வர்க்கங்கள டைத லாலும்
தளம்பவே மயிருகிர்கள் தவிடு மண்கள்
சாதத்திற் பருக லால்மிகுங் குஷ்டம். 515

குஷ்டந்தான் பதினெட்டு வரவே தென்னிற்
குருநிந்தை சிவநிந்தை மறையோர் நிந்தை
திஷ்டந்தான் தேவதையைத் தூஷணைக்கு ரோதம்
செப்பலாற் றிருடலாற் பரதா ரத்தை
அஷ்டந்தானா சையால டைக்க ல்த்தை
அபகரித்த லகதிபர தேசி தன்னை
வஷ்டந்தான் வைதலாற் கற்ப ழித்தல்
வந்திடுமே பதினெட்டுக் குஷ்டந் தானே. 516

சாத்தியம்

குஷ்டந்தான் பதினெட்டில் சாத்தி யந்தான்
கூறக்கேள் விற்போடக பரமற்ற குஷ்டம்
கிஷ்டந்தான் கேச்சர்ம குஷ்ட மோடு
கிருஷ்ண குஷ்டம வுதும்பர் குஷ்டந் தானும்
திட்டமாந் தேத்திருக் குஷ்ட மோடு
செயசித்து மாகுஷ்டங் கிடீப குஷ்டம்
தட்டந்தான் மிகுந்தசா தாரு குஷ்டம்
சமகிருஷ்ண குஷ்டமசாத் தியமா மென்னே. 517

அசாத்தியம்

ஆமென்ற பத்துந்தான் சாத்ய மாகும்
அசாத்யமது தானெட்டு அறிந்து பாரு
போமென்ற பூர்வத்தின் கன்மத் தாலும்
புவிதனக்கும் மிகுகன்மஞ் செய்த பாவம்
பாமென்ற பெரியோர்கள் சாபத் தாலும்
பாதகங்கள் மனதறியப் பண்ணும் பேர்க்கும்
கோமென்ற குஷ்டமாம் ரோகம் வந்து
கூடுமென்று யூகிமுனி கூறி னேனே. 518

குட்டரோகநிதானம் முற்றிற்று.

13. பாண்டுரோகநிதானம்

கூறவே பாண்டுவிடப் பெயரைக் கேளாய்
குறிப்பாக வைந்துவித மாகும் பாரு
வாரவே வாதமாம் பாண்டு வோடு
மார்க்கமாம் பித்தத்தின் பாண்டு வாகும்
தேறவே சிலேட்டுமமாம் பாண்டு தானாம்
திரிதோஷப் பாண்டோடு விஷப்பாண் டாகும்
ஆறவே பாண்டுவிட வாண்மை யெல்லாம்
ஆராய்ந்து சொல்லவே அறிந்து கொள்ளே. 519

உற்பத்தி

அறிந்துமே உற்பத்தி சொல்லக் கேளாய்
அதிசார மலமிளகி யெந்நே ரந்தான்
பிறிந்துமே புளியுப்பு பெருத்த லாலும்
பெத்தமா மக்கினியி லிருத்த லாலும்
மிறிந்துதாம் பூலமிக அருந்த லாலும்
மீறியே மதுக்களைத் தான்புசித் தாலும்
பறிந்துபகல் நித்திரையே செய்த லாலும்
பாண்டுவந்து பாரிலுள்ளோர் படும்பா டாமே. 520

பாடான பஞ்சுதனைத் திருடி னோர்க்கும்
பாங்கான சிவதுயிலைப் பருகி னோர்க்கும்
மாடான பசுவதைப்பட் டினிய தாக
வைக்கின்றோர் மறைவழியை நடந்தி டாதார்
காடான வாரணியந் தனிற்ப றித்துக்
கடுவதைகள்! செய்கின்றோர் கண்கா ணாத
கோடான பழிசொல்லிக் குடிகெ டுக்கும்
கொடும்பாவி பாண்டுவினாற் குதிகொள் வாரே. 521

வாதபாண்டு

கொள்ளவே வாதபாண்டு ரோகங் கேளாய்
குடல்பிரட்டி யடிவயிறு தான்வ லிக்கும்
தள்ளவே தாகமோடு பசியு மில்லை
தழலான சரசரப் பாகத் தானும்
நள்ளவே நரம்பெல்லாங் கறுப்பு மாகும்
நடுக்கலொடு கண்சிவப்பு மலபந் தந்தான்
விள்ளவே தலைவலிக்கு மேனி வீங்கும்
வெளுப்பாகும் வாதத்தின் பாண்டு வாமே.

522

பித்தபாண்டு

வாமென்ற மேனியெல்லா மஞ்ச ளித்து
மகாவெளுப்பு உண்டாகி மந்தக் கண்ணாம்
தாமென்ற தாகமொடு மூர்ச்சை யாகுந்
தனிவாயில் மிளகுபோற் றானு ரைக்கும்
நேமென்ற நெஞ்சுமுடி தானு முண்டாய்
நெருக்கியே மூச்சுமுட் டதுவே யாகும்
கேமென்ற கிறுகிறுத்து வாய்கைப் பாகும்
கிளர்ப்பித்த பாண்டுவெனக் கீற லாமே.

523

சிலேட்பபாண்டு

கீறியதோர் நரம்புதோல் மிகவெ ளுப்பு
கிளர்நாவு உப்புரைக்கு மயிர்க்கூச் சாகும்
வாறியதோர் வாந்தியாக் குரலுங் கம்மும்
மகத்தான தும்பலுடன் கோழை யாகும்
ஈறியதோ ரிருமலொடு மயக்க முண்டாம்
இடுப்பசதி யிந்திரிய நஷ்ட மாகும்
சீறியதோர் சோபமொடு தாப மாகும்
சிலேட்டுமத்தின் பாண்டென்னச் செப்ப லாமே.

524

திரிதோஷபாண்டு

செப்பவே அருசியொடு சோப தாகம்
செயலான சுவாசமொடு இளைப்பு மாகும்
வெப்பவே மேனிசிறு நீர்தான் வீழும்
மிடுக்கான பெலஈன மார்பு டித்தல்
துப்பவே சூட்டோடு தியக்க மாகும்
தும்மலா யுடம்பெங்கு மூதிக் காணும்
திப்பவே தேகமெங்கு மசதி யாகும்
திரிதோஷப் பாண்டென்னச் செப்பு நூலே. 525

விஷபாண்டு

நூலா கந்தத்தோடே யுடல்வெ ளுக்கும்
நோய்நரம்பு சூடாகுந் தாக மாகும்
ஆலான அருசியொடு சத்தி விக்கல்
அதட்டியே இருமலுட னதிசு வாசம்
வாலாக வயிற்றிரைச்ச லதிசார தோஷம்
மசுரமு முண்டாதல் மார்க னத்தல்
வேலாக மேனியெங்கு மிகவே ஊதல்
விஷபாண்டு அசாத்யமென்றே விளம்ப லாமே. 526

விளம்பவே பாண்டுமுற்றி இருக்கும் போது
மீறியே பித்தவஸ்து தனைப்பு சித்தால்
புளம்பவே மங்கையுடன் புணர்ச்சி செய்தால்
பூண்டிடுமே காமாலை யென்னும் ரோகம்
தளம்பவே காமாலை பதின்மூன் றாகும்
சார்வான பேரோடு குணாகு ணத்தை
உளம்பவே அசாத்தியங்க ளதனை யெல்லாம்
உரைக்கரிது உரைக்கின்றே னுற்றுக் கேளே 527

காமாலைரோகநிதானம்

உரைக்கவே ஊதுகா மாலை யோடு
உயர்ந்தவரட் காமாலை வாதக்கா மாலை
புரைக்கவே பித்தகா மாலை யோடு
பேரான சிலேட்டுமகா மாலை யாகும்
வரைக்கவே வாதசிலேட் டுமகா மாலை
வகையான பயித்யசிலேட் பக்கா மாலை
துரைக்கவே தொந்தகா மாலை யோடு
சூட்க்ஷமமா மஞ்சட்கா மாலை யாமே. 528

மஞ்சளா மழகுகா மாலை யோடு
மருவுகின்ற செங்கமலக்கா மாலை யாகும்
குஞ்சலாகும் காமாலை முன்சன் மத்தில்
கொடியகும்பக் காமாலை பதின்மூன் றாகும்
தஞ்சமாங்கா மாலையோடு ....
தயையில்லாக் கோபத்தால் சண்டை தன்னால்
பஞ்சலாம் பரமசிவன் றன்னைத் தானும்
பணியாத மூடருக்குப் பரவுந் தானே. 529

காமாலைஉற்பத்தி

பருகவே உள்ளங்கா லுள்ளங் கைகள்
பகர்முகங் கண்ணுடம்பு மிகவெளுப்பு காணும்
கருகவே கால்கைக ளோச்ச லாகும்
கனமாக நடுக்கியே இளைப்பு ண்டாக்கும்
சுருகவே மலந்தானும் வரண்டு கட்டும்
தூய்கமுக மஞ்சளிட நிறம தாகும்
வெருகவே வீக்கமாய்க் களைப்புண் டாகும்
மிகக்காது மந்தமொடு தலைகனப்புண் டாமே. 530

ஊதுகாமாலை

கனப்பாகக் கண்ணுமுகங் கசிவுண் டாகும்
கனவீக்க முடலெங்கும் உளைவுண் டாகும்
அனப்பாக வழற்றலாய்த் தேகமுணர் வில்லை
அதிகமாய்ச் சீதவெப்பு தலைதி ருப்பு
தினப்பாகத் தியக்கமொடு சிறுநீர் மஞ்சள்
தேகமெங்கும் வாடியே திமிருண் டாகும்
உனப்பாக உள்ளுத லாயி ருக்கும்.
ஊதுகா மாலையென உரைக்க லாமே.
531

வரட்காமாலை

உரைக்கவே கால்கைகள் மிகவும் வற்றும்
ஊணவே கால்தவறு மசதி யாகும்
நிரைக்கவே நீலம்போல் மலமி றங்கும்
நீர்தானுஞ் சிவந்துமே நெருப்பாய்க் காணும்
துரைக்கவே சூலைநோ வென்னக் குற்றும்
சோறுருசி யில்லாது மாலைக் கண்ணாம்
வரைக்கவே வடிவெல்லாங் கருகிக் காணும்
மயங்குவரட் காமாலை வகுத்த வாறே.
532

வாதகாமாலை

வாறான வயிறுதனைப் பொருமி விக்கும்
மலந்தானுங் கழியாது உடம்பு வீங்கும்
பூற்றான புறங்காலு முகம தைக்கும்
புகழ்கருமொன் றையுந்தான் செய்ய வொட்டா
ஊறான வுடல்கடுக்கும் மிகவி ளைக்கும்
உறுங்காது மிகவீங்குங் கண்ப ருக்கும்
பாறான பசியில்லா துறக்க மாகும்
பண்பான வாதகா மாலை யாமே.
533

மாலையா யுடம்புலர்த்தும் உறக்க மில்லை
மகத்தான படுக்கைவிட்டு ஏதுஞ் செய்யா
சேலையாய்ச் சோறுமே செரியா மற்றான்
செடமெங்கும் வாயுவாய்த் தியக்க மாகும்
பாலையா மூச்சதுவு மிகவுண் டாகும்
பருபருக்கை யாய்க்கழியும் வயிறு தானும்
ஆலையாய் வயிறிரச்ச லதிக மாகும்
அசதியாம் பித்தகா மாலை தாமே. 534

சிலேட்பகாமாலை

தாமேன்ற சடத்தையே யறிவ ழிக்கும்
தாக்கான இருமலே மிகவு ண்டாகும்
வேமென்ற தலைமுகமும் வியர்வை யாகும்
மிடுக்கான நடைகுறையு மூச்சு மாகும்
பாமென்ற பாக்கருந்தில் மிகக்செ ருக்கும்
பண்பான விழிசிவக்கு முடல்ந டுக்கும்
நேமென்ற நெஞ்சுதான் மிகக்க னக்கும்
நெடிதுயர்க்குஞ் சிலேட்டுமகா மாலை யாமே. 535

வாதசேட்பகாமாலை

துயர்க்குமன்னந் தனைத்தானுஞ் சீர்ண மாகா
செரிக்கசுக மாகவொட்டா செரும லாகும்
முயிர்க்குமுக மூக்குக்கண் மிகவே வேக்கும்
முடுகியே வயிறிறைந்து பொருமிக் கொள்ளும்
கயர்க்குநாக் குக்கண்ணு மிகவெ ளுக்கும்
கனமான நடையினில்மூச் செறிய வைக்கும்
வியர்க்குமே நிகமெல்லாம் வீக்க மாகும்
மிடுக்கான இருமலுண்டாம் வாதசி லேட்பம். 536

பித்திசிலேட்பகாமாலை

எண்டாகி வாந்திபண்ணுஞ் செரும லாகும்
ஓயாமற் றலைவலிக்கு மனம றுக்கும்
வண்டாகி வயிர்கழியுந் தாக முண்டாம்
மனமெல்லாம் புண்ணாகி மயக்க மாகும்

துண்டாகிச் சாதமுப்பிச் சீரணி யாது
துய்யமுகங் காலோடு கைவெ ளுக்கும்
வெண்டாகி மேனியுமே ஊதிக் காணும்
மிகப்பித்த சிலேட்பகா மாலை யாமே. 537

தொந்தகாமாலை

ஆமென்ற வங்கமழன் றேயெ ரிக்கும்
அசதிவரு மடிக்கடிக்கு இரும லுண்டாம்
தாமென்ற தண்ணீர்தான் மிகத்த விக்கும்
சடமெங்குங் கடுப்பெடுக்கும் புளித்தேக் காகும்
போமென்ற நாவதுதான் மிகப்பு ளிக்கும்
புரையான பசியெடுக்கும் குளிருண் டாகும்
வேமென்ற அடிவயிறுவீங்கும் வேர்க்கும்
மிக்கதொந்த காமாலை விபரந் தானே. 538

மஞ்சள்காமாலை

விபரமாய் மூத்திரந்தான் மஞ்ச ளாகும்
வீங்குமே சரீரமெங்கு மெலிவுண் டாகும்
முபரமாய் முகங்கால்கண் கையுண் ணாக்கு
மொழிமஞ்ச ணிறமாகும் முகமி னுக்கும்
அபரமா யன்னத்தை யிறங்கொட் டாது
அமுகையாய் மனஞ்சலிக்கு மூச்சுண் டாகும்
தபரமாய்த் தாதுநஷ்டம் மலமும் பந்தம்
சார்ந்தமஞ்சட் காமாலை தன்பே ராமே. 539

அழகுகாமாலை

பேரான கால்கையு மசதி யாகும்
பேர்புருவங் கண்கள்கழற் கொடிக்காய் போலப்
பாரான பச்சென்று தானி ருக்கும்
பருகுநீர் மஞ்சணிற மாய்வி டுக்கும்

தீரான லிங்கத்து ளெரிப்பு மாகும்
செரிக்கவொட்டா தன்னத்தைச் சிதறி யுப்பும்
ஆரான வழல்போல வெதும்பு மேனி
அழகுகா மாலையிட வாண்மை தானே. 540

செங்கமலக்காமாலை

ஆண்மையில்லாத் தமரகத்தின் குணமு மாகும்
அங்கமெல்லாந் தழற்சியுமாய்ச் சோம்பு மாகும்
தீண்மைசிறு நீர்சிவந்து மஞ்ச ளித்துச்
சிறுகியே சிறுநீர்தான் அருக்கி வீழும்
நாண்மையாய் நகங்களுடல் மிகவெ ளுத்து
நற்காயம் வற்றியே சுரமுண் டாகும்
ஊண்மையா யுண்ணாக்கு உமிநீர் நாக்கும்
உறுமஞ்சள் செங்கமலக்கா மாலை யாமே. 541

கும்பகாமாலை

காமாலை யடிக்கூடிக் களையே போடும்
கனமாக வுடம்புசிறு நீரே மஞ்சள்
வேமாலை நேரத்தில் வியர்வை யாகும்
மேனோக்கும் வாதந்தான் கண்சி வக்கும்
பூமாலைபோலவே துவண்டு போகும்
புகழான மயிலுறக்கம் போலே யாகும்
கோமாலை மலந்தானுங் குதுக்கென் றாகும்
கொடியகும்ப காமாலைக் குணமி தாமே. 542

குன்மகாமாலை

குணமான வாய்வெளுப்பு கண்தான் பச்சை
கொடுமூத்ர மஞ்சளித்துக் குழம்பு மாகும்
அணமான வன்னந்தான் செரிக்கும் போது
அடிவயிற்றில் வலியுண்டாம் வாந்தி யாகும்

மணமான தொன்றுமே யறிந்தி டாது
மயிலுறக்க மிரைப்பிருமல் மூச்சு மாகும்
பிணமான ததுபோலக் கிடைகி டக்கும்
பிரளுமே குன்மகா மாலை தானே.
543

சாத்தியம்

தானான காமாலைப் பதின்மூன் றாகும்
சாத்தியந்தா னேழாகும் பேரே தென்னில்
பானான பயித்தியகா மாலை யோடு
பரவுமஞ்சட் காமாலை சிலேட்ப மாகும்
ஊனான ஊதுகா மாலை யோடு
உணர்த்தும்வரட் காமாலை வாதசி லேட்பம்
கோனான பயித்யசிலேட் டுமக்கா மாலை
குணமாக மேழுந்தான் கூர்ந்து கேளே.
544

அசாத்தியம்

கேளென்ற கும்பகா மாலை யோடு
கெடிகொள்குன் மக்காமாலை தொந்தகா மாலை
வாளென்ற வாதகா மாலை யோடு
மருவுகின்ற செங்கமலக்கா மாலை யாகும்
ஆளென்ற வழகுகா மாலை யோடு
ஆறுந்தா னசாத்தியமா மறிந்து கொள்ளு
கோளென்று சொல்லிமகா கொடுமை செய்த
குணங்கெட்ட மானிடரைக்கூடுந்தானே.
545

பாண்டுரோகநிதானம் முற்றிற்று.

14. சோபைரோகநிதானம்

தானான சோபையது நாலுவித மாகும்
சாற்றிடவே வாதத்தின் சோபை யோடு
தேனான பித்தத்தின் சோபை யாகும்
சிலேட்டுமத்தின் சோபையொடு திரிதோஷ சோபை
நானான நாலுவிதச் சோபை தன்னில்
நாட்டமெல்லாஞ் சொல்லிடநீ நயந்து கேளாய்
பானான உமைதனக்குச் சிவன்றான் சொன்ன
பாங்கதனைப் பகருவன்யான் பரிந்து கேளே.
546

பாங்கான சன்னிபா தச்சு ரங்கள்
பகர்சித்தப் பிரமைசன்னி பருகி னாலும்
தேங்கான பன்னகந்தான் றீண்ட லாலும்
சிலவிஷங்கள் தேகத்தி லூற லாலும்
ஆங்கான சிறையிருத்தல் அடிபடுத லாலும்
அநேகவழி நடக்கைமலை யிருக்கை யாலும்
தாங்கான சலக்கரைகள் தனிலி ருக்கல்
சாம்பல்மண் மாதவிடுதன்னாற் சோபை யாமே.
547

வாதசோபை

சோபைதான் வருமுன்னே உடல்தான் வற்றும்
சுகநரம்பு தான்வெளுக்கும் சீர்ண மாகும்
தூபைதான் பெலக்ஷயமாய் நடுக்க லாகுஞ்
சுரமோடுமிக வெளுப்பு மிளைப்பு மாகும்
மாபைதான் மயிர்முனைகள் சிவந்து போகும்
மகத்தான நித்திரையு மந்த மாகும்
சோபைதான் அங்குலிலே சடமெங் குந்தான்
கொடுவலியாம் வாதத்தின் சோபை யாமே.
548

பித்தசோபை

வலியாக மயிர்மஞ்ச ணித்தி ருக்கும்
மகத்தான சயித்தியமே மிகவி ரும்பும்
தலியாகத் தாபமொடு இளைப்பு காணும்
சரீரந்தான் மிகச்சிவப்பாந் தலைவ லிக்கும்
புலியாக விருந்ததுபோய்ப் பெலவீ னத்தால்
புகலரிய மயக்கமொடு வியர்வை யாகும்
நலியாகக் கண்புருவ மூக்குத் தண்டு
நலங்குமே பித்தத்தின் சோபை தானே. 549

சிலேட்பசோபை

நலங்குமே வடிவெல்லாந் தினவுண் டாகும்
நல்லமயிர்க் கால்வெளுப்பு உடல்வெ ளுப்பு
திலங்குமே தேகமெங்குஞ் சரச ரப்பு
திடுக்கியே மிகக்குளிரும் நித்திரை யில்லை
விலங்குமே விழியனலாங் குரல்நெரி வாகும்
விசூழியாய்ப் பேதிதலை கிறுகி றுப்பு
சிலங்குமே ரத்தங்கள் சுரந்து வீங்கும்
சிலேட்டுமத்தின் சோபையென்றே செப்ப லாமே. 550

திரிதோஷசோபை

செப்பவே மெல்லியர்மேல் மிகுந்த கோபம்
செடம்வீக்க முபாதியுமாய்ச் சுரமுண் டாகும்
அப்பவே அதிசாரம் வயிற்க டுப்பு
ஆசனத்தில் மிகக்கடுப்பு அசனஞ் செல்லா
நப்பவே கால்கையுந் துண்டு காணும்
நடக்கவே பெருமூச்சாய்க் கிறுகி றுக்கும்
திப்பவே உமிழ்நீர்தான் மிகவே ஊறும்
திரிதோஷ சோபைசாத் தியமாச் சொல்லே. 551

சொல்லவே பாண்டுகா மாலை சோபை
　　தொகுப்பாக மூன்றினிடச் சொருபஞ் சொன்னேன்
மல்லவே வடமொழியின் வகுப்பைப் பார்த்து
　　மகத்தான நாதாக்கள் வசனங் கேட்டு
வல்லவே மானிடர்கள் பிழைக்க வென்று
　　மனோன்மணிக்குச் சிவன்சொன்ன வசனந் தன்னை
எல்லவே யூகியென்ற முனியாம் யானே
　　எழுதினே னாயுருவே தத்தைத் தானே.
552

தானான ஆயுருவே தத்தை யெல்லாம்
　　சாங்கமாய்ச் சோதித்துச் சாரந் தன்னை
தேனான தமிழினால் விரித்துச் சொன்னேன்
　　சிறுபிள்ளை பார்த்தாலுந் தெரிய வென்று
ஏனான ஏழுலக்ஷங் கிரந்தப் போக்கே
　　எடுத்துமே சோதித்து எழுதி னேன்யான்
ஊனான யூகியென்ற முனியாம் யானும்
　　உலகத்தோர்க் காகவென்று உரைசெய் தேனே.
553

சோபைரோகநிதானம் - முற்றிற்று

15. மகோதரநிதானம்

செய்ததோர் மகோதரந்தான் முப்பத் திரண்டு
சிறப்பான பெயரையெல்லாஞ் சொல்லக் கேளாய்
வைத்ததோர் வாதமகோ தரத்தி னோடு
வகையான பித்தமகோ தரன்சி லேட்பம்
கொய்ததோர் வாதசிலேட் டுமத்தி னோடு
கொடும்பித்த சிலேட்பமகோ தரமு மாகும்
தொய்ததோர் தொந்தமகோ தரத்தி னோடு
துரிதமாங் கமலகோ தாமுங் காணே. 554

காணவே லில்வமகோ தரத்தி னோடு
கடியதோர் வழுமைமகோ தரமுந் தானும்
நாணவே நழுவைமகோ தாநீ ராம்பல்
நலத்தஊ றாம்பலொடு வெப்பு பாவை
கோணவே குலமுட்டி மகோத ரந்தான்
கொடியகீழ்க் கவசைமேற் கவிசை யாகும்
பாணவே பக்கமாங் கவிசை யோடு
பழுக்கவிசை பெருவயிறு மகோதரந் தானே. 555

வயறான சூலமகோ தரமும் வல்லை
மகோதரமும் விஷமகோ தரத்தி னோடு
கொயறான தொந்தமொடு வழுவை வில்வம்
கொடிதான உதரமகோ தரமு மாகும்
புயறான கூர்மமுடன் வெப்பு பாவை
புரமசுர மகோதரமும் குலைமுட் டாகும்
வெயறான பாண்டுவோடு தரமகோ தரந்தான்
வீசுகின்ற மகோதரமுஞ் சலமு மாமே. 556

சலமகோதர மாங்சமகோ தரம தாகும்
தாக்கான மகோதரந்தான் முப்பத் திரண்டு
உலமான உற்பத்தி யுரைக்கக் கேளாய்
உமியினால் கல்லினால் ரோம முள்ளால்

சுலமான சுனையினால் தோஷ நீரால்
தும்பிநீர் தேரைநீர் அலர்ந்த சோற்றால்
மலமான மங்கையர்கள் மருத்தி னிட்டால்
மகோதரமாய் நோய்வந்து மருவுங் காலே

557

காலான மேகந்தான் வயிற்றிற் கட்டிக்
கடிசான சீய்சீதம் வயிற்றிற் றங்கில்
தாலான சதையுதிரம் வயிறு தன்னில்
தயங்கினாற் பாஷாணந் தரிக்கிற் சூதம்
சேலான செம்பினிட வூறல் தங்கில்
சீரணத்தில் மேலன்னஞ் செலுத்த லாலும்
மாலான மங்கையர்கள் மருந்தி னாலும்
மகோதரங்கள் வந்துஉற் பத்தி யாமே.

558

உற்பத்தி ஒருவருட னுண்மை பேசி
உயர்சபையிற் பலவிதமா யுரைக்கின் றோர்க்கும்
அற்பத்தி லனியாயஞ் செய்கின் றோர்க்கும்
ஆலயத்தி லனியாயம் பண்ணி னோர்க்கும்
பற்பத்தி லொருவரிடப் பிரயோ சனத்தைப்
பறிக்கின்றோர் கெடுக்கின்றோர் பந்தி தன்னில்
துற்பலத்தி லோரவஞ் சனையே செய்த
துரோகிக்கு மகோதரங்கள் தொடர்ச்சி யாமே.

559

வாதமகோதரம்

தொடர்ச்சியாங் காயமது வெளுப்பு மாகும்
சூக்ஷமாய்ச் சடலம்வற்றித் துர்ப்ப லந்தான்
அடர்ச்சியா மன்னமது வேண்டா தாகும்
அடிவயிற்றிலி ரைச்சலுமா யுப்பிச மாகும்
புடர்ச்சியாய்ப் பிணமுகமாய்ச் சாய லாகும்
புளிப்பான வசீரணத்திற் பசியு முண்டாம்
தடர்ச்சியா யடிவயிறு தன்னில் வீங்கும்
சஞ்சலிக்கும் வாதமகோ தரந்தா னென்னே.

560

பித்தமகோதரம்

என்ற கண்ணிற் காசவன்ன மும்மாய்த் தோன்றி
ஏற்றசுர மோகமாய்த் தாக மாகும்
அன்றவதி சாரமுமாய் வயிறு போகும்
அழற்றியொடு வியர்வைமேல் மஞ்ச ளிப்பு
துன்றதோல் சரசரப்புத் தூட்டி போலச்
சுயநரம்பு பலவிதமாய் வர்ண மாகும்
பன்றசனஞ் செரியாமல் மலமும் போகும்
பயித்தியமகோ தரத்தினிடப் பண்பு தானே.
561

சிலேட்பமகோதரம்

பண்பான வுடல்நடுக்கி யருசி யாகும்
படுக்கைதனி லுறக்கமில்லா துப்பு றைக்கும்
குண்பான குளிர்காச்சல் சுவாச காசங்
கோயமொடு வயிறுஉப் பிசமு மாகும்
வெண்பான பஞ்சுபோல் மிகவெ ளுக்கு
மிடுக்கான நீர்மலமுங் கடுக டுக்கும்
திண்பான இருமலொடு கோழை மிஞ்சும்
சிலேட்பமா மகோதரத்தின் செயலி தாமே
562

வாதசிலேட்பமகோதரம்

செயலான சடம்வெளுத்தாற் போற்க டுத்தல்
திணிவயிற்று மடிப்புத்தான் மறைய வீங்கல்
நயலான நரம்புவயிற் றினிற்பு டைத்தல்
நலமான துர்க்கந்த வாயு மீறல்
அயலான வண்டங்கள் திடுக்கிட் டாற்போல்
அடிவயிற்றில் முழக்கமா மலம்வி டாது
பியலான பீசந்தாள் மிகுதி வீங்கும்
பிரிவாத சிலேட்டுமமா மகோதரந தானே.
563

பித்திசிலேட்பகாமாலை

பிரிவாக நாபிமா ரளவு மட்டும்
பிதுங்கலாய் வயிறுமெத்தப் புடைக்கி டைக்கும்
வரிவாக வாய்வதுதான் மிகத்தம் பிக்கும்
மலங்கட்டும் நீர்குறையு மார்பில் நோவாம்
எரிவாக எலும்பில்மூ ளையிலே தாக்கி
ஏற்றமாம் நயனவொளி மிகக்கி டைக்கும்
அரிவாக வங்கங்கள் கால்கை வீங்கும்
அதிர்பித்த சிலேட்டுமத்தின் மகோதர மாமே.

564

தொந்தமகோதரம்

அதிராக மஞ்சணீ ராக்கை யாகும்
அதட்டியாய் வாதத்தின் நாடி யாகும்
பதிராகப் பஞ்சுபோற் கண்ணீ ருருக்கும்
பங்கமா யங்கமெல்லாம் பருக்க வீங்கும்
வதிராக வஞ்சகமாக் கால்கை வற்றும்
வற்றியே உடம்பெல்லாம் வயறு வீங்கும்
சுதிராகத் தலைச்சுற்றல் தியக்க மாகும்
தொந்தமா மகோதரத்தின் சூக்ஷம் பாரே.

565

சூட்சமா யிருமலொடு இளைப்பு மாகும்
சுருபந்தான் மஞ்சணிற மாக வீங்கும்
மோட்சமாய் மேல்வயிறு கருக்கல் போல
முரண்டியே மிகவீங்கும் அசனஞ் செல்லா
காட்சமாய் முகங்கருகிக் கண்டிப் பாகும்
கசடற்று நரம்பெல்லாம் பசுமை யாகும்
தீட்சமாய்ச் சலமலங்கள் சுருக்கிக் கொள்ளும்
செடம்வெளுக்குங் கல்மகோ தரமா மென்னே.

566

வில்மகோதரம்

ஆமென்ற வருணனிட வில்லு போல
அதட்டியே வுளைந்தாற்போல் பிகுவு முண்டாய்
வேமென்ற மேல்வயிறு தனில்வ லித்து
மிடுக்காக உப்பிசமாய் விரையும் வீங்கி
வாமென்ற மலசலமுஞ் சுருக்கிக் கொண்டு
வாதையாய்க் கிடைகொடா மயக்க மாகித்
தாமென்ற தண்ணீர்தான் மிகவும் வேண்டும்
சஞ்சலிக்கும வில்மகோ தரந்தா னென்னே. 567

வழுவைமகோதரம்

தரமான தண்ணீரிற் சொறியைப் போலத்
தளதளத்து வயிறுதனில் வளர்ந்தே யேறும்
மரமான ததுபோலத் திமிருண் டாகி
மாமிசந்தான் சோறுபோல் வயிற்றிற் றுன்னி
பரமானத் தைநினைந்து பசியில் லாமல்
படுக்கைக்கு இடமின்றிப் பரத விக்கும்
அரமான வன்னத்தைக் கிட்டொட் டாது
ஆகாத வழுவைமகோ தரந்தா னாமே. 568

நழுவைமகோதரம்

ஆமேதா னடிவயிற்றிற் கட்டி யாகும்
அழுத்தியே பார்த்தாக்கால் நழுவிப் போகும்
வேமேதான் மேல்வயிற்றில் வன்னி போல
மிடுக்கான பெலன்குறைந்து மேல்மூச் சாகும்
சாமேதான் பிணம்போல நடக்கொட் டாது
தரிக்கொண்ணாத் தாபமுமாந் தளர்சசி யாகும்
நாமேதான நாவரண்டு நெஞ்சு புண்ணாம்
நழுவைமகோ தரமென்றே நாட்ட லாமே. 569

நீராம்பல்மகோதரம்

நாட்டமாய் நாவரண்டு இரும லுண்டாய்
நளிராகி யடிவயிறு கதித்து விம்மிக்
காட்டமாய்க் கடைக்கண்தான் மிகவெ ளுத்து
கதும்பலொடு புறங்கால்கள் யத்து வீங்கி
வாட்டமாய் மூச்சோடு மயக்க மாகி
மலந்தானு மிகத்தளர்ந்து வடிவம் வேறாய்
நீட்டமாய்க் கால்கையு முடக்கொ ணாது
நீராம்பல் மகோதரத்தி னேர்மை தானே.

570

ஊறாம்பல்மகோதரம்

நேர்மையாய் மேல்வயிறு பொருமிக் கொண்டு
நெடிதுதகந் தேடியே மேனி கண்ணும்
வார்மையாய் மனத்துயர மிகுந்தி ருக்கும்
மயக்கமொடு தியக்கமாய் மாழ்கித் துஞ்சும்
கார்மையாய் முகம்வியர்த்து வெளுத்து நொந்து
கனகனத்து உடம்பெல்லாம் கடிது வற்றி
சீர்மையாய்ச் சிரசதனிற் பாரங் காணும்
சினத்தஊ றாம்பல்மகோ தரமு மாமே.

571

வெப்புப்பாவைமகோதரம்

சினத்தவுப் பங்காற்றுமே மிகவு முண்டாய்த்
தேக்கியே உடலதிர்ந்து மிகவும் பற்றி
கனத்தகைப்புப் பிளிப்புமிகத் தெகிட்ட லாகும்
கல்போலச் சரீரமெங்குங் கனத்துக் காணும்
வினத்தவயிர் தளிர்ப்புண்டு வெதும்பல் செய்யும்
விலாப்பக்கந் தனில்வந்து கட்டிச் சேரும்
நனத்தவுப்பு நாவிலே மிகுதி யாகும்
நலியும்வெப்புப் பாவைமகோ தரமாய் நாட்டே.

572

குலமுட்டிமகோதரம்

நாட்டவே குழவிபோல் குலையிற் சேர்ந்து
நலமாகக் கீழ்மூடிப் பக்கம் வந்து
ஆட்டவே அன்னத்தை யருந்தொட் டாமல்
அபானத்தை இறுக்கியே மலம் விடாது
தேட்டவே தேகமெங்குங் கருகி வற்றி
சிரசோடு முகங்கால்கை வீக்க முண்டாம்
கூட்டவே மலமூச்சுக் குரலுங் கம்மும்
குலமுட்டி மகோதரத்தைக் கூறி டாயே. 573

கீழ்க்கவிசைமகோதரம்

கூறிடவே அடிவயிற்றில் வில்லை போலக்
குறிப்பாகக் கட்டிகட்டி வயிற்றை யுப்பும்
ஈறிடிவே மேல்வயிற்றில் வில்லு போல
இசிவாகிச் சந்தெங்குங் குடைச்ச லாகும்
பீறிடவே மனசுநொந்து பெருமூச் சாகும்
பிதற்றலாய் மனதில்வந்தப் படியே பேசும்
மாறிடவே மலசலமுஞ் சுருக்கிக் கொள்ளும்
மருவுகீழ்க் கவிசைமகோ தரமு மாமே. 574

மேற்கவிசைமகோதரம்

விசையான மேல்வயிற்றில் வில்லை போல
விளையுமே ஊனெல்லாந் திரட்டிக் கொண்டு
தசையான நரம்புதோல் சுருங்கிக் காணும்
க்ஷணத்திலே படபடப்பு மூச்சு மாகும்
குசையான மாரடைப்புக் குற்ற லுண்டாம்
குமட்டியே வாய்நீருங் குதிகொண் டோடும்
அசையான அன்னந்தான் வேண்டா தாகும்
அளுக்கும மேற்கவிசை மகோதரந் தானே. 575

பக்கக்கவிசைமகோதரம்

கவிசைபோல் பக்கத்திற் பற்றி கொண்டு
கனமாக வயிறுகல் லழுந்த லாகும்
அவிசையாய் அடிவயிற்றிற் குமுறல் காணும்
அங்கதா கத்தோடு எரிவுண் டாகும்
புவிசைபோற் பொருமிவயி றுப்பிக் கொள்ளும்
புளித்தேக்காய் நெஞ்சிலே யெரிச்ச லுண்டாம்
பவிசையாய் மலசலமுஞ் சுருக்க மாகும்
பக்கமகோ தரத்தினிடப் பரிசு தானே.

576

பழுக்கவிசைமகோதரம்

பரிசாகப் பழுஎழும்பில் முளையைப் போலப்
பற்றியே வயிறெல்லாங் கனத்து விம்மும்
உரிசாக உப்பிசமு மேல்மூச் சாகும்
உழலையொடு தாபமுமா யுறக்க மாகும்
அரிசாக அன்னந்தா னிறங்கொட் டாது
அடிக்கடிக்கு வாயுவத்தான தட்டி யாகும்
செரிசாக வீங்கியே வற்றி யூதும்
திணருமே பழுக்கவிசை மகோதரந் தானே.

577

பெருவயிற்றுமகோதரம்

திணருமே காயந்தான் மிகவும் வற்றிச்
சீரணமாய் மந்தமுமா முதரந் தானும்
உணருமே கல்லழுத்த மாக வீங்கி
உறுதியாய் நரம்புமே புடைத்துக் காணும்
மணருமே மலத்தையே மிகப்ப நிக்கும்
வாடாம லூதியே மயக்கி விக்கும்
கிணருமே தூறெடுக்க ஊறு மாப்போல்
கெட்டிக்கும் பெருவயிற்று மகோதரந் தானே.

578

சூல்மகோதரம்

மகோதரம்போற் சூலான மங்கை யர்க்கு
மாவருத்த முண்டாகி மயக்க மாகும்
அகோதரமா யங்கமெல்லா மழற்சி யாகும்
அன்னந்தான் செல்லாது தண்ணீர் வேண்டும்
சகோதரமாங் கால்கையுஞ் சந்து வீங்கும்
தழலான காச்சலொடு அரூசி யாகும்
உகோதரமா யுடம்பெல்லா முளைச்ச லாகும்
உற்றசூல் மகோதரத்தி னுண்மை தானே.

579

வல்லைமகோதரம்

உண்மையாந் தொப்புளுக்குள் நடுமை யகத்தில்
உள்ளங்கை யகலந்தான் கட்டி யாகத்
தண்மையாய்த் தமர்கொண்டு அடைத்தாற் போலச்
சாங்கமாய்க் கருங்கல்லாய்த் தானி ருக்கும்
பண்மையா யசனமது முண்டாற் செல்லாப்
பருகிடுமே சுடுதண்ணீர் தன்மே லிச்சை
வெண்மையாய்க் கால்கையு மசதி யாகும்
மிடுக்கான வல்லைமகோ தரமு மாமே

580

விஷமகோதரம்

மிடுக்காக மேனியொடு பொத்தி பீசம்
வீங்கியே வெளுப்பாக மெலிவு மாகும்
அடுக்காகச் சிறுத்துமே பருத்துக் காணும்
ஆண்மையாய் பீசமது தளர்ந்தி ருக்கும்
துடுக்காக மனிதருடன் வார்த்தை பேசும்
துக்கமாய் மனக்கிலேச மெப்போ துந்தான்
நடுக்காக உடம்பெங்குந் திமிரு மாகும்
நலியும்விஷ மகோதரந்தான் நாடிப் பாரே.

581

பாண்டுமகோதரம்

நாடிப்பார் வாடியே ஊதிக் கொள்ளும்
நன்னாடிச் செம்மையிலு நடக்கொட் டாது
வாடிப்பார் வகுத்தடியும் புறங்கால் வீங்கும்
வன்னமுகம் வேறுபட்டு மயிலு றக்கம்
தேடிப்பா ரோமமெங்குஞ் செம்மை யாகும்
செயலான ரத்தமில்லா தெலும்பு மாகும்
கூடிப்பார் மூச்சோடு குளுப்பை யாகும்
குணக்கேடாம் பாண்டுமகோ தரத்தின் கூறே

582

சோபைமகோதரம்

கூறான அடிவயிறு குழைந்து உப்பிச்
கூப்பிட்டு மேல்வயிற்றில் பிகுவு மாகும்
தேறான வண்டமொடுக் கால்கள் கைகள்
சிதைந்துமெத்த வீங்கியே செழும்ப லாகும்
வீறான மேல்மூச்சு இருமல் தாகம்
விக்கியே சரீரமெல்லாங் குளிர்ச்சி யாகும்
தூறான மூத்ரமலஞ் சுருங்கிக் காணும்
சோபைமகோ தரமென்று செப்ப லாமே.

583

கரமாலைமகோதரம்

செப்பவே நடுக்கலொடு குளிர்ச்சி யாகும்
சீறியதோர் மூக்குமுகம் மார்பு வேர்க்கும்
உப்பவே உடம்புலரும் புறங்கால் வீங்கும்
உளைந்துமே அடிவயிறு மிகச்சு ருங்கும்
துப்பவே கோழையொடு சுரமு முண்டாம்
சுகமில்லா நித்திரைதான் றலைவ லிக்கும்
தப்பவே மிகத்தாகஞ் சலிக்குஞ் சிந்தை
தளருங்கர மாலைமகோ தரந்தா னாமே.

584

குன்மமகோதரம்

தானாகக் குலைதனையே மிகவ லிக்கும்
சாப்பாடு செரியாமல் வயிறு குற்றும்
வேனாக மேனோக்கிச் சத்தி யாகும்
மிடுக்கான வசீரணமாய்ப் பேதி யாகும்
பானாகப் பக்கவிலா இடுப்பு குக்ஷி
பணைத்துமே வீங்கியே கல்லு போலாம்·
கோனகக் கோமயம்போ னீரி றங்கும்
குன்மமகோ தரத்தினிடக் குணங்கற் றாமே. 585

உதரமகோதரம்

குணமாக வரண்டுகண் சிவந்து கொள்ளும்
கொடிதான வாயுவது திரட்சி யாகும்
பணமாகப் பகர்ந்துநீர் போத வாங்கும்
பசியன்றிக் கனத்திருக்கும் மலம்வி டாது
வணமாக வயிறெல்லாம் மெத்த ஊதி
மார்பளவுங் கழுத்தளவு மறைய வீங்கும்
மணமாக வயிறுதான் மிகவே பீறும்
மகாஉதர மகோதரத்தின் வளப்பந் தானே. 586

கூர்மமகோதரம்

வளப்பந்தான் வரண்டுமே கண்சி வந்து
வயிறுவிம்மி வாயுவுந்தான் திரட்சி யாகும்
இளப்பந்தா னிருகண்ணுஞ் சுருங்கிக் கொள்ளும்
இருமலோ டிளைப்புநீர் போத வாங்கும்
அளப்பந்தா னாமைபோல் வயிற்றிற் கட்டி
அசனந்தான் செல்லாது பெலனுங் குன்னும்
குளப்பந்தா னிரைச்சலொடு குமுற லாகும்
கூர்மமா மகோதரத்தின் குறிப்பி தாமே. 587

பீலிகைமகோதரம்

குறிப்பாகப் பரிசத்திற் கூர்மை யாகும்
குணமாக மலமோடு சலமு முண்டாம்
தெறிப்பாக வாயுவது கீழே நோக்கும்
செடமெல்லாம் வீங்காமற் கொஞ்சம் வீங்கும்
முறிப்பாக அசனந்தான் மிகவே வேண்டும்
மூத்திரந்தான் மிகுதியாம் மூர்ச்சை யில்லை
பிறிப்பாகக் கண்களிலே ரத்த மாகும்
பீலிகை மகோதரமாய்ப் பேச லாமே.
588

சுரமகோதரம்

பேசவே காலேறி வயிறு போற்றிப்
பெருங்கணைக்காற் புறங்காலு மெத்த வீங்கி
வாசவே மார்பிடரி நரம்பு தோன்றி
வயிறுதான் மிகப்பொருமி மெத்த வீங்கும்
தாசவே சுரமோடு அசதி யாகும்
கொடியதோர் தாபமுண்டா மெரிச்ச லாகும்
வீசவே மிகவேண்டு மெரிச்சல் தன்னால்
வீங்கும்கண் சுரமகோ தரம்பி எம்பே.
589

சலமகோதரம்

விளம்பவே யங்கமெல்லாஞ் சலந்தான் கோர்க்கும்
மேனியுமோ மஞ்சணிற மாகும் பாரு
உளம்பவே வுப்பிசமு முழலை யாகும்
உயர்கின்ற லிங்கந்தான் தளர்ந்து போகும்
முளம்பவே முதுகோடு வயிறு வீங்கும்
மூலமாந் தாதுக்கள் திகைத்தே நிற்கும்
புளம்பவே பொறியைந்து கலங்கி போகும்
பொருமுமெத்த சலமகோ தரத்தின் போக்கே.
590

மாமிசமகோதரம்

போக்கான மாமிசந்தான் வளர்ந்து மீறிப்
பொருமியே அடிவயிற்றிற் கல்லைப் போலத்
தாக்கான சடந்தானு முலர்ந்து வற்றித்
தவிக்குமே யடிக்கடிதான் தண்ணீர் தேடி
வாக்கான மதுரமொழி குளறிப் பேசி
வாய்வுதா னடிக்கடிக்கு மேலே நோக்கும்
நீக்கான மலசலத்தில் மாமிசங் காணும்
நேரான மாமிசமகோ தரத்தி னேரே. 591

சாத்தியம்

நேரான சாத்தியத்தைச் சொல்லக் கேளாய்
நேர்ப்பான வாதமகோ தரமும் பித்தம்
வாரான வழுவையொடு கழுவைநீ ராமை
மகத்தான ஊறாமை வெப்புப் பாவை
வேறான மேற்கவிசை சூலமகோ தரமும்
விஷமகோ தரம்வல்லைப் பாண்டு வாகும்
தூரான சோபைமகோ தரங்கா மாலை
துடிஉதர மகோதரமாங் கூர்மந் தானே. 592

அசாத்தியம்

கூர்மமொடு பதினாறுஞ் சாத்திய மாகும்
குணமில்லா வசாத்தியத்தைக் கூறக் கேளாய்
தீர்மமொடு சிலேட்டுமமாம் வாதசி லேட்பம்
சீறிய பித்தசிலேட்பந் தொந்த மாகு
கார்மமொ டக்கமகோ தரங்குல் முட்டி
கடியவில் மகோதரங்கீழ் கவிசை யாகும்
பார்பக்க கவிசையொடு பழுக்கவிசை யாகும்
பாரமாம் பெருவயிறு குன்மந் தானே. 593

குன்மமோ டுதரமகோ தரம்பீ லிகையும்
கொடியசல மகோதரந்தான் மாமிச மாகும்
பன்மமொடு பதினாறு மசாத்ய மாகும்
பாடினதோ முப்பத்தி ரண்டு மாச்சு
வன்மமொடு மருத்துவத்தி னூல்சோ தித்து
மகேசுரன்தான் சொன்னபடி உமையாள் கேட்டு
தன்மமொடு சகலருந்தா னறிய வென்று
சாற்றினேன் யூகியென்ற முனியான் றானே. 594

மகோதரரோகநிதானம் முற்றிற்று

☆ ☆ ☆ ☆ ☆

16. விஷபாகரோகநிதானம்

தானுமே விஷபாக மெட்ட தாகும்
சமரசமாய்ப் பேரைத்தான் சாற்றக் கேளாய்
வானுமே வாதவிஷ பாகமோடு
மார்க்கமாம் பித்தவிஷ பாக மாகும்
தேனுமே சேட்பவிஷ பாக மோடு
திரிதோஷ விஷபாகஞ் சேர்ந்து நின்ற
ஆனுமே அக்னிவிஷ பாக மாகும்
அடங்காத எரிவுவிஷ பாகந் தானு
கானுமே கத்தவிஷ பாகஞ் சன்னி
கடியவிஷ பாகந்தா னெட்டு மாச்சே, 595

ஆச்சென்ற மீன்முள்ளு நெல்லி வாலு
அரந்தலா லாகாயத் தேற்ற நீர்தான்
போச்சென்ற காடியால் புணர்ச்சி தன்னால்
புழுக்களால் பூர்வத்திற் சமைப தார்த்தம்
தீச்சென்ற கருகலாற் செம்பி நூறல்
சேர்த்ததிற் சமைத்தவன்ங் கறிபொ சித்தல்
வாச்சென்ற அழுகலாய் வெதும்ப லான
மாமிசங்கள் புசித்தலால் மருவுந் தானே. 596

வருவவே நல்மடந்தை கற்ப ழித்தல்
வழக்கோரம் வஞ்சனைகள் வாது தர்க்கம்
தருவவே உடன்படிக் கைதப்பி னோர்கள்
தந்தைதாய் குருவின் மொழிதனைம றந்தோர்
அருவவே அன்னமிடை யூறு செய்தோர்
ஆஸ்தானந் தன்னிற்போ யாண்மை சொன்னோர்
பருவவே பலபேருக் குபகா ரத்தைப்
பறிக்கின்றோர் விஷபாகம் படுபா டாமே. 597

வாதவிஷபாகம்

படுகுமே ஒருபக்கம் வீங்கி வற்றும்
பக்கமா மேனியெங்கும் வரண்டு காணும்
கடுகுமே கண்தூங்குஞ் சடம்வெ ளுக்கும்
கனத்துமே தலைதானுந் துயர்மி குக்கும்
மிடுகுமே மிகவீங்கும் பொசிக்கொட் டாது
மேனியுமோ மிடுக்கெல்லாந் தளர்ச்சி யாகும்
விடுகுமே மூத்திரச் சலமும் வற்றும்
மேனிகண்ணும் வாதவிஷ பாக மாமே.
598

பித்தவிஷபாகம்

பாகமா யுடம்பெங்குந் தினவுண் டாகும்
பாரமாந் தாபமொடு சுரமு முண்டாம்
வேகமா யுடம்பெங்கு வெடிப்பு மாகும்
வெடிநெருப்புப் பட்டாற்போற் பொரியும் பாரு
ஊகமா யுடம்புவலி சவக்கே டாகும்
உறுநித் திரைவாராமல் மேல்மூச் சாகும்
காகமாய் மயிலுறக்கங் கடிய சித்தம்
கடும்பித்த விஷபாகங் கணக்குந் தானே.
599

சிலேட்பவிஷபாகம்

தானுமே தேகமெங்குந் தினவுண் டாகிச்
சற்றி ருமலாக்காய மிகவெ ளுக்கும்
கோனுமே கோழையொடு மூச்சு மாகும்
கொடியதா பச்சுரமாய்க் குளிரு ண்டாகும்
வேனுமே மிகவீங்கி வெடிப்புண் டாகும்
மேனியெல்லாம் வெவ்வனல்போ லழன்று காணும்
தேனுமே போலவே சிறுநீ ராகும்
சேட்பவிஷ பாகமென்றே செப்பி னாரே.
600

திரிதோஷவிஷபாகம்

செப்பவே சத்தியொடு மூர்ச்சை தாகம்
சிறுநீர்தா னடிக்கடிக்கு மேற்சு வாசம்
வெப்பவே விக்கல் நித்திரை மயக்கம்
வீக்கமொடு மேல்வெளுப்பு மேனி கண்ணல்
அப்பவே அருசியொடு அதிசா ரந்தான்
அடிக்கடிக்குப் பிரமைபோ லலைவுண் டாதல்
திப்பவே வாய்நீரு மிகவே ஊறல்
திரிதோஷ விஷபாகஞ் செப்பி னோமே.

601

அக்கினிவிஷபாகம்

ஓமென்ற வாதபித் தங்கள் மிஞ்சல்
உறுதியாங் கோழையொடு சத்தி மூர்ச்சை
வேமென்ற வாய்தனிலே நீர்தான் வீழ்தல்
வீக்கமாய்க் கிடைகொடா தேபி ரட்டல்
வாமென்ற உடம்புவற்றி வயிறு ஊதல்
மலசலமுஞ் சிக்கிசிக்கி வந்து வீழ்தல்
பாமென்ற பக்கத்தில் வலியுண் டாதல்
பாரமா மக்னிவிஷ பாகந் தானே.

602

எரிவுவிஷபாகம்

பாரமாய்க் குறித்தவிட மிரத்தம் வீழ்தல்
பழுப்பான கோழையொடு சுவாசங் காணல்
மாரமாய் மார்புகுறுக் கிட்ட டைத்தல்
மகாவிரணங் கண்டுமே மாமிசந் தோற்றும்
கோரமாய்ச் சடத்திலே குற்றலுண் டாகும்
குணக்கேடாங் குன்மம்போற் குடல்பி ரட்டும்
ஆரமா யதிசாரம் வீக்க மாகும்
அழலுமே யெரிவுவிஷ பாகந் தானே.

603

கத்தவிஷபாகம்

எரிவுண்டாய்ச் சுரமோடு மயக்கஞ் சோம்பல்
எழிலுடம்பு தான்கனத்தல் மூர்ச்சை யாதல்
தரிவுண்டாய்த் தலைவலியுஞ் சேட்டு மந்தான்
தாகமே மிகுதியுமாம்ப் பலமாம் வார்த்தை
தெரிவுண்டாய்த் தேகத்திற் குளிருண் டாதல்
சீதமாய் வயிறுவிட்டுக் கடுப்புக் காணல்
சரிவுண்டாய்ச் சவம்போல நாற்ற மாகும்
தனித்ததோர் கத்தவிஷ பாகந் தானே.

604

சன்னிவிஷபாகம்

கத்தமாய்ச் சேறுபோல் வயிறு போகும்
கனவிரணந் தனில்ரத்த மிகவே காணும்
சுத்தமாய்ச் சுவாசமொடு சுரம யக்கம்
சூட்டில் வெந்த கொள்ளெனவே மேனி நாறும்
அத்தமா யந்தமுக வீக்கங் காணும்
அதிகமாம் வியர்வையொடு அசதி யாகும்
பித்தமாய் மயக்கமொடு பிதற்ற லாகும்
பெருகுசன்னி விஷபாகம் பேச லாமே.

605

சாத்தியம் அசாத்தியம்

பேசவே சாத்தியமாம் விஷபா கந்தான்
பேரான வாதபித்த சேட்ப மாகும்
ஏசவே யெரிவுவிஷ பாகத் தோடு
இதுநாலுஞ் சாத்தியமா மசாத்தி யந்தான்
தேசவே திரிதோஷ சன்னி வாதம்
திகழற்ற விஷபாக மக்னி தானும்
நாசவே நாலுந்தா னசாத்ய மாகும்
நாதாக்கள் சொன்னபடி நாட்டி னோமே.

606

விஷபாகரோகநிதானம் முற்றிற்று

17. கிராணிரோகநிதானம்

நாட்டவே கிராணிதா னிருப்பத் தைந்தாம்
நலமாகு முற்பத்தி பெயரைக் கேளாய்
வாட்டவே வாதமாம் பித்தகி ராணி
வகையான சேட்பமொடு தொந்த கிராணி
ஊட்டவே ஊஷ்ணவாயுக் கிராணி யோடு
உயர்கின்ற அற்றறா வாயுக் கிராணி
மூட்டவே மூலவாய் வுக்கி ராணி
முதிர்குன்மக் கிராணிகெர்ப்பக் கிராணி யாமே. 607

ஆமெட்டுக் கிராணியொடு சங்கிரகக் கிராணி
அசதியாம் வாதாதி சார மாகும்
பாம்பித்த வதிசாரஞ் சேட்பாதி சாரம்
புணர்ச்சியாம் திரிதோஷ வதிசா ரந்தான்
தாமேசுராதி சாரம்சன்னி பாதி சாரம்
தாக்கான தோஷதி சார மாகும்
வேமேவியத் தூம மசீரணத் தூமம்
விற்பட்ட மோடுமிரத சேடந் தானே, 608

தானேன்ற வாதமாம் விசூழி யாகும்
தனிப்பித்த விசூழியொடு சேட்ப மாகும்
ஏனென்ற பேதியது இருபத் தைந்து
எழிலான உற்பத்தி இயம்பக் கேளா
மானென்ற வயிற்றின்மந்த மிருக்கும் போது
மாப்பண்ட மதுரங்கள் மங்கை கோஷ்டி
ஊனென்ற மாமிசங்கள் வேகாப் பண்டம்
உண்டதாற் கிராணிவந்துற் பவிக்குங் கண்டாய். 609

கண்டாயோ நரர்செய்த பாவத் தாலும்
கடூரமாஞ் சிவனடியார் தங்கள் வேள்வி
திண்டாயோ சிவனோடு சுப்பிர மண்ணியர்
தேவியொடு மால்சாத்தன் சிங்க வாகி

விண்டாயோ இவர்பூசை விடுத்த லாலும்
மித்துருவாம் பந்துஜன உறவின் பேரை
பண்டாயோ பசிக்கவைத்துப் பொசிக்கை யாலும்
பருகுமே கிராணியென்ற பாழா நோயே.
610

வாதக்கிராணி

நோவாகும் நடுவயிறு உப்பிச மாகும்
நுட்பமாம் பசியெடுக்கு முடம்பு லர்த்தும்
தீவாகுஞ் சீதமாய் வயிறு போகும்
சிதறுமே மலந்தானும் வாய்வு தன்னால்
காவாகுங் கட்டியாய் வயிற்றிற் காணும்
காற்றுமே மிகக்கழியுங் கறுப்பு மாகும்
பாவாகும் பழவெல்லம் போலே வீழும்
படுவாத கிராணியிடப் பண்பி தாமே.
611

பித்தக்கிராணி

பண்பாக நடுவயிறு நோக்கா டாகும்
பலிநானா விதமாக வயிறு போகும்
மண்பாக வயிற்கழியு முறக்க முண்டாம்
மாசற்ற நரம்பெல்லாந் தளர்ந்து தொங்கும்
உண்பாக வூனெல்லாங் கழிந்து போகும்
உரகொடுக்கும் மருந்தழியு முணர்ச்சி கேடாம்
பெண்பாகப் பெண்தலைவெட் டுந்து போகும்
பித்தத்தின் கிராணியெனப் பேச லாமே.
612

சேட்பகிராணி

பேசியே யழல்போல நாற்ற மாகும்
பெருகவே வெளுப்பாக மலந்தான் போகும்
காசியே கைகாலுந் தளர்ச்சி கேடாம்
கள்ளமாய்க் காச்சல்வருங் கண்சி வக்கும்

நாசியே நாவோடு வரட்சி காணும்
நயந்துமே பாளையாய்க் குடல்போல் வீழும்
ஆசியே யறிவில்லா தசதி யாகும்
அதட்டியே விக்கல்வருஞ் சேட்பந் தானே.

613

தொந்தகிராணி

வருகுமே தாபமுடன் காச்சல் தானும்
மகத்தான வேலைபால் வயிறி ரைச்சல்
தருகுமே தலைவலியுங் குளிர்ந டுக்கல்
தனிப்பால்பால் மிகக்கழியு மடிக்க டிக்கு
பருக்குமே பகழியெனப் பாயும் வாய்வு
பரிதாப முழலையொடு எரிவு மாகும்
கருகுமே கால்கையும் புறங்கால் வீங்கும்
கசிதொந்தக் கிராணியெனக் கண்டு கொள்ளே.

614

உஷ்ணவாயுக்கிராணி

கண்டுகொள்ளு மலந்தனையே யிறுக்கிக் கொண்டு
கனமாக வயிறிரைந்து உப்பிசம தாகும்
பண்டுகொண்ட அசனந்தான் செரித்தி டாது
பாங்கான புளித்தேக்கும் வாய்நீ ரூறும்
விண்டுகொண்ட கால்கையு மசதி யாகும்
மேனியுமோ மிகக்கருகி மெலிவு மாகும்
உண்டுகொண்ட நாள்மூன்றிற் பேதி யாகும்
உணரூஷ்ண வாயுவென்றே யுரைக்க லாமே.

615

அர்த்தராவாய்வுக்கிராணி

உரைக்கவே பத்தியந்தான் கொண்ட போது
உறுதியாய் மலந்தள்ளிப் புளித்தேக் கிட்டுத்
தரைக்கவே சத்தியோடு அருசி யாகும்
தாகமுண்டாய்த் தானிருக்குந் தளர்ச்சி யாகும்

விரைக்கவே விலாசமாகும் மிசிவ மாகும்
மேனியெல்லாம் வெளுப்பாகும் விக்க லுண்டாம்
அரைக்கவே யசனந்தான் செரித்தி டாது
அர்த்தார வாயுவிட வாண்மை தானே. 616

மூலவாய்வுக்கிராணி

ஆண்மையாய் வாய்வுதனில் மிகப்பி ரண்டு
அடிவயிற்றைப் பிரமியே மலம்வ ரண்டு
தாண்மையாய் சடம்வற்றி மந்திப் புண்டாய்ச்
சத்தமாய்த் தணியாத இரைச்ச லாகும்
கேண்மையா யடித்துரையிற் குற்ற லுண்டாம்
கெட்டியாஞ் சரீரமது கிழமு மாகும்
மூண்மையாங் குதந்தன்னின் முளைபோல் தோனு
மூலவாயுக் கிராணியென மொழிய லாமே. 617

குன்மக்கிராணி

மொழியவே தலைதானுங் கனத்தி ருக்கும்
மொழிஉறக்க முண்டாகும் பீளை காரும்
தழியவே வயிறெல்லா முலாவிக் குற்றும்
சமரசமாய்த் தான்வியர்க்குந் தலைந டுக்கும்
உழியவே உடம்பெரிப்பு முழலை யாகும்
உப்பியே வயிறதுவு மிறைஞ்சிப் போகும்
வழியவே வயிற்றிலொரு புறத்திற் றானும்
களைச்சுரெகைஷ போடுகுன்மக் கிராணி யாமே. 618

கெர்ப்பக்கிராணி

வளைச்சுமே வயிர்கழியங் கடுப்பு முண்டாம்
வாடியே கால்கையும் வெச்சென் றாகும்
களைச்சுமே கண்தானு மஞ்ச ளாகும்
கழியுமே பலவிதமாய்க் கடின தாகம்

உளைச்சுமே கெர்ப்பந்தா னுயருங் காலம்
உறுவன்னம் வாந்தியா யுழலை யாகும்
முளைச்சுமே கெர்ப்பந்தான் கீழே வீழில்
முடுகாது கெர்ப்பமாங் கிராணி தானே.

619

ஓட்டுக்கிராணி

தானான படுக்கையே இதமாய்க் காணும்
வலிப்புமே யிளைப்பாகத் தானி ருக்கும்
வானான வயிறுவடி மெத்த வாகும்
மார்போடு விலாமுகுது வலியுண் டாகும்
ஓனான துட்டையாய் வயிறு போகும்
ஒருமித்துப் போகாமல் மலமுஞ் சிக்கும்
தோனான தொப்புள்தனில் வளையம் போலச்
சுட்டிடவே சுருக்கமா மொட்டுக் கிராணி

620

சங்கிரகக்கிராணி

சுருக்கமா யுதரமது பொருும லாகிச்
சோறுசெரி யாக்கழிச்சல் பானச் சூடாய்
குருக்கமாய்க் குதந்தனிதில் நனைத லாகிக்
குருவியர்வைச் சுரமோடு அனலாய்க் காணும்
மருக்கமாய் வாந்தியாய் மனம றுக்கு
மார்பிலே கோழைகட்டு மயக்க மாகும்
சருக்கமாய்க் கண்கள்ரெண்டுங் கழற்சி யாகும்
சங்கிரகக் கிராணியென்றே சாற்ற லாமே

621

வாதாதிசாரம்

சாற்றவே வயிறதனைப் பொருமி நொந்து
தனிச்சூலை போலவே வாய்வு தோன்றும்
ஆற்றவே நீரிறங்கா அசனந் தானும்
அரைவாகி சீரணமாய்ப் பேதி யாகும்

மாற்றவே மஞ்சளித்துக் கருக்கும் பேதி
மகத்தான துர்க்கந்தம் வெளுப்பு மாகும்
நீற்றவே நெஞ்சுதனிற் புளித்தேக் காகும்
நேரான வாதாதி சார மாமே. 622

பித்தாதிசாரம்

ஆமென்ற மலந்தானு மஞ்ச ளித்து
அதிகமாய் வரண்டுமே நுரைதான் பாயும்
வாமென்ற வாய்வதுதான் மிகவுண் டாகும்
வற்றியே உடம்பெங்குங் கால்கை வீங்கும்
காமென்ற கலங்காச்சல் போலக் காயும்
கருதியே உடம்பெங்கும் வெண்மை யாகும்
தாமென்ற தலைவலித்து வாந்தி யாகும்
சமரசமாம் பித்தாதி சார மாமே. 623

சேட்பாதிசாரம்

சாரமாய் நாற்றந்தான் மிகவுண் டாகித்
தவளம்போ லேவெளுத்து நுரையு மாகி
வாரமாய் வயிற்வலித்துப் பேதி யாகும்
மாமிசந்தான் சத்துசத் தாய்வி டுக்கும்
ஆராம யரூசியொடு இருமல் சுவாசம்
அழுந்திமயிர்க் கூச்செறிந்தா சனங்க டுத்தல்
தீரமாய்த் தேகமெங்குந் தினவுண் டாகும்
சேட்பாதி சாரமென்றே செப்ப லாமே. 624

திரிதோஷ அதிசாரம்

செப்பவே உள்ளெரிவாய் புறங்கு ளிர்ச்சி
செழுமைவிக்கல் வாந்தியோ டிருமல் சுவாசம்
துப்பவே வயிறிரைந்து பொரும லாகிச்
சுருட்டியே வயிறதுவும் வலித்துக் காணும்

இப்பவே இரத்தசீ தக்க ழிச்சல்
எழிலான நித்திரையு முடல்ந டுக்கும்
உப்பவே உடற்குற்று உணர்ச்சி இன்மை
உறுகுதிரி தோஷஅதி சார மாமே.
625

சுராதிசாரம்

அதிசார மூர்ச்சையொடு பிரலா பந்தான்
அடித்தொடையு மசந்துமிகக் கடுப்புண் டாகும்
கதிசாரக் காச்சலொடு சத்தி தாகம்
கடுப்புண்டாஞ் சரீரமெங்குங் காந்த லாகும்
ஓதிசாரஞ் சிறுநீர்தன் னொடுக ழிச்சல்
ஊஷ்ணமாய் ஓயாத இரும லாகும்
துதிசாரம் பலவர்ண மாகும் பேதி
சூட்சமாஞ் சுராதியெனும் அதிசார மாமே.
626

சன்னிபாதாதிசாரம்

சுரமாகி உடம்பெல்லா மிகவே காயும்
சுவாசமா யிருமலொடு விக்க லாகும்
அரமாகி நாவரண்டு அழற்சி யாகி
அதிசார மாய்க்கழிந்து ஆலோ பிக்கும்
மரமாகி உடம்யெல்லாந் திமிருண் டாகும்
வயிறுவலி அடிக்கடிக்கும் மயக்க மாகும்
உரமாகி உடம்பெங்குங் குளுமை யாகும்
உறுதிசன்னி வாதாதி சார மாமே.
627

தோஷாதிசாரம்

உறுகின்ற நீருந்தி வழிதான் புக்கில்
உண்ணீரதா னரம்புபரை தனில்இ ழிந்து
அறுகின்ற வந்நரம்பை அழுகப் பண்ணி
அபானவாய் வொடுகூடி மலப்பைக் குள்ளே

புறுகின்ற தான்விகுத்து மூலாக் கினிக்கீழ்
பொருந்தியதோ ரசனத்தைச் செரிக்கொட் டாது
மறுகின்ற வயிற்றிரைந்து கழிச்ச லாகும்
மகாநாற்ற முண்டாந்தோ ஷாதி சாரம்.
628

விதூரம அசீரணம்

உண்டதோ ரன்மெல்லாம் வாந்தி யாகும்
உறுதியாய முகலாய்ப் புளித்தேக் காகும்
வண்டதோர் வயிறுப்பும் பேதி யாகும்
மகத்தான இரைச்சலொடு புளிப்புப் பேதி
முண்டதோர் முகங்கறுக்கு முடலம் வாடும்
முதிர்மயக்காம் புத்தியது முன்பின் றோணா
விண்டதோர் மிகவாதை கிடைப்பி ரட்டும்
மிகத்தண்ணீர் தவிப்பெய்தும் விதூரமஅசீர ணமாமே.
629

தூரம அசீரணம்*

எய்தியதோர் பதார்த்தமது வேதுந் தக்கா
தெடுக்குமே யடிக்கடிக்கு வாந்தி தானும்
பெய்தியதோர் புளித்தேக்காம் வாயெ ரிக்கும்
பேராள வுதடோடு பிரட்டும் நாக்கு
கைதியதோர் கால்கையு முடலெ ரிக்கும்
கண்டத்தில் வியர்வையுமாய்க் காயம் வற்றும்
சைதியதோ ரல்லிபோற் றளர்ச்சி யாகும்
சயித்தியமாந் தூரமமென்ற அசீரணந் தானே.
630

விற்பட்ட அசீரணம்

சயித்தியமாம் மிகவுழற்றுங் கோழை யாகும்
சடமெங்கும் வெண்மையாய்க் கண்ணுந் தாழும்
பயித்தியமாய் வாந்தியது வெளுப்பு மாகும்
பசிக்குமே யடிக்கடிக்கு நுரையாம் பேதி

உயித்தியமா யிருமலுடன் சுவாசந் தோணும்
உறுகின்ற துயரமாய்த் தலைபி ரட்டும்
வயித்தியந்தான் செய்தாலும் வசப்ப டாமல்
மறுக்குமே விற்பட்ட வசீரணந் தானே.

631

மிர்தசேடஅசீரணம்

மறுக்குமே மனமறுத்து வாந்தி யாகும்
மயக்கமாய் மூர்ச்சையாய் வசக்கே டாகும்
கறுக்குமே நாக்கோடு கண்கள் மூக்கு
காயந்தா னுலர்ந்துமே கறுத்துப் போகும்
வெறுக்குமே யன்னத்தைத் தண்ணீர் தேடும்
வெளுப்போடு கறுப்பாகப் பேதி யாகும்
உறுக்குமே கண்களை யுருட்டிப் பார்க்கும்
உதறுமே மிர்தசேட வசீரணந் தானே.

632

சூழிவாத விசூழி

தானான விசூழியது பிராதக் காலம்
தனிலுதித்து வாதநா டியுமிக் காகும்
வானான வயிறிரைந்து ஊதிக் கொள்ளும்
மாசிலா மேனியது கறுப்பு மாகும்
கானான கண்விழிதான் திறந்தே நிற்கும்
கருத்தெல்லாங் கலங்கியே காய்ச்ச லாகும்
கோனான குடல்குமுறிப் பிரட்ட லாகும்
கொடும்வாத விசூழியிட குணம தாமே.

633

பித்தவிசூழி

குணமாகப் பகற்போது குதிகொண் டோங்கிக்
கோபித்துப் பித்தநா டியுமே மீறி
நிணமான நேருந்தன் னுடல முத்தும்
நேரான மூர்ச்சைவிக்கல் நிறங்குன் றாது

வணமான வாய்பிதற்றி வாந்தி யாகி
மயங்கியே கிடைகொடா தேபி ரட்டும்
பிணமான ததுபோலப் பிரலா பிக்கும்
பித்தமாம் விசூழியென்றே பேச லாமே.
634

சேட்பவிசூழி

பேசவே நாடியது அடங்கிக் காணும்
பிறிந்திடுமே கங்குல்தனி லிரண்டாஞ் சாமம்
நாசவே உயிரதுவும் நாபிக் குள்ளாம்
நடைகொ டாதேபிரட்டுங் கொறுக்கை வாங்கும்
மேசவே கண்விழிமே லாகித் தாழும்
மிடைபடா பேதிதண்ணீர் மேர்போற் சாய்க்கும்
தேசவே தேகமெங்கு மிகவெ ளுக்கும்
சேட்டுமமாம் விசூழியென்று செப்பு வீரே.
635

செப்பவே கிராணிதா னிருபத் தைந்தின்
செய்தியெலாந் தெளிவாகத் திறந்திட் டேன்யான்
ஒப்பவே சதாசிவன்றான் சொல்லக் கேட்டு
உகப்பான நாதாக்க ளுரைகள் கேட்டு
தப்பிலா தன்வந்திரி சொல்லக் கேட்டுத்
தாயான பராபரையாள் சொல்லக் கேட்டு
உப்பவே யூகியென்ற முனியாம் யானே
உலகத்தோர் தாம்பிழைக்க உரைசெய் தேனே.
636

சாத்தியம்

செய்திட்ட சாத்தியத்தைச் செப்பக் கேளாம்
சீரான வாதமொடு பித்தக் கிராணி
உய்திட்ட உஷ்ணவாய்வுக் கிராணி யோடு
உயர்ந்தவற்றறா வாய்வுமு லக்கி ராணி

செய் திட்ட கெர்ப்பமாங் கிராணி யோடு
கெடிவொட்டுக் கிராணிபித் தாதி சாரம்
வெய்திட்ட சுராதி சாத்தி னோடு
விதூமமொடு தாமசீ ரணமுஞ் சாத்யம். 637

அசாத்தியம்

அசாத்தியமாங் கிராணியை யறியக் கேளாய்
அயமாமி சக்கிராணியொடு தொந்தக் கிராணி
தசாத்தியமாஞ் சங்கிரகக் கிராணி யோடு
தனித்த வாதாதிசேட் பாதி சாரம்
துசாத்தியமாந் திரிதோஷம்சன் னியாதி சாரம்
தோஷாதி சாரம்விற் பட்டவ சீரணம்
மிசாத்யமா மிர்தசேட வாதபித்த விசூழி
மெலிசேட்ப விசூழியுமே அசாத்யந் தானே. 638

கிராணிரோகநிதானம் - முற்றிற்று

18. மூலரோகநிதானம்

தானான மூலமது இருபத் தொன்றும்
சதாசிவன்றான் பராபரியாட் கருளிச் செய்ய
பானான பராபரியாள் நந்திதே வர்க்குப்
பாஷிக்க நந்திதன்வந்தி ரிக்குச் சொல்ல
கோனா தன்வந்திரிஅசு வினிக்குச் சொல்லக்
குணமான அசுவினியும்அகஸ் தியருக்குச் சொல்ல
ஆனான அகஸ்தியரும்புலஸ் தியர்க்குச் சொல்ல
அவர்தானே தேரையருக் கருள்செய் தாரே.

639

அருள்செய்தார் புலஸ்தியர்தான் தேரை யர்க்கு
ஆண்மையாந் தேரையமா முனிவன் றானும்
பொருள்செய்தார் யூகிமுனி யாமெ னக்குப்
போக்கெல்லாம்வகை வகையாய்ப் பிரித்துச் சேர்த்து
தெருள்செய்த உலகத்தோர் பிழைக்க வென்று
சிவமான சித்தர்களைத் தொழுது கேட்டு
நருள்செய்து நலியாமற் பிழைக்க வென்று
நாட்டினே னாயுருவே தத்தைத் தானே

640

தத்தையா மதிகமாங் குளிரி னாலும்
தரியாத வழற்சியாற் கிரந்தி யாலும்
புத்தையாம் பொருந்தாத உஷ்ணத் தாலும்
புணர்ச்சியாய்க் கோபத்தாற் சலிப்பி னாலும்
கத்தையாம் வெகுகாமம் வேண்ட லாலும்
கடினமா முப்பாலுங் காரத் தாலும்
மொத்தையாம் வெகுதனங்கள் போன தாலும்
மூலம்வந் துற்பத்தி முனையுந் தானே.

641

முனையாக மூத்தோரை வைத லாலும்
மோசங்கள் பண்ணியே கற்ப ழித்தும்
நினையாக நினைவிலொன்று வாக்கி லொன்றும்
நேர்ந்தபடி சொல்கின்ற நிட்டூ ரர்க்கும்

பனையாகப் பரதேசி பந்து வானோர்
பசித்திருக்க வுண்டதோர் பாத கர்க்கும்
தனையாகச் சமாதானந் தவிர்க்கின் றோர்க்கும்
சண்டாள மூலம்வந்து சனிக்குந் தானே.
642

மூலப்பெயர்கள்

சனிப்பான மூலத்தின் பெயரே தென்னில்
சமரசமாம் நீர்மூலஞ் செண்டு மூலம்
முனிப்பான முளைமூலஞ் சிற்று மூலம்
மூர்க்கமாம் வரண்மூலம் ரத்த மூலம்
தினிப்பான சீமூல மாழி மூலம்
திணியான தமரகமா மூலத் தோடு
வனிப்பான வாதமொடு பித்த மூலம்
வகையான சேட்டுமத்தின் மூல மாமே.
643

வகையாகுந் தொந்தமா மூலத்தோடு
வளர்கின்ற வினைமூலம் மேகமூலம்
பகையாகும் பவுத்திரமா மூலத்தோடு
படர்கிரந்தி மூலமொடு குதையாமூலம்
புகையாகும் புறமூலஞ் சுருக்குமூலம்
பொருகின்ற சவ்வாகு மூலத்தோடு
துகையாகு மூலந்தானிருபத் தொன்றும்
சூட்சுமா யிதனுடைய சுருபங்கேளே.
644

நீர் மூலம்

கருபங்கேள் தொப்புளிலே மிக வலித்துச்
சுருண்டுமே கீழ்வயிற்றைப் பொருமிக் கொண்டு
வருபங்கேள் மலம்வரண்டு வாய்நீ ரூறும்
வாய்வுதான் பரிகையிலே நுரைபோற் காணும்

துருபங்கேள் பிடவைதனிற் றோய்வுமாகும்
சுருக்காக மலம்வருதல் போலிருக்கும்
நிருபங்கேள் அடிக்கடிக்கு நீராய்ப் போகும்
நிலையான நீர்மூலம் நினைவாய்ப் பாரே. 645

செண்டு மூலம்

நினைவாகக் கருணையிட முளையே போல
நிமிர்ந்தெழுந்து நாள்மூன்று நிற்பமாகிக்
கனவாகக் கன்றியே மிகவலிக்கும்
காரந்தான் போட்டவுடன் களையாய் வீழும்
இனவாக இரத்தமொடு தண்ணீர் காணும்
இறுகியே மலந்தீயு மிரைச்ச லாகும்
தினவாக வாசனத்தைச் சுருங்கிக் கொள்ளும்
செயசெண்டு மூலத்தின் திறமைதானே 646

முளை மூலம்

திறமாக வாசனத்திற் கடுப்புமுண்டாம்
திரட்சியாய்த் தடித்தெரிவு செயலுங்காணும்
அறமாக அடிவயிறு கல்லுப்போலாம்
ஆசனந்தான் மிகச்சுருங்கித் தினவுமுண்டாம்
குறமாகக் குதிகொள் ரத்தம்பீரிறங்கும்
கூசாத இரைச்சல்மிக வெப்பமுண்டாம்
மறமாக மஞ்சள்முளை போலெழும்பும்
மலந்தீயு முளைமூல வண்மைதானே 647

சிற்று மூலம்

வண்மையா யுடம்பெரியும் மயக்கமாகும்
வயிறுதான் பளபளென்றும் வலுவாய்க்குற்றம்
இண்மையாய்க் குறுகுறென்றே இரைச்சலாகும்
இசிவுடனே பொருமலா யிளைப்புமாகும்

திண்மையாய்ச் சித்துமுளை பலவுண்டாகும்
தேகமெங்கும் வெளுப்பாகும் செயலுங்காணும்
வெண்மையாய் வெளுத்துமே பசியிராது
மேனிகண்ணுஞ் சிற்றுமுளை மிடுக்குந்தானே. 648

வரள் மூலம்

மிடுக்காக மலத்தையே யிறுக்கிக் கொள்ளும்
மிகுவாக ரத்தமது துளியாய் வீழும்
அடுக்காகச் சடமுலர்த்தியழல் கழிக்கும்
ஆண்மைதான் மிகப்பேசிச் சண்டை கொள்ளும்
உடுக்காக வுள்ளிருக்கும் முளைகள் தானும்
ஒருவருக்கும் தெரியாது ஒடுக்கி வைக்கும்
திடுக்காக நாள் தனிலே பெலம் குறையும்
செயலழிக்கும் வரண்மூலச் சேதி தானே. 649

குருதி எருவாய்முளை (இரத்த மூலம்)

சேதியாய் தொப்புள்தன்னில் வலித்து நொந்து
சிறுகதிர்போற் பீறிட்டு ரத்தம் வீழும்
மேதியாய் மேனிவற்றி வெளுத்துப் போகும்
மிக்கைகா லசந்துமே சோகை யாகும்
மாதியாய் மார்பிளக்குந் தலைநோ வுண்டாம்
மயக்கந்தான் மிகுதியாய்த் தள்ளிப் போடும்
நாதியாய்க் கண்ணிரண்டு மஞ்சள் போலாம்
நலியும்ரத்த மூலத்தின் பண்பு தானே. 650

கீழ் எருவாய் நோய்

நண்பாகக் குதங்கடுத்து எரிப்புத் தோன்றும்
நாற்றியே சீயோடு தண்ணீர் காணும்
மண்பாக மாமிசங்கள் கரைந்து கொண்டு
வடிவமெல்லாம் வெளுத்துமே மஞ்ச ளாகும்

மெண்பாத மேவும்வாய் நீர தாகும்
மிடுக்கான நடைகுறையு மெலிவு மாகும்
திண்பாகச் சிறுநீர்தான் மஞ்ச ளிக்கும்
சீமூலந் தன்னுடைய சேதி யாமே.
651

ஆழி எருவாய் நோய்

சேதியாய் நீண்டவள்ளிக் கிழங்கு போலத்
திமிர்ந்துமே யேகமுள்ள யாகக் காணும்
நீதியாய் நீரோடுஞ் சீயு மிரத்தம்
நிரனிறையாய்த் தோன்றியே மலமும் சிக்கும்
காதியாய்க் காரங்கள் ஏற்றி டாது
கடிய பலவீனமாந் தேகந் தானும்
ஆதியாம் அசத்ததனை யொறுத்துக் கொல்லும்
ஆழி மூலத்தினிட ஆண்மை தானே
652

தமரக எருவாய் நோய் (தமரக மூலம்)

மூலமாம் பவனத்தி லுலக்கைப் பூண்போல்
முதிர்ந்ததா மரைப்பூப்போல் மலர்ந்தி ருக்கும்
நூலமாம் நொறுக்காக மலமுங் காணும்
நுணுக்கேறி யிரத்தமொடு தினவு முண்டாம்
வாலமாய் வயிறிரைந்து நீராய்ப் போகும்
வயிறூதிப் பசியில்லா மந்தங் காணும்
தாலமா மேல்மூச்சாய் அசதி உண்டாம்
தமரகமா மூலத்தின் தன்மை தானே
653

அழல் எருவாய் நோய் (பித்த மூலம்)

தலைவலிதான் மிகஉண்டாம் பருத்திக் கொட்டை
தன்போலு நெற்போலு முளைஉண் டாகும்
மலைவலியாய் மலஞ்சிக்கி உருண்டு ருண்டு
மாவுண்டைத் திரித்திரியாய் இரத்தஞ் சீழாய்

குலைவலியாய்க் குதங்கடுத்து எரிவு மாகிக்
கூச்சமாய்த் தாகமொடு வியர்வை யாகும்
தலைவலியாய்த் துக்கமுமாய்க் கோப மாகும்
சொற்பல வீனமும் பித்த மூலமாமே.

654

வளி எருவாய் நோய் (வாத மூலம்)

தண்மைகோவைப் பழம்போற் குதஞ்சி வப்புத்
தனிலடப்பம் பூப்போல முளை வளர்ந்து
கண்மை கறுப்பாய் மிருது வாயிருக்கும்
கடுப்போடு தினவுகுற்றல் திமிர்த்த லாகும்
உண்மைமயிர் தான்முளைத்து மலஞ்சிக் கென்று
மகத்தாகக் கறுத்துமெத்த திரண்டு காணும்
வெண்மை வயிறுவிட்டுமே குடலுள்வலியாகும்
மிக்கதலை வலிவாத மூல மாமே.

655

ஐய எருவாய் நோய் (சிலேத்தும மூலம்)

ஈனமாங் குதத்தில்முளை வெள்ளை யாகும்
எந்நேரந் தினவதிக மெரிவு மாகும்
கானமாங் கடுப்புடனே சீழுந் தண்ணீர்
கனமான வலியாகி மலந்தா னோங்கும்
தூனமா மூத்திரந்தான் சூடுண் டாகும்
சொற்குண பேதமாகுந் தாது நட்டம்
பானமாம் பாண்டுவொடு அருசி யாகும்
பரவுசேத் துமமூலப் பாங்கு தானே.

656

கலப்பு எருவாய் நோய் (தொந்த மூலம்)

பாங்கான குதமிறுகிக் கோழிச் சூடு
பதித்ததுபோல் தானிருக்கும் நடக்க வொட்டா
வாங்கான வயிறுமெத்தப் பொரும லாகும்
வருத்தமொடு வியர்த்துமே மிகந டுக்கம்

தாங்கான தவித்துமே தாக மாகும்
　　தரியாமல் வயிறதுவும் பேதி யாகும்
தீங்கான செடமட்டை போற்சு ருக்கும்
　　திடுக்குமே தொந்தமென்ற மூலந் தானே.

657

வினை எருவாய் நோய்

திடுக்கிட்டுச் சோறுசெரி யாமை யாகும்
　　தீபனந்தான் இல்லாமல் புளித்தே காகும்
அடுக்கிட்ட அடிவயிற்றிற் குற்ற லுண்டாம்
　　ஆங்காரக் கோபமொடு மலமுங் கட்டும்
கடுக்கிட்ட கைகாலு மோச்ச லாகும்
　　கனமாக வயிறிரைந்து காந்த லுண்டாம்
வெடுக்கிட்டு நரம்பெல்லா மிசிவு மாகும்
　　மிகக்கடுக்கும் வினைமூல விவரந் தானே.

658

மேக எருவாய் முளை (மேக மூலம்)

வினையா லிங்கத்தில் வெள்ளை யூற்றும்
　　மெத்தவாய்க் குதந்தன்னில் உதிரஞ் சாய்க்கும்
சனையா சத்தமதாய்க் கழிச்ச லாகும்
　　தாக்கான சிறுநீரு மெரிச்ச லாகும்
பனையாகப் பருக்குங்கால் தனைவ லிக்கும்
　　பாரமா யுடம்பெங்கும் திமிருண் டாகும்
முனையாக மூத்திரந்தான் மதுர மாகும்
　　மூர்க்கமா மேகமென்ற மூலந் தானே.

659

பவுத்திர எருவாய் நோய்

மூர்க்கமாய்ப் பவுத்திரத்திற் கட்டி யாகி
　　மூத்திரந்தா னடிக்கடிக்கு அறுவ லாகும்
கார்த்தமாங் கால்கையுங் கனப்பு மாகும்
　　கனகனக்குங் குதங்குய்யஞ் சாவற் சூடு

பூர்க்கமாம் பூப்போல முளைகள் காணும்
பொருங்கோவைப் பழம்போலச் சிவப்பு மாகும்
மார்க்கமாங் காரந்தான் போடத் தீரும்
பவுத்திரமா மூலத்தின் பண்பு தானே.

660

கிரந்தி எருவாய் நோய்

பண்புதான் லிங்கத்திற் புண்ணு மாகும்
பாரமாய்க் கால்கையுங் கடுப்பு முண்டாம்
குண்பாதக் குதத்துக்குள் இரண மாகிக்
கொடிக் கொடியாய் முளையுண்டாய்ச் சீழும்ரத்தம்
தண்புதான் தண்ணீரும் பெருக வுண்டாம்
தணல்போல எரிவோடு கடுப்பு மாகும்
கெண்புதான் கெட்டியாய் மலம் வரண்டு
கீற்றாக வெடித்திறங்கும் கிரந்தி மூலம்

661

குத எருவாய் நோய்

இறங்குமே மூங்கிலிடக் குருத்துப் போல
இழுத்துமே தள்ளிடிலோ உள்ளே போகும்
பிறங்குமே சீழொடு ரத்தம் பாயும்
பெருகியே வயிறுமெத்தக் கனத்துக் கொள்ளும்
அறங்குமே கால்கையும் அதப்பு மாகும்
அடிக்கடிக்கு நாவரண்டு தண்ணீர் தேடும்
குறங்குமே மிகவலிக்குங் கோப முண்டாம்
கொடியகுத மூலத்தின் குணம தாமே.

662

புற எருவாய் முளை

குணமதா யெண்ணெய்போற் தண்ணீர் போலும்
கூற்றான கடுப்போடு சீழு முண்டாம்
திணமகா யத்தின்வெடுக்குந் திமிர்ப்பு முண்டாம்
சிறுசிறங்காய் மேலெல்லாஞ் சொறியு மாகும்

பணமதா யாசனத்திற் பகுப்பு போலப்
பாங்கான விதனமாய்ப் படுக்கை கூடா
பிணமதாய் முகமெல்லாம் வாட்ட முண்டாம்
பேரான புறமூலப் புதுமை தானே.

663

சுருக்குமூலம்

புதுமையா யாசனத்தைச் சுருக்கிக் கொண்டு
பொருங்குட லில்வலியோடு பொரும லாகும்
கதுமையாய்க் குதந்தன்னிற் றடிப்புண் டாகும்
கழலுமே தண்ணீரும் ரத்தந் தானும்
வெதுமையாய் வெவ்வனல்போல மூன்று காணும்
வேற்றுடம்பாய்த் தான்வெளுத்து வெறிப்புண் டாகும்
பதுமைபோல் தேகமெங்கு மசவு கூடாப்
பண்பான சுருக்கென்ற மூலந் தானே.

664

சவ்வுமூலம்

சுருக்கியே முதுகுதண்டி லுற்ப வித்துத்
தொப்புளிலே தாமரைப்பூப் போல்ம லர்ந்து
அருகியே குற்றிலா கார மாக்கி
அடிவயிற்றி லோங்குமே மூல ரோகம்
சொருக்கியே சவ்வுபோல லாச னத்தில்
சுற்றியே நின்றுதான் சீயுந் தண்ணீர்
பருக்கியே கசிவாகு மெந்நே ரந்தான்
பண்பான சவ்வாகு முலந் தானே.

665

சாத்தியம்

தானென்ற மூலத்தில் சாத்தி யந்தான்
சாதகமாய் நீர்மூல முளைமூ லந்தான்
வானென்ற வரண்மூலம் ரத்த மூலம்
வாதமா மூலந்தான் பித்த மூலம்

வேனென்ற மேகமா மூலத் தோடு
விளைபவுத்ர மூலமாங் கிரந்தி மூலம்
பேனென்ற புறமூலஞ் சுருக்கு மூலம்
பெருகுசவ்வு மூலமது சாத்ய மாமே
666

அசாத்தியம்

ஆமென்ற வசாத்தியத்தைச் சொல்லக் கேளாய்
அழிவுசெண்டு மூலமாஞ் சிற்று மூலம்
தேமென்ற சீமூல மாழி மூலம்
திணிவான தமரகமா மூலத் தோடு
வேமென்ற வினைமூலஞ் சேட்ப மூலம்
மிளிர்கின்ற குதைமூலந் தொந்த மூலம்
ஓமென்ற ஒன்பது மசாத்தி யந்தான்
உறுதியாய் மூலத்தி னுண்மை தானே.
667

உண்மையா மூலத்தி னுறுதி தன்னை
உகந்துமே யிவனுமையாட் குபதே சிக்கத்
தண்மையாய் உமைநந்தி தனக்குச் சொல்லத்
தயாநிதியாம் நந்திதன்வந் திரிக்குச் சொல்ல
விண்மையாய்த் தன்வந் திரிவிசுவ னிக்குச் சொல்ல
விசுவனியு மசுவனிக்கு விபரங் கூற
அண்மையா யசுவினிஅகஸ் தியர்க்கு
அருள்செய்ய வகஸ்தியரு மடக்கி னாரே.
668

அடக்கியே புலஸ்தியருக் கனுக்கி ரகிக்க
அன்புடனே புலஸ்திறருந்தே ரையமா முனிக்கு
மடக்கியே போதிக்கத்தே ரையமா முனியும்
மகத்தான யூகியாம் எனக்கு ரைக்க
உடக்கியே உள்ளபடி முழுது மாய்ந்து
உபகார மாகவே உலகந் தோர்க்கு
வடக்கியே மருத்துவத்தி னுரையைத் தேர்ந்து
மகத்தான கவிதைசெய்தேன் தமிழிற் றானே.
669

மூலரோகநிதானம் - முற்றிற்று

19. க்ஷயரோகநிதானம்

தானான க்ஷயமதுதான் பனிரெண் டாகும்
தாக்கான பிர்மமென்று க்ஷயந்தா னொன்று
வானான ராஜக்ஷயம் வைசிய க்ஷயந்தான்
மருவுசூத்திர க்ஷயந்தான் வாதக்ஷய மாகும்
பூனான பித்தக்ஷய சேட்பத் தோடு
பிரண்டதோர் வாதபித்த க்ஷயமு மாகும்
கானான வாதசேட் டுமக்ஷ யந்தான்
கரும்பித்த சேட்டுமத்தின் க்ஷயமு மாமே.

670

ஆகின்ற விகாரக்ஷயந் தொந்தக்ஷ யந்தான்
அடங்கலுமே பனிரண்டு விதமு மாகும்
வேகின்ற கஞ்சாவல் மிகுந்த வுப்பால்
மீறியதோர் காரத்தால் மிகம யக்கால்
தோகின்ற மருந்தீட்டார் சுனையி நீரால்
சுசியில்லாப் பதார்த்தங்கள் சுக்கான் றண்ணீர்
வாகின்ற வக்கினியால் மிகுந்த வெய்யில்
வருத்தத்தில் க்ஷயரோக மருவுங் காணே

671

காணவே கற்பழித்தல் பொய்யே சொல்லல்
களவாடல் பிறர்பொருளைக் கண்டா சித்தல்
ஆனவே யடுத்தோரைக் கெடநி னைத்தல்
அகதிபார தேசியரை யகந்தை சொல்லல்
ஊனவே பந்துவைவஞ் சித்தே யுண்ணல்
உதாசினமா இகழ்ந்தோரை இகழ்ச்சி பேசல்
வேணவே காதினிற்கே ளாத சொல்லை
மிகச்சொன்னோர் க்ஷயத்தில்வந்து மெலிகூ வாரே.

672

பிர்மக்ஷயம்

மெலிவாகி இருமலொடு புண்க லங்கல்
மிகத்தண்ணீர் போலவே சேட்பங் காணல்
நலிவாகிக் கோழையொடு இரத்த முண்டாய்
நலமான அக்கினிதான் மிகவே தாழும்

கலிவாகிக் கண்ணினொடு உதிர மாழ்கிக்
காச்சலது எந்நேரங் கலக்க மாகும்
மலியாகி யரூசியொடு சத்தி யாகல்
மறையவனாம் க்ஷயமென்று மதித்தி டாயே.
673

இராஜக்ஷயம்

மதித்திட்ட வெதுப்பினொடு தலைநோ வுண்டாய்
மார்நெஞ்சில் நோவுண்டாய் சிலேட்பந் தோன்றும்
குதித்திட்ட மஞ்சள்போற் கோழை காணும்
கொடிதான் மிணறழ றெரிந்து நோவாம்
அதித்திட்ட வரிகுரலாய்த் திரிகை செய்தல்
அங்கமெல்லா மிகநொந்து அணலாய்க் காணல்
சதித்திட்ட இருமலொடு சத்தி யுண்டாம்
க்ஷத்திரிய க்ஷயமென்று சாற்ற லாமே.
674

வைசியக்ஷயம்

சாற்றவே கையோடு காலு மோய்ந்து
தாக்கான வெயில்காணி கடுவி ஷம்போல்
வேர்த்துமே வெதும்பலாய் காச்சல் காணும்
மிக்கான இருமலொடு கோழை யுண்டாம்
பார்த்தவே பருத்திபோ லுடல் வெளுத்துப்
பருகியதோ ரசனமிகத் தானுஞ் செல்லா
ஆற்றவே யாறாண்டி லதிக மாகும்
அறிந்துரைத்த வைசியனாம் க்ஷயந்தா னாமே.
675

சூத்திரக்ஷயம்

ஆமேதான் கண்ணழன்று நீர்குளிர்ந்து பாய்ந்து
அடிக்கடிதா னிருமியே மிடறு புண்ணாம்
வேமேதான் மிகவழன்று வெதுப்புண் டாகும்
விடிகின்ற நேரந்தன்னில் நளிருஞ் சற்றே

வாமேதான் மயிர்க்கூச்ச மயக்க மாகும்
மகத்தான வலியுண்டா யுடல்தான் வேர்க்கும்
காமேநல் லோராண் டீராண்டிற் கொல்லும்
வலிகுத்ரட் சயமென்றே நாட்ட லாமே. 676

வாதக்ஷயம்

நாட்டமாய்த் தலைவலியும் விலாவுஞ் சந்தும்
நடுமுதுகுங் கடுத்துமே சத்தி யுண்டாம்
தூட்டமாய்ச் சுரமோடு தாகங் காணும்
துடிப்பாகுந் தோளோடு கைகா லெல்லாம்
காட்டமாய்க கழித்ததுவு நீண்டு தானு
சனமான அதிசார மிருமல் கோழை
தேட்டமாய்ச் சிறுதிடங்கள் குளிர்ந்து காணும்
சீறுமே வாதத்தின் க்ஷயந்தா மென்றே. 677

பித்தக்ஷயம்

என்றதோர் விலாக்கழுத்து மிகச்சு ருங்கி
இசைக்குமே இருமலொடு கோழை யுண்டாம்
குன்றதோர் குளுமையுண்டா யிரத்த வாந்தி
கொடிதான மூர்ச்சைகுரல் கம்ம லாகும்
தின்றதோர் தீபனந்தான் செரிகெ டாது
தேகமெங்கும் வெளுத்துமே மஞ்ச ளாகும்
மென்றதோர் முத்திரமூ மஞ்சள் காணும்
மீறுபித்த க்ஷயமென்றே மொழிய லாமே. 678

சேத்மக்ஷயம்

மொழியவே இருமலொடு கோழை சத்தி
மூச்சோடு அருசியா மதிசா ரந்தான்
அழியவே தொனிமேத முடல்வெ ளுப்பு
அசதியொடு சந்தாப மாலோ பந்தான்

துழியவே முக்குநீர் பாய்தல் சோம்பு
சொற்றவரல் சுரமோடு தூய தாபம்
தெழியவே தேகமெங்குஞ் சொறியுண் டாதல்
சேட்டுமத்தின் க்ஷயரோகச் செயலி தாமே. 679

வாதபித்தக்ஷயம்

செயலாகத் தேகமெங்கும் மிகக்க டுப்பு
தீதான சுதாகங் கோழை சத்தி
அயலாக அருசியொடு இருமல் சுவாசம்
மதிகமா யுடம்பெரிவு ஆலோபந் தான்
மயலாக மயக்கமொடு வாய்நீரூ றல்
மார்க்கமாய் மலம்விடுத்தல் நீர ருக்கல்
நயலாக நாக்குதடு மிகக்க றுத்த
நரகமாம் வாதபித்த க்ஷயந்தா னாமே. 680

வாதசேட்பக்ஷயம்

தானான தொனிபேதந் தொண்டைக் கம்மல்
சரங்கமாஞ் சுரமோடு சுவாசஞ் சத்தி
கானான இருமல் சரீரங்க டுப்புக்
கடுங்கோழை வெகுபலவீ னமுமே யாகும்
ஆனான அக்கினிமந் தத்தினோடு அரோசிக மாஞ்
சரீரமது வெளுப்பு ண் டாகும்
வானான கால்கையும் வற்ற லாகும்
வாதசேட்ம க்ஷயத்தின் வாற தாமே. 681

பித்தசேட்பக்ஷயம்

வாறான நித்திரையுஞ் சோம்ப லோடு
வடிவெல்லா நிறைந்துசுரம் வாந்தி கோழை
ஏறான இருமலொடு வயிறு பேதி
எடுக்கின்ற ரத்தம்வெகு நாற்ற மாகும்

தாறான தலைசுற்றல் பிர்மை தாகம்
சாறுசதா யிருமல் சாருந் தண்ணீர்
பேறான நீரதுவும் ரத்தம் போலாம்
பித்தசேட்ப க்ஷயத்தின் பேர தாமே.

682

விகாரக்ஷயம்

ஆமென்ற காதிலே தொனியுண் டாகும்
அழகானக் கண்ணிரண்டு வெளுப்பு மாகும்
வாமென்ற வடிவுபெலன் றாணி ளைத்தல்
மாவிரணம் பிரமேகம் மூச்சுண் டாதல்
வேமென்ற விலாப்பக்கம் வலியுண் டாதல்
மிகஇரத்தம் சத்தியுமே வெருவிக் காணல்
மூமென்ற மூச்சோடு வாய்தா னாறும்
மூர்க்கனாம் விகாரத்தின் க்ஷயமு மாமே.

683

தொந்தக்ஷயம்

விகாரமாந் தொனிபேதஞ் சுரமுண் டாதல்
மிடுக்கான விருமலோடு இரத்தங் கோழை
நகாரமாம் நாற்றமுட னடுங்கல் பேதி
நலியாகி மயக்கநடு நாக்குக் குள்ளே
வகாரமாம் வட்டம்போலே கறுப்புண் டாதல்
வடிவமெல்லாங் கற்றாழை நாற்றங் காணல்
துகாரமாம் பேச்சுத்தான் மிகவுண் டாகும்
தொந்தமாம் க்ஷயத்தினிட சூக்ஷந் தானே.

684

சாத்தியம்

சூக்ஷியாய்ச் சாத்தியத்தைச் சொல்லக் கேளாய்
சுற்றமாம் பிரமமென்ற க்ஷயத்தி னோடு
சாட்சியாய் க்ஷத்திரிய க்ஷயத்தோ டொக்கச்
சரந்தவைசிய க்ஷயமாம் பித்தத் தோடு

தீட்சிசேட் டுமட்சயந் தானைந்து சாத்யம்
திட்டமா மருந்துதன்னிற் றீர்க்க லாகும்
காட்சியாய்க் கனமான செந்தூ ரத்தில்
காரணமாம் வயித்தியர்முன் றீருந் நானே.
685

அசாத்தியம்

தீராத வசாத்தியத்தைச் செப்பக் கேளாய்
சீர்கேடாஞ் சூத்ரக்ஷயம் வாதக்ஷ யந்தான்
வாராத வாதசேட்டும க்ஷயந் தான்
மன்னியதோர் பித்தசேட் டுமக்ஷ யந்தான்
வேராத விகாரக்ஷயம் வாத பித்தம்
மிடுக்கான தொந்தமாம் க்ஷயத்தி னோடு
ஏராத திதுவேழு மசாத்தி யந்தான்
எந்தமருந் திட்டாலு மிசைவா காதே
686

இசைவாக க்ஷயத்தினிட குணங்கள் தன்னை
எந்தாயார் நந்திக்கு எளிதிற் சொல்ல
நசைவாக நந்திதன்வந் திரிக்குச் சொல்ல
நன்மையாந் தன்வந்திரிய சுவினிக்கு சொல்ல
அசைவாக லவசுவினியும் விசுவினிக்குக் கூற
அடக்கமாய் அசுவினியும் மகஸ்தியர்க்கு ரைக்க
பிசைவாக வகஸ்தியரும் புலத்தியர்க் குரைக்கப்
புலத்தியருந் தேரையர்க்குச் சாற்றி னாரே.
687

சாற்றினார் தேரையமா முனிவன் றானும்
சாங்கமா யூகிமுனி யாமெ னக்கு
போற்றினார் மானிடர்கள் பிழைக்க வென்று
பொருக்கியே யாயுருவே தத்தை யெல்லாம்
வீற்றினார் முத்துப்போல் பொறுக்கிக் கோர்த்து
விரிதமிழைச் சுருக்கியே வெளியாத் தானும்
தேற்றினார் சீவசெந்துக் குபகா ரமாகச்
செப்பினார் செகமெல்லாந் தெரியத் தானே.
688

க்ஷயரோகநிதானம் - முற்றிற்று

20. காசரோகநிதானம்

தானான காசமது பனிரண் டாகும்
தாக்கான மந்தார காசத் தோடு
பானான பக்கமந் தார காசம்
பாங்கான சுடர்காசம் வாத காசம்
பேனான பித்தமாங் காசத் தோடு
பேர்பெரிய சுவாசகா சத்தோ டொக்க
ஏனான இயற்றமாங் காசத் தோடு
இறைப்பான சேட்டுமகா சந்தா னாமே.

689

ஆகின்ற பீனிசத்தின் சுவாச காசம்
அழிவாத பித்தத்தின் காச மாகும்
போகின்ற பித்தசேட் டுமகா சந்தான்
புகழ்பெரிய தொந்தமாங் காசத் தோடு
தேகின்ற காசமது பனிரண் டாகும்
தெளிவாக இதினுடைய செயலைக் கேளாய்
வேகின்ற வதிகமாம் புகையி னாலும்
மீறுகின்ற பாணத்தால் மிகுக்குந் தானே.

690

பாணத்தால் பரமாக்கினி மிகுக்கை யாலும்
பாரமா மாமிசங்கள் புசிக்கை யாலும்
தாணத்தாற் சஞ்சாரந் தவிர்க்கை யாலும்
சரிப்படாப் பதார்த்தங்கள் புசித்த லாலும்
தீணத்தாற் பொசியாம லிருக்கை யாலும்
சேயிழையார் மேலின்பஞ் சிதைவ தாலும்
மாணத்தால் மாதுக்க மடைத லாலும்
மதத்தாலுஞ் சுவாசமது மருவுங் காணே.

691

காணவே தேவதைக்குப் பிரித்த பண்டம்
களவாடி தின்றாலுங் கணவன் றன்னைத்
தோணவே நிந்தரட்சை சொன்ன தாலும்
சுசியான பதார்த்தமெச்சில் பண்ணி னாலும்

வேணவே ஒருவர்செய்த நன்றி தன்னை
மிகமறந்து கொடுமைகடான் விளம்பு வோர்க்கும்
பேணவே சபைதனிலே சொன்ன பேச்சு
பிரண்டோர்க்குங் காசம்வந்து பிறக்குந் தானே. 692

மந்தாரகாசம்

தானான தூயதோர் நாசி தன்னில்
சலநோய் நீர் தான்விழுந்து தும்ம லுண்டாம்
மானான மார்புநெஞ் சடைத்து மூச்சு
வலுவாகப் பாம்புபோல் சீற லாகும்
கானான கண்டமொடு முகமுங் காதும்
காயமதுங் கசிவாகி வியர்வை யாகும்
ஏனான இருமலொடு கோழை கம்மல்
இரைப்பாகு மந்தாரக் காச மாமே 693

பக்கமந்தாரகாசம்

காசமா யிருமலொடு இளைப்பு முண்டாய்
கட்டியே நெஞ்சதனிற் கம்ம லாகும்
வாசமாய் வயிறதுவும் பொருமிக் கொள்ளும்
மகத்தான மூக்குநீர்ப் பாச்ச லாகும்
ஆசமா யாமரபக்ஷம் பூர்வ பக்ஷத்
தருகாமை யானவுடன் சுவாச மீறும்
ஈசமா யிரைப்போடு எரிமூச் சாகும்
இக்குணந்தான் பக்கமந் தார காசம். 694

சுடர்காசம்

பக்கமாய்ப் பிரசவிச்ச மாத விக்கு
பாரமாய்த் தலைநோயும் சுரமுண் டாகும்
உக்கமா யுழலையொடு தவன முண்டாம்
உறுகழிச்சல் பொருமலொடு உப்பு மாகும்

மிக்கமா யுள்மூச்சு மிடுக்க தாகும்
மிரளாமல் விழியிரண்டுந் தெளிவு மாகும்
துக்கமாய்த் துடிதுடிக்கு மகப்பெற் றோர்க்குச்
சுடர்காசந் தன்னுடைய சுருபந் தானே.
695

வாதகாசம்

சுருபமாய் நெஞ்சுதனிற் றினவு முண்டாம்
செவிதனிலே இரைச்சலுமாம் ரோகி கந்தான்
மருவமனனிக் கீழ்மூச்சி மார்பிள வாகி
மன்னியே நெஞ்சளவா யுழலுஞ் சுவாசம்
நிருபநேர் படும்பிர மந்திரத் தன்னில்
நெய்த்துதுன் மாமிசங்கள் மிகவ ளர்ந்து
துருபமாம் மூச்சதிக மிருமல் கோழை
தூய்தாண வாதகா சத்தின் சீரே.
696

பித்தகாசம்

சீராக இருமல்மிகப் பிரட்ட லாகித்
தித்தித்து உப்புரைக்குஞ் சத்தி யுண்டாம்
தாராகத் தலையுடம்பு தான்வ லிக்கும்
தாகித்துக் குரல்கம் மும்ரத்தம் வீழும்
ஆராக வங்கந்தான் மிகவி ளைக்கும்
அன்னந்தான் செல்லாமற் பிளித்தேக் காகும்
மாராமயிர் கூச்சுச் சுரமுண் டாம்
மதிமயங்கும் பித்தகா சத்தின் வண்மை.
697

சுவாசகாசம்

வண்மையாய்க் கோழைகட்டி இருமி வீழும்
மாநாகம் போலவே வாங்குஞ் சுவாசம்
திண்மையாய்ச் செருமலுண்டா மடிக்க டிக்குச்
சீரணமில்லா மலே வயிறு ஊதும்

நண்மையாய் நாசியது தணல்போ லாகும்
 நளுந்துடம்பு வற்றிவருங் குரலுங் கம்மும்
உண்மையா யுண்ணாக்கி லூறுங் கேணி
 உழற்றுமே சுவாசகா சத்தி னொப்பே.

698

ஒப்பான குரல்கம்மி உதிரந் தானும்
 உருட்சியாய்க் கட்டிபோ லுருண்டு வீழும்
விப்பான விலாவிலே மிகநோ வாகி
 மிளமிளென வயிற்கடித்து உளைச்ச லாகும்
கப்பான கால்கையும் ஓச்ச லாகும்
 கடுமூத்திர மெரிந்துமெத்த மஞ்சள் போலாம்
தப்பான சரீரமது வெளுத்துக் காணும்
 சமிக்கும்ரத்தக் காசமென்ற சாற்ற லாமே.

699

சிலேட்பகாசம்

சாற்றவே இருமலொடு இளைப்பு முண்டாய்ச்
 சார்ந்தபிளையும் மூச்சுமி குத்து வாங்கும்
ஆற்றவே அடிவயிறு மந்தம் பற்றி
 அழகாகு முருவழித்து உடம்பு வற்றும்
சேற்றவே சுரமொடு தியக்க முண்டாய்ச்
 சித்தமே மிகக்கலங்கி வாந்தி யாகி
தீர்த்தவே சிறுகடுப்பாந் தேக மெங்கும்
 சேட்டுமத்தின் காசமென்றே செப்ப லாமே

700

பீனிசகாசம

செப்பமா யிருமலொடு கோழை வீழும்
 சேட்டுமமா யினைப்போடு இரைப்புண் டாகும்
உப்பமாய் வயிறதுவு முதிக் கொள்ளும்
 ஊணுறக்க மில்லாம லுலருந் தேகம்

குப்பமாய் மலசலமுங் கறுகி வீழும்
கோழையிட குணந்தான்மீன் கவிச்ச டிக்கும்ம்
துப்பமாய்ச் சருண்டுவயிற் வலியு மாகும்
சுவாசபீ னிசமென்றே சூட்டி டாயே.

701

வாதபித்தகாசம்

சூட்டிட்டுக் காறையிலே துளிக்கும் ரத்தம்
சூட்சமாய்க் காதுகளில் இரைச்ச லுண்டு
ஆட்டிட்ட இருமொடு அசதி யாகும்
அடிக்கடிக்கு வாய்வதுதான் மிகவு மீறும்
மூட்டிட்ட முதுகுதண்டு குடைச்ச லுண்டாம்
மூச்சோடு சந்தாப மொழிமா ராட்டம்
வாட்டிட்ட தேகந்தான் ஊதிக் கொள்ளும்
வாதபித்த காசத்தின் மார்க்கந் தான்

702

பித்தசேட்பகாசம்

மார்க்கமாய் நெஞ்சுதனிற் றினவுண் டாகும்
வடிவமெலாந் தான்வலிக்கு மிரும லுண்டாம்
தார்க்கமாங் குரல்கம்முஞ் சடமி ளைக்கும்
சஞ்சலிக்கும் பூருவத்திற் சதியை நாடி
பீர்க்கமாய்ப் பூமியெல்லாஞ் சுழற்றல் போலாம்
பெண் பார்வை பார்த்தவுடன் புளக முண்டாம்
பீர்க்கம்பூப் போலுடம்பு மஞ்ச னிக்கும்
பித்தசேட்டும காசத்தின் புதுமை தானே

703

தொந்த காசம்

புதுமையாய்ப் புரண்டுமே இருமல் குற்றிப்
பூங்கமுகி னிறமாக இரத்தம் வீழும்
மெதுமையாய் வெதும்பலொடு எரிவு தாகம்
மிக்கதோ மருசியொடு வயிறு பேதி

பதுமையாய்ச் சரீரமெங்கும் படுக்கை கூடாப்
பருத்துமே உடம்பூதிப் பாண்டு வாகும்
கதுமையாய்ச் சரீரமெங்குங் கடுப்புண் டாகும்
கடிதுதொந்த காசத்தின் காசி தானே. 704

சாத்தியம்

காணவே சாத்தியத்தைக் கருதக் கேளாய்
கனத்ததோர் மந்தார காசத் தோடு
பூணவே பக்கமந் தார காசம்
பொலிவான கடர்காசம் பித்த காசம்
தோணவே சுவாசகா சத்தி னோடு
சுழுயிரத்த காசமம் பீனி சகாசம்
தாணவே இதுவேழுஞ் சாத்ய மாகும்
சாதகமாய்ப் பரிகாரம் பார்த்துச் சாற்றே. 705

அசாத்தியம்

சாத்தியதோ ரசாத்தியந்தான் வாதகாசம்
சஞ்சலமாஞ் சேட்பத்தின் காசத் தோடும்
தோத்தியதோர் தந்தெமாங் காசத் தோடு
சுருக்கான விம்மூன்று மசாத்தி யந்தான்
நேத்தியதோர் மற்றுமுள்ள காச மெல்லாம்
நேரான சாத்தியமாய் நிகழ்த்த லாகும்
போற்றியதோர் சிவனூலு மிந்த நூலும்
போக்கொன்றுந் தப்பாது பொய் போகாதே 706

பொய்போகாச் சாஸ்திரத்தை நித்தம் பூசிப்
புகழாக எவ்வுயிருந் தம்முயிர்போ லெண்ணு
மெய்யாகத் தாயோடு சிவனைப் போற்று
மிகுந்தவுப சாரத்தால் விருப்ப மாக
மைபோக மருத்துவர்க்குள் அகவி னிதேவர்
மாசற்ற குறுமுனிக்கும் வணக்கம் பண்ணு
மெய்போக நன்னூலை விருப்ப மாக
வினையமெலாஞ் சோதித்து விரித்து சாற்றே. 707

காசரோகநிதானம் - முற்றிற்று

21. உளைமாந்தைரோகநிதானம்

சாற்றவே தானியத்தைக் குரைத்த பேர்க்கும்
சடுதியிலே சீவவதை பண்ணி னோர்க்கும்
கோற்றவே குலமடந்தை கற்ப ழித்துக்
கொடுமையாம் புலைகளவு கட்கா மாந்தான்
போற்றவே பூசைக்கு இடறு காண ல்
புருடனிட ஸ்திரீதனையே பிரிக்கின் றோர்க்கும்
ஊற்றவெ உளைமாந்தை ரோகம் வந்து
உற்பவிக்கு முறுதியென்றே உரைக்க லாமே.

708

உரைக்கவே ஊழித்தீய்க் கிரைகொ டாமல்
உட்கார்ந்து அக்கினிதான் மந்தித் தப்போ
